[illegible]
[illegible]
[illegible]


O-,2LVN,A
M76

117569

பிசுமில்லாகிற்றகுமானிற்றகிம்.

சாமுதேசத்தரசராகிய

# அலியாருஷா நாடகம்.

முத்தமிழில் நாடகத்தமிழை நன்காராய்ந்த

மதுரை பீசல்


**வண்ணக்களஞ்சியப்புலவர்.**

அவர்களியற்றியது.


—※—

இஃது.

பூவிருந்தவல்லி

கந்தசாமிமுதலியாரால்

பார்வையிடப்பட்டு


செந்திற்குப்பம்

## கன்னியப்பமுதலியார்

அவர்களது

சம்லாலயவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

யுவ௵ — ஆவணி௴

# ஸ்ரீ விபசார நாடகம்.

கடவுள் வணக்கம்.

விருத்தம் - இராகம் - தோடி.

அக்கநாயகனேபோற்றி யருமறைப்பொருளேபோற்றி ❊
மிக்கநாயகனேபோற்றி வேதநாயகனேபோற்றி ❊
சக்கிலாஅலிவரெல்லாந் தமிழில்நாடகமாய்ப்பாட ❊
தக்கநாயகனிதற்குத் தனியவன்காப்புத்தானே ❊

## நபி நாயகத்தின் வாழ்த்து.

விருத்தம் - இ-ம் - ஆனந்தபைரவி.

அக்கநாயகன்றன்னூதா யாதியிலுதித்தப்பின்னர் ❊
திக்கிலெண்டிசையோர்போற்றத்தின்விளங்கிடவிப்பூவில் ❊
மக்கமாநகருதித்த முகம்மதேயகம்மதேயெம் ❊
சிக்கினிசிகாமணியைச் சிந்தையிற்புகழுவேனே ❊

தரு - இ-ம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

பையல்யாரோவென்று - என்னை - யாளக்கடனல்லவோ - சாமியே
ஆளக்கடனல்லவோ
மன்னின்கமழ்மலைமலர்சுக்தில்வீசிட மக்கநகர்வாழும் - புகழ்
சொல்லிடக்காணாமதுமே துதிப்பனேயென்றுவில் (பையல்)
அக்கனிட்டநில்கருத்தைத் திருத்திக்கருணைபுரிந்திடவே - நல்ல
மக்கநகரிலுதித்தமுகம்மதுமன்றாட்டஞ்செய்திடுவீர் (பையல்)
திட்டமுடனுரைகட்டளையிட்டிடுமேவலையான்மறந்து - கெட்ட
துட்டருடன்கூடித்திதாநீந்துதிரிந்துதொழுகையையான்மறந்தேன்
அஞ்சுவேளைநமதிந்துகெளிய வறியாதமூடருடன் - கூடி
வஞ்சிகள்மோகவலைக்குளகப்பட்டு மதிகேடனானேன் (பையல்)
ஆசிமிகுவிலப்புல்லாபுத்திரர் அகம்மதாய்வந்தவரோ - என்னை
நேசம்வைத்தாளுங்காசிமுகம்மதைநித்தமும்யான்மறவேன் (பைய)

தரு - இ-ம் - நாதநாமக்கிரியை - ரூபகதாளம்.

அடியேனையா எளியேன்மெத்த - அடியேனையா
சத்துருக்கந்த நபிகண்மணிப்பேராய்
முத்திதருவாகியமுகையத்தினே (அடியே)
வேலியானிரைக்காக்கும்போலவெங்களுக்கொரு
விளக்காய்வந்தமுகையத்தினே (அடியே).

பிறந்தபிள்ளையொருமிவதிப்பிள்ளையானாலும்
மறக்கமனம்வருமோமாதாவுக்கு (அடியே)

விருத்தம் - இ-ம் - பைரவி.

சீர்பெற்றவுலகநீதி செகமொருசெங்கோலாக ❊
காரியக்கீர்த்திபெற்ற சதாலிபாதுஷாதன் ❊
பேர்பெற்றகதையையாரும் பெருகநாடகமதாக ❊
ஏர்பெற்றவரானோரெல்லா மெடுத்துரைசெய்குவேனே ❊

ஜம்பை - இ-ம் - பைரவி.

நரியாமல்புகழ்படைத்திந்த நிலத்தை நயாகசெய்த
அலிபாதுஷாதன்கதையையம்பவியிற்பாட
வலியோனையெங்குநிறைமறைபொருளின்முடிசோதி
மலிவானகருணைமுதல் மன்னவனைப்புகழ்வாம்
மீறுத்தில்லெவுந்தலையாங்கிட்டுந்துமிசர்நகர்க்கரசு
தானான அலிபாதுஷாதன்கதையைப்பாட
தேனானமொழிபேசுஞ்சித்திருமார்களுசு
மீனானபேர்பதத்தைமுற்றிலும்யான்மறவேன்
சலியாமற்சபைநடுவேசாமூர்த்தனையாண்ட
அலிபாதுஷாதன்கதையயன்பினொடுபாட
மெலியாமலருபக்கருமருதுமானோடு
அலியார்மற்றோர்பதத்தையன்பினொடுமறவேன்
விசையாதிவிசையநிதிமிக்கபிசாசண்ட
இசைகள்புகழ்பாதுஷா திருக்கதையைப்பாட
அசனுசனொடுசகாபி அன்சாரிமார்கள்
இசைவானதினோர்க ளெல்லோரையுமறவேன்
ஆறவகைதானடைபடை அலிபாதுஷாதன்கதையை
விறலகில்நாடகமா விளக்கவினிபாட
ஏர்வாடிதனில்வாழு மிபுறாகீம்சாகிபொலி
பேர்பாதமனுதினமு மனதில்வைத்துமறவேன்
மடியாதகீர்த்தியலி பாதுஷாதிருக்கதையை
படிமீதில்நாடகமாய்ப் பாடிநிதமாட
வடிவானசெகுடன் சுடுபாலக்கொலியை
அடியார்க்குமடியன் யானவர்பதத்தைமறவேன்

விருத்தம் - இ-ம் , சாய்மோதி.

மனுநீசர்சவிசையாக வையகமுழுதுந்தாங்கும்
நிதியலிபாதுஷாதன் னெடுங்கதையானதெல்லாம்
விதிதரும்புராணந்தன்னில் விரித்திட்டவிதப்பாமல்
பதியில்நாடகமதாகப் பாடியவையைச்சொல்வேன்.



## அவையடக்கம்.

அகவல் - இ-ம் - எதுகுலகாம்போதி.

அமர்ந்தாங்கலையுமான் முகம்மதென்பவர்க்கு
முந்திமுந்தேசகு மொழிந்திடும்வழியே
அலிபாதுஷாவெனு மாண்டனர்காயில்
கலியகன்றிடவே காத்திடும்நாளையில்
தவஞ்செய்திடன்றனர் தாமொருபிள்ளை
அபுசிறுவென்று அவனுமேபிறந்து
மேலிவுமந்தோகாடுமையாய் மங்கையையழித்த
அலிபாதுஷாமுன் ஆனநற்குடிகள்
முறையிட்டதுவும் முதநகர்விட்டு
பிரதகரடைய புறப்பட்டதுவும்
கள்ளர்கள்காட்டில் கலங்கப்பதித்ததும்
பள்ளியிலிருந்ததும் பார்த்தியன்கல்மான்
சத்திரங்கட்டித் தருமஞ்செய்ததும்
புத்திரர்கூடப் பிச்சைகேட்டதும்
பொல்லாக்கணக்கன் பூவையைக்கண்டதும்
நல்லான்சேடிலா நலஞ்செடுஞ்கல்மான்
தனக்குச்சொன்னளவே தான்மயலாகி
வனக்குழலாளை மருவநினைத்து
வணக்கமாயவளை வரவழையென்று
கணக்கனுக்கோதக் கபடமாயவனும்
புத்திரரோடு பிச்சைக்குவரவும்
பத்தினிமாதை பழிச்செயநினைத்து
சத்திரத்துள்ளே தான்வரவழைத்து
புத்திரர்தம்மைப் பிடரியைப்பிடித்து
தள்ளிவிட்டதுவுந் தாங்கள்புலம்பி
பள்ளியில்வந்து டாவாவுடனே
சொன்னதும்பாதுஷா துயரங்கொண்டதும்
இன்னவர்தன்னி லிருக்கொணுதெனவும்
மக்களைக்கூட்டி மானகர்விட்டு
புக்கினபின்பு பிழையுள்கல்மான்
அதிமயல்கொண்டதும் அவன்மனந்தேற
மதிபலசொன்னதும் மயல்மிகக்கொண்டதும்
விரதமுண்டெனவே மங்கையோதினதும்
அரசன்கேட்டு அவன்சம்மதித்ததும்

௬

முடிந்தபின்விரதம் மோகமாய்ச்சுல்மான்
அடர்ந்திடச்சென்றதும் அறியிடத்தில்
பத்துவாபலித்த பாவிசுல்மானின்
சத்துவங்குறைந்து தனிக்குஷ்டம்பற்றி
அங்கங்குறைந்து அவதிகள்பட்டு
பங்கமும்பெற்று பாரோர்நகைக்க
நடந்துவந்ததும் நகரலிபாதுஷா
கட்டுந்தனர்பாலரை கரத்தினிற்பிடித்துப்
போனதும்வழியில் பெருநதிவந்ததும்
ஆனதவ்வாற்றில் அனேகநாளாக
ஓடக்காரன் ஓடமேவிடுத்து
நீடக்கரையில் நின்றங்கிருந்ததும்
அவனைக்கண்டு அன்புடன்புகழ்ந்ததும்
இவனையாரறிவா ரென்றவன்சொன்னதும்
கெஞ்சிக்கேட்டதும் கோளமற்போனதும்
மிஞ்சியவாற்றி லிறங்கத்துணிந்ததும்
இக்கரைதன்னி லிருந்தொருபிள்ளையை
அக்கரைகொண்டுபோ யவனைவிட்டதும்
மீண்டொருபாலனை மேன்மையாயெடுக்கத்
தாண்டியேயாற்றில் தானுமிறங்கி
நடுத்தண்ணீரில் நடந்துவருகையில்
எடுத்ததமுதலை யேக்கிடமனமும்
மதலைகள்பதைக்க பாதுஷாஅலியை
முதலையும்பிடித்து விழுங்கிவிட்டதும்
சதறியேபாலகர் கலங்கிநின்றதும்
பதறிடாதிரென்று பாலரையெடுத்து
ஓடக்காரன் ஒருமனதாக
வாடிடாட்பிள்ளைகள் வளர்ந்துமனையில்
ஆற்றங்கரையில் அலிபாதுஷாவின்
போற்றியமனைவி புரண்டுகிடந்ததும்
அவ்வழியாக ஆனமூசாநபி
செவ்வழிநடக்கையில் சலாஞ்சொன்னதுவும்
ஜெகம்புகழ்மூசாநபி திகைத்துநின்றதுவும்
அகத்தனில்தயவை அங்கேகண்டதுவும்
சிர்மையில்கருணையாய் சிறப்புடனெழுப்பவும்
புத்திமகிழ்ந்தலி பாதுஷாவெழுந்ததும்
நாடியேமூசா நபிதுவர்கேட்டதும்
ஓடியேமிகவொரு மூர்க்கனைவந்ததும்



கண்டிவர்தன்னைக் கருகவழைத்துப்போய்
மண்டலமாளமதிபதியானதும்
பிள்ளைகள்வந்து பிரியமாய்ச்சேர்ந்ததும்
வள்ளலென்றுலகோர் வாழ்த்திடவானதும்
நன்னயமூசா நபிவாக்கத்தால்
மன்னெனுவியென்று மகிதலம்சொல்லவும்
இப்படியாக யேவருமேசொல்லிட
எப்படிப்பட்ட பிணிகளுமேவர்க்கு
ஓடியிறனுல் உலகிலுள்ளோர்கள்
தேடிவந்திடும்பிணி தீர்ந்துபோவதும்
இச்செதிசகத்தி லெங்கும்பரவவும்
அச்செதிகேட்டு ஆகாசுல்மான்
கப்பல்சோடித்து கடுகவேபோக
அப்பவேகூட அழகுசுபூரியத்தை
கூடவேயழைத்துக் கொண்டேவந்ததுவும்
மாடமிக்காவல் வைத்ததும்பலரை
அதிசயங்கண்டு அவர்கள்நகைத்ததும்
செதிர்செயலென்று கிட்டிநின்றதும்
தம்வரலாறைத்தாங்கள்சொன்னதும்
அவ்வரலாறை யனைத்தையுங்கேட்டு
மக்களென்று மகிழ்ந்துகலந்ததும்
துக்கம்பட்டுச் சொல்வசனித்ததும்
மன்னலிபாதுஷா மகிபனிடத்தில்
இன்னவையனைத்து மிருவர்செப்பினதும்
கேட்டலிபாதுஷா கெடிமனங்கலங்கி
வாட்டமதாக மங்கையையழைத்ததும்
சிலமொழிகேட்டதும் சுல்மான்தனக்கு
பலமொழிசொன்னதும் புரையாண்டதுவும்
சுகத்துடனிவர்கள் சுகித்திருந்ததுவும்
மகத்துவமெல்லாம்வழுவாதெடுத்து
ஆதியோடந்தமாய் அவனியோர்மகிழ
நீதிநாடகமாய் நிகழ்த்தியதிதுவே

ஆக்கியோன்பெயர்.

விருத்தம். இரம் - நாதநாமக்கிரியை.

தளம்படைமிகுதிருமு சர்முநன்நகரையாண்ட *
வளமலிபாதுஷாதன் வரலாறையுலகுள்ளோர்கள் *
உளங்கனிகொண்டேபாடி நற்றநாடகமதாக *
களங்கமில்மதுரைநன்னகர் கவிராஜனியற்றினனே *

4

இப்புத்தகம் - பரிசோதித்தோன்பெயர்

அகவல் - எதுக்குலகாம்போதி.

மாதூதியானே மாநிலப்பொருளே
மாழுவிலாத மகிமையடைத்து
பார்தனில்பலனையும் படைக்கவல்லவனே
மாவாரிசூழ்ந்த மக்கயாநகரில்
மலைபோலுயர்ந்த மாமணிபதித்த
காபாதனிலே கர்த்தராயகனே
ஆவலாய்த்தொழுது அரசாண்டிருந்த
ஆசாரநபியி னடியைப்பணிந்து
நயனங்கள்குளிர நாடகமாக
அபுருபப்புதுமை அனைவரும்பார்க்க
மாபிரசங்கமா வையகந்தன்னில்
வள்ளலாய்சாமை வரிசையாயாண்ட
கிளைகிளையாக்கி நீடாதிபதியாய்
மாஅலிபாதுஷா மனைவியுமக்களும்
மீபுவியாண்டதும் விட்டுப்பிரிந்ததும்
பதுமைபோனடக்கப் பதித்ததுங்கள்ளர்
அல்லற்பட்டது மையமெடுத்ததும்
ஆகாசுல்மா னவனைப்பிடித்ததும்
பாதகஞ்செய்ததும் பத்துவாபலித்ததும்
ஆற்றில்முதலை யவளைப்பிடித்ததும்
கூராப்பாலகர் கூறியழுததும்
அயர்வாய்ப்பிள்ளைக ளவதிபட்டதும்
அபுருபசாநபி யங்கேவந்ததும்
மாபார்தனிலே மன்னைகிடந்ததும்
தார்புயவிசா தான்துவாச்செய்ததும்
அலையிலெழுந்து அவர்மிகராண்டதும்
மயில்வடிவாரு மைந்தருங்கூட
பட்டமாண்டு பரிவுபெற்றதுவும்
கடகரிபோலே கலந்துகளித்ததும்
புதுமைகளிதனைப் புகன்றனிகுவே

கட்டியக்காரன்வருகிற - பொதுவிருத்தம்

இராகம் - சங்கராபரணம்.

எண்டிசைமுழுதும்போற்ற வெழுந்து கீர்த்திகளனைத்தும் ※
கொண்டலிபாதுஷாதன் கொலுவிருல்வாரசேதி ※
மண்டலத்தோர்தமக்கு மனமதுமகிழ்கிபொங்கக் ✿
கண்டியர்விருதுகூறக் கட்டியக்காரன்வந்தான் ※


5

தரு-இ-ம்-சங்கராபரணம், ஆதிதாளம்,

கட்டியக்காரன்வந்தான்-பாதுஷாவாசல்
கட்டியக்காரன்வந்தான்
சட்டைதலைப்பாகட்டிதங்கப்பிரம்புகொண்டு
கட்டியக்காரன்வந்து களரிபிறந்தோன் திருனே (கட்டி)
வட்டதிசையுபுரக்கு மன்னவர்வரவுசொல்ல
கட்டியக்காரன்வந்து களரிபிறந்தோன்திருனே (கட்டி)
மீசைமுறுக்கிக்கொண்டு மிகுந்தவல்லயமாட்டி
ஆசையுடனே மன்னர் அலிபாதுஷாவாசல் (கட்டி)
கட்டாரிவில்லம்பு கைதனிலேபிடித்து
அட்டாளதேசமாளும் அலிபாதுஷாவாசல் (கட்டி)

கட்டியக்காரன்-வாழ்த்து-அகவல்,

இராகம்-ஆனந்தபைரவி-

ஆதிதன்னருளா லவனியோர்வாழ்க
மேதினிதனைழக்க மிகுவரம்பெருக
மாதர்கள்கற்பு மகிதலத்தோங்க
சாதிகள்வளர சாஸ்திரம்நடக்க
புருஷர்கள்சொல்லில் பெண்டுகள்நடக்க
வரிசைகள்பெருக மாநகர்தழைக்க
செந்நெல்விளங்கிச் செழிக்குமாநகரம்
அன்னப்பறவை யனுகருங்கூவ
வாழைக்கரும்புகள் வரிசையாய்வளர
தழையின்வாசந் தழைத்திடப்பதியில்
மக்களுமன்னரு மகிழ்வுபெற்றோங்கிட
திக்குத்திசைகளும் தின்றழைத்தோங்கிட
நல்லோர்பெரியோர் நலமுடன்வாழி
தேசங்கள்வாழி செல்வர்கள்வாழி
பாசங்கள்வாழி படைத்தோன்வாழி
கேட்டோர்வாழி கிளைகளும்வாழி
பாட்டோர்வாழி பாரெல்லாம்வாழி

கட்டியன்-எச்சரிக்கை-கவி-இ-ம்-முகாரி,

மதியொளிவுபோல்வீசு மகுடமுடியதிபதி
மன்னரலிபாதுஷாதன்
மாமணிச்சிங்காதனத்தினில்வருகிறார்
மன்னர்க்குயெச்சரிக்கை
அதிபராக்ரமதாயவீரர்க
ளனைவர்க்குமெச்சரிக்கை

யானைபரிசேனைபரி யதிலேறும்வீரர்க
ளனைவர்க்குமெச்சரிக்கை
பதியானபகுதிபணங் கட்டிவருமன்னர்களும்
பார்த்தருக்கெச்சரிக்கை
படைவீரர்கொடைவீரர் நடைவீரரெல்லோரும்
நடுங்கிடவேயெச்சரிக்கை
விதிமுறைப்படியாக வெல்லோருநின்றிட
மேன்மேலுமெச்சரிக்கை
வீதியெங்குஞ்சுத்தி செய்திடமார்தற்கு
விளம்பினேனெச்சரிக்கை

அலிபாதுஷாகொலுவுக்குவருகிற விருத்தம்,
இ-ம்-கும்பகாம்போதி,

இயல்புடனுலகோர்வாழ்க வெதிரில்லாதிருந்துவாழ்க
ஜெயநிறையரசர்போற்றித் திலாகடலென்னநிற்ச
உயர்மதிகதிர்கள்போன்ற வொளியுளமகுடஞ்சூட்டி
நயமலிபாதுஷாதன் நவரத்தினக்கொலுவில்வந்தார்

தரு-இ-ம்-காம்போதி-அடதாளம்,

சோதிவெள்ளைத்துயிலணிந்து
துய்யகுங்குமத்தார்புனைந்து
ஆதியருளாலெழுந்து
அலிபாதுஷாகொலுவில்வந்தார்
பதியாசர்கலியாணபதி
பார்த்திபராய்சாமூராளும்
அதிகநீதிநெறிசளுள்ள
அலிபாதுஷாகொலுவில்வந்தார்
விருதரசர்புகழ்ந்துநிற்க
வீரவாளுங்கையிற்றுங்கி
அரமனையிலிருந்துநீங்கி
அலிபாதுஷாகொலுவில்வந்தார்
மைந்தர்களில்மூத்தவரும்
மற்றவிருபாலர்தாமும்
அந்தமாயருகில்வர
அலிபாதுஷாகொலுவில்வந்தார்
மந்திரிமார்படைசூழ
மதகரிபதாதிநிற்க
அந்தமில்லாதாமோங்க
அலிபாதுஷாகொலுவில்வந்தார்
சங்கீதராகங்கள்பாட



தையலர்கள்நடனமிட
அக்கமின்னலுமுகுவீச
அலிபாதுஷாகொலுவில்வந்தார்
வேல்ரசர்மனந்துடிக்க
மேளம்பதினுறடிக்க
ஆலவட்டங்குடைபிடிக்க
அலிபாதுஷாகொலுவில்வந்தார்
கட்டியங்கள்கூறிவர
கவரிவெண்சாமரம்வீச
அட்டதிசையோர்புகழ
அலிபாதுஷாகொலுவில்வந்தார்

பாதுஷா-மந்திரிமாருக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-முகாரி

மதியுள்ளமந்திரிமாரே மகிழ்வுடன்சொல்லக்கேளும்
கதிர்மயிலுங்குந்திம்மா தனந்தினில்வந்தேனென்று
பதிபுகழ்பாலராயவன்புள்ள அபுசனுவை
திருவளசமுகத்திற்குச் செங்கையாயழைப்பிப்பீரே

வசனம்.

அகோகேளும் மந்திரிமார்களே சூரியப்பிரகாசம் பொருந்திய மாணிக்க முதலாகியவைகள் பதித்திருக்கிற நம்முடைய நவரத்ந சிம்மாதனத்தில் வந்திருக்கிறேனென்று என்பெரிய மகனாகிய அபுசனுவை இச்சமுகத்தில்வா சீக்கிரமாயழைப்பியும் பிள்ளாய்

மந்திரிசொல்-வசனம்-

அப்படியே அழைப்பிக்கிறோம் பாதுஷா சாகிபே

மந்திரிமார்கட்டியனுக்குச்சொல்கவி.

இ-ம்-நாதநாமக்கிரியை-

பட்டத்தரசர் கட்டளைப்படியே
இட்டுவாசீக்கிரமா கட்டியக்காரா

அபுசனுவருகிறவிருத்தம்-இ-ம்-தூ குலகாம்போதி.

மறைமுடனறங்கட்செய்யும் வகையலிபாதுஷாதன்
நெறிமுறைதவருச்செங்கோல் நடத்துநாயகற்குநேரும்
சிறுவராலுமன்றில்மூத்த சீர்லாக்கொடுமைபூண்ட
அறிவுதமனுவில்லாத அபுசனுவருகின்றானே

தரு-இ-ம்-கன்னியாரி தாளம்-ரூபகம்

தெந்தினதின தெந்தினு தினதெந்தினு தெந்தினு
இட்டமுடனரமனையிலிருந்துவந்தான் சொப்பமா
அலட்டிலுஞ்சியோரிகழ அபுசனுவந்துதோன்றினான் (தெந்தி)
குகம்பாதலையில் பூண்டாக சுகமாய்க்கோலாகலமாகவே
விசையாய்நடந்து அபுசனும் வேடிக்கையாய்வந்துதோன்றினான்

பத்தினிப்பெண்களைக் கண்டவுடன் பாவும்பழி யென்றஞ்சாமல்
அத்தரிமாக்குச்சொடுதென்றகட்டி-அபுசஹுவந்துதோன்றினன் (தெ)
மார்க்கவழியின் றப்பிதமாகவே வாய்வெருட்டாமல் மருட்டியே
யார்க்கும்பொல்லாப் பாவியான அபுசஹுவந்துதோன்றினன் (தெ)
வம்புத்தனமாய்ச்சூதுசெய்து வாராப்பெண்ணைக்கைக்குள்ளாக
அன்பில்லாமல்பார்த்துநகைத்து அபுசஹுவந்துதோன்றினன். (தெ)

பாதுஷாமுன்-அபுசஹுசொல்-விருத்தம்-அசாவேரி,

உலகெலாம்புகழவந்தஉயரலிபாதுஷாவே
நலமதில்கீர்த்திபெற்ற நாயகமானவையா
நிலமதிலென்னையிங்கே நினைத்துநீரழைத்தசெய்தி
பலம்வரமனதில்பேரபிரித்துரைசெய்வாய்சாய்பே.

வசனம்.

அகோகேளும் பாதுஷாவே தாங்கள் அழைத்தீர்களென்று சொலக்கேட்டு நான்வந்தேன் என்னை அழைப்பித்தகாரியம் இன்னதென்றுசொல்லும் அப்படியே நடந்துக்கொள்ளுகிறேன் பாதுஷாவாகிய என்தன்னையே,

பாதுஷா அபுசஹுவுக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

அறிவுள்ள அபுசஹுவே அன்புடன்சொல்லக்கேளும்
குறுகில்லாவீரர்க்கெல்லாங் குணமுள்ள நல்லோரென்று
பரிவுபோல்பாலரோநீர் பண்புடநடப்பீராகில்
சிறப்புடன்புவியிலுள்ள சகலரும்புகழ்வாருமமை

வசனம்.

அகோகேளும் அபுசஹுவே நீநற்குணமும் நல்லநட்புமாகயோக்கியனென்று சொல்லும்படியான நல்ல நட்பானதை யெடுத்துநடந்துவருவீரேயானல் இந்தவுலகத்திலுண்டான நல்லவர் பொல்லாதவர் எல்லோரும் உம்மை நல்லவனென்றுமிகவும் எக்காலமும் புகழுவார்கள் ஆனதால் அந்தநல்லவழியாக நடக்கவேணும் அபுசஹுவே

அபுசஹு-பாதுஷாவுக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-கண்டா

ஆதிதன்னருளால்வந்த அலிபாதுஷாவேகேளீர்
நீதியாய்நடப்பீரென்று நேசமாய்ச்சொன்னதாலே
பாதகமனைத்தும்விட்டு பரிவுடனல்லோரென்று
சாதியோர்பலருஞ்சொல்லச் சங்கையாய்நடப்பேன்பாவா

வசனம்-

அகோ கேளும்பாதுஷா உயர்ந்தநாயகமானவரே இன்றுமுதல் நீர்சொன்னபடிக்கு கெட்டநடத்தைகளை விட்டுவிட்டு நல்லநடத்தையை நடத்தி உலகிலுள்ளவர்க ளெல்லாம் புகழும்படிக்குச் செய்துவருவேன்சாய்பே,



பாதுஷா-மந்திரிக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-முகாரி

அருளுளமந்திரிமாரே யன்புடன்சொல்லக்கேளும்
குருமொழியபுசஹுவுங் கொலுவின்முன்வந்தானென்று
பரிவுள்ளபாலரான பண்புள்ளசமுசதீனை
சரிவுள்ளகமரதீனை சங்கையாயழைப்பிப்பாயே

வசனம்,

அகோகேளும் அபுசஹு கொலுமுன்பாக வந்திருக்கிறானென்று சமுசதீனையும் கமரதீனையும் சிங்காரக்கொலுவுக்கு அழைப்பியும் மந்திரிமார்களே,

மந்திரிகள்சொல்-வசனம்,

அப்படியேயழைப்பிக்கிறோம் பாதுஷாசாய்பே

சமுஷதீனும்-கமரதீனும்வருகிற-பொதுவிருத்தம்-இ-ம்-தோடி,

சமுகத்தொளிவுபோலச் சமுஷதீனெனும்பாலன்
கதிரவனொளிவுபோலக் கமரதீனெனும்பாலன்
முதிரவேபாலர்தாமு முதலவனருளினாலே
அதிரவேசமுகத்திற்கு அன்புடன்வருகின்றாரே,

தரு-ஹு-ம்-தோடி-தாளம்-திரிபுடை

சமுஷதீனும் கமரதீனும் சமுகமுன்வந்தார்
ஆதியருளாலேவந்த அலிபாதுஷாபாலர்
மேதினியோர்புகழ மேன்மைக்கொலுமுன்பாக (சமு)
இருவரிருவருமாய்ச் சேர்ந்துவிளையாடி
பிறழைச்செய்யாதபாலர் பெரியகொலுமுன்பாக (சமு)
சாமுர்பட்டணத்துள்ள சனம்வந்துசலாஞ்சொல்ல
நேமமுடனேபாலர் நிலைதந்தகொலுமுன்பாக (சமு)
தங்கப்பதக்கமின்ன சரப்பளிமார்பிலங்க
அங்கத்தழகுவீச அரியகொலுமுன்பாக (சமு)
யானைக்குதிரைப்படை யாவரும்புடைசூழ
சேனைதனக்குடனே செல்வரிருவருமாய் (சமு)

பாதுஷாமுன்-பிள்ளைகள்சொல்-விருத்தம்-இ-ம்-பைரவி,

படைத்தவனருளால்வந்தபண்புள்ளபாதுஷாவே
அடுத்திடவிருவர்தன்னை யருமையாயழைத்தீரென்று
இடத்துடன்சொல்லக்கேட்டுச் சிறுவர்களிரண்டுபேரும்
சடுத்தமாய்ச்சமுகத்திற்குச்சங்கையாய்வந்தோம்பாவா

வசனம்,

அகோகேளும் இந்தபூலோகத்தையெல்லாம் ஒருகுடையிலாளப்பட்ட பாவாவே,தாங்கள் எங்களிருவரையும் அழைத்தசெய்தி கேட்டுத்,தங்கள் முன்பாகவந்தோம் சாய்பே;

பாதுஷா-பிள்ளைகளுக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-முகாரி

ஜெகதலம்புகழுமைந்த சிறுவரே சொல்லக்கேளீர்
அகமதிற்குரான்கிதாபு அனைத்தையுமோதினீரா
சுகமுடன் குதிரையேறிச் சாரிகள்விடுவதான
சகலமுந்தீர்க்கமாச்சா சமூஷிதன்கமரதினே.

வசனம் — அகோகேளும் சமூஷிதின் கமரதினே நீங்களிரண்டு பேரும் குரான் கிதாபுகளு மோதியாச்சுதா இன்னம் குதிரையின்சாரி, யாவத்தும் மற்றுமுள்ளபயிர்ச்சியெல்லாங் கற்று முடிவாச்சுதா சொல்லும் என்மக்களே,

பிள்ளைகள்-பாதுஷாவுக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி,

அகமியப்பொருளினாலே ஆண்டவனருளைக்கொண்டு
யிருமொழிதவறிடாமல் குரான்கிதாபோதியாச்சு
தருமுள்ள அசுவமேறிச் சாரிகள்விடுவோம்நாங்கள்
சகலமுந்தீர்க்கமாச்சு தனியவனருளினாலே

வசனம்,

அகோகேளும் பாதுஷாவே அல்லாகுத்த ஆலாவுடைய கிருபையினாலும் முகம்மதுநபியுடைய வரிசையினாலும் பீர்ஔலியாக்களுடைய பறக்கத்தினாலும் குரான் கிதாபுகளெல்லாம் ஓதிவந்தோம் பாதுஷாவே,

மந்திரிகள்-கட்டியனுக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

விருதெல்லாமதிர்ந்துகூற மிகுகட்டியக்காரனேகேளாய்
அரசர்கள்புகழ்ச்சிபெற்ற அலிபாதுஷாமுன்பாக
பரதநாட்டியங்களாடும் பண்பினிலதிகமான
தெரிவையர்தம்மையிங்கே சீக்கிரமழைப்பிப்பாயே

வசனம்,

அகோகேளும்பிள்ளாய் அதிக சாமார்த்தியமுள்ள கட்டியக்காரா இராஜாதிராஜர் புகழும் அலிபாதுஷா கொலுவில்வந்திருக்கிறபடியால், பரதநாட்டியங்களி லுயர்ந்தவளாயும் நல்ல இராகப்பரிட்சை யுள்ளவளாயும் மிகுந்த கோடிசூரியப்பிரகாசத்தைப்போல அழகுள்ளவளையும் பார்த்து ஒருநாட்டியப்பெண்ணை அதிசீக்கிரமாயழைத்துவாருமிள்ளாய்,

கட்டியன்சொல்வசனம்,

அப்படியே யழைத்துக்கொண்டுவருகிறேன் சிரோமணியான மந்திரிமார்களே,

நாட்டியப்பெண்கள்வருகிற-பொதுவிருத்தம்,
இ-ம்-மோகனம்,

மயிலினின்வடிவுபோல் மங்கையர்பலருங்கண்டு
குயின்மொழிராகம்பாடக் கொற்றவர்முன்புசெல்ல



தயவுடன்கொலுமுன்பாகத் தங்கநற்பணிகள்பூண்டு
நயகுணபாதுஷாமுன் நாட்டியப்பெண்களும்வந்தாரே

தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-திரிபுடைதாளம்,

நாட்டியப்பெண்களுந்தோன்றினார்-பாதுஷாமுன்னே
நனியப்பெண்களுந்தோன்றினார்
நாட்டியப்பெண்களும்வந்தார் நேசலிபாதுஷாமுன்
ஆட்டமிகஆடவென் றன்னநடைநடந்து (நாட்)

இரத்நாபரணம்பூட்டியே அழகுமிக
இரம்பைபோல்வடிவங்காட்டியே நூக்கதனில்
நத்துபுலாக்குமிட்டு பத்திபழகுபாய
மெத்தவல்லாசமாய்சித்தமகிழ்ச்சிகொள்ள (நாட்டி)

சந்திராரம்பளபளென்னவே மார்புதனில்
தங்கநகைதளதளென்னவே மங்கையர்கள்
செண்டுமாமுலைகள் ரண்டும்புடைத்திடவே
கண்டமணிதாமயல் கொண்டுபேர்பித்திடவே
அரையிலொட்டியாணம்பூட்டியேவளையிழுக
அழகாரவிக்கைமாட்டியே உலகோர்மெய்க்க
ஆடியேபலபலபாடியேராகமுடன்
தேடியேநடனமதைக் கூடியேமனமகிழ (நாட்)

காலிற்சிலம்புகொஞ்சவே நடனமதைக்
கண்டோர்கண்மையல்மிஞ்சவே உல்லாசமதாய்
நல்லநடனஞ்செய்ய எல்லவருமகிழ
வல்லசபைநடுவே மெல்லியர்மயில்போல (நாட்)

பாதுஷா-மந்திரிமாருக்குச்சொல்-விருத்தம்.

அறிவுள்ளமந்திரிமாரே அன்புடன்சொல்லக்கேளும்
தெரிவையர்கொலுமுன்பாகத் திவ்வியநடனஞ்செய்தார்
அரிவையர்தங்களுக்கு ஆடைபொன்னனைத்துமீந்து
திருநடனமனைக்குச்செல்லச் சீக்கிரமனுப்புவீரே

வசனம்.

அகோகேளும் என்னருகிலிருந்து ஆலோசனை சொல்லுகின்றமந்திரிமார்களே நம்முடைகொலுமுன்பாக நாட்டியஞ்செய்த பெண்களுக்கு, ஆடையாபரணம் திரவியமுதலியவைகொடுத்து அதிசீக்கிரமாக அனுப்பிவையும் மந்திரிமார்களே,

மந்திரிமார்-பாதுஷாவுக்குச்சொல்-வசனம்,

அப்படியே அனுப்பிவைக்கிறோம் நவமணியான பாதுஷாவே

மந்திரிமார்-பெண்களுக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி

மன்னர்க்குமன்னரான மா அலிபாதுஷாமுன்
இன்னுலகத்தோர்கள்மெய்க்க இங்கிதநடனஞ்செய்த

கன்னிமாரேயுமக்குக் கனகாபொன்பலதுந்தநீதோம்
கன்னியேயெடுத்து நீங்கள் சுலுதிய யேகுவீரே

வசனம்—அகோ யெளா பாதநாட்டியஞ்செய்த பெண்களே இதோ உங்களுக்குப் பாதுஷா கொடுக்கச்சொன்ன ஆபரணம் திரவியமுதலியவைகளை யெடுத்துக்கொண்டு மனமகிழ்ச்சியாக உங்கள் வீட்டுக்குச் சீக்கிரமாய்ப்போய்ச்சேரும் பெண்களே,

பெண்கள்சொல்வசனம்.

அப்படியேபோகிறோம் சிரோன்மணியான மந்திரிமார்களே சலாமத்து.

அபுசனுவருகிற-விருத்தம்-இ-ம்-எதுகுலகாம்போதி

பரிசுத்தமடவார்கதனை யழித்திடும்பாவியான
தரிசிக்குந்தவத்தின்மேலோர்புனிவெல்லாந் தரித்துக்கொண்ட
உருசிக்குங்கரும்பின்பூப்போல் உயரலிபாதுஷாதன்
அரசுக்குனாஞ்செய்யும் அபுசனுதோன்றினனே

தரு-இ-ம்-தன்னியாசி-தாளம்-ரூபகம்.

தெந்திறு திலதெந்திறு தினதெந்திறு தினதெந்திறு
சட்டையிட்டுச்சருபந்தணிந்து சமர்த்தாய்க்கட்டாரி யிடுப்பில்கட்டி
அட்டதுவிடக்கொடுமைசெய்யும் அபுசனுவந்துதோன்றினான் (தெ)
வீரத்துராக்கையிற்பிடித்து விருதுகோலாகலமாக
ஆரபாரத்துடனே பொல்லா அபுசனுவந்துதோன்றினான் (தெ)
முத்துத்துருச்சொருகி மோகனமாலைசூட்டி
அத்தெரியான்சோதெங்கதட்டி அபுசனுவந்துதோன்றினான் (தெ)
தங்கச்சோடிப்புமிரிவுக்காவும் கனதுபேக்கூடிகொண்டுவர
அங்கத்துடனேமீசைமுறுக்கி அபுசனுவந்துதோன்றினான் (தெ)
குமரிப்பெண்களைப்பார்த்தவுடனே குலுக்கிப்பலுக்கிநகைத்து
அமரிக்கைக்குன்னஞ்சற்றுமில்லாத அபுசனுவந்துதோன்றினான் (தெ)
பயலையழைத்துரகசியமாகப் பார்த்துப்பெண்களைவாவென்றனுப்பி
அயலார்மனையிலஞ்சாமற்புகும் அபுசனுவந்துதோன்றினான் (தெ)
தாய்தந்தைமந்திரிமார்க்கும் தன்குலத்திலுள்ளவர்க்கும்
ஆயுங்குருக்கள்சொல்லைத்தட்டிடும் அபுசனுவந்துதோன்றினான் (தெ)
தனக்கிணங்காதபெண்களைப்பார்த்துசண்டித்தனமாய்ப்பல்லைக்கடித்து
அனாத்தம்பிடிக்கத்தூர்ச்சனஞ்செய்யும் அபுசனுவந்துதோன்றினான் (தெ)
கொடியமாயரிடுவினைக்கிங் குணத்துக்கடுத்தகொடியவனாய்
அடக்காப்பாவப்பழிகள்செய்திடும் அபுசனுவந்துதோன்றினான் (தெ)

அபுசனுவுக்கும்-குடிகளுக்கும்-தர்க்கம்-தரு-இ-ம்-சகானா,

ஆடிப்பாடிவந்தஅரிவையர்தங்களை
அடிக்கக்காரியமென் அபுசனுவே-நீ



அடித்தாவிழ்ந்தங்கள் அதற்குச்சிபாரிசோ
அடிப்பெண்சுவுக்காலே அப்புறம்போடா
அடித்துப்பாருமென்னை அபுசனுவே-நீ
வடிவுள்ளமங்கையரை வலுச்செய்யலாமோ
மங்கையர்தங்களை வலுச்செய்யலாமென்று
உங்களாலாகாது போடாநீபோடா
சொல்வதேன்னவென்று தூர்ச்சனமாகத்
தெல்லதுஉந்தன் வாழ்வரசாலே
வாழ்வரசென்றென்னை வையும்பேயர்களென்று
தாழ்வதுவருவதைத் தருமோசொல்லவாம்
விவரமென்னசொல்லுமுவன் விடுவிடாப்படுத்து
அவமானஞ்செய்வது ஆகாதுங்களுக்கு

பொதுவிருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

அகந்தைகள்மிகவுஞ்செய்ய அரசனார்மகனென்றெண்ணி
பகர்ந்திடும்படியிலுள்ளோர் யாவர்க்கும்பகையனுதி
இகழ்ந்தபேரெடுத்துஅபாரின்ன தாம்பொறுக்கப்போமென்று
உகந்தவர்பொருத்துதெஞ்சில் பொருத்தனர்சிறிதுநாளாய்

ஊரார்வருகிற-விருத்தம்-இ-ம்-எதுகுலகாம்போதி,

உயர்பதிதனிலுள்ளோர்கள் வீடங்கிப்பொழுதுப்பார்க்கப்
பயமில்லாதபுசனுவு மடக்காததுடுக்கின்றித்தே
செயல்செய்தேயொடுக்கதூரா ரனைவருந்திரண்டுகூடி
யியலலிபாதுஷாமுன் னடைந்திடத்தோன்றினாரே

தரு-இ-ம்-தன்னியாசி-தாளம்-ரூபகம்,

சனவிற்கும்பேர்களும்பல சரக்குவிற்கும்பேர்களும்
உவமையில்லாசாமௌனும்பதி யூரார்வந்துதோன்றினார்
ரத்தினத்தொழில்செய்யும்பேர்களும் தங்கநகைவிற்கும்பேர்களும்
உத்தமவளமைசாமௌனும்பதி யூரார்வந்துதோன்றினார்
ஆரியகால்கட்டையங்கிடுவேந்து அழகுமிகுந்தசருபந்தணிந்து
ஊரின்வளமைமொழிகள்சொல்ல வூரார்வந்துதோன்றினார்
ஏத்திகட்டாரிகேடயம்வில்லம்பரி களங்களும்படைச்சக்குடன்
ஒத்துமாலைபலதும்விளக்கும் ஊரார்வந்துதோன்றினார்

ஊரார்-பாதுஷாமுன்சொல்-விருத்தம்-இ-ம்-முகாரி,

எங்களுக்கரசேகோ வாருமேபுகழுமின்ற
சிங்கமேவெற்றிமாலைபுனைமெய்ப்பிரதீருங்கோவே
உங்களுக்கெளியோர் தாங்க ளென்னக்கும்வினண்ணப்பத்தன்னை
யிங்கினிதாகக்கேட்டு யிசைந்தருள்செய்குவீரே

வசனம்—அகோசேனும் பாதுஷாவே சகலலோகத்தாரும்துதி
க்கப்பட்ட கிரிகிடாதிபதியாய் வெற்றிமாலையைத்தரித்த செகபதியா
னபாதுஷாவே தாங்களொரு விண்ணப்பஞ் சொல்லுகிறோம் அதை
எங்கள்பேரில் கிருபாகடாட்சம்வைத்து நாங்கள் சவுக்கியம்பெறத்த
க்கதாகக் கிருபைசெய்யவேணும் பாதுஷாவே,

பாதுஷாசொல்வசனம்.

அப்படியே செய்கிறேன் சொல்லுங்கள் குடியாகவந்து மு
றையிடும் குடிகளே,

குடிகள்-முறையிடுகிற-தரு-இம் தோடி-ஆதிதாளம்,

எங்குமொருசெங்கோலாகச்செலுத்து நெறியுள்ளகோவே
எங்கள்சாமெனுந்திரு பதிவளரலிபாதுஷா சாய்கிப
உள்ளிரக்கம்நெறிநீதம்நிறைந்திடும் வங்கமே வெகு
உத்தமப்பட்டகீர்த்திப்பிரசண்டகோலாகல சிங்கமே
இராசாதிராசர்திசையுளக்குமகா மேருவே உம்மை
நம்பிவந்தோர்களைரட்சித்தனுப்பியிந் தாருவே
உங்கள்தலைமுறைதன்னிலுள்ளோர்வெகு காலமா ஊழ
டங்கலும்மேயவராண்டிருந்தாரனு கூலமா
அந்தவிதமாகவிந்நாள்வரையு நீருமே அர
சாண்டிருந்திர்சுகம்பெற்றிருந்தோமனே வோருமே
மாணும்படியுமொருதுதையிற்றன்னி ருன்னவே இந்த
வையகத்திலும்மைப் போலாருமில்லையென் றெண்ணவே
பெற்றதாய்க்கொண்டு புறத்தியார்க்கொண்டுநீர் பேதகமாய் நீரும்
பேசினதில்லையின் நாள்வரைக்கும் அநீதமா
இந்தவிதமாகவிந்நாள்வரைக்குந்நீர் நாமுமாய் ஊழா
யாண்டிருந்திர்சுகம்பெற்றிருந்தோம் நாமெல்லோருமாய்
இராசாவு மொன்றின்றதந்தையு மொன்றெனுஞ் சேதியால் இப்ப
எங்களைரட்சித்திடுஞ்செங்கோல்நெறி நீதியால்
இவென்றசத்தமிவ்வூரில்லாமலே மாத்திரிர் அலி
பாதுஷாவென்று அரசரெல்லாமும்மைப் போற்றினார்
அரசனாசத்துருவானோனாநீதியால் வெல்லுவீர் எந்த
அரசர்களும்நெறியும்மைப்போலில்லையென்று சொல்லுவார்
இப்படிப்பட்டதுங்கள்நெறிநீதி நீருந்தான் இதை
யெல்லாம்பழிக்கவுமக்குஅபுசனு பிறந்தான்
நெல்லினா கோட்டைக்கு யெலிவளர்த்தகதை போலவே ஐயா
நீரிந்தப்பிள்ளையைப்பெற்றீராகவிலை மாகவே
உத்தமபத்தினிபெண்ணெனுமயச்சமும் விடுத்தான் இந்த
ஊரிலுள்ளபெண்களின் கற்பைவலுவினால்கெடுத்தான்
என்னென்னமாக விருந்தாலும்பூட்டை முடக்கிறான் அவன்



கன்றதாயோடேதன்பிள்ளையைச்சேர்க்காமல்பிறிக்கிறான்
காவலிருந்தாலும் மதிளின்மேலேதிக் குதிக்கிறான் அவ
ன்கவசமாகாத பெண்களை யாளால் சதைக்கிறான்
ஒருகாலிருகால்முக்கால்பொறுத்தோமுமக் கடகவே இன்ன
முள்ளதாள்மட்டும்பொறுக்கலாமோசற்பு போகவே
இந்தக்கிழக்குத்தெருவில்கிழவியின் பேத்தியே அவ
ளின்குடிகெடுத்துவசதப்பியுச்செய்த நேத்தியே
அந்தக்கிழவிச்சொல் மெட்பொய்யென்றநீ ராயவே இங்கே
யழைப்பிக்கிறோமந்தசெய்தியைக்கேளுமென் சாயவே

கிழவிவருகிற-விருத்தம்-இம்-கல்யாணி,

குடிகளிவ்வண்ணமெல்லாங் சொற்றவர்முன்பில்கூற
அடியில்போயவ்மூத்துவாவென்றவட்சொருஆளனுப்ப
கடுகிப்போயவளிடத்தில்சமூறவேகிழவிகையில்
தடியுடனடந்துபாதுஷாமுனத்தோன்றினளே

கிழவிவந்தாளே-கூனிக்கூனி-கிழவிவந்தாளே

கிழவிவந்தாளே பழையத்துணிகள்
கிழித்ததைக்கட்டி விழுந்துதள்ளாடி (கிழவி)
உலக்கைசுரக்காய்பொருந்துநின்ற
ஒடுக்கத்தவள்போலே கண்களிரெண்டுநோக்கவே
கலக்கமாகவேதள்ளாடித்தள்ளாடி
கால்கைநடுங்கிடமேனுமொடுங்கிட (கிழவி)
முழுதுமேனியுஞ்சரடுபோலவே
முள்ளடைக்கப்பின் கொண்டைதெரியவே
செழுமைமாறதிலொழுங்காய்வைப்பெற்றடி
தேங்காய்போலவே தலைதெரித்திட (கிழவி)
கண்களில்வந்து கோர்க்கள்மொய்க்கவே
காதுமடைத்திரு கண்ணுமிருட்டியே
புன்னுப்புன்னகை விழுந்துயிரும்பியே
பொக்கவாய்தன்னையே சப்பிசைமுன்னே (கிழவி)
காட்டுமோட்டென்று தொண்டையடைத்திடக்
காச்சுமூச்சென்றவள் பேச்சுக்குளறிட
வரட்டுநரிபோல குருட்டுக்கொக்கைப்போல
கொற்றவர்சபையில் முற்றமூழைத்திட (கிழவி)

கிழவி-பாதுஷாவுக்குச்சொல்-விருத்தம்,இம்-தோடி,

உலகெலாங்கோல்செலுத்தியுயர்புகழ்பாதுஷாவே
நலமதில்கீர்த்திபெற்ற நாயகமானவையா
நிலந்தனிலெளியாள்தன்னை நினைத்துநீரழைத்தகாரி
யமுழுதுமவர்களுக்குப் பிரித்துரைசெய்குவீரே

வசனம் - இவ்வுலகமெல்லாம் ஒருசெங்கோலி லாளப்பட்டமகா ராஜசிங்கமே தாங்கள் என்னை அழைத்தகாரியம் இன்னதென்றுசொல்லவேணும் பாதுஷாவே,

பாதுஷா-கிழவிக்குச்சொல்-விருத்தம்-இம்-முகாரி,

என்றனைப்பெற்றதாய்போ லிருக்கின்றவம்மைகேளாய்
இன்றிராவினி லென்றன் மனையிடத்தினிலேவந்து
மன்றல்சேர்பெத்திதன்னை வம்புசெய்திருப்பதுண்டோ
என்றவிச்செய்தியெல்லா மென்முன்னேயுரைசெய்வாயே

வசனம்,

அகோகேளும் என்னைப்பெற்ற தாய்போலிருக்கின்ற அம்மையே யின்றையத்தினமிரவிலென்மகன் அபுசரு உன்வீட்டிலயாதொரு துன்மார்க்கஞ்செய்ததுண்டோ அதையெனக்குத் தெரியச் சொல்லம்மா தாயே,

தரு-இம்-நீலாம்புரி-ஆதிதாளம்,

சொல்லுகிறேன்கேளேன் — பெத்தியே ஐயா
தூங்கக்கதவை நான் — சாத்தியே
நல்லநித்திரைவெகு — நேத்தியே அப்பா
நலங்கெட்டதன்னுரு — பாத்தியே
மல்லிடவந்தவர் — கைக்கொட்ட எந்தன்
மெல்லியாளுடம்பொல்லி — கொத்திட
வல்லவர்சொங்கையைப் — பிடித்திட - அவள்
மன்னவன்கைதன்னை — யெடுத்திட
பதறியெழுந்துநான் — பார்க்கவும் - அவன்
டையச்சவரேறிக் - — குதிக்கவும்
கதறியென்பெத்தியும் — பதைக்கவும் - அவன்
காலவனவினிறேன் — வதைக்கவும் -
இச்செதிதூரார்க்குச் — சொல்லவும் - ஊரார்
இதையாரால்முடியாது — சொல்லவும்
அச்சேதிகேட்டவர் — சொல்லவும் - குமா
அவனுடனின்றாம் — புல்லவும்
அப்போதுஆர்க — ளையனே - இதை
அதிக்கவிடச்சொன்னோர் — துய்யனே
இப்போதுரைத்திட்டேன் — மெய்யனே - இதை
இன்பமாய்கேட்டிடு, — மையனே

கிழவிபாதுஷாமுன்-சொல் விருத்தம்-இம்-சாவேரி,

அரசருக்கரசாய்வந்த அலிபாதுஷாவேகேளீர்
இரவினில்பெத்தியாளும் நித்திரைசெய்யும்வேளை



பிரியமாய்ப்பெத்திதன்னைப் பிடித்தலக்கழிவுசெய்த
ஒருத்திருன்விழித்துக்கூட வெளைவேறோடிப்போனான்

வசனம்-

கேளும்பாதுஷாவே நானும் என்பெத்தியும் தூங்கும்வேளையில் என்பெத்தியைக் கையைப்பிடிக்கவும் அவள்திடுக்கிட நான் கண்டுகூக்குரலிட்டவும் சுவரேறிஓடிப்போனான் இங்கயே

பாதுஷா கிழவிக்குச்சொல் - விருத்தம் - இம் - மோகனம்

நவமணிக்கதாயேயுன்னை நடுங்கவல்லவாறுசெய்தோன் *
அவனுமென்னிடத்திலில்லை யப்புறமோடிப்போனான் *
கவலையாயவன்றனக்கு கண்டிப்புசெய்கிறேநான் *
திசைதீரவேவேண்டாம் வீடுபோய்சேருமம்மா *

வசனம்,

அகோ கேளுமம்மா என்னைப்பெற்ற தாய்போலிருக்கிற அம்மையே உன்னையும் உன்பெத்தியையும் தூஷணம்செய்த அபுசரு என்னிடத்திலில்லாமல் எங்கோடவோ ஓடிப்போய்விட்டான் அவனைப்பிடித்து அவனுக்குத்தகுந்த தண்டனைசெய்கிறேன் நீ உன்வீடு போய்ச் சேருமம்மா தாயே.

கிழவிசொல் , வசனம்.

அப்படியேபோகுறேன் பாதுஷாவே.

மந்திரிமாருக்கு பாதுஷாசொல் - விருத்தம் - இம் - அடாணா

மந்திரிமாரேகேளீர் மன்னவர்தன்வயிற்றில் *
சந்ததியாய்ப்பிறந்து தரணியோர்தமைவதைக்கும் *
அந்தமாமபுசருவை அதாலத்துச்செய்யு நீங்கள் *
புத்தியுமிழும்போ பூதலம்புகழுமென்னை, *

வசனம்.

அகோகேளும் மந்திரிமார்களே என் ஆசைக்கு ஈனமான அபுசருவினுடைய துர்ச்சலமெல்லாமடங்க அதாலத்துசெய்தால் என் மனமும் ஊரார்மனமும், சந்தோஷிமாளும் வசீர்களே.

மந்திரிமார்சொல் வசனம்,

அப்படியேசெய்குறோம் பாதுஷாநாயகமே.

மந்திரிமார் கட்டியனுக்குச் சொல் - கவி.

விரைவையதாலத்துக் காரனையிங்கே
இரணக்கட்டியக் காரனையழைப்பாய்.

கட்டியன் சொல் வசனம்

அப்படியே அழைத்துவருகிறேன் வசீர்மார்களே,

அதாலத்துக்காரன்வருகிற - விருத்தம் - இம் - சங்கராபரணம்

துடுக்குகள்மிகவுஞ்செய்யு துரோகியாய்ப்பெரியண்டத்து *
இடக்குகள்செய்வோர்தம்மை யிரண்டுதுண்டாவடித்து *

மடக்கிவிசையம்பெற்ற மைந்தர்கள்கெருவந்தன்னை *
அடக்கிடும்பொல்லாவீர அதாலத்துதோன்றினனே *

தரு - இ-ம் - காம்போதி - ஆதிதாளம்.

வந்தான் அதாலத்துவீரன் வந்தான் - பாதுஷாமுன்னே
வந்தான் அதாலத்துவீரன் வந்தான்,
துடிசெய்யுஞ்சாமூர்த்தனில் - துற்சனங்கள்செய்பவரை
அதிகாரத்துடனடக்கும் - அதாலத்துசெய்யுங்குரான் (வந்தான்
சொலுமுகங்கொடாகோல்ம் கொக்கரித்து ஆர்ப்பரித்து
வலுச்செய்வோரையடக்க மகாராஜர்சபைமுன்னே (வந்தான்)
மைந்தரில்மூத்தபிள்ளை - வலுச்செய்யும்அபுசனுவின்
சிந்தையிக்கலங்க சீறிதிடனே (வந்தான்
பத்தினிப்பெண்கள்தம்மைப் பார்த்துநகைத்துப்பேசும்
அத்தனைபேர்களையுஞ் சித்தங்கலங்கடிக்க (வந்தான்)

பாதுஷாவை - அதாலத்து போற்றி - விருத்தம் - இ-ம்-தோடி.

மன்னவோபோற்றிபோற்றி மாதவத்தவரோபோற்றி *
மின்னொளியரசேபோற்றிமேன்மைசேர்தருவேபோற்றி *
நன்னெறிமன்னுபோற்றி நாயகவிளக்கேபோற்றி *
என்னைநீரழைத்தசேதி யெடுத்துரைசெய்குவீரே.

வசனம்.

அகோகேளும் இவ்வுலகையாளப்பட்ட பாதுஷாவுக்கெல்லாம் நாயகமான பாதுஷாவே என்னைத்தாங்கள் அழைப்பித்தசேதி யின்னதென்று தெரியச்சொல்லவேணும் பாதுஷாவே.

அதாலத்துகாரனுக்கு பாதுஷா சொல் வசனம்.

அகோகேளும்அதாலத்துக்காரா பெண்கள்கற்பையழிக்கின்ற அபுசனுவினுடைய கெர்வமெல்லாமடங்கத் தேடிப்பிடித்து அதாலத்துச்செய்யும்பிள்ளாய்.

பாதுஷாவுக்கு - அதாலத்து சொல்வசனம்.

அப்படியேசெய்கிறேன் பாதுஷாவே,

ஊரார் பாதுஷாவுக்குச்சொல்- விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

இத்தனைநாள்வரைக்கு மிசைத்தசேதிகளையெல்லாஞ் *
சற்றுமெண்ணுகிருந்தீர் சபைதனில்கிழவிவார்த்தை *
முற்றுமேயறிந்தீர்நாங்கள்மோசமாஞ்சொன்னேனுஞ்சாய்பே *
அற்றிடஅபுசனுவை யடக்கிதெண்டனைசெய்வீரே *

வசனம்.

அகோகேளும் பாதுஷாவே இதுவனாக்கும் நாங்கள்செய்த விண்ணப்பமெல்லாம் பொய்யென்றிருந்தீர் இனிமேலாகிலுங் குறும்புசெய்கிற அபுசனுவை தெண்டனைசெய்து அடக்குமைய பாதுஷா சாகிபே.



பாதுஷாவுக்கும் - குடிகளுக்குந்தர்க்கம்,

தரு - இ-ம்- சங்கராபரணம் - ரூபகதாளம்.

என்னையடக்கச்சொன்னீ ரெனக்கடங்காதவன்
றன்னையடக்கியாள்வீர் சாமிலுள்ளோரே

குடிகள்சொல் - தரு

சாமினிருள்ளவரா லவனையடக்கப்போமோ
பூமியிலில்லாத பொல்லாங்குசொன்னீர்

பாதுஷா சொல் தரு,

பொல்லாங்கல்லவோவூரார் புத்திகற்பிப்பது
நல்லதுதான்காணும் நாட்டிலுள்ளோரே,

குடிகள் சொல் தரு,

நாட்டினிலுண்டானோர் ராஜாக்கள்பிள்ளையை
கூட்டிதெண்டிப்பது குடிகளுக்காமோ,

பாதுஷா சொல் தரு

குடிகளுக்கரசர்கள் குற்றங்கள்செய்தாலும்
படியாளுமரசர்கள் ப[illegible]டவேண்டும்

குடி[illegible]ல் தரு,

இராஜாக்கள்பிள்ளை[illegible]கள்தெண்டனைசெய்ய
அச்சமொன்றில்லைம[illegible] அதைச்சொல்லுமையா

பாதுஷா சொல் தரு

சொல்லுமென்றீரே நானென்னசொல்லப்போறேன்
கொல்லுமவனைவெட்டி குடியானபேரே

குடிகள் சொல் தரு,

இப்பால்குடிகள் கொலைசெய்யவொண்ணாது
அப்பாநீர்செய்யும் அலிபாதுஷாவே

பாதுஷா சொல் தரு,

அரசனென்றெனைச்சொன்னால் அவனைக்கொல்லவருமோ
மருகாலெனக்கு மனந்துணியாதே

குடிகள் சொல் - தரு,

துணியாதென்றாலந்தக் கூட்டமுடனீரும்
மணியாசனம்விட்டு மறுதேசம்போவீர்

பாதுஷா - குடிகளுக்குச்சொல் - விருத்தம் - இ-ம் - காம்போதி

எந்தன்சிம்மாதனத்தை யிழந்துநீர்போகச்சொன்னீர் *
அந்தமாங்குடியானோரே யன்புடன்போகிறேநான் *
சொந்தநாயகியுங்கூடத் தொகுப்புடனேபோறோம் *
இந்தவூர்தனிலேநீங்கள் ளியல்புடன்வாழுவீரே *

பாதுஷா சொல். தரு - இ-ம் - தேசிகம் - ரூபகதாளம்.

ஊரிலுள்ளோரேவெகு ஜனங்களேநானிப்போ

உடைப்பகைநீங்கேளும் ஊராரே.
பேர்புகழாகவே பெண்பிள்ளையுடன்
பிறதேசம்போறேனையா ஊராரே
யாருக்குநன்மையாக யிருந்தவயந்தனுக்கு
அபுசனுதான்பிறந்தான் என்
பேனையழிக்கவே பிள்ளைபிறந்ததால்
பிறதேசம்பேறேனையா ஊராரே
சாதெக்கர்லமும் சாமூருபட்டணம்
தனையாண்டிருந்தேனே இப்போ
தாராளமாகவே பூர்விட்டுப்போவென்று
தான்சொல்லுவதுமாச்சே ஊராரே
போனபிள்ளை அபுசனுதன்னாலே
பிறதேசம்போகச்சொன்னீரே நீங்கள்
சேனைமந்திரிமாருங்கருத்தொத்து
சேர்ந்துமேவாழ்ந்திருங்கள் ஊராரே
அலிபாதுஷாவென்று சாமூருரா ...யம்
அரசாண்டு நானிருந்தேன் இப்போ
மெலியாமல்நீங்க ளெனைவொருமொத்தமாரு
மனதாயனுப்பவேணும் ஊராரே
நலியாதபுகழ்கொண்ட சாமூருராச்சியம்
நானாண்டிருந்தேனே இப்போ
பலிவருகொடுமைசெய் திடுமதனால்நாங்கள்
மறுதேசம்போய்வாறோம் ஊராரே
என்பிள்ளைமேற்குற்றஞ் சொல்லதோஷமில்லை
யிறைவன்செய்ததற்கு அந்த
ஆண்புலிபிள்ளை கருத்தடக்காததால்
அதாவைநமக்குக்கொடுத்தான் ஊராரே
வட்டுகள்செய்து அருள்செய்யும்பிள்ளையென்
வயத்தில்பிறந்ததினால் வெகு
தெம்புடனே நீங்க ளூராரெல்லோருமாய்
தேசம்விட்டகலச்சொன்னீர் ஊராரே
அழியாதவல்லத்துவா மல்லாவைநோகாமல்
நல்லானைநோவதென்ன நீங்கள்
செழிப்பாய்மனமொத்துச் சித்தமகிழவே
உத்தாரவேதருவீர் ஊராரே
புத்திரனாக வெனக்குஅபுசனு
பிறந்தானாசிழக்க ஊரில்



பத்தினிப்பெண்களுடசாபம்வந்து
பலித்ததுவெந்தனுக்கு ஊராரே
தோஷந்தீர்வதற்குப்பள்ளிவாசலெல்லாஞ்
சுற்றித்தொழுதுவாரோம் ஊராரே
பாசமறவாமல்நேசமுடனேநீங்கள்
பார்த்தனையாண்டிருங்கள் ஊராரே
ஆசையுள்ளசாமூர்பட்டணந்தன்னை
அடைக்கலமாகவைத்தேன் நீங்கள்
இராஜநீதியுடனரசாண்டிருப்பீர்கள்
நாங்களும்போய்வாரோம் ஊராரே

பாதுஷா-ஊராருக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

மாலைசடரியத்தின் மைந்தனையபுசனுவும்
வாசமாம்பிறந்துமங்கே மார்வனுஞ்செய்ததாலே
பேசவாயில்லாமல்நாம் புறப்பட்டுப்போறேம்நானே
தேசமேயாளுநீங்கள் சிந்தையுமிகமகிழ்ந்து

வசனம்,

அகோகேளும்ஊராரர்களே என்னுடைய சிங்காதனத்தை விட்டு போகச்சொன்னீர்கள் அதற்குநானும் அப்படியே என்பெண்சாதி பிள்ளைகளையுங் கூட்டிக்கொண்டு நாளையதினம் போய்விடுகிறேன் நீங்கள் மனமகிழ்ச்சியுடனே சாமூர்பட்டணத்தை யாண்டுக்கொண்டு சுகித்திருங்கள் என்னுடையபிள்ளை அபுசனுசெய்த தோஷந்தீர்வதற்கு பள்ளிவாசல்களைக்கண்டு தொழுதுக்கொண்டு வருகிறோம் என் பேரில் பட்சம்விடாமல் ஒருமனதாக யெங்களை யனுப்பிவையுங்கள், ஊராரர்களே,

ஊரார்பாதுஷாவுக்குச்சொல்-விருத்தம் இ-ம்-காம்போதி,

அலிபாதுஷாவேநாங்க ளறியாமற்சொன்னேமையா
வலியாகிழந்துநீரு மறுதேசம்போகவேண்டாம்
மகிவுறுகொடுமையாயுன் மைந்தனுல்வந்ததையா
சலிப்பில்லாதிருந்துநீரும் சாமூரையாளுவீரே

வசனம்,

அகோகேளுங்கள் பாதுஷாவே தங்கள் பிள்ளைசெய்கிறதுர்மார்க்கமெல்லாஞ் சொல்லிக்கொண்டோம் இதுவரைக்கும் பொறுத்தாப்போல் இன்னம்உம்மைவேண்டி பொறுத்துக்கொள்ளுகிறோம் உம்மைப்போல நீதியாளப்பட்ட பாதுஷாக்களை நாங்கள்கண்ணிலுங்காணோம் உம்மைப்போலயாருமெங்களுக்குக் கிடைக்கவு மாட்டார்கள், ஆகையால்நீரேயிருந்து சாமூராச்சியத்தை யாண்டிருங்கள் பாதுஷாவே,

பாதுஷா-ஊராருக்குச்சொல்.விருத்தம்-இ-ம்-தோடி.

ஆருமென்றனைத்திரித்தீர்கள் அபுசறுசெய்யுந்துஷ்ட
நாளுமேபொறுத்திரின்னம் ஞாயமோபொறுப்பதற்கு
தாழ்மையைச்சொல்லிநீங்கள் தடுக்கவேவேண்டாம்போதா
வாழ்வினிச்சதமென்றெண்ணி வார்த்தையைத்தப்பொணுதே

(வசனம்) அகோசேனுங்கள் ஊரார்களே நம்முடைய அபுசறுசெய்யுந் துஷ்டத்தனமெல்லாம் நம்மைப்பற்றி பொறுத்தீர்கள் அதன்பின் உங்கள்மனதுதாளாமல் சாட்சியுங் கொண்டுவந்து ஒப்பித்தீர்கள், நம்மையுஞ் சிங்காதனத்தைவிட்டுப்போகச்சொன்னீர்கள் அதற்கு நானுஞ் சம்மதித்துசிம்மாதனத்தைவிட்டுகீழேயிறங்கின பிறகுவாழ்வைப் பெரிதென்று யிருந்து விட்டால் வாக்குதப்பிப்போகிறது ஆகையால் பிள்ளைசெய்த தோஷத்திற்குள்ளிவாசல்களைக்கடந்து தொழுதுகொண்டு தேசாந்திரஞ்சுற்றி வருகிறோம் நீங்கள் சுகித்திருக்குணுர்களே,

அபுசறுபுலம்பல்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

முன்மொழிவாகவூரார் மொழிந்தலிபாதுஷாதன்
பொன்முடியிழந்துவேறோர் தேசமேபோகவென்று
தன்மனதிலெபெண்ணிச் சாற்றிட அபுசறுவும்
புன்மையேமனதிலெண்ணிப் புலம்பியேசலிக்கிறனே

தரு-இ-ம்-கண்டா-ஆதிதாளம்.

விதிவிறுலெத்தன்மதிகெட்டுநான்செய்த
வினைவிறுலென்றன்பதி யிழந்தேனே நம்மை
கொதித்துத்தாய்தந்தை காணியரசிழக்க
சுடுவிட்டகுளவிபோல் கேடுகெட்டேனே
செப்பிழைத்திடுமந்தியைப்போலவே
குற்றஞ்செய்துயிர் உற்றமிழந்தேனே
ஊர்க்குமாகாமல்தாய் தந்தைக்காகாமல்
உடையுமரக்கலம்போல் கெட்டடைந்தேனே
செய்ததிவினைசெய்வதற்கேவந்து
சேருமென்பதைநான் கண்ணிற்கண்டேனே
பிறவிச்செல்வமாயிருந்ததும் போயென்னை
பேசிநகைக்கப்பிறந்தேயானேனே
என்றன்றுலென்றன் தந்தையரசிழந்து
யேகித்திரியத்தவம்வாங்கிவந்தேனே
உத்தமப்பெண்கள் சாபத்தாலேயிந்த
ஊர்க்காகாதவனுக்காகுவேனே
முட்டுண்டேதிரிவ னெனத்தாய்தந்தை
முன்னுள்சொன்னதை இந்நாளறிந்தேனே



ஐயையோபெரியோர்சொல்லைத்தட்டிட
அனியாயம்பலித்ததோ யினியென்னசெய்வேன்

அபுசறுபுலம்பி-ஊர்விட்டு-வெளிப்பட்ட-விருத்தம்,
இ-ம்-காம்போதி,

அறநெறிமுழுதுமாதி அபுசறுவென்னும்பேரான்
திறனுடனாம்பன்செய்த தீவினைபலித்ததாலே
யிறக்கவோர்ப்பேயாகிறு பின்னைசெய்வேன்சிந்தித்து
புறநகர்தேசத்தின்னில் போவதற்கெழுந்தானே,

தரு-இ-ம்-ஆஹிரி-ஆதிதாளம்.

ஆகமெபொருளுண்டான ஆலமுடைத்தவனை
ஏகமதானிறைந்த யிறைவனைமறைவில்லோனை
பொல்லாதவனென்றுயென்னை பிறப்பித்தாயோபூமியிலே
நல்லவர்முன்னின்றுபேச நாணுதேயென்மனதிப்போ
ஊர்தனக்காகாதவனு உடம்பெடுத்தேனுலகுதன்னில்
யார்க்குமாகாதவனு யாண்டவனேயென்வகுத்தாய்
அலிபாதுஷாதன் வயிற்றில் அபுசறுவாய்வந்துபிறந்தேன்
வலியவரசிழைக்கச்செய்த மைந்தனென்றுபேருண்டாச்சே
சர்மூருபட்டணமாளும் சபூரியத்தம்மாள்வயிற்றில்
ஆமெனுமாண்பிள்ளையாக ஆண்டவனேயென்வகுத்தாய்
தந்தைதாயரசிழக்க தான்பிறந்தேன்பிள்ளையாக
எந்தனுக்குப்பேரில்லாவிதியோ.யெழுதிவிட்டாயாண்டவனே
பிள்ளையாலேதேசம்விட்டு புறப்பட்டுநான்போறேனென்று
உள்ளவர்கள்சொல்லவேதான் உடம்பெடுத்தேன்பூமியிலே
சபூரியத்தம்மாள்வயிற்றில் தவசறுலேயான்பிறந்தேன்
அபுசறுவாய்யான்பிறந்து அலையவைத்தேன்பூமியெல்லாம்
துய்யவனேசோதியோனே துலங்கிநின்றமெய்யவனே
நூயனுஞ்சீமைவிட்டு ஆண்டவனேபோறேனிதோ
இட்டமுடன்தேசத்தோரே யிருங்களெல்லோருமாக
துட்டத்தனமாகநானும் துரோகங்களைச்செய்தேனென்று
அட்டதிசையோர்புகழும் அலிபாதுஷாவுடனேசொன்னீர்
மட்டில்லாத்துயரத்தோடே வெட்டுமென்றுமங்கள்பாவ
ஆகாதென்றுசொல்லிநீங்கள் அரசிழந்துபோகச்சொன்னீர்
வாசிலாமலேசிறுனும் வந்தசாமூர்தகாவாயாள்வேன்
பத்தினிப்பெண்களைநானும் பகைசெய்ததோஷத்தாலே
இத்தலத்தில்தாய்தந்தைமுகம் இறைவனேபோறேனிதோ
யாருஞ்செய்யாததோஷம் நான்செய்தேனேயாண்டவனே
பாருலகிலுள்ளபேர்கள்பட்டம்விட்டுப்போகச்சொன்னார்
தாய்தந்தைக்காகாதவனுய் தான்பிறந்தேன்பூமியிலே

காய்பேசாதிருப்பாருரார் வழக்குரைத்தாரொன்பதிலே
தேசாதிதேசத்தோரோ சீமைவிட்டுப்போறேனிப்போ.
வாசமாநீர்சாமூர்தன்னில் வாழ்ந்திருக்கவெல்லோருந்தான்
சிந்தைகலங்கிநானும் தேசம்விட்டுப்போறேனிதோ
எந்தன்பேரில்கிருபைவைத்து யிறையவனேகாக்கவேணும்
ஆனதந்தைதாய்தம்பியும் அவர்களைத்தேசம்போனாலும்
நானுமாகவழிநடந்து நலமுடனேகூடவேணும்

சபுரியத்து அம்மாவருகிற-விருத்தம்-இ-ம்.மோகனம்,

தங்கநல்பணிகள்பூண்டு சதுரமுக்காடுயிட்டு
அங்கமுந்தெரிந்திடாமல் அரிவையர்கள்புடைசூழ
மங்களமிகசெழிக்க மாமனைதன்னைவிட்டு
சங்கையும்வெற்றிபெற்ற சபுரியத்தம்மாவந்தாளே

தரு-இ-ம் பரிசு-ரூபகதாளம்,

நன்னன்ன நா நன்ன நன்னன்ன நா நன்ன
நன்னன்ன நா நன்ன நா நன்ன நானு
நடந்துதோழிகள் நாலுபக்கமுஞ்சூழ்ந்து
நாரியர்வாழ்த்திவர அம்மணிக்கு — நாரியர்
அடர்ந்துவெண்சாமரை அன்னமொழியார்வீச
அம்மாவாராளே சபுரியத்து — அம்மா
பொன்னிறப்பல்லக்கைப் பூவாலலங்கரித்து
பூவைமாதர்தாங்கிவர அம்மணிக்கு — பூவை
மின்னலொளிபோல மேனிநகைகள்மின்ன
வேதியர்வாழ்த்திவர அம்மணிக்கு — வேதியர்
காலில்சிலம்புகள் கலீல்கலீலென்ன
காரியர்சூழ்ந்துவர அம்மணிக்கு — காரியர்
ஆலகாலம்போலே ஆனவிழிதனக்கு
அஞ்சனமிட்டுவர அம்மணிக்கு — அஞ்சன
காலுக்குமெத்தியிட்டு காலில்பீலாழிதொட்டு
காரியர்சூழ்ந்துவர அம்மணிக்கு — காரியர்
அலங்கள்மொய்க்கவே அன்னமொழிமடவார்
ஆலாத்தியெத்திவர அம்மணிக்கு — ஆலாத்தி
புத்திரன்தன்னாலே சித்தமிகவும்நொந்து
பூவையர்கூடவர அம்மணிக்கு — பூவையர்
பத்தினிமார்கள் முத்தம்பணிந்துபோற்ற
பாவலர்கூடவர அம்மணிக்கு — பாவலர்
பட்டுப்பட்டாவளிகள் பளீல்பளீலென்ன
பகல்வத்தியெத்திவர அம்மணிக்கு — பகல்



வட்டமுலைமாதர் வாரியெடுத்திடவே
வந்தாளேஅம்மா சபுரியத்து — வந்தாளே

அலிபாதுஷாஉளாவிட்டு-வெளிப்பட்டுவருகிற-விருத்தம்,
இ-ம்-பந்துவராளி

சிந்தையில்வெண்பட்டுந் திரவியமெடுத்துக்கொண்டு
சந்திரவதனமான சபுரியத்தம்மாள்கூட
மைந்தர்களிரண்டுபேருந் மனைவியுந்தானுமாக
அந்தநல்தருமநீதி அலிபாதுஷாவெளிப்பட்டாரே

தரு-இ-ம்-சண்டா-அடதாளம்,

அரமனைவிட்டுவெளியில்வருகையில்-நகமானே — காகம்
அலறிவந்தடிக்க ஆர்ந்தைகுழருதே — இறையோனே
குருசாய்நடக்கநாம் சேர்ந்துவருகையில் நகமானே — எதிர்
அன்பமாய்க்கரும்பூனைகுறுக்கேயிருக்குதே — இறையோனே
மேடைசிம்மாசனம்விட்டுவருகையில் நகமானே — எதிர்
காடையுங்கட்டுக்காரணமென்னமோ — இறையோனே
ஆடைநகைப்பணமநேகமிருக்குது நகமானே — எதிர்
ஆகாதசகுனங்களாகுதேயென்னசெய்வேன் இறையோனே
செங்கோலிழந்துநான்தேசங்கள்போகையில் நகமானே — எதிர்
தங்கவேலைசெய்யுந்தட்டானெதிர்வாரான் — இறையோனே
தங்கநகைகளனேகமிருக்குது நகமானே — போகும்
தடத்தினிலென்னவினைவந்துகுறுமோ — இறையோனே
கடைவீதிவிட்டுக்கடந்துவருகையில் நகமானே — கண்ணில்
நரையானுங்கட்டுநல்பாம்புகுறுக்காச்சு — இறையோனே
நடைவீதிதன்னில்நலிவரோபெண்பிள்ளை நகமானே — இது
நானறியேனுந்தனுட்டப்படியாகும் — இறையோனே
வீதிகடந்துவெளியில்வருகையில் நகமானே — எதிர்
வேதியனொருவன்வியாதியுடன்வாரான் — இறையோனே
சாதியென்னத்தலையில்விடியுமோ நகமானே — இது
தப்பிமுடியாதுவொப்பனையாயிது — இறையோனே
ஆதிமுதற்பிள்ளை அபுசனுதன்னாலே நகமானே — இப்படி
அவதிப்படயெனக்கருளிறையோபிள்ளை — இறையோனே
வேதனையெல்லாம்விடாதேயகற்றுவாய் நகமானே — நாங்கள்
வெற்றிபெறமுற்றும்வைத்துக்கிருபைசெய் — இறையோனே

பாதுஷாபுலம்பல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி,

காமதைவிட்டுநீங்கள்-சகுனங்களாச்சுதென்று
நாமினித்திரும்பிப்போக ஞாயமல்லோ நமக்கு
ஆமினியூரார்க்கெல்லாம் அவசத்தியமாகுமிப்போ
தாமிசயில்லாமலேநாம் தனியோனைநினைத்துச்செல்வோம்

தரு இ-ம் ஆனந்தபைரவி-ஆதிதாளம்,

ஐயையோ பாவி புவியாண்டபலனிதுவே
பிள்ளைபெற்றபலனிதுவே
பஞ்சணைமெத்தையின் மேலடிவைத்திட்ட
பாதஞ்சிவந்திடுமே
சஞ்சலத்தாலே சபுரியத்தேதீ
தள்ளாடியேநடக்க
கொஞ்சுங்கிளிபோல வஞ்சகிவாடிங்
குலாவுங்குயில்மயிலே
பிஞ்சிநடக்கையிலுன்னுடமேனியில்
வேர்த்துஜலமொழுகுதே
பஞ்சவர்ணக்கிளிபோலமொழிபேசிடும்
பாலகர்கூடிவர
அஞ்சியடிவைக்கமாட்டாமல் கெஞ்சுதே
ஐயோவென்னசெய்வேன்
சத்தியந்தவறாமல் சாமூருபட்டணந்
தன்னையாண்டிருந்தோமே
சத்திசலமாயிறையவனைத்தொழுது
பெண்ணிதவஞ்சகஞ்செய்தோம்
புத்திரனுண்டாச்சு எனக்குஅபுசனு
பின்னேபிறந்ததனால்
மித்திரனாகவே பத்தினிப்பெண்சனை
விரதாபஞ்செய்ததினால்
குற்றமதாகவே ஊராரெல்லார்தம்மைக்
கூடியேதள்ளிவிட்டார்
பெற்றபிள்ளைசெய்தகுற்றத்தினால்நாமும்
பேசவாயில்லாமல்
விஸ்தாரமாகிய அரண்மனை நாங்கள்
விட்டுவெளியில்வந்தோம்
கஷ்டப்படுதப்பூஇந்தநாளையிலே
காட்டிவைத்தார்நமக்கு
பங்கயமான அபுசனுபேரிலே
பட்சமுமுண்டெனக்கு
எங்கேபோயிருந்துண்டுதிரிவதோ
என்றுநான்காணப்போறேன்
வானம்படைத்தயிறையவனுக்கிபிள்ளை
வந்துசேரவேணும்



கானகம்விட்டொருபட்டணம்போய்ச்சேர்வோம்
அதேநடந்துவாங்கள்
தாரணிமீதினில்பெண்டுபிள்ளையுடன்
தவிக்கவிதியாச்சே
காரணமாகயென்னவிளையுமோ
காவலன்காத்தருள்வாய்

சபுரியத்துடலம்பல்-விருத்தம் இ-ம்-காம்போதி,

நடந்திடாப்பாலரேயென் நவரத்நமணியேமக்கள்
சடந்தெங்கள்பின்பிலோடிக் காட்டினில்வேர்வைசிந்த
அடர்ந்துநீவரவேநாயன் தொகுத்திப்மைவகுத்திட்டானோ
படர்ந்திடாமகனேயென்று பதறிவாள்கதறுவாளே

தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்,

பத்துமாதம்சுமந்தவயிறதுஎந்தன்மகனே
பத்திஎரியுதேயென்ன செய்வேன்டா அப்பாமகனே
மெத்தைமீதில்நடந்துவந்திரோபெற்றமகனே
குத்துதேதாடாகாலில்கள்முள்ளு அப்பாமகனே
உடலில்வேர்வைவேர்த்துமொழுகுதேஎந்தன்மகனே
உருகுதேமேனி கருகுதேன்செய்வேன் அப்பாமகனே
நடையில்மணல்கள்சுடுதோகாலில்எந்தன்மகனே
நலியுதேமேனிமெலியுதேன்செய்வேன் அப்பாமகனே
தங்கப்பிடந்தன்னிலிருந்திரோஎந்தன்மகனே
தலைவிதியிதுஅலையலாச்சே அப்பாமகனே
உங்கள்பாதநோகுதென்னமோஎந்தன்மகனே
உன்னைவிட்டேபேனாயிழந்தோமே அப்பாமகனே.

பிள்ளைகள்புலம்பல்-பொதுவிருத்தம்-இ-ம்-கண்டா

வனந்தனிடைக்கும்போது மைந்தர்களிரண்டுபேரும்
தனதுடமனங்கள்நொந்து தந்தையார்முகங்கள்பார்த்து
எனதிடதந்தைதாயே யிவ்வனந்தன்னிற்செல்ல
மனமதுவாடுதென்று வழியினில்புலம்பலானார்

தமையர்புலம்பல்-நொண்டிச்சிந்து-ஏகதாளம்,

ஆலம்படைத்தவனே அகதாகவெங்கும் நிறைந்தவனே
கலக்கொடுமையிது விந்தக் காரணம்வந்துலபித்ததையோ
உன்செயலின்படியே யாண்டவா உன்னைவிட்டோம்பெருஞ்சிமைவிட்
டோம்,
என்னசெய்வோமாண்டவனே யெம்மைபின்றதகப்பனாரிருக்க
முன்னொருசேக்குசென்னு மூத்தம்சுரைசிழுத்து
பின்னாலேநீயிலவா யென்று பெரியவர்சொன்னதுமெய்யாச்சே
மேடைசிம்மாதனத்தில் பாவா விளையாடிநாங்களிருந்தோமே

சாடுவழிநடக்க பாவா கல்லுமிட்டறுதேகால்களிலே
வெய்யில்பொடிசுடுதே பாவா மேல்யெங்கும்வேர்வைசளாகுதையோ
ஐயவிதிவசமோ பாவா அவதிப்படயிந்தவடவிதன்னில்
கரடிபுலிசிங்கத்தை பாவாகண்ணினால்கண்டிட்டோம்காட்டிலேதான்
இராடிவிழுந்திடலே பாவா எங்கள்மனங்குன்றிவாடுதே

சபுரியத்தம்மாள்-புலம்பல்-விருத்தம்-இ-ம்-தோடி,

பிள்ளைகளைக்கும்போது பெற்றதாய்கண்டுவாடி
வள்ளலேநினைத்துமெந்தன் மைந்தனேயென்றுகட்டி
தெள்ளியேமணியேயென்றன் றெவிட்டிடாச்செல்வமேயென்
னுள்ளகத்துயிரோயென்றுருகியேபுலம்புவாளே

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்,

ஆதிப்பாவியானேனே-எனதப்பாமகனே
ஆதிப்பாவியானேனே
ஆதிமுதல்வனேயெந்தன்மக்கா;
அமைப்பிதுவோயெந்தனாண்டவனே
கோதிலாபாலகரோ சால்கள்
கொப்பளித்துவா லாச்சுதோடா
தணலில்விழும்புழுகதுபோல் மகனே
தயக்குகிறீரேயெந்தன்பாலகரோ — ஆதி
அலைலாவெயில்வீசுதோடாமகனே
அங்கங்குன்றுதோடாவுடல்பக்கம்படமகனே
கல்லுமுள்ளுஞ்சில்லிடறமகனே
காடுவழிநீங்கள் நடப்பீர்களோ — ஆதி
பல்லக்கின்மீதேதிவாமகனே
பார்த்திருந்தேனென்றன்சாழூர்தனில்
வீதிதனில்விளையாடி வரமகனே
வீற்றிருந்தீர்திருசாழூர்தனில் — ஆதி
பாதைவழிநீங்கள் நடந்திடவேமகனே
பதறுதோடாமனஞ்சிதருதோடாமகனே
உங்களன்னாலேயல்லோமகனே
ஊரைவிட்டுமெறுதேசம்வந்தோம் — ஆதி
இங்கனேயுங்களை யிடுக்கிடமகனே
எப்படியிவ்வழிநடப்பேனேடாமகனே
அங்கமிசப்பதறுதோடாமகனே
அடியெடுத்துநீங்கள்வைக்கையிலே — ஆதி
இங்கள்முகம்வாடியல்லோமகனே
செல்வர்களேசுடநடந்துவாரீர் — ஆதி



பொதுவிருத்தம்-இ-ம்-மத்யமாவதி,

நலமிழந்தவிபாதுஷா நாயகிபாலர்தாமும்
தலைமிழுந்தடவிதன்னில் தவிக்கவேவஞ்சகிதன்று
கலங்கியேமயங்கிநந்து காட்டினில்நடக்கும்போது
நலங்கியேமின்னல்போலதீ தோன்றிதமலைகளங்கே

தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்-சபுரியத்து-வினா-தரு.

காடுதனில்நடக்க ஒருமலை காணுதுதிசயமா
நாடுநகரியென்று பாதுஷாவே நானறியச்சொல்லுவீர்

பாதுஷாவிடை-தரு,

உண்மையிறையருளால் நாருநபியுயர்ந்தபெருவெள்ளத்தில்
இம்மையிலேயிருந்த கோகாபு யிம்மலைசபுரியத்தே

சபுரியத்துவினா-தரு,

இந்தமலைக்கப்புறம் ஒருமலை யெகார்தமாய்த்தோணுதே
அந்தமலைவிபறமெனக்கு அறியவேசொல்லுவீர்

பாதுஷாவிடை-தரு,

சோதிதனைமூசா நபியுந் தொழுதுவணங்கிடவே
ஆதியாளிவுதக்குத் தரிசினை அம்மலைசபுரியத்தே

சபுரியத்துவினா-தரு

மேடைசிம்மாதனம்போ லொருமலை வெகுபெரிதாய்த்தோணுதே
வடவிழ்யானைமார் பாதுஷாவே யிம்மலைப்பேர்சொல்லுவீர்

பாதுஷாவிடை-தரு,

இம்மலையின்விபரமெனது யிருவிழிமாதேகேள்
வஞ்சைமிகவளரும் சடாமறு வாமலையாமிதுகாண்

சபுரியத்துவினா-தரு,

மண்ணிலழகாக வொருமலை வெகுபெரிதாய்த்தோணுதே
கண்ணொளிர்காணுகிற மலையின் காரணத்தைச்சொல்வீர்

பாதுஷாவிடை-தரு,

தந்தையில்லாமலேதான் மரியம்பி தன்மகனும்பிறந்து
வந்தகைசாநபிதா னிறையோனை வணங்கியமாமலைகாண்

சபுரியத்துவினா-தரு.

வடிவலங்காரமதா யொருமலை வந்தெதிராகின்றதே
கடிகமழ்மலர்மார்போ யிம்மலையின் காரணத்தைச்சொல்லுவீர்

பாதுஷாவிடை-தரு,

பொன்னிலழகானயென் பூவையேசொல்லக்கேளும்
மன்னர்யாகூபுநபி வணங்கிய மாக்காமலையிதுகாண்

சபுரியத்துவினா-தரு,

பச்சைமலைக்கப்புறம் ஒருமலை பண்பாய்விளவந்ததிறம்

உச்சிதமாய்த்தோனுதே யதனை யுரைத்திடுவீரெனக்கு

பாதுஷாவிடை-தரு,

நற்றவம்பெற்றிடவே யிடமுமிம் நன்னவிநாயகனை
சுற்றமுடன்வணங்கச் சிறந்த சிவந்தமலையிதுகாண்

சபுரியத்துவினா,தரு,

சிவந்தமலைக்கப்புறம் ஒருமலை தெரியுதொளிவாக
தலைப்பெறுமிம்மலையின் விபரத்தைச் சாற்றுவீர்பாதுஷாவே

பாதுஷாவிடை-தரு.

காரணிகமாயில் நபிதான் கர்த்தனைப்போற்றிசெய்த
பூரணமானதலம் புதுமையுள்ள பொன்மலை சபுரியத்தே

சபுரியத்துவினா-தரு,

இப்படியெங்கெங்குமே மலையா யிருக்குதேயென்செய்வேன்
எப்பினையோவிதியோ இது கனவோசொல்லுமென்றான்

பாதுஷாவிடை-தரு,

அண்டர்புவிபுகழு மிறையோ னமைத்தபடியாகும்
கண்டேபயப்படாமல் சபுரியத்தே கடந்துவாரீர்

சபுரியத்துசொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

மலையதிசயங்கள்பார்த்து மனதுசந்தோஷமானேன்
கலையுடன்காடுகிம்பம் கண்ணிலேகண்டோமிப்போ
தலைவிதிப்படியேயாச்சு சாமுருதன்னைவிட்டு
அலைகடல்துரும்புபோலே அலையவுமமைத்திட்டானே

தரு-இ-ம்-அடாணா-தாளம்-திரிபுடை,

இருள்சூழ்ந்தகாட்டிலுள்ளதந்
தெள்ளத னிசெய்குவே னிறையவனே
கரடிபுலிசிங்கங்கள் நல்ல காட்டானைமானுகளுள்ளவனம்
கலைசாயிருள்வனமா யிதுவெகு காலமாயுள்ளதும்வனந்தான்
தொலைதூரம்போயிருக்கும் இன்னமிவனம்
தொலையாமற்றேனுதேயென்னசெய்வேன்
மாடப்புறா அன்னங்க ளிருந்த மரத்திலிருந்துபுலம்புறதும்
கூடிப்பலபட்சிகள் கூடி குரலிட்டுமுழக்குறதும்
பூதப்பிசாசுகளும் நல்ல பூமலைகன்னிகளுமுள்ளவனம்
வேதாளரக்கைகளும் நல்ல வெங்கொள்ளிவாய்ப்பேய் சரிமுனியும்
இந்தவனந்தனிலே நல்லா யிருக்கிறகள்ளர்கள்மெத்தவுண்டு
எந்தவிதமாகுமென்று எங்கெங்கலங்கிறதுக்கும்போது
உள்ளபடிமுடியுமென்று உள்ளங்கலங்கிநிற்கையிலே
கள்ளர்கள்தோன்றினரோ யென் கர்த்தாவேகாரணமுள்ளவனே
தன்னிகரில்லாதவனே தாயும் தந்தையுமில்லாததூயவனே
என்னைப்படைத்தவனே அகதாகமெங்கும்நிறைந்தவனே



கள்ளர்வருகிற,விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

தண்டமுங்கவில்லும் அம்பும் சக்கரத்துடனேவாளும்
கொண்டுமுன்னேர்ப்பரித்துக்கூட்டமாய்வனந்துகாட்டில்
அண்டினோர்தம்மைக்காக்கும் அலிபாதுஷாதன்கண்ணில்
கண்டோங்கலங்கிடவேங்கக் கள்ளர்கள்தோன்றினாரே

தரு-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-மீசுரம்,

தெந்திரு தின்னினா தினதின
தெந்திரு தின தின தின தினா
காற்குழல்லடபிட்டு யிடுப்பினில்
கழுத்தகருஞ்சங்கிலை சேர்த்துகட்டி
யாங்குடன்கொண்டையிலே ருயிலுடன்
பட்டுநூல்கயிறுடன் கட்டிக்கொண்டு
ஒன்றும்வலதுகையிலே புலித்தோல்
ஒருபிக்கநாகவே யிருதுகட்டி
தூங்கவடிக்கும் பெரியத்தடியுடன்
துருக்கிக்கள்ளர்கள் வந்துதோன்றினரோ
சொக்கரியிட்டுக்கொண்டு அடிக்கடி
கிலுக்குவல்லையங்களை குலுக்கிக்கொண்டு
சக்கரமாட்டிக்கொண்டு கைகளில்
சருக்காவித்தடிகளைப் பிடித்துக்கொண்டு
உக்கிரங்காட்டிக்கொண்டு சபதியில்
உறுக்கிக்கொண்டு மீசைமுறுக்கிக்கொண்டு
தொக்கனைப்பேசிக்கொண்டு-காட்டில்
துருக்கிகள்ளர்கள்வந்து தோன்றினரோ
கண்களில்நெருப்புப்பொறிபறக்க-செகற்பங்
கலங்கிடக்கேட்டோர் மலங்கிடவே
சிங்கமும்பயந்தோடப் பின்னேகள்
திடுக்கிடப்பெண்சாதி நடுங்கிடவே
அங்கமுநடுநடுங்க பூமி
அதிர்ந்திடவேர்கைவக ளதிர்ந்திடவே
துங்கவீரியமாகக் கூடி
துருக்கிகள்ளர்கள்வந்து தோன்றினரோ
உயர்ந்தவஸ்திரங்கிடைக்கும் பசுந்தங்கம்
உடைமைகிடைக்குந்திரவியங்கிடைக்கும்
இயந்தவாள்கிடைக்கும் இன்னநமக்
கேத்தவில்லும்அம்புந்தான்கிடைக்கும்
நயநவரத்தினங்கிடைக்கும் இந்தவேளை
நலமுடன்வாய்ந்ததென்று மனதிலெண்ணி

தயவில்லாக்கோபமதாய்க் காட்டினீர்
துருக்கிகள்ளர்கள்வந்துதோன்றினரோ தெரிந்து

கள்ளர்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி,

இப்பொழுதிக்குவந்த வெவரடா நில்லு நில்லும்
அப்புறம்போவீராகில் அம்பிறுலெய்துங்கொல்வோம்
செப்பமாயுயிர்பிழைத்துச் செகத்தனிலிருக்கவென்றால்
கைப்பொருள்வஸ்திரமெல்லாங் கழட்டிவைத்திசலுவீரே

வசனம்,

அகோ வழிப்பயணம்போகப்பட்டவர்களே நீங்கள்யாரு நில்லு நில்லு எங்கள்சொற்கடந்து அப்புறம்போவீர்களே யானால் உன்னையும் உன்பெண்சாதி பிள்ளையையும் அம்பிறுலெறிந்துக்கொல்லுவோம், வீணில் எங்கள்கையில்சாகாமல் இன்னமுங்கொஞ்சகாலம் உலகத்திலிருக்கவேண்டுமேயாகில் உன்கையிலுள்ள திரவியங்களையும் ஆடையாபரணமெல்லாம் எங்கள்முன்னே கழற்றிவைத்துவிட்டு அப்புறம்போம்பிள்ளாய்,

பாதுஷாகள்ளருக்குச்சொல்-விருத்தம்,இ-ம்-பைரவி

எமதுகைப்பொருளும்வஸ்திர மியாவையுங்கேட்டபேரே
உமதுளமிரங்கியாரும் உத்திரஞ்சொல்லக்கேளும்
அமருலகாளுந்தாமூர் அரசதையிழந்துநாங்கள்
சுமையர்போல்வந்தோமிப்போ சித்தமுன்பாக்யமையா

வசனம்,

அகோகேளும் பாலைநிலத்துக்கு ஆண்மையா யிருக்கப்பட்டதுருக்கிக்கள்ளர்களே உங்கள் மனமிரங்கும்படியாக நானொருவிண்ணப்பஞ், சொல்லுகிறேன் கேளும் நான்சாமூமராச்சியத்துக்கு அதிபதியாய், இராஜாங்கம்பண்ணிக்கொண்டிருந்தேன் எங்கள்விதி வசத்தாலே அந்தராஜாத்தனமிழந்து பெண்சாதி பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு அவதிபாதேசிகள்போல மறுதேசத்திற்குப் போகிறோம் உங்கள் மனதிரங்காமல் பறித்துக்கொண்டாலுஞ் சரியே அல்லது பறிக்காவிட்டாலும் உங்கள்சித்தம் எங்கள்பாக்கியமப்பா,

பாதுஷா-கள்ளருக்குச்சொல்-தரு-இ-ம்-கண்டா-ஆட-தாளம்.

கைப்பொருள்பறிக்கிற கள்ளரேயொருவார்த்தை சொல்லுகிறேன்

அதைக் காதிலேகேட்டுக் கருணைபுரிவீரோ ஐயாவே
மெய்யாகசாமூரு தன்னையாண்டிருந்தோங்காண் ஐயாவே-ஐயோ
விதிவசத்தாலேபரதேசம்போறோங்காண் ஐயாவே-இந்த
கோடானகோடி தனத்தைமுழுவாழ்ந்தோமே ஐயாவே
காடானவனத்தினில் கள்ளர்போல்வந்தீர்கள் ஐயாவே
தாடாண்மையாகவே தனிவழிவந்தோங்காண்நீர் ஐயாவே-நீங்கள்
தானத்தருமஞ்சிந்தி முறையால்வருவீர்காண் ஐயாவே



இழப்பாரிவார்த்தையை யின்பமாய்க்கேளுங்க ளையாவே இப்போ
என்மனங்கெட்டிசுநான் றல்லவெளிப்பட்டோ னையாவே
செழிப்பாகபூதலந்தன்னில்வாழ்ந்திருப்பீர்கள் ளையாவே-நான்
சீருமிழந்ததை சிந்தைவைத்துனப்பிரு ளையாவே
உள்ளவிதியெல்லாமுங்களுடன்சொன்னே னையாவே-நீங்கள்
ஒருமனதாகவே யெங்களையனுப்புவீர் ளையாவே
கள்ளரேயும்முள்ளங்கல்லாயிருக்குதே ஐயாவே-கேட்டு
கனத்துமனதில் கருணைசெய்தனுப்புவீர் ளையாவே
பட்சமுடனேநீங்கள் ரட்சித்தனுப்புவீர் ளையாவே-நீங்கள்
பாரில்வெகுகாலம் வாழ்ந்திருப்பீர்கா ளையாவே
இச்சணமெங்களையேக அனுப்பிவீர் ளையாவே-நீங்கள்
எக்காலமுஞ்சுகமாக யிருப்பீர்கா ளையாவே

கள்ளர்-பாதுஷாவுக்குச்சொல்-தரு-இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்

இதுவேதொழிலாக யிருப்பவர்முன்பினில்
புதுமொழியாகநீ பேசாதே போடா
கள்ளரென்றெங்கள் காலில்விழுந்தாலும்
உள்ளமிரங்காது எடாநீ போடா
பெண்டுபிள்ளைகளை ரண்டுதுண்டாக்குவோம்
கொண்டுவந்தபொருளைக் கொடுத்துநீ போடா
எட்டுத்திசையைநீ ஆண்டாலெனக்கென்ன
கட்டினவஸ்திரத்தைக் கழட்டிடுநீ போடா

கள்ளர்-பாதுஷாவுக்குச்சொல்-விருத்தம்.இ-ம்-தோடி,

படைத்திரியொப்பாரி பகர்வதுபோலச்சொன்ன
இடைமடையாவனக்கு வரித்தபத்திசொன்னோர்
கடுகவிப்பொழுதிலுன்றன் கைப்பொருள்முழுதுந்தந்தால்
விடுவதுவுண்மைகேளாய் வீண்மொழிபேசவேண்டாம்;

வசனம்—அகோயாத்திரைபோகிறவனே இதுவேதொழிலாகயிருக்கிறபேருக்கு உன்னுடைய பெரிய குறைவுகளைச் சொல்லுகிறாய் இந்தமடைப்புத்தி உனக்கு சொல்லிக்கொடுத்தவர்கள் யாரடாவீண்பயித்தியம்பிடித்தவனே உன்னிடத்திலிருக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளாமல்ஒருபோதும் விடுகிறதில்லை நல்லதுனத்துடனே உன்கைப்பொருளைக் கொடுத்துவிட்டுப்போடா பயித்தியக்காரா

பாதுஷாகள்ளருக்குச்சொல்-விருத்தம்-இ-ம்,பைரவி

எங்கள்தன் மொழியையெல்லா மிசைத்ததுமுழுதுங்கேட்டு
உங்களுக்கிரக்கமில்லை யுடையவன்விதித்தாளிந்த
பங்கநீர்பயித்தவேண்டாம் படிபெண்களிடத்திலுள்ள
செங்கையின்வஸ்திரம்பொன் சிங்கிமேயெடுத்துப்போவீர்,

வசனம்,

அயோகேளும் பாலைநிலத்தில் வாழ்கிறபேர்களே எங்கள் மெலிவு குறையெல்லா முங்களுக்குச்சொல்லியும் உங்களுக்கிரக்கமில்லை இனியேதுசெய்யப்போகிறோம் எங்கள் கைப்பொருளை சீக்கிரமா யெடுத்துப்போங்களையா,

கள்ளர்-பாதுஷாவுக்குச்சொல் விருத்தம்-இ-ம்-கலியாணி,

எங்களைப்பெற்றதாய்போ லிருக்கின்றதாயார்க்காக
அங்கழுங்கலங்குகின்ற அலிபாதுஷாவேகேளீர்
உங்கள்தன்னுடைமைமற்ற வுயர்விலைநகைகளெல்லாம்
எங்கள்தன்கையிற்கொடுத்து இவிடம்விட்டேகுவீரே

வசனம்—அயோகேளும் யாத்திரைபோகிறவர்களே உங்களையடித்துத் தலையையுடைக்கவேணுமென்று வந்தோம் இந்த அம்மாள் முகத்துக்காக அடிக்காமல் விட்டுவிட்டோம் நீங்கள்கட்டியிருக்கிறவஸ்திரம்போக மற்ற உங்கள்கையிலிருக்கிற பொருள்கள் நகைகள் வஸ்திரங்கள் முதலிய யாவற்றையும் கொடுத்துவிட்டுப்போங்கள் யாத்திரைக்காரரே,

பாதுஷா-கள்ளருக்குச்சொல்-விருத்தம்-

ஏதுவிசொன்ன இயல்புள்ளகள்ளர்கேளீர்
தாகமாயோடிவந்து தலைதனையுடைக்கவந்தீர்
ஆகமேயகிழந்தீங்கள் ஆண்டவன்கிருபையாலே
தேசத்தைப்பெற்றோம்நீங்கள் திரவியங்கைக்கொள்வீரே

வசனம்,

கேளும்அடித்துப்பறிக்கவந்த கள்ளர்களே ஆண்டவன் கிருபையினாலே எங்களையடித்துப்பறிக்காமல் இதோவிருக்கின்றஎங்கள்பொருள்கள் நகைகள் யாவற்றையும்வைத்தோம் அவைகளைஎடுத்துக்கொண்டு, எங்களை யனுப்பிவைக்கவேணுமையா,

சபுரியத்து-புலம்பல்-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

அடிமிகுதோகைனையங்கந் சோருதேபென்னசெய்வேன்
மடிக்குள்ளேவைத்துமோரந்த மைந்தனேகமரதினே
அடிக்கடிமுத்தியிட்ட வையனேசங்கதினே
படிப்படியாய்ப்புலம்பிப் பதறுவாள்சததுவாளே,

தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

ஆதியேயிறையோனே நானென்செய்வேன்
இரையோவயிற்பத்தியெரியுதே
சோதியேயிது சொற்பனமல்லவோ
தூயோனேறகு மானேநானென்னசெய்வேன்
ஆதிவேதனே சோதனைப்படி
பூதலந்தனின் மீதில்வைத்தலை ஆதி



பெற்றபுத்திரர் சத்துருவாகினார்
பெற்றவாக தன்னையிழந்தோமே
வெற்றிமன்னரும் வேதனையாகிட
வேர்தனையிநக் சென்னநான்செய்குவேன்
பட்டமானகர் விட்டநீங்கியே
இட்டநகையெலாந் துட்டர்கொண்டனர் (ஆதி)
மெய்யவிரவி வேந்தரும்நானுமாய்
வேனல்தன்னில் வெதும்பிநடந்திட
தய்யனமந்தர்கள் தம்மையுங்கூட்டியே
தொல்விதிப்படி யாகிடநாயனே
பாதகமிது எதுவந்தவை
மிதுகாரணம் ஆதிநாயனே (ஆதி)

சபுரியத்தம்மாள் புலம்பல் - விருத்தம் - இ-ம் - தோடி

கானகந்தனிலேவந்து கள்ளர்கள்வளைத்துக்கொண்டு ❋
தானுங்கைப்பொருளும்வஸ்திரந்தன்னையும்பறித்துக்கொள்ள ❋
பானவமுலவுங்கீர்த்தி பாதுஷாமனைவியென்னும் ❋
ஆனநல்சபுரியத்து மடவியில்புலம்பலுற்றாள் ❋

தரு - இ-ம் - ஆகிரி - அடதாளம்-

ஆதியேயழிவில்லானே - துனி - ஆலமெங்கும்நிறைந்தோனே
சோதியேயிணையில்லானே தூயவனேறகுமானே
நாட்டைவிட்டுநகரைவிட்டு நாயகரும்நானுமாக
காட்டகத்தில்வந்ததாலே கள்ளர்கையிற்பறிகொடுத்தோம்
முன்புவந்திவ்வண்ணமாக முடியளவுஞ்சோதித்தாயே
பின்புவந்திவ்வண்ணமாக பெருவனத்திற்சோதித்தாயே
மணவாளரும்நானும்முன்னாள்வன்பொல்லாங்கள்செய்ததுண்டோ
பணமிழந்துபதியிழந்து பதறவைத்தாய்றகுமானே
அன்னைதந்தையலாருக்கு யார்க்கும்பொய்கள்சொன்னதுண்டோ
இன்னிலத்திலெளியோரை யெதிரியாக்கிக்கொண்டதுண்டோ
எத்திமகளுடைமைதன்னை யெடுத்துமோசஞ்செய்ததுண்டோ
சத்தியவசனங்களை தாறுமாறுஞ்செய்ததுண்டோ
கருமநான்செய்திருந்தாலென் கணவருக்கிதுவரலாமோ
வறுமையதியார்க்குச்சிறுமை மைந்தருக்கிதுவரலாமோ
அம்பொற்பொன்கின்னத்திலே அமுதுண்டபாலகர்க்கு
பம்பரத்தைப்போலாட மைந்தர்க்கிதுவரலாமோ
பசியுடனேதண்ணீர்க்கேங்கிப் பாலர்படுத்திரையோ
சோகியாத்தின்றபாலருக்குக் கொடுவினைகள்வரலாச்சே
பட்டத்துக்குடையபாலர் பசியினாலேமெலிந்ததையோ
மட்டற்றதுயராக மணவாளரென்முகம்பார்க்க

நீதியானவென்னவ° நிலத்தைப்பார்த்துவேங்கலாச்சே
மேதினியையாண்டவர்க்கு இம்மெலிவுவரலாச்சே
மைந்தர்படுந்துயரந்தன்னை மனமுதிர்ந்துருகுதையோ
சந்தவிதங்களினால் இவ்வினைகள்நீங்குமோதான்
ஆலைவாய்க்கரும்புபோல அக்கறையெயிந்தவேளை
பாலகர்துயரமாகப் பாவியாள்விதிவசமோ
காட்டைக்கடந்திப்போது கல்நுறையில்வந்துசேர்ந்தோம்
நாடுமில்லைநகருமில்லை நாயிருக்கிறமுதுமில்லை
ஆனைகிடக்கப்பாழ்ங்கிணற்றில் அருந்திடவுந்தண்ணீரில்லை
கானலின்வெதுப்பினாலே கண்மணிதவிக்குதையோ
வாழுமுலகத்திலுள்ள மனிதசஞ்சாரமில்லை
ஏழையானோமெத்தமானோம் எங்கள்தலைவிதிவசத்தால்
பறவைகளும்பலபட்சிகளும் பறக்குநிழலொன்றுமில்லை
வெறுநிலமாய்க்கிடக்குதையோ வெயிலல்லாமல்வேறொன்றில்லை
வலையிலகப்பட்டமான்போல் மைந்தரும்மருள்கின்றாரே
தொலைதூரம்வந்துசேர்ந்தோம் தொன்னகர்தெரியவில்லை
சீக்கிரம்நடந்துவந்தால் சேர்ந்திடுவோம்நன்னகரில்
ஆக்கமுள்ளபாலகரே அச்சமறநடந்துவாரீர்

பிள்ளைகள் சொல் - விருத்தம் - இ-ம் - தோடி.

நடந்துவா வென்றுசொன்ன நல்மொழியம்மாகேளாய் *
தொடர்ந்துங்கள்பின்னால்நாங்கள் சிறுபிள்ளை நடப்பதாலே *
படர்ந்திடப்பதங்களெல்லாம் பதைக்குது வதைக்குதம்மா *
கடந்திடமுடியாதென்று கலங்கியேமயங்கினோமே *

தரு - இ-ம் - நாதநாமக்கிரியை - தாளம் - ரூபகம்.

தொடர்ந்துவாருமென்றுசொன்னீர் எங்கள்தாயே இருகு
தொன்னகர்தொலை தூரமோ மாதாவே
படங்கள்வெந்துமே நோகுதம்மா யெங்கள்தாயே இருது
பட்டணமெத்தனை தூர மாதாவே
அடிகள்வைக்கப்பயந்தஞ்சி யெங்கள்தாயே யிது
ஆண்டவனையழுதிறோமே மாதாவே
படியாகயிறையவன்சோதித்தானோ தாயே இதை
எப்படிபொறுக்கப்போறோம் மாதாவே
ஆதியருளால்வந்த யெங்கள்தாயே நாங்கள்
அவதிப்படுகிறோமே மாதாவே
சேதியருளாலேவந்த யெங்கள்தாயே இது
சோதித்தானோயிறையவன் மாதாவே
பாவியெங்கள்விதிவசமோ யெங்கள்தாயே இது
படைத்தவனெழுதினானே மாதாவே



அலிபதைக்குதம்மாயெங்கள்தாயே
ஆண்டவன்பொறுக்கவேணும்மாதாவே

சபுரியத்து சொல் - விருத்தம். இ-ம் - ஆனந்தபைரவி
சக்திபெட்டிகள்சிங்கம் சாட்டானையாடுமோடி.
பத்தினிதீர்புசந்தொளித்துப் புறப்பட்டுவருவேவாலர்
சிதறிடமயங்கும்வேளை சிறுவர்கள்முகத்தைப்பார்த்து
பத்தினியேமகனேயென்று பார்த்தங்கேயுலப்புவாளே

தரு - இ-ம் - கண்டா - ஆதிதாளம்.

போதுபோற நேரமாச்சு
புத்திரோநடந்துவாரீர் - மகனே - செல்வ - மகனே
வேதனைப்படவேயிந்த
வேளைவிதுவாச்சுதோடா - மகனே - செல்வ - மகனே
கூடிவாருங்பாலகரே
கொடியனேகந்தெரியுதுபார் - மகனே - செல்வ - மகனே
கோடிப்புறவிருக்குதும்
கோபுரந்தெரியுதுபார் - மகனே - செல்வ - மகனே
சோலைவானுலகையெட்டித்
தொடுவதுபோல்தெரியுதுபார் - மகனே - செல்வ - மகனே
சாலையிலேவந்துசேர்ந்தோம்
தாகமுள்ளபாலகரே - மகனே - செல்வ - மகனே
பேட்டையுடன்குடக்குவீதி
பெருந்தெருவுந்தெரியுதுபார்மகனே - செல்வ - மகனே
கோட்டையுங்கொத்தளமதில்
கொடிகளுந்தெரியுதுபார்மகனே - செல்வ - மகனே
அழகாயிருக்குதிவ்வூர்
அரசன்மனையாமிதுமகனே - செல்வ - மகனே
செழிப்பாய்சரக்குக்கடை
வீதிதனில்வந்துசேர்ந்தோம் - மகனே - செல்வ - மகனே
கம்பளியில்பணங்குவிக்கும்
காசுக்கடைதெருவிது மகனே - செல்வ - மகனே
சம்பரப்பட்டாடைவிற்கும்
சவுளிக்கடைவீதியிது - மகனே - செல்வ - மகனே
பாக்குமிளகுவிற்கும்
பலசரக்குக்கடையிது - மகனே , செல்வ . மகனே
ஆக்குங்காய்க்கறிவிற்கும்
அடுக்கடைவீதியிதுமகனே - செல்வ - மகனே
துங்கமுகவிமானோர்

தொழுகிறபள்ளியிது - மகனே - செல்வ - மகனே
இங்குநாமிருவதற்கு
யிருக்கநல்லவிடமிது - மகனே - செல்வ - மகனே

சபுரியத்து சொல் - தரு - ஆகிரி - அடதாளம்.

செந்திசையையாண்டிருந்தோம் - இருகு - தேசமாநகரத்தன்னே
வந்துசேர்ந்தோமன்னனுடை மாமனையுங்கோட்டைகளும்
செம்பொன்பிராகாரமும் செப்பரியவப்பரியும்
சோட்டுமலர்ப்பூஞ்சோலையுங் குளிர்ந்தநீர்தடாகங்களும்
பச்சைப்புறத்தோகையும் பாடுங்கிளிப்போதைகளும்
கொஞ்சைமொழிமார்தர்களும் கூடிவிளையாடுவோரும்
ஆதியைதானினைந்து அந்திவணங்குவோரும்
வேதமறையோதுவோரும் வேதமொழிசொல்பவரும்
இப்படியிருக்கும்நகர் இந்நகரிலுள்ளபள்ளி
எப்படியிருக்குமோதான் யிருக்கிறோம்பள்ளியிலே
என்னசொல்லிப்பள்ளிவாசல் இருப்பிடமதனைக்கண்டு
அன்றிஅலிபாதுஷாவே அறிந்திங்கிருப்போம்வரீர்

பொது விருத்தம் - இ-ம் - மத்தியமாவதி

விருந்துமில்சபுரியத்தும் பாதுஷாவுடனேமக்கள் *
இருவருமிருந்தவாறா யிங்கிதொந்திடைந்தவாடி *
அருகினில்பள்ளிதன்னி லங்கொருபுறத்திருந்தார் *
இருளொளிமாறவெப்போ னெழுந்தவன்விடிந்ததன்றே *

தாயாருக்கும் பிள்ளைக்கும் தர்க்கம்.
தரு - இ-ம் - கன்னியாசி - தாளம் - ரூபகம்.

அம்மாவெங்களுக்குப் பசியிளைப்பெரும்போ
ஆச்சுதுசோறுதா அன்னையே

தாயார் சொல் தரு.

சோறுதாவென்றால்நீங்கள் துடிக்குதேயென்மனது
யாரைப்போய்க்கேட்பேன் ஐயோமகனே

பிள்ளைகள் சொல் தரு.

கேளாதிருந்தால்பசி கேட்குமோவென்தாயே
தாளாதேயெங்கள்பசி தாயேயென்னம்மா

தாயார் சொல் தரு.

தானபாட்டோமென்று தவிப்பதைப்பார்க்கவே
கேளமாட்டாரோயுந்தந்தை யாரைப்போய்க்கேட்பார்

பிள்ளைகள் சொல் தரு

அலிபாதுஷாவெங்கள்பாவா யாரைப்போய்கேட்பா
கலியாமல்நாங்கள்போய் சாதங்கொண்டாரோம்



22

தாயார் சொல் - தரு

சாதம்நீங்கள்கேட்கத் தருமோவெங்மகனே
எதிறைவந்நம்மையிப்படிவைத்தானோ

பிள்ளைகள் சொல் தரு

இறையவனைத்தொழுதுயெங்கேநாம்போனாலும்
தருவாரேசோறுசதி தாயேயென்னம்மா

தாயார் சொல் தரு

சாமூருபட்டணம்தனையாண்டிருந்தோமே
ஆமெனுங்காசொன்றும் அற்றதேமகனே

பிள்ளைகள் சொல் தரு

காசுபணத்தையெல்லாம் கள்ளர்கள்கொண்டுபோனார்
தேசமுசலிமான தெருபிச்சைகேட்போம்

தாயார் சொல் தரு

முசலிமானதெரு முன்பின்னறியோமே
அசாமமேலுயிரும் ஆண்டவன்தருவான்

பொது விருத்தம் இ-ம் சாவேரி

விடிந்தபின்பசியால்வாடி மெலிந்துநொந்திருக்கஅவ்வூர் *
படிதனில்தானதர்மம் பங்கிடச்சுல்மான்ராஜன் *
வடிவுடன்சத்திரங்கட்டி வழங்கிறான்தானதர்மம் *
சடுதியில்போய்தானங்கே தானியம்வாங்கிவாரீர் *

வசனம்,

கேளுங்கள் பசித்திருக்கிற பேர்களே அந்தபட்டணமாளுகின்ற சுல்மான்ராஜன் ஒருசத்திரங்கட்டி தானதருமங்கள் கொடுக்கின்றான் அந்தசத்திரத்திற்போய் தானியம்வாங்கிவந்து பசியைப் பாற்றுவீர்கள்.

பாதுஷா சபுரியத்துக்குச் சொல் விருத்தம் இ-ம் மோகனம்

ஆனதோர்சபுரியத்தே அவரிடத்தினிலேநான்போய் *
தானியம்வாங்கியிங்கே சடுதியில்வருகுறேன் *
மானிலம்புகழும்பள்ளி வாசலில்மைந்தரோடு *
தேனெனுமொழிகள்சொல்லிதேற்றுவாய்பிள்ளைமாரை *

வசனம்,

கேளும்சபுரியத்தே அந்ததருமசத்திரத்துக்குப்போய் நான் தானியம்வாங்கி வருகிறேன் இந்தபள்ளிவாசலில் பிள்ளைகளைவைத்துக்கொண்டிரும் சபுரியத்தே.

சபுரியத்து பாதுஷாவுக்குச்சொல் விருத்தம் இ-ம் தோடி

சீரொலாந்தரிக்கச்செங்கோல் செலுத்திநீருமையிந்தப் *
பாரொலாந்தெரியுமோதான் பக்கயாழுயிற்குச்சேதம் *

ஊரெலாந்தெரிய-தென்னை யொருவருமதியமாட்டார் ❊
தாரெலாந்தரித்தவேந்தே தானம்போய்வாங்கிவாரேன் ❊
(வசனம்) கேளும்பாதுஷாவே சாம்ராச்சியத்தையாண்டிருந்தீர் பிச்சைக்குப்போகிறது ஞாயமல்ல பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு நான்போய் தானம்வாங்கிவருகிறேன் பாதுஷாவே.

பாதுஷா சொல் தரு இ-ம் சண்டை அடதாளம்,

நானிருக்க நீயும்போறது ஞாயமோசபுரியத்தே – இப்போ
நான்போய்சத்திரத்தில்தானம் வாங்கிவருகிறேன் சபுரியத்தே

சபுரியத்து சொல் தரு,

நானும்பிள்ளையுமாக நடந்துபோய்வருகிறோம் பாதுஷாவே
தலைமகநீர்போக ஞாயமல்ல அங்கே பாதுஷாவே

பாதுஷா சொல் தரு,

புருஷனிருக்க நீ போவதுதர்மமோ சபுரியத்தே – என்
பூவையேயிங்கிரு நான்வாங்கிவருகிறேன் – சபுரியத்தே

சபுரியத்து சொல் தரு,

சருதாமல்சாருரு தனையாண்டிருந்தீரே – பாதுஷாவே – இப்போ
தர்மசத்திரந்தன்னில் தான்போவதீதியோ பாதுஷாவே

பாதுஷா சொல் தரு,

சீமெறும்புருஷரிருக்கையில்போவது சபுரியத்தே – அது
நமக்குதுபோதாது ஆண்டவன்தருவானே – சபுரியத்தே

சபுரியத்து சொல் தரு,

சாமெனும்பட்டணம் தன்னையாண்டிருந்தீரே – பாதுஷாவே நீ
தருமம்வாங்கிவந்து தானியலாகுமோ பாதுஷாவே

பாதுஷா சொல் தரு

பள்ளியில்நீயிரு பிள்ளையுநானும்போறேன் சபுரியத்தே இப்போ
பரதேசிபோலநீ போவதுஞாயமோ சபுரியத்தே

சபுரியத்து சொல் தரு,

தெள்ளியசிங்காதனத்திலிருந்தீரே பாதுஷாவே நீர்
எள்ளியபிச்சைக்கி யாரிடத்திற்போவீர் பாதுஷாவே

பாதுஷா சொல் தரு,

பிள்ளையும்நானும் போகிறோம்சத்திரத்தில் சபுரியத்தே அவர்கள்
அள்ளிக்கொடுத்ததை வாங்கிவருகிறோம்சபுரியத்தே

சபுரியத்து சொல் தரு,

வெள்ளைவெண்டேறிவ் வுலகையாண்டிருந்தீரே பாதுஷாவே இப்போ
வரைமெதரியாமல் வாங்கிவருவீரோ பாதுஷாவே

பாதுஷா சொல் தரு,

பரதேசிபோலவே தெருவில்நடப்பீர் சபுரியத்தே உன்னை
பார்த்திருக்கமனம் தோற்றிடுமோசொல்வாய் சபுரியத்தே



சபுரியத்துசொல்-தரு,

அரசருக்கரசாக ஆண்டகாலம்போய் பாதுஷாவே நீர்
ஐயமெடுத்துண்ண ஆண்டவன்விதித்தானோ பாதுஷாவே

பாதுஷாசொல்-தரு,

நாடுநகரைவிட்டுக் காடுதனில்வந்தோம் சபுரியத்தே நீயும்
சீருடன்வாழ்ந்தவளானாப்போய்கேட்பாயோ சபுரியத்தே

சபுரியத்துசொல்-தரு,

வாடாமல்வாழ்ந்ததை நினைப்பதுதர்மமோ பாதுஷாவே பட
வரும்விதிவந்தாலதை விலக்கமுடியுமோ பாதுஷாவே

பாதுஷா-சபுரியத்துக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

புருஷர்கள்பொருளைத்தேடப் பூவையர்களிப்பதுண்டு
அரிவையர்பொருளைத்தேட அரசருக்களிப்பதுண்டோ
விரைசெறிகுழலினாளே விள்ளவுந்தகுத்துப்போனாய்
தரைபுகழ்சபுரியத்தே தான்போகமனந்துணிந்தாய்

வசனம்,

கேளும்சபுரியத்தே புருஷர்கள் தேடிவந்துபெண்டுகளுக்குக்கொடுக்கிறதுண்டு பெண்டுகள்தேடிவந்து புருஷர்களுக்குக் கொடுக்கிறது தர்மமல்ல உன்னைப்போகச்சொல்லி நான் பார்க்கக்கூடாது அந்தச்சத்திரத்திற்குப் பிள்ளையும் நானும்போய் வாங்கிவருகிறோம் சபுரியத்தே,

சபுரியத்து-பாதுஷாவுக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-பைரவி,

பிள்ளையுநீருமாகப் போவதுதர்மமல்ல
தெள்ளியசிங்காதனத்தில் சிறப்புடன் வாழ்ந்திருந்தீர்
அள்ளியபிச்சைகேட்டால் யாவருமதியாரும்மை
பள்ளியிலிருநீரிங்கே பாலரும்நானும்போறோம்,

வசனம் — கேளும்பாதுஷாவே நீர்யாரிடத்திற்போய் பிச்சைகேட்பீர் ஆனபடியினாலே நீர் பள்ளியிலிரும் நானும்பிள்ளையுமாக அந்த தர்மசத்திரத்திற்குப்போய் சீக்கிரமாய் தருமம்வாங்கி வருகிறோம் பாதுஷாவே,

பாதுஷாசொல்-வசனம்,

அப்படியேபோய்வாரும்-சபுரியத்தே,

தரு-இ-ம்-ஆதி-அடதாளம்.

நித்தியதானங்கொடுத்து நீதமுடன்வாழ்ந்திருந்தோம்
பத்திரோசத்திரத்தில் பிச்சைகேட்கப்போவோம்வாரீர்
அச்சுதப்படியென்றிருந்தால் ஆதமோபசிரமக்கு
கூச்சமில்லாமனிதர்கள் கூடவேநடந்துவாங்கள்
வேண்டியபேர்களுக்கு வேண்டியதைநாம்கொடுத்தோம்
ஆண்டவனைத்தானினைந்து அருகினில்நடந்துவாங்கள்

பாலகரொயுங்களுக்குப் பசியினாலேப்பமெத்தவோதான்
வாலையறிவ்பிச்சை வாங்கியுண்ணவைத்தாளம்மை
இல்லையென்று பிச்சைகேட்க யிறையவன் வருத்தானம்மை
நல்லமலைதடன்கொடுக்க நாயனே நீசெய்யவேணும்
சத்திரத்திலேயிருந்து தாமுஞ்செப்பும் அன்னைமாரே
புத்திரருநானுமாகப் பிச்சைகேட்கவாறேனையா
கையிலொருகாசில்லாமல் கள்ளர்பறித்துக்கொண்டார்
ஐயம்வாங்கியுண்ணவந்தோம் அவதிப்படுதேனேடாலே
பசியறுவென் பிள்ளைகளும் பாதவித்தழுகுதையோ
பசியினப்பல்வந்துசேர்ந்தோம் பாலர்முகத்தைப்பார்த்து
அன்னதானங்கொடுத்தனுப்பும் ஆண்டவனுக்காகவேதான்
இன்னவர்முகத்தைப்பார்த்துச் சீக்கிரமாயனுப்பவேணும்
பாலகர்முகிருக்கள் பசியிலேமுகம்வாடி
காலசற்றுபோகுதையா கடுகனுப்பும் அன்னைமாரே
மட்டில்லாத்துயர்மீறி மனவாளாழுகிறோர்
பொட்டணங்கொடுத்தால் நாங்கள் பிழைப்பசியாறிடுவோம்
வேண்டினேனுங்களை நானும் வேகமாயனுப்பவேணும்
ஆண்டவனுக்காகவேதான் ஐயங்கொடுத்தனுப்பும்

சத்திரத்தார்சொல்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி,

பிச்சைதனைக்கேட்கவந்த பெற்றமாதாவேகேளாய்
நிச்சயமில்லாவாழ்வு நீரின்மேற்குமிழிகண்டாய்
நற்செயலையுனக்கு நாயகனுதவிசெய்வான்
பட்சமாயளித்தோம் பாலரைக்கூட்டிச்செல்வீர்

வசனம்,

சொருமம்மா நீங்கள் இத்தனை துயரப்படவேண்டாம் வாழ்வு வெரிதல்ல உனக்கு ஆண்டவனுதவிசெய்வான் நாங்கள் அரிசிகொடுத்துதோம் அதையெடுத்துக்கொண்டுபோய் சமைத்து பசியாறுங்களம் மாதாவே.

சபுரியத்துசொல்-விருத்தம்-இ-ம்-அசாவேரி.

பிள்ளைகள் முகத்தைப்பார்த்துப் பிச்சைதான்கொடுத்தீரையா
தெள்ளியபுத்திரரோடே தீர்க்கமாய்வாழ்ந்திருப்பீர்
அள்ளியேகொடுத்தீர்கள் அதையினியெடுத்துக்கொண்டு
பள்ளிவாசலுக்குநாங்கள் போய்ப்பசியாறிவாறோம்

வசனம்,

அய்யோசேனும் சகோதரா யிருக்கப்பட்ட அண்ணமார்களே என் பிள்ளைகள் முகத்தைப்பார்த்துப் பிச்சைகொடுத்தீர்கள் அதையெடுத்துக்கொண்டுபோய் உங்கள்பேரைச்சொல்லிப் பசியாறுகிறோம் அண்ணமார்களே,



சபுரியத்துசொல்-தரு-ஈ-ம்-சங்கராபரணம்-சாப்புதாளம்.

ஐயோகோவென்மக்களா உங்கள்பசி யாலேயிறக்கவந்தோம்
வையகமாண்டிருந்த நாளும்போக வந்தோம்பிச்சைகேட்க
கையைநடத்துவாங்கள் மக்களா பசியினாட்டுமெத்தவோ
கையைப்பிடித்துக்கொண்டு சந்தடியிலே சுகநடந்துவாங்கள்
அரிசியள்ளித்தாரோம் தின்றுக்கொண்டு அழுகாமலேவாங்கள்
தருகினில்லாவாங்கள் பள்ளிவாசல் தானிதோ அருகுதசாண்
பிள்ளைகள்வல்லியென்று உங்கள்பாவா புலம்பித்தவிப்பாரே
பள்ளிவாசலிதோ அருகாச்சு பாலரே நடந்துவாரீர்
கண்ணீர்சொரிந்துக்கொண்டு பிள்ளைகளைக் கண்டேமென்றேதேடு
தண்ணீர்தனையெடுத்துச் சமைத்திடத் தான்தெரியாதெனக்கு
அரிசிக்குத்தண்ணீர்விட வென்கண்ணே அளவுந்தெரியாது
உரிசிக்குப்பாலகரே யிப்படி யுடையவன்விதித்தானே
உப்புபசாலாக்கறி யென்கண்ணே என்றும்வைத்தறியேன்
சப்பட்டவென்றுபோட மக்களா தானுந்தெரியாதெனக்கு
சட்டிதொட்டறியேனடா என்கண்ணே சாதஞ்சமைத்தறியேன்
கட்டளையிட்டபடியே மக்களா காட்டிவைத்தானமக்கு
பானைதொட்டறியேனடா மக்களா பதமாய்ச்சமைத்தறியேன்
ஆனைபரியுடனே வாழ்ந்தோர்க்கு ஆண்டவன்விதித்தானே
சாமரமனையில் தாதிப்பெண்கள் சமைத்திடஆண்டிருந்தேன்
ஆமெனுப்பானைதொட்டு சமையல் ஆக்கியுண்ணவிதியாச்சே

பொதுவிருத்தம்-இ-ம்-மத்தியமாவதி,

பழுதில்லாச்சபுரியத்தும் பாதுஷாபாலர்தாமும்
அழுதழுதேதாங்கித்தாம் அன்னமேவாங்கியுந்து
எழும்பசிகளைதன்றி இதுதொழில்லாக அந்த
முழுமணிப்பள்ளிதன்னில் மூன்றுநாளிருந்திட்டாரே

இதுவும் ரு-விருத்தம்-ஆனந்தபைரவி,

மங்கையுமைந்தரோடு மணவாளர்தானுமாக
தங்கியபள்ளிதன்னில் சார்ந்தங்கேயிருக்கும்போது
சிங்கம்போலானசுல்தான் சிறையினில்வைத்தவாறே
பொங்கமாய்ப்பலருஞ்சேர்ந்து புகலுவதிதுவேகேளீர்

வசனம்,

அசோ தெப்படி யென்றால் சபுரியத்தம்மாளும் பிள்ளைகளும் பாதுஷாவுமாக மூன்றுநாள்வரைக்கும் பள்ளியிலிறங்கி அன்னதானம்வாங்கி பசியாறிவருகிறநாளில் சுல்தான்ராஜன் சபுரியத்தம்மாளைப் பிடித்துச்சிறையில் வைத்ததைச்சொல்லுகிறோம்,

சல்மான்சரித்திரக்கதை.

கட்டியக்காரன்வருகிற-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

தனதுமெய்த்தனிவிலங்கத் தாளமாமணிகள்பூட்டி
இலமணியொளிபரப்பி யிலங்குசெடையமுங்கையில்
குனிசிலைவாளுமேந்திக் கொக்கரியிட்டுக்கொண்டு
கனத்தராசாளுஞ்சல்மான் கட்டியக்காரன்வந்தான்

தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்,

அட்டலட்சுமிவிலாசன் வட்டமதிபோலாசன்
கட்டழகன்சல்மானிட கட்டளைப்படிசெலுத்தும் — கட்டி
மந்திரிமார்புடைசூழ இந்திரன்போலேவாழும்
சந்திரசல்மான்ராஜன் வந்திங்கொலுமுன்பாக — கட்டி
திக்குத்திசைநடுங்க கொக்கரித்தலங்கரித்து
மிக்கசபைநடுவே ஒக்கயெச்சரிக்கையிட — கட்டி
தேசத்தரசர்தினம் வாசமுடன்புகழும்
நேசமறவாதராஜன் விசுபுகழ்கொண்டாடும் — கட்டி

வசனம்,

அகோகேளும் சபையோர்களே இராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜகெம்பீரனென்கிய சல்மான்ராஜன் கொலுவுக்கு வருகிறவிதமெப்படியென்றால்,

சல்மான்வருகிற-விருத்தம்,-இ-ம்-கும்பகாம்போதி

தங்கவஸ்திரம்புனைந்து தனிநிறைசட்டையிட்டு
நங்கையர்மயங்கியேங்க நடுக்கட்டு-முறுக்கிக்கட்டித்
துங்கவாள்கையிலேந்தித் துலங்கிடமகுடஞ்சூட்டி
சிங்கம்போலவேயசல்மான் சிறப்புடன்கொலுவில்வந்தான்,

தரு-இ-ம்-காம்போதி,

இராஜராஜராஜராஜ
    இராஜசல்மான் கொலுவில்வந்தான்
தேசதேசதேசதேசன்
    தேசசல்மான்கொலுவில்வந்தான்
நாமநெற்றிதன்னிலிட்டு
    நவரத்தினத்தூராச்சொருகி
சேமக்கட்டியப்பெண்கள்கூறச்
    சல்மான்ராஜன்கொலுவில்வந்தான்
நீதிச்செங்கோல்முறைநடத்தி
    நீணிலத்தில்மைந்தர்போற்ற
சோதிமுடிதான்துலங்க
    சல்மான்ராஜன்கொலுவில்வந்தான்
மாலையுயத்திலணிந்து



    வச்சிரக்கேடயந்தரித்து
குலமுங்கையிற்பிடித்து
    சல்மான்ராஜன்கொலுவில்வந்தான்
பூச்சக்கரக்குடைபிடிக்க
    பூரிபத்தனந்தொனிக்க
ஆச்சக்கரசல்மான்ராஜன்
    அன்புடன்கொலுவில்வந்தான்
சங்கீதராசங்கள்பாட
    தையலர்நட்டனமிட
சிங்காரமா சல்மான்ராஜன்
    சீருடன்கொலுவில்வந்தான்

வேறு - தரு - இ-ம் - சங்கராபரணம்சாப்புதாளம்

ராஜாதிராஜன் வந்தான் சல்மான் — மக
    ராஜன்கொலுவில்வந்தான்
தேசாதிதேசன்வந்தான் சல்மான் — மக
    தேசன்கொலுவில்வந்தான்
மந்திரிமார்கள்சூழ சல்மான் — மக
    ராஜன்கொலுவில்வந்தான்
நாட்டியஞ்செய்துவர சல்மான் — மக
    ராஜன்கொலுவில்வந்தான்
கூட்டமாய்ராஜர்சூழ சல்மான் — மக
    ராஜன்கொலுவில்வந்தான்

சல்மான் மந்திரிகளுக்குச் சொல் விருத்தம் இ-ம் தோடி.

மனமதுமகிழச்சொல்லும் மந்திரிமாரேகேளாய் — ௸
எனதிடமருந்திறுத்த யானையுமறைப்பேனியும் — ௸
இனதினதென்மகேட்டு மெத்துரையெந்தனுக்கு — ௸
கனதனக்கொலுவிலுற்ற கனத்தராஜர்கள்தான்மெய்க்க — ௸

வசனம்,

அயோகேளும் என்மன மகிழ்ச்சி பெறத்தக்கதாகஇரான் யாதொன்று உன்னைக்கேட்டேனே அதற்கு யிவ்விதமென்று தேசத்தரசர்கள் மெய்க்கவும் உன்னைப்புகழவும் நம்முடையகீர்த்தி நன்றாய் தெரிந்துச்சொல்லும் மந்திரி.

மந்திரி ராஜனுக்குச்சொல் விருத்தம்- இ-ம் அசாவேரி

மன்னர்க்குமன்னரேபோற்றி மாவீரனைத்தாபோற்றி — ௸
உன்னதத்தினிலேயுள்ள உறமொழிபலதுமென்முன் — ௸
இன்னதென்றுரைப்பீராகில் எடுத்துரை யுந்தனுக்கு — ௸
சொன்னபடியாகாணும் சுகம்பெறவுரைசெய்வேனே — ௸

வசனம்.

அகோ சேனும் இவ்வுலகிலுள்ள அரசரெல்லாம் உம்முடைய நீதிக்கு உம்மைப்புகழுகின்றார்கள் ஆனபடியால் தாங்கள் இந்த அடியேனுக்குச் சொல்பவைகளுக்கெல்லாம் மனமகிழும்படியாகச் சொல்லுவேன் ஐயாசுவாமி.

சுல்மான் சொல் தரு இ-ம் சங்கராபரணம் ரூபகதாளம்,

பாரையாளும்ராஜர் பகுதிபணங்கட்டி
வாராராயிச்சேதி வகுத்துரைமந்திரி

மந்திரி சொல் தரு,

வாராரேயரசர்கள் வருஷ வருஷந் தோறும்
பூராப்பகுதிபணம் புகுக்கிறாரையா

சுல்மான் சொல் தரு,

மண்டலத்தினிலுள்ள மணவாளர்சொற்படி
பெண்கேள்கேட்டுப் பிரியஞ்செய்கிறாரா

மந்திரி சொல் தரு,

புருஷர்கள்சொற்படி பெண்கேள்தான்கேட்டு
வரிசைகள்வளர்ந்திடவருகிறாரையா

சுல்மான் சொல் தரு,

மாதமும்மாரியிருந்த வையகத்தில்பெய்ந்து
நீதமுடனேசுக நிற்குதாமந்திரி

மந்திரி சொல் தரு,

திங்கள்மும்மாரியிந்த ஜெகத்தினில்பெய்ந்திட
பங்கமில்லாமலே பலிக்குதைய்யா

சுல்மான் மந்திரிக்குச் சொல் விருத்தம், இ-ம் ஆனந்தபைரவி

குருவருளதனால்ரத்னக் கொலுவினிலரசர்சூழ ※
மருவலர்வந்தாரென்று மந்திரிசொல்லக்கேளாய் ※
திருமுகமிலங்கநாட்டியஞ் செய்கின்றபேர்கள்தம்மை ※
விருதுடன்பாடியாட மெல்லியையழைப்பிப்பாயே ※

வசனம்,

சேனும் மந்திரி இராஜாதி ராஜர்களெல்லாம் வந்திருப்பதனால் அதிசீக்கிரமாக நல்லவடிவுள்ள நடனஞ் செய்கின்ற பெண்களை அழைப்பிப்பாய் மந்திரி.

மந்திரி சொல் வசனம்,

அப்படியே அழைப்பிக்கிறேனையா சுவாமி-

மந்திரி கட்டியனுக்குச் சொல் விருத்தம், இ-ம் தோடி.

மிகதரா தரமறிந்த விருதுளகட்டியக்காரா
சகத்தையோர் குடைநிலாளுஞ் ஜயம்பெற்ற சுல்மான்ராஜன்



திகதகென் திலங்குஞ்சிம்மா தனத்தில்வந்திருப்பதாலே ※
மகத்துவ நடனஞ்செய்யு மாதரையழைப்பிப்பாயே ※

வசனம்.

கேளும்பிள்ளாய் கட்டியக்காரா இச்சக மெல்லா மொருகுடையிலாளப்பட்ட நம்முடைய ராஜனுகிய சுல்மான்ராஜன் கொலுவில்வந்திருக்கிறபடியினலே இந்த நாழிகைக்குள்ளே நாட்டியப்பெண்களை அழைத்துவாரும் பிள்ளாய்.

கட்டியக்காரன் சொல் வசனம்,

அப்படியே அழைத்து வருகிறேனையா மந்திரி,

கட்டியன் சொல் கவி.

நாட்டியஞ்செய்யும் கோட்டிமங்கையரோ
ஆட்டங்களாட ஓட்டமாவாரீர்

நாட்டியப்பெண்கள் வருகிற விருத்தம் இ-ம்மோகனம்

இந்திலமுழுதும்போற்ற இளமயில்போலேசாயல் ※
கன்னியாலங்கரித்துக் காலினில்சிலம்புகொஞ்ச ※
மன்னவன்சுல்மான்முன்னே வஞ்சியர்பாடியாட ※
அன்னம்போல்நடைநடந்து அரிவையர் தோன்றினரே ※

தரு இ-ம் நாதநாமக்கிரியை தாளம் திரிபுடை,

வந்தாளேகேளிக்கைமாது | சிங்காரமாக
அரிவையர்தங்களில் அதிசயரம்பைபோல்
தரிகிட - தகு - தகுந் - தகுந்தரி
தாகிடஜெம்தரி தளங்கு தோமென வந்தாளே
கொத்துசரப்பளி நத்துபுலாக்குமிட்டு
சுத்தம்பிரமித்திடவே முத்தாலலங்கரித்து வந்தாளே
இடையில்ஒட்டியாணமும் நடையிலன்னம்போலே
சடைப்பில்லை தானணிந்து உடைகளலங்கரித்து வந்தாளே
விலையிலுயர்ந்த விலை பலமணிதானணிந்து
கலைகள் துலங்கரும்ப முலைகளசைந்திடவே வந்தாளே
சந்தனங்கஸ்தூரிவாடை வந்துமகிழ்ந்திடவே
அந்தமுளராஜர்முன்னே வந்துநடனஞ்செய்ய வந்தாளே
காலில்சிலம்புகொஞ்ச வளையதோரெங்க
மேனில்நகைகள்மின்ன வேலைப்பழித்தமாது வந்தாளே

சுல்மான்மந்திரிக்குச்சொல் விருத்தம் இ-ம் சங்கராபரணம்

காலங்கள்மூன்றுந்தேர்ந்த கருத்துள்ளமந்திரிகேளாய் ※
ஆலகாலவிடத்தையொத்த அரிவையர்தங்களுக்குச் ※
சாலவேதிரவியங்கள் சம்பிரமாயீந்துஆடை ※
சோலமாமனைக்குச்செல்ல செப்பனவனுப்புவாயே ※

வசனம்,

அகோகேளும் மூன்றுகாலமுந் தெரிந்துசொல்லப்பட்ட மந்திரியே இப்போது நம்மிடத்திலாடிய பெண்களுக்கு வெகுமதிகள் மிகுதியாய் கொடுத்து அதிசீக்கிரமாக அனுப்புவிம்மந்திரி,

மந்திரி சொல் வசனம்,

அப்படியே அனுப்புகிறேனையா சுவாமி,

மந்திரிக்கு ராஜன் சொல் விருத்தம் இ-ம் தோடி,

காலமூன்றுந்தெரிந்த கருத்துள்ளமந்திரிகேளாய் ※
சாலவேமுன்னோர்சொன்ன சாஸ்திரமுறைதப்பாமல் ※
தாலவேமுதன்மையான தருமமாயிருப்பதாலே ※
சீலமாயன்னதானஞ் செய்யவேயழைப்பிப்பாயே ※

வசனம்

அகோகேளும் மந்திரி எல்லாத் தருமத்திலும் அதிகமானது அன்னதானமென்று சகலசாஸ்திரங்களிலும் சொல்லுகிற படியினாலே யிப்போது தானதருமஞ் செய்ய அதிக சீக்கிரமாக ஆண்டி தாதர்களை அழைப்பியும்மந்திரி,

மந்திரி சொல் வசனம்,

அப்படியே அழைப்பிக்கிறேனையா சுவாமி,

மந்திரி கட்டியனுக்குச் சொல் விருத்தம் இ-ம் பந்துவராளி

காவலர்குணந்தெரிந்த கட்டியக்காரகேளாய் ※
பாவனையுடனேநீரும் படியன்னதானஞ்செய்ய ※
தாவியதாதராண்டி தன்னையிட்டிணைத்திவிங்கே ※
மேவியேவாங்கிப்போக விரைவினிலழைத்துவாராய் ※

வசனம்

அகோ கேளும் ராஜகுணம்தெரிந்து நடக்கின்ற கட்டியக்காரா இராஜாதிராஜ நினைத்தபடி அன்னதானம் வாங்குவதற்குத் தாதர்கள் ஆண்டிகள் பரதேசிகளை அழைத்துக்கொண்டுவாரும்பிள்ளாய்,

கட்டியன் சொல் வசனம்,

அப்படியே அழைத்து வருகிறேனையா சுவாமி·

கட்டியன் சொல் கவி,

ஆண்டி-தாதர்களே அன்னமேவாங்க
வேண்டியபேர்கள் விரைந்தோடிவாரீர்

வெட்டியான் வருகிற விருத்தம் இ-ம் சங்கராபரணம்,

அட்டதேசமும்புகழு மதிபதியானசுல்தான் ※
இட்டமாய்சத்திரங்கட்டி யிதமுடனடக்குதேதான் ※
கட்டமாவேலைசெய்ய கவனமாய்சத்திரத்தேடி ※
வெட்டியான்களிதன்னில் விரைவுடன்தோன்றினனே ※



தரு · இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

வெட்டியான்வந்தானே-சத்திரத்து,வெட்டியான் வந்தானே
வெட்டியான்வந்தானேவிறுடனேடியே
அட்டியில்லாமலே அன்னசத்திரந்தேடி வெட்டி
அஷ்டதிசைபுகழ் சுல்தான் சத்திரந்தேடி
இஷ்டமுடனேடி இன்பத்தைக்கொண்டாடி வெட்டி
மூலைச்சுருளைக்கை தன்னிற்பிடித்தவன்
வேலைசெய்யவென்று விருப்பச்சத்திரந்தேடி வெட்டி
கள்ளுக்குடித்தவன் கைகளைபததியே
மெள்ளமெள்ளத்தள்ளாடி சத்திரந்தேடி வெட்டி

ஆண்டிகள்வருகிற-விருத்தம் இ-ம்-காம்போதி

தோண்டிபோல்சுரைக்குடுக்கை தோளினில்மாட்டிக்கொண்டு ※
வேண்டியகமண்டலமாலை விறுடன்தரித்துக்கொண்டு ※
நீண்டருத்திராட்ஷம்பூண்டு விபூதியை மெய்யிற்பூசி ※
ஆண்டிகள்கூட்டமாக அனைவோருந்தோன்றினரே ※

தரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்

எங்கும்நிறைந்திருப்பா ரெங்கள்பெருமாள் டீர்
ஏகாந்தமாயிருப்பா ரெங்கள்பெருமாள்
துங்கப்புகழ்பெற்றிருப்பா ரெங்கள்பெருமாள் டீர்
துள்ளித்துள்ளிக்கொண்டிருப்பா ரெங்கள்பெருமாள்
நெற்றியபெருமானென்று போற்றிக்கொண்டு டீர்
நாங்கள்நெடுந்தூலவந்தோ மெங்கள்பெருமாள்
பார்த்திபனைத்தேடிவந்தோ மெங்கள்பெருமாள் டீர்
பசியிளைப்பாறவையு மெங்கள்பெருமாள்
அங்கமெல்லாநாமஞ்சாற்றி விதவிதமாய் டீர்
ஆனந்தமாகக்கூத்தாடிக்கொண்டுமெங்கள்பெருமாள்
துங்கப்புகழானசுல்தான் சமுகந்தேடி டீர்
கருக்காகஆண்டிகள்வந்துதோன்றினரே

தாதர் வருகிற விருத்தம்-இ-ம்-அசாவேரி,

பூண்டருத்திராட்ஷத்தோடு பொக்கிஷமுடனேயேந்தி
நீண்டதோர்பாலமீது நிறையவேநாமமிட்டு
கூண்டதோர்குடுக்கைகொண்டு கோவிந்தாவென்றுசொல்லி
தாண்டவமாகக்கூடித் தாதர்கள்தோன்றினரே,

தரு இ-ம் கன்யாசி ரூபகதாளம்

காக்குடுக்கையுந் தோளில்போட்டு சொருகுடன்கைவிசியே
அருந்தஞ்சொல்லி அன்னம்வாங்க அன்பாய் தாதர்கள் தோன்றினார்
நரைத்ததாடியுடனே நெற்றியில் பட்டைநாமஞ்சாற்றியே
தரித்ததுளசிமாலையுடனே தாதர்கள்வந்து தோன்றினார்

உத்திரவுசெய்தபடியே ஊரிலுள்ள வெளியோர்களும்
சத்திரத்தி லன்னம் வாங்கத் தாதர்கள்வந்து தோன்றினர்

மந்திரிக்கு ராஜன் சொல் விருத்தம்.

மருவலர்குணந்தெரிந்த மந்திரிசொல்லக்கேளாய் ❊
தருமமுந்தானமிந்தத் தீர்தர்களாண்டியோர்க்கு ❊
இருசாதிரம்பசிசெர்பொன் னெய்திந்து அவரவரை ❊
வரும்அரயனைக்குச்செல்ல வாகுடனனுப்புவாயே ❊

வசனம்

கேளுமந்திரி இப்போது நம்முடைய சிம்மாதனத்துக்கு முன்பாக வந்த ஆண்டி தாதர் எளியோர் இவர்களுக்கு அன்னதானம் ஆடையாபரணங்களைக் கொடுத்து அதிகசந்தோஷத்துடனே அவர்களை வீட்டுக்கு அனுப்பிவையும் மந்திரி,

மந்திரி சொல் வசனம்,

அப்படியே அனுப்பி வைக்கிறேனையா சுவாமி,

சுல்மான் மந்திரிக்குச் சொல் விருத்தம் இ-ம் தோடி.

நன்னெறிமந்திரிகேளாய் நமதுத்தாரப்படிக்கு ❊
அன்னதானமுநீசெய்தா யதிகசந்தோஷமாச்சு ❊
முன்னமேதானியங்கள் முறையுடன்கொடுக்கவந்த ❊
அன்னவைதனையுமிப்போ தறிந்திடவேணும் மந்திரி ❊

வசனம்

அகோ கேளும் மந்திரிசிகாமணியே நமதுத்தாரப்படிக்கு அன்னதானங் கொடுத்து அனுப்பிவைத்தாய் அதனால்நமக்கு மிகவும்சந்தோஷமாச்சுது இதுவல்லாமல் முன்னால்கொடுத்த ஆடையாபரணங்கள் முதலிய வரவு செலவு கணக்குகளை யறியவேணும் மந்திரி,

மந்திரி சொல்வசனம்,

அப்படியேதங்கள் மனதின்படி தெரிந்துக்கொள்ளுஞ் சுவாமி

சுல்மான் மந்திரிக்குச் சொல் விருத்தம் இ-ம் புன்னாகவராளி

வேதியர்சொற்படிக்கு விரும்பியேதானதர்மம் ❊
சோதில்லாச்செய்வதற்குக் குறித்துயான்கட்டிவைத்த ❊
மேதினியோர்கள்கொண்டாட மிகுகணக்கினிலேதேர்ந்த ❊
சாதியின்கணக்கன்தன்னை சுணத்தினிலழைப்பிப்பாயே ❊

வசனம்

அகோகேளுமந்திரி நம்முடையசத்திரத்தின் கணக்குகேள்வி யிருக்கிறபடியால் சத்திரக்கணக்குகளை எழுதப்பட்ட கணக்கனை அதிசீக்கிரமாக அழைப்பியும் மந்திரி,

மந்திரி சொல் வசனம்,

அப்படியே அழைப்பிக்கிறேனையா சுவாமி,



மந்திரி கட்டியனுக்குச் சொல் விருத்தம் இ-ம் ஆனந்தபைரவி

திடமுடன்விருதுகூறுஞ் செயகட்டியக்காரகேளாய் ❊
இடமுடன்தானியங்கள் சயந்தான்வைத்திருந்த ❊
மடத்தினிலிருக்குமந்த மாமொழிகணக்கன்தன்னை ❊
அடவுடன்கூட்டியிங்கே அதிசீக்கிரம்வருகுவாயே ❊

வசனம் — கேளுங் கட்டியக்காரா நம்முடைய சுல்மான்ராஜன் அழைத்தாரென்று சீக்கிரமாக தர்மசத்திரத்துக் கணக்கனை கொலுமுன் அழைத்துவாரும் பிள்ளாய்,

கட்டியக்காரன் சொல் வசனம்,

அப்படியே அழைத்துவருகிறேனையா மந்திரி,

கட்டியன் சொல் கவி,

வாடிடா கணக்கா கூடியசபைமுன்
ஓடோடியெடுத்து ஓடியேவாடா

கணக்கன் வருகிற விருத்தம் இ-ம் தோடி.

எட்டுமாதிசையும்போற்ற மிந்திடத்தானதர்மம் ❊
மட்டிடல்லா திதியத்தன்னின் வரவுகள்செலவுதன்னை ❊
ஓட்டுசேர்த்துரைக்கவென்று ஒன்றிலாப்பெருக்கிக்கையில் ❊
கட்டியேடெடுத்துக் கணக்கனுந்தோன்றினனே ❊

தரு இ-ம் சங்கராபரணம் ஆதிதாளம்,

சத்திரக்கணக்கனும்வந்தான் தர்மங்கொடுத்தெழுதி
சத்திரக்கணக்கனும்வந்தான்
சத்திரக்கணக்கன்வந்தான் தர்மங்கொடுத்தெழுதி
சித்திரமொழிகள்பேசிச் செலவுகள்சொல்லவேதான் சத்திர
தினசேதிகணக்குகள் திடமுடனெழுதியே
மனதில்வஞ்சனையைவைத்து துரோகி புரட்டெழுதும் சத்திர
சம்பளக்காரரையெல்லாம் தானேபுரட்டெழுதி
உம்பளையாசத்தினிலும் ஒருவர்க்காகாத்துரோகி சத்திர
தத்துவமாகப்பேசி சத்திரக்கணக்கெழுதி
உத்தமசுல்மான்முன்னே உருட்டும் புரட்டும்சொல்ல சத்திர

கணக்கன் சொல் விருத்தம் இ-ம்-தோடி,

ஐயனேபோற்றிபோற்றி அரசனேபோற்றிபோற்றி ❊
துய்யனேபோற்றிபோற்றி சுல்மானேபோற்றிபோற்றி ❊
மெய்யனேபோற்றிபோற்றி மிகவரம்பெற்றாய்போற்றி ❊
பையவேயழைத்தசேதி பகருவாய்பகருவாயே ❊

வசனம்

சரணம் சரணமையா சுவாமி அடியேனையழைப்பித்த காரியமென்னவென்று மனமகிழச் சொல்லவேணுமையா சுவாமி,

கல்மான் கணக்கனுக்குச் சொல் விருத்தம் இ-ம் ஆனந்தபைரவி.

காரியக்காரா யெந்தன் கணக்கனே சொல்லக்கேளாய் ※
வீரியதருமசத்திரம் விதமுடனடத்தினீரா ※
பாரினில்ஜனங்களுந்தான் பசியினைப்பார்கின்றாரா ※
சீருடனிதுவெல்லாம் சீக்கிரமுரைசெய்வாயே, ※

வசனம்

கேளும் சத்திரக்கணக்கனே நம்முடைய சத்திரத்தின் பேர் பிரபலியமாக நடந்து வருகிறதா எளியோர்கள்வந்து தானதர்மம் வாங்கிப்போகிறார்களா கணக்கா

கணக்கன் கல்மானுக்குச் சொல் விருத்தம் இ-ம் ஆனந்தபைரவி

சுருதியின்முறைதெரிந்த கல்மானேசொல்லக்கேளாய் ※
திருவளரதனுல்சத்திர தருமமு நடக்குதையா ※
பெருகியேதங்கள் தர்மம் பிரபலமாகுதிப்போ ※
அரசனேயுந்தன்கீர்த்தி அவனியில்பாவுதையா ※

வசனம்

அகோகேளும் மகாராஜனே உம்முடைய கீர்த்தியும் தானதருமமும் இவ்வுலகத்தில் யெங்கும் பிரகாசமாய் நடக்குதையா,

கல்மான் கணக்கனுக்குச் சொல் விருத்தம் இ-ம் தோடி.

வந்திடுங்கணக்காவுன்னை வைத்திடும் நாள்தொடுத்து ※
இந்தநாள்வரைக்குமீந்த செலவை பணங்காசுண்டு ※
சுந்ததங் கொடுத்தஆடை தவசமெவ்வளவுமுண்டு ※
அந்தமாயுன்கணக்கை அளவிட்டுச் சொல்லுவாயே ※

வசனம்

கேளும்பிள்ளாய் கணக்கா உன்னைக் கணக்கப்பிள்ளையாய் வைத்தநாள்முதல் யிதுவரைக்கும் தருமச்செலவுபண்ணின தவசம் புடவை பணம் இதுவெல்லாம் எவ்வளவு செலவாயிருக்குது அதையெயெல்லாம் எனக்குத் தெரியச்சொல்லும்பிள்ளாய்கணக்கா

கணக்கன் கல்மானுக்குச் சொல் விருத்தம் இ-ம் ஆனந்தபைரவி

அரசனேயெண்பத்தாருயிரமைந்நூறு பேருக்கீய்ந்தே ※
திரவியமிருபத்தாறு யிரஞ்செம்பொன் செலவா மைம்பத் ※
தரையைக்காலேகல்ல ஆயிரத்தைந்நூற்றெட்டு. ※
தரவியநேமமெண்ணுயிரங்காசு மாச்சுதையா ※

வசனம்

கேளும் மகாராஜனே இதுவரைக்குங் கொடுக்கவாங்கினபணிக்கள் அயகுதநிா பேர் அவர்களுக்குக் கொடுத்த பொன் உயகுத பணம் பத்தரையே அரைக்கால் தானியம் (குதறா) கலனே பதக்கே நாழியும் புடவையில் அதம் நெடுமுழம் செலவானதையா



கல்மான் கணக்கனுக்குச் சொல்—வசனம்

அகோ கேளும் நீசொன்னதெல்லாம் நமக்குச் சரிப்பட்டது இனிமேல் அரமனைசத்திரமுதலாகிய வேலைகளில் அச்சமும் பயமும் வைத்து எச்சரிக்கையாய் நடந்துகொள்ளும் பிள்ளாய்.

கணக்கன் சொல்—வசனம்,

அப்படியே நடந்துக் கொள்ளுகிறேனையா சுவாமி,

கணக்கன் கல்மானுக்குச் சொல் விருத்தம்—இ ம் தோடி,

மன்னமன்னவர்கள் போற்று மலர்முகத்தரசே யிப்போ
இன்னமோர்விண்ணப்பஞ்சொல்லி யிசைக்கிறேன்கேளுமன்னா
என்னிடத்தினிலேதானம் இரந்திடவந்தாளோர்பெண்
பொன்னிலத்தினிலுங்காணப் பூவையாள்வாராளையா

வசனம்

கேளும் ராஜாதிராஜர்புகழப்பட்ட மகாராஜனே உங்கள் பாதாரவிந்தத்தைநோக்கி அடியேன் ஒரு விண்ணப்பஞ் சொல்லுகிறேன் நேற்றையதினம் ஒருபெண் தருமசத்திரத்துக்கு தருமம் வாங்கவந்தாள் அவளுடைய அழகைச்சொல்லுகிறேன் கேளையா சுவாமி,

அகவல்—இ-ம்—கண்டா

இந்திரன்போலசிம்மாதனத்திலிருக்கும்
தந்திரமிருந்தகல்மானே கேளும்
தருமஞ்செய்கிற சத்திரந்தனிலே
அரிவையாளொருத்தி அன்னமேவாங்க
மூன்றுநாள்முதலாய் முறைமுறையாக
கன்றபாலகரும் இருவருங்கூடி.
மாண்புடைத்தீபமோ சூரியனொளியோ
தீண்டாமணியோ திக்கிலவொளியோ
சந்திரனொளிபோல் தான்திருமுகமும்
முத்திலகசாதி முதன்மையானப்பெண்
கூந்தலினழகு கொடியனைசவலமோ
நேர்ந்தபிடையும் நீண்டன்ன நடையும்
சூரியகாந்திபோல் துலங்கியகரமும்
கூரியவிழியும் கொள்கைபோலுதடும்
இவ்விதமாக யிருக்கும்பெண்ணவளை
பூவுலகாளு முதன்மொழியீஸ்வரன்
வேதமுமாறு சாஸ்திரம்பார்க்க
பூதலந்தன்னில் படைத்துவிட்டானே
உருவெலாஞ்செய்து உருவினில்மிகுத்த

அ

திருவுருவான திலோத்தமைதானோ
பிறவிச்செல்வமாய்ப்பிறந்தபெண்போல
இரவும்பகலும்பிரக்கவேவாராள்
இந்தவார்த்தையி லென்னதெரியும்
வந்தவளுமக்கு மனைவியேயல்லால்
மற்றொருத்தியென்ட மரியாதையல்ல
குற்றமில்லாமல் கூட்டியேவரவும்
வள்ளலேயெனக்கு வாய்மொழியாக
உள்ளமகிழ்ந்து உத்திரவுகொடுத்தால்
சத்திரந்தன்னில் தருமமேகேட்க
புத்திரரிருவரும் பின்னுமேவருவார்
அவர்களைத்தள்ளிவிட் டழைத்துமேவாரேன்
தவறிலாவாக்குத் தான்தருவீரோ

சுல்மான் சொல் விருத்தம்—இ-ம் தோடி.

தாவென வாக்குக்கேட்ட சத்திரக்கணக்காகேளாய் ❋
எவலாய்வருமுமந்த எந்திழையழகைக்கேட்டு ❋
ஆவிதான்பதைத்துநெஞ்சில் ஆசையுமிகுதிகொண்டேன் ❋
கூவியேமடமான்தன்னைக் கூட்டியேயிங்குவாராய் ❋

இதுவுமது

அவ்விதமானபெண்ணை அழைத்திடாதிருக்கலாமோ ❋
செவ்விதமாசநீபோய்த் திருத்தியேயழைத்திங்கேதான் ❋
ஒவ்விடாதிருந்தாளாகில் உபாயத்தால்வலுவாய்க்கொண்டு ❋
எவ்விதத்தாலுங்கூட்டி யிப்போதுஅழைத்துவாராய் ❋

வசனம்-அகோ கேளுங்கணக்கனே சத்திரத்திற்கு அதிசுரூபமான பெண் வாராளென்று சொன்னமாத்திரத்தில் எனக்கு மோகமீறி விரகதாபங்கொண்டேன் அந்தப்பிள்ளைக ளிரண்டையுந் தள்ளிவிட்டு அந்தப்பெண்ணைமாத்திரங் கொண்டுவாரும் பிள்ளாய்,

கணக்கன் சொல்—வசனம்

அப்படியே அழைத்துக்கொண்டு வருகிறேனையாசுவாமி.

பொது விருத்தம்—இ-ம் தோடி.

நாலாநாள்சத்திரத்தில் நலமுடன்பிச்சைகேட்க ❋
பாலகரிருவர்தம்மைப் பண்புடனழைத்துக்கொண்டு ❋
சாலவேசபுரியத்து கணவனுடனேத்துஞ்சொல்லி ❋
காலமேயெழுந்துபோகக் கண்டனர்சகுனந்தானே ❋

வசனம்—அகோ. கேட்படியென்றால் சபுரியத்தம்மாள் மூன்றுநாள்வரைக்கும் அந்ததருமசத்திரத்துக்குத் தானும் பிள்ளைகளுமாக தர்மம்வாங்கிவந்து நாலாநாள் புறப்பட்டுவருகையில் அனேகவித சகுனத்களைக் கண்டவிதமெப்படியென்றால்,



சகுன தரு—இ-ம் சங்கராபரணம்—அடதாளம்

பள்ளிவிட்டுவெளியில் வரும்போது பது
பாலனைக்கொண்டுவாருமென் றெதிரேவாரான்
தள்ளிவிட்டுப்பிச்சையில்லையென்று அங்கே
தாமிஷ்டிகள் நமக்குச்சொல்வாரோ
எழுந்திருந்துவெளியில் வருகையிலே கால்கள்
இடறுதையோ தலையிடிக்குதேதடா
தொழுந்துவிட்டுதனைக் நெருப்பெரிய ஒரு
குமரிகொண்டு எதிரே வருகிறாளே
அங்கொருத்திவெளியில் சண்டைபோட்டு இங்கே
ஆனையிட்டு குறுக்கே மறிக்கிறாளே
பக்கமென்ன அங்கேவந்திடுமோ என்
பாலகரோகூட நடந்துவாரீர்
காணாமடியயென்னைப் பிறபத்து ஒரு
கசடிவண்ணச்சி யெதிரேவாரான்
நாணமில்லாமல்நித்தம் வாராளென்று அங்கே
நகைப்பார்களோ நம்மை பகைப்பார்களோ
தலைவிரித்து வெகுகோலமதா பெண்ணைப்
தலையுடைனுருத்திவருகிறாளே.
முலையில்லாதமங்கை முன்னேவாரான் மூளி
மூக்கில்லாதவனொருவன் பின்னேவாரான்
வராளமாய்முன்னே செம்பருந்துமகனே
இடம்வலமாய்க்கட்டிப் போகுதடா
தாராளமாய்நித்தம் வாராளென்று அங்கே
தாமிஷ்டிகளென்ன சொல்வாரோ
நித்தமிறுதொழிலாச்சுதென்று மனதில்
நினைத்துமிகத்துயரந்தான் மீறி
கர்த்தனிட்டபடி முடியுமென்று சொல்லி
காத்திருக்கச்சென்றார் சத்திரத்தில்

சம்சநீனும்-சமாநீனும்-சொல் — விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

பாரினில்நம்மைப்போல பாக்கியம்பெற்றோரில்லை ❋
நீரில்லாப்பயிரைப்போலே நின்றிட்டோமிவிக்கலாச்சு ❋
தாரணிபுகழப்பெற்ற சபுரியத்தம்மாவென்று ❋
திருடன்கிலமொழிகள் செப்புவாளோப்புவாளோ ❋

தரு—இ-ம் மோகனம் - ரூபகதாளம்

சவியாதேயென்னம்மா தாயேசபுரியத்தே
சலியாதே யென்னம்மா தாயேசபுரியத்தே
வலியோன்விதிசவிர்த்து வாழ்வாருண்டோவுலகில் சவி

அந்தநாளில்நம்மை அரசிலிருக்கவைத்தான்
இந்தநாளில்நம்மை யிரந்துதிரியவைத்தான் சலி
வாழ்வதுவந்தபோது மனதுசந்தோஷமாகி
தாழ்வதுவந்ததென்று சலித்தால்விடுமோவிதி சலி
தலைவிதியெவரும் தடுப்பாருண்டோவுலகில்
சலித்தால்விடுமோவம்மா தாயேசபுரியத்தே சலி
அன்றுவிதித்தவிதியருள்படியல்லாமல்
இன்றுவருமோவிதி யென்தாயேசபுரியத்தே சலி

சபுரியத்து சொல்—விருத்தம்— இ-ம்-மத்தியமாவதி.

சண்டிடுஞ்சகுனந்தன்னைச் கடந்துநாம்போகாவிட்டால் ❋
இன்றுபட்டிணியாய்நாமு மிருந்திடவேணுமக்கள் ❋
எண்டிசையாண்டோநம்மை யிறையவனிறக்கவிட்டான் ❋
அண்டினோர்தமைரட்ஷிக்கும்ஆண்டவன்புறமாய்ப்போவோம்

தரு—இ-ம் - ஆகிரி - அடதாளம்

பொன்னின்மணியெடுக்குங்கையால் பிச்சைவாங்கியுண்ணலாச்சே
அன்னம்வாரிஅளித்தகையால் ஐயம்வாங்கியுண்ணலாச்சே
காந்திபட்டுடுத்துங்கையால் கிழிந்தணியுடுத்தலாச்சே
சாந்துவாரிமேய்ந்தகையால் தானம்வாங்கியுண்ணலாச்சே
எவரெவர்க்குந்தானதருமம் இட்டகையாலிரக்கலாச்சே
சவுரியங்குறைந்திப்போது தரைதனில்நடக்கலாச்சே
என்னையாளும்ரகுமானே எங்களைநீவைத்திருந்தாய்
அன்னைதந்தையுமில்லாமல் ஆகத்தைமுன்படைத்தோனே
உலகமொருசெங்கோலாக ஓரரசாயாளவைத்தாய்
நிலைகெட்டுயிப்போநாங்கள் பிச்சைவாங்கியுண்ணவைத்தாய்
பெண்பிறவியென்னைப்போலே பிறப்பியாதேபெரியோனே
மண்மீதிலேயான்பிறவி வகுத்திடாதேவல்லவனே
எள்ளளவாகிலுமுன்னால் என்னபாவநாங்கள்செய்தோம்
உள்ளமட்டுஞ்சோதித்தாயே உடையவனேகாக்கவேணும்
பங்கமொன்றும்வாராமலே படைத்தவனேகாக்கவேணும்
தங்குதடைவாராமலே தனியவனேகாக்கவேணும்

சபுரியத்து சொல் விருத்தம்—இ-ம் - தோடி.

நிலம்புகழ்கற்புப்பெண்கள் யாவருநித்தஞ்சூழ ❋
வலம்புரி சபுரியத்து மைந்தரோடிருந்தவாறும் ❋
புலம்பியேதருமதானம் புரிபவர்மடத்துட்சென்று ❋
நலம்பெறவவனைக்கண்டு நயந்துநின்றிரப்பதாளுள் ❋

தரு—இ-ம் - ஆகிரி - அடதாளம்

அன்னைமாரேதாய்மாரே ஆகிதமென்செய்கின்றீரோ
பெண்ணுடன்பிறந்தபேரே பிள்ளைகளைப்பெற்றபேரே



அவதிபடுதேசிநாங்கள் யாருமற்றுக்கிடக்கிறோம்
மிகுதிபசியாறுமிந்த வேளையிலிரங்குவீரோ
கொடியநேரமாகயிக்கே நிற்கக்கால்கடுக்குதையோ
படியளந்திடுவோர்க்குப் பாலிக்கின்னங்கொடுக்கவில்லை
பசிபொறுக்கமாட்டாதிந்தப் பாலகர்முகத்தைப்பாரும்
விசுவாசமாயிந்தாளுண்டு இனிமேலெங்களைகாணப்போறோம்
மூன்றுநாளாகவந்தோம் முன்னைக்கொடுத்தனுப்பிவிட்டீர்
இன்றைகாலைநேரம்வந்தோம் இருபகுநாழிகையுமாச்சு
இரங்கியேதீர்த்திடராளும் இருக்குமிடம்போறோமையா
தருமமொருநாளும்நாங்கள் தானம்வாங்கவந்ததில்லை
எங்கள்தலைவிதிவசத்தால் இப்போதுயிரக்கவந்தோம்
கண்கள்பஞ்சடையுதெங்கள் கனபசிவருத்தத்தாலே
எங்களுக்குயிருக்கையில் யிருக்குதையாயிந்தவேளை
உங்கள்மனமிரக்காவிட்டால் இன்றுபட்டிணியேநாங்கள்
பச்சைக்கிளிபாலகர்கள் பசியினால்படுகுதையா
இச்சைபடும்பிள்ளைகளும் ஏங்கியேபுலம்புதையா
பிள்ளைகளில்லாதவர்கள் பெருந்தபசுசெய்கிறார்கள்
தெள்ளியேயென்பாலகர்கள் தியங்கியேபுலம்பிவாடி
அன்னந்தண்ணீரில்லாமலே அழுகுதையாபிள்ளைகளும்
கள்ளியான்முகத்தைப்பார்த்துக் கருணையுடனனுப்பவேணும்
பள்ளிதனிலேயிருக்கும் பாதுஷாபுலம்புறாரோ
உள்ளதைக்கொடுத்தனுப்பும் உங்களுக்குதருமமுண்டு
எல்லவர்க்குங்கொடுத்தனுப்பி எங்களைநிறுத்துவானேன்
நல்லவர்பொல்லாருக்கும் நடப்பித்திரோசிக்கமாக
பாவங்கள்செய்தபேரைப் பத்தியில்வாராதேயென்பார்
ஆபத்துவந்தேயெங்கட்கு அவதியாயிரக்கவந்தோம்

சபுரியத்துசொல் - விருத்தம் - இ - ம் - காம்போதி,

என்னுடைபிறவியோரேயெளியவர்தமக்குஅன்னம்
சொன்னமுங்கொடுக்குகின்றதோழமையோரேநாங்கள்
இன்னோமிருந்தோம்நீங்கள்இரங்கியேதாராதாலே
மன்னவரிருக்கும்பள்ளி வாசலுக்கேகின்றோமே,

வசனம்,

கேளும் என்னுடைப்பிறப்பானோர்களே நீங்கள் அனேகம் பேருக்கு, அன்னதானங் கொடுத்து அனுப்பினீர்கள் எங்களுக்கு இந்தமட்டுக், கொடுத்து அனுப்பாததினாலே நாங்களிருக்கிற பள்ளிவாசலுக்குப், போகிறோம் நாங்கள்யாருக்காவது கொடுத்திருந்தால்தான் ஆண்டவன் எங்களுக்குகொடுப்பான் நாங்கள்செய்தபாவம் நாங்களே அனுபவிக்கவேணும் வெகுநேரமாய்ப் பிள்ளைகள்பசியாலழுகுது நீங்

கள் முன்னமே யில்லையென்றால் இன்னம் ஒரிடத்திலாவது பார்த்து க்கொள்ளுவோம் இன்றையத்தினம் நாங்கள்கொடுத்து வைக்கவில்லை யென்று யெங்கள்விதியை நினைத்துநாங்களிருக்கும்பள்ளிவாசலுக்கு ப்போகிறோம் அன்னைமார்களே,

சத்திரத்தார்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

புனக்கொடிமயிலேயுந்தன் புத்தியிற்கோபம்வேண்டாம்
உனக்குமுன்பாலருக்கும் உளமகிழ்வாகத்தானே
தனக்கொருகுறையில்லாமற் றருகிறோமடந்தினுள்ளே
வனக்குயில்மயிலேவந்து வாங்கியுண்கவிந்திவாயே,

வசனம்—கேளுமம்மாதாயே யின்னேரமட்டும் நாங்கள்கொடுக்க வில்லையென்று உன்மனதில் குற்றங்குறைவைக்கவேண்டாம் உனக்கு ம் உன்பிள்ளைகளுக்கும் எப்போதும் கொடுப்பதிலும் அதிகமாகத் தருகிறோம் இம்மடத்தில் உள்ளேவந்து வாங்கிக் கவிந்திருங்களம் மா,

சபுரியத்தம்மாள்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

கவிதீர்வதென்றுசொன்னீர் கருத்துள்ளபடிக்குவாரேன்
செவிப்புடன்சிமையாண்டோர் செதியிதுவந்ததிப்போ
அலிபாதுஷாதன்பாலர் அழுகுதுபசித்துயிங்கே
தலைவிதியென்றுசத்திரந் தனிலுள்ளேவந்தேனப்பா,

வசனம்,

கேளுங்கணக்கமார்களே இந்தபிள்ளைகளின் பசியினாலேதீங்கள் சொன்னபடிக்கு மடத்தினுள்ளே வந்தேன் தருமம்தாருங்களை யா.

பொதுவிருத்தம் இ-ம்-மத்தியமாவதி.

பாவியோன்கணக்கன்தானும் பரிவுடன்மடத்தினுள்ளே
கூவியேவசனங்கேட்டுக் கோதையுள்புகுந்தபின்பு
மேவிடாக்கதவடைத்து வெளியில்பாலகனைத்தள்ளிப்
பூவையேயரசன்பக்கல் போவோம்வாவென்றழைத்தான்,

வசனம்,

அகேதெப்படியென்றால் சபுரியத்தம்மாளை மடத்தினுள்ளே அ ழைத்துப் பிள்ளைகளை வெளியேதள்ளி இந்த அம்மாளை சுல்தானிடத்து க்கு அழைக்கும்போது பிள்ளைகளைக்கண்டு புலம்புவ தெப்படியெ ன்றால்,

சபுரியத்துபுலம்பல்-விருத்தம்-இ-ம் தோடி,

கனியினுமினியதான கண்மணிமகனேகேளாய்
இனமதைவிட்டுநானும் ஏங்கியேதனித்தழுகத்
தனியவனெழுதினானோ சஞ்சநின்கமாதினே
மனமதுமிகவேநொந்து மயங்குவ ளிதியங்குவாளே,



தரு-இ-ம்-தோடி-ரூபகதாளம்

என்னசெய்வேன் மகனே யானிதுக்
கென்னசெய்வேன் மகனே
வந்துசதிக்கணக்கனும் நெஞ்சிரங்காமலே
பஞ்சமாபாதகன் கெஞ்சிடவடித்தான் (என்)
உள்ளதுசொல்லோ உன்மனக்கல்லோ
நல்லதுஅல்லா நீபிள்ளையைவதைக்கலாமோ (என்)
நிருநந்தெங்கிருந்தோன்று சத்திரத்திலேவந்தோம்
கருமவினையிதுவோ காட்டிவைத்தாயெனமக்கு (என்)
பெண்டாள்வேறுமொன்று பிச்சைக்குவந்தபேனை
சண்டாளக்கணக்கனுந் தள்ளிக்கதவடைத்தான் (என்)
பாதுஷாவும்பள்ளியிலே பாலருங்கானகத்துள்
பாதகக்கணக்கனும் பத்றக்கதவடைத்தான் (என்)
ஆவிபதைத்திடவே ஐயோகோவென்மகனே
பாவிசண்டாளக்கணக்கன் தள்ளிக்கதவடைத்தான் (என்)

சபுரியத்துசொல்-விருத்தம்-இ-ம் கலியாணி

சத்திரவனைப்பெற்ற சஞ்சதினென்னுமக்கா
சுத்தமேபெருகின்ற சுமாதினென்னும்பாலா
வந்ததுநமக்குஅந்த வல்லவன்விதிப்படித்தான்
சிந்தையில்கலக்கவேண்டாம் சேர்ப்பானேவல்லோனம்மை

வசனம்,

கேளும் மக்களா என்னைவிட்டுப்பிரிய ஆண்டவன் எழுதினான் ஆ கிலும் இட்டேபிரித்தவன் மறுபடியும் நம்மைக் கூட்டுவான் அழா திருங்கள் மக்களா,

தரு-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்,

மக்களா ஐயோ மக்களா

வினைவந்ததல்லவோ விட்டுப்பிரியவே மக்களா
விதிவசமென்றேன் னுயிர்விடுவேன்மக்களா
தனியோனைமைத்தாளிச் சதிவந்துநேர்ந்திட
சத்திரத்தனிலேதாயை விட்டுப்போக மக்களா
பிள்ளையைவிட்டு யாகூபநபிதான்
பிரிந்துமரத்தின்கீழ் புலம்பியழுநாட்போல்
கள்ளிபோல்சத்திரந் தன்னிலொருத்தியாய்
கன்றினைவிட்டுப்பசு கலங்குங்கதைபோல் மக்களா
தள்ளிவிட்டுக்கதை யென்னைப்பிடித்துச்
சண்டாளன்கல்டா னிடத்தினில்வாவென்றான்
பள்ளியில்போயுங்கள் பாவாவுடனிருந்துப்
பாவிகதையைப் பரிவுடனேசொல்லும் மக்களா

மக்களா நாளிங்கே மாண்டிடுவோமிப்போ
வந்து தேரமக்கித்த வல்வினையிதான்
பஞ்சத்திலே தின்ன பாதவித்துழுகமல்
பள்ளியிற்போயுங்கள் பாவாவுடனே சொல்லும் மக்களா

பொதுவிருத்தம்-இ-ம்-பந்துவராளி,

இப்படி சபுரியத்து மியல்புடன் புலம்பும்போது
அப்படி வெளியில் நின்ற அவனுடையாளரோர்
சொற்படி கேட்டிடாது கல்யாணைப் பார்த்துப் பாலி
எப்படியிருக்குவாரோவென் றியல்புடன் புலம்பலுற்றார்,

தரு-இ-ம்-பந்துவராளி-ரூபகதாளம்,

சத்திரத்திலிருக்கின்ற   அன்னையாரே பெற்ற
தாயைத்தள்ளிக் கதவடைத்தீர்   அன்னைமாரே
புத்திரருத் தாயுமாக   அன்னைமாரே இங்கே
பிட்சை கேழ்க்கவந்தோமடா   அன்னைமாரே
பெற்றதாயிங்கிருக்க   அன்னைமாரே நாங்கள்
போவதெப்படி சொல்லும்   அன்னைமாரே
குற்றமேது செய்தோமிப்போ   அன்னைமாரே நாங்கள்
செய்தகுறை பொறுத்தருளும்   அன்னைமாரே
பிச்சைகேட்கவந்திடத்தில் தாயைத்தள்ளியே   நீங்கள்
பிடரியிலடிக்கிறீர் கூ கூ கூ
தூற்சனங்கள் செய்யவேண்டாம்   அன்னைமாரே இ...
தொன்னைசாழித்துபோகும்   அன்னைமாரே
தாயிழந்த பேர்களானோம்   அன்னைமாரே எங்கள்
தவடையிலடித்திடாதீர்   அன்னைமாரே
வாயில்லாப்பட்சியானோம்   அன்னைமாரே இப்போ
வந்தோமடா பிச்சைகேழ்க்க   அன்னைமாரே
ஞாயங்கேழ்க்கப்பட்டணத்தில்   ராஜனில்லையோ இப்போ
நாங்களென்ன செய்யப்போறோம்   மிகுந்தவிதிக்கு
தாயே சிவன் விட்டிடாதே   தம்பிரான் காப்பான் அம்மா
சத்தியம் பெரிதென்றெண்ணித்   தாவினைத்திரும்
ஐயமிரக்கவந்தோம் நாங்கள்   சத்திரத்திலே பாவி
அடிக்கிறீரே யெங்களைத்தள்ளி   கூ கூ கூ
வையகத்தையாண்டிருந்த எங்கள் பாவாவுக்கு   நாங்கள்
வார்த்தையென்ன சொல்லிடுவோம் பதில்சொல்லம்மா

சபுரியத்துப்பிள்ளைகளுக்குச்சொல்-விருத்தம்,
இ-ம். கண்டா,

சொல்லுவதென்னமக்காள் சோதனைப்படியாச்சு
கல்லவத்துமக்குநாமே மிகழ்வதற்கிடமுமாச்சு



பள்ளியிலுள்ளபாவா பாதுஷா விடத்திற்போயி
இல்லையென்று சொல்லி யிருக்கிறேன் சிறையில் மக்காள்

தரு—இ-ம் கண்டா ஆதிதாளம்,

பாவியிந்த வஞ்சகன் என்மகனே   மகனே
பட்டித்திக்கதவடைத்தான்   கண்மணியே
அவிபராக்குதேசிடா என்மகனே   மகனே
அத்திரமாகினேனடா   கண்மணியே
நீதியாசாரமான்டேன் என்மகனே   மகனே
நேசமதிற்தாரில்லை   கண்மணியே
ஆதியருட்படியே என்மகனே   மகனே
ஆனேன் சிறையிற்குள்ளே   கண்மணியே
தப்பாசில்லாமல் வாழ்ந்தோம் என்மகனே   மகனே
தலைவிதிப்படியாச்சு   கண்மணியே
குப்பாவாய்ப்பெற்றெடுத்த என்மகனே   மகனே
குயாப்போட்டவண்டாம்   கண்மணியே
வல்லவாய்வாழ்ந்திருந்த என்மகனே   மகனே
வந்தவினைகள்சூழ்ந்ததும்   கண்மணியே
பள்ளியிற்போயுங்கள்பாவாவுடனே   மகனே
இந்தப்பாவிக்கதைதனைச்சொல்லும்   கண்மணியே

பிள்ளைகள் சொல் விருத்தம்—இ-ம் தோடி.

சத்திரத்துள்ளிருந்து சபுரியத்தம்மாள் சொல்லச் ※
சித்தமுங்கலங்கிப்பாலர் திகைத்துமே நிலத்தில் வீழ்ந்து ※
மெத்தவுந்துயரத்தோடே வெளியில் நின்றலறியேங்கி ※
பெற்றதாய்தன்னைவிட்டுப் பிள்ளைகள்போகலுற்றார் ※

தரு—இ-ம் கண்டா - மிசுரதாளம்,

ஐயோ யெங்களைப்பெற்ற   தாயே   இந்த
அவதிப்பட்டேயாச்சு   தாயே
வையகத்திலேழையானோம்   தாயே   இங்கே
வந்திப்படியாச்சு   தாயே
உன்னையேயிழந்துவிட்டோம்   தாயே   கண்ணில்
எக்காலம் காணப்போறோம்   தாயே
அன்னையேயிழந்துபோனோம்   தாயே   எம்மை
ஆதரிப்பாராருமில்லை   தாயே
கன்னம்புரந்தபசுவானோம்   தாயே   எம்மை
காத்துரட்சிப்பாரில்லை   தாயே
மண்ணில்மடிந்திடுவோம்   தாயே   இப்போ
வையகத்திலுயிர்வையோம்   தாயே

பள்ளியிலெந்தனையிடத்தில் தாயே போயி
பாவிகதைதனைச்சொல்லேம் தாயே
பிள்ளைகளைநீயிழந்தாய் தாயே நாங்கள்
பரதேசியாய்ப்போறோம் தாயே

கணக்கன் சொல் விருத்தம்—இ-ம் கலியாணி

மங்கையேயுன்னைச்சுல்தான் வரவழைத்திடவேசொன்னான் ※
இங்குநீபிச்சைவாங்கி யேங்கியேதிரியவேண்டாம் ※
சங்கையும்வாழ்வும்பெற்றுச் சந்தோஷமாகநீயும் ※
பொங்கமாய்வாழ அங்கே போகுவோம்வாராய்பெண்ணே ※

வசனம்

கேளும் மயில்போலும் அழகியபெண்ணே நீயேன் பிச்சை வாங்கியிருக்குறாய் சுல்தான் மகாராஜனும் நீயும் சுபமங்களமாக வாழ உன்னை அங்கேகொண்டுபோய் விடுகுறேன் என்கூட வாரும் பெண்ணே,

சபூரியத்து சொல் விருத்தம்—இ-ம் சங்கராபரணம்.

கொடியவனழைக்கும்போது குலங்குலைந்துருகிவாடி. ※
படியரசனுக்குமிந்தப் பாவிக்குங்கருமமேது ※
முடிவுநாள்வருவதில்லை முதலவாயென்னுநாடக் ※
கடலினில்விழுந்துப்போமுன் காரிகைபுலம்புவாளே ※

தரு—இ-ம் ஆகிரி அடதாளம்,

அதியேநானென்னசெய்வேன் ஐயோகோநா னென்னசெய்வேன்
சோதியேநானென்னசெய்வேன் ஆட்டமேநா னென்னசெய்வேன்
புத்திரனொருதிக்குமாகிப் புருஷனொருதிக்குமாகி
சித்தப்பிரமைகொண்டுநானுந் தியக்கலாச்சேவல்லவனே
விதிவசமோயிந்தஜுரிஸ்விசாரிப்பாரொவருமில்லை
கெதிவசமோவெம்செயலை கேட்டிவோராருமில்லை
சித்தயிரங்கியெந்தன் இவ்வினையைக்கேட்பாரில்லை
புத்திரர்தனக்குதவி பேசுவாரொருவரில்லை
ஆருமற்றபரதேசியாகினேனேயிந்தவேளை
பாரையாண்டபாக்கியமே பாவிக்கிதுவரலாச்சே
மைந்தரைப்பிடித்துத்தள்ளி என்னைமன்னவன்மனைக்குள்ளாக
இந்தவிதமானதென்ன யிழுப்பதற்கு நீதியுண்டோ
பிள்ளைகளைவிட்டுயிந்தப்பூமியிலிருப்பேனோநான்
பள்ளியிலிருக்குமெந்தன் பாதுஷாவென்செய்கிறாரோ
கள்ளிபோலொருத்தியாகச் சுணக்கலங்கித்திகைச்சேனே
பிள்ளையிருவரும்போயென் புருஷனண்டைசேருவாரோ
தேடியேபுலம்பியிங்கே திகைத்தழுதிருக்கிறாரோ
வாடியேமனங்கலங்கி மனம்வெறுத்திருக்கிறாரோ



தேடியபிம்மாதனத்தில் இறப்புடனேவாழ்ந்திருந்தோம்
நாடியபிள்ளைபுருஷன் நடுமுகுந்தியுமானேன்
முந்தும்வினைநான்செய்தேனோமுதல்வனேசற்றுபோகாமல்
பத்தினிகற்புதன்னைப் பகுத்தவனேகாக்கவேணும்
வானம்படைத்தவனே மானங்காக்கவேணுமிப்போ
ஈனங்கள்வாராமல்காப்பா யென்னையாளுமிறையோனே
இனம்நெறியுள்ளோராகி யிசைந்தருமிருக்கவே
அசுராப்பலந்தன்னைகாக்கும் ஆதியானயிறையவனே
ஆதமலேகிச்சலாம் அவ்வாவுக்ரகேட்டவரும்
கோதுமைக்கனிதன்றதனால் குற்றமென்றுபூமியிலே
ஆதியுமவனாத்தள்ளி ஆனோகநான்சென்றதன்பின்
நீதியுடன்கூட்டிவைத்த நேசமுள்ளஆண்டவனே
நல்லநூஹுநபியை நாடிமெடுத்தநின்னை
வல்லமையாய்மீன்வயிற்றில் வல்லவனுதவியினும்
நாம்பெருநாள் சென்றபின்பு நலமாய்வெளியாக்கிவிட்ட
கார்க்குமிறையோனேயெந்தன் சபூரியாகாக்கவேணும்.
மங்கைக்கோரழிவில்லாமல் மன்னவனேகாக்கவேணும்
பங்கமொன்றும்வாராமலே படைத்தவனேகாக்கவேணும்

கணக்கனுக்கு சபூரியத்து சொல் விருத்தம்—இ-ம் தோடி.

பேதகமில்லையென்று பெண்டுக்குப்பிழைமோசங்கள் ※
இதுசெய்யநாடித் திக்குள்ளகணக்கனேனாய் ※
நாதன்முன்னென்னைக்கொண்டு நலமுடன்விட்டாலெந்தன் ※
பாதகமுன்னைவந்து பாரிதனில்சுற்றுங்கண்டாய் ※

வசனம்

கேளுங்கணக்கா எனக்கு நல்லசொற்களைச்சொல்லி என்னை உன்னைவரவழைத்து என்னை நீ அரசன்முன் கொண்டுபோய்விட நாடுறாய் அதில் உனக்கு என்னுடைய சாபம் உனக்கு தவறாமல் சீக்கிரமாப் பலிக்கும் வேண்டாம் என்னைவிட்டுவிடு நான் என்னிருப்பிடம் போகிறேன் சண்டாளகணக்கா,

கணக்கன் சொல் விருத்தம்—இ-ம் ஆனந்தபைரவி

பத்தினிசபூரியத்தே பசுந்திடக்கேளும்நீயும் ※
அத்திடவிழிநீர்சிந்த அன்னமேவாங்கவேண்டாம் ※
மெத்தவுமன்பாயாக மன்னனுடன்வாழ்ந்திருக்க ※
சத்தியமில்லாச்சுல்தான் சமுகத்தேபோவோம்வாராய் ※

வசனம்

கேளும்பெண்ணே உன்மனம் நோகும்படியாகவும் மிகுந்த துயரத்துடனே நீபிச்சைவாங்குவது நல்லதல்ல நீஎன்கூடவந்தால்

உன்னை சுல்மான்இராஜனிடத்தில் விடுகிறேன் அதனால் நீயிருந்த குலத்தை அடைவாய் வாருமபெண்ணே,

பொது விருத்தம்—இ-ம் மத்தியமாவதி

பாதகனழைத்துவந்து படிறு பொய்களவுமெத்தச் *
சூதகம்வைத்த சுல்மான் சமுகத்தில்விடவும்பூயி *
மாதர்கள்புகழுமங்கை மன்னனை நோக்கா நிற்கச் *
காதலங்கடலின்மூழ்கி கருமசண்டாளன்சொல்வான் *

வசனம்

அகோ தெய்படியென்றால் சபுரியத்தம்மாளை பொக்லாக்கணக்கன் அழைத்துவந்து சுல்மான்ராஜன்முன்னேவிடவும் அவன் கண்டு மிகுந்த ஆசையுடனே பேசுவதெப்படியென்றால்,

சுல்மான் சொல் விருத்தம்—இ-ம் சங்கராபரணம்

பாவையே புலகமெல்லாம் பணிந்துவந்பாதம்போற்றும் *
பூவையேயிருப்பதெவ்வூர் புகலுமுன்னுடமேது *
தேவையாயித்தவூரில் சேர்த்திட்ட கருமமேது *
யாவையுமுரைத்தாலிப்போ யானளித்திடுவேன்பெண்ணே *

வசனம்

பெண்ணே சகலலோகத்தாரும் போற்றுகின்ற அழகினையுடையவளே உன்பேரும் உன்னூர்பேரும் நீயிவ்வூருக்கு வந்த காரணமும் ஒன்றுவிடாமல் சொல்லுவாயேயானால் அதையான்கேட்டு உன்மனதின்படி திட்டஞ்செய்கிறேன் சொல்லும் நாயகியாளேபெண்ணே,

சபுரியத்து—சொல் வசனம்

அப்படியே சொல்லுகிறேன்கேளுமையா சுல்மான் ராஜனே

தரு—இ-ம் கல்யாணி—ஏகதாளம்,

எங்கள்ஊர்பேரு மெளிபேருங்கேட்குமோ ஐயாவே—நாங்கள்
ஏழையாய்ப்பள்ளியிலிறங்கியிருக்குறோம் ஐயாவே
அந்தவேளை ஒருதன்னையாண்டிருந்தோமே ஐயாவே—என்னை
அழகாசபுரியத்தென்றென்பேர்சொல்லுவார் ஐயாவே
நாயகரும்நானும் பூலோகமாண்டோங்க ளையாவே—அந்த
நாளையிலேயொரு பாலன்பிறந்தது ஐயாவே
தேசமிழக்கத்துடிக்குசல்செய்தது ஐயாவே—அதனால்
தேசத்தாரெங்களை தேசம்விடச்சொன்னார் ஐயாவே
மைந்தருநானு மணவாளருமாக ஐயாவே—அப்போ
மறுதேசம்போக வெளியேபுறப்பட்டோ மையாவே
இந்தவருத்தங்க ளெய்தவிதியாச்சே ஐயாவே—என்னு
எண்ணிக்கலங்கியே யேகிநடந்தோங்க ளையாவே
வந்தவழிதனில் வனமும்மலைகளும் மையாவே—அங்கே
வந்துவன்டு பயந்துநடந்தோங்க ளையாவே



அந்தக்காட்டிலெங்கள் மடிந்துபயந்துகொண்டோ மையாவே—கையில்
ஆகாரங்கையில்லாம லலுத்துக்கொண்டேவிட்டோ மையாவே
நிர்கதிகலங்கியே செல்லுநானுமே ஐயாவே—வெகு
துன்பமுடனிந்தத் தேசம்வந்துசேர்ந்தோ மையாவே
இந்தப்பட்டணந்தனில் மூன்றுநாளாகவே ஐயாவே—கையில்
ஆகாரமில்லாமல் மனங்கலங்கினோ மையாவே
கருமசெட்டிக்கட்டி யிதுக்காவைத்திரோ ஐயாவே—நல்ல
சத்திரத்தின்னிலே மைந்தருநானுமா மையாவே
கருமவினையால்நாங்கள் மூன்றுநாளாகவே ஐயாவே—இங்கே
கைதீட்டி அன்னமேவாங்கிப் பொசித்தோங்க ளையாவே
இன்றைக்குப்பிள்ளை புதானுயிர்க்குவந்தோ மையாவே—இங்கே
எல்லோரும்போலவுடன் பிச்சைகேட்டோங்க ளையாவே
நன்றென் கணக்கனும்மடத்துக்குள்ளேவரச்சொன்னா னையாவே—தந்தை
தம்பியேமைந்தருநானுமடத்துட்செல்லுறோ மையாவே
அண்டியில்பிள்ளை கூடிக்கட்டிப்பிடிப்பார்போ ஐயாவே—அங்கே
அடிக்கவேபாலனைத் தள்ளிக்கதவடைத்தா னையாவே
வெண்டினெங்கே வெருவாயவர்களை ஐயாவே—அந்த
வெட்கங்கெட்டபோனானென்மட்டேபிழுத்துவந்தா னையாவே
பின்னைகளெங்கேபுலம்பியழுகுதோ ஐயாவே—ஈன்ற
பெற்றதாயில்லாமல்சத்தியழுகுவா ளையாவே.
பள்ளியிலேதன்புருஷராவாரோ ஐயாவே—இப்போ
போனவென்மயெத்தனையேவனத்திலே மையாவே
கணமுடனே நானுங் கண்டமறந்தேசொன்னே னையாவே—என்னை
காத்துஅனுப்பினால்கோத்திரத்துடன்வாழ்வே னையாவே,
மனமிரங்கியென்னை மகிழ்ந்தனுப்புவீர் மையாவே—என்
எஜமானும்பிள்ளையுமெங்கேயழுகிறாரோ ஐயாவே
கணக்கன்கொடும்பாவியவன்பேச்சைக்கேளாதீ ரையாவே—கேட்டால்
கெட்டுப்போவதல்லால்விட்டுப்போவதில்லை ஐயாவே
மனைக்குடன்பெற்ற மகனொன்றனுப்புங்கா ளையாவே—உந்தன்
வாழ்வும்வரிசையும் வளமைத்தோங்குமே ஐயாவே
குத்திரஞ்செய்தால் கொடும்பாதகமிவரு மையாவே—உன்
கூடப்பிறந்தவள்போலென்னையனுப்புவீ ரையாவே
சித்தமகிழவே வுத்தாரமேதாரு மையாவே—உந்தன்
திருஞ்செல்வமுமோங்கிப் பெருகுவாருங்கா ளையாவே
பிச்சைக்குவந்தோரிமே யிச்சைப்பட்வோரோ. ஐயாவே—என்னை
பெற்றபெண்ணாகவே சித்தமகிழ்ந்தனுப்பு மையாவே
குச்சித்திரமாவே விசித்திரம்பேசவே ஐயாவே—எந்தன்
குலத்தார்தாலுந்தன் கூட்டத்தைச்சாம்பக்கீ ளையாவே.

ஆண்டவிளக்கினை இன்றுநிம்பூச்சிரோ ஐயாவே—என்னை
ஆண்டிடக்கனக்க ஞாயிறன்விட்டயிருந்ததோ ஐயாவே
மாண்டார்போலநீயு மானக்குறிதோ ஐயாவே — இந்த
மண்டலமெல்லாம் வாழ்வதை கண்டிடியங்காதே ஐயாவே
நெஞ்சந்துணியாமல் நெருப்பில்விழுவாரோ ஐயாவே — இந்த
நிலத்தினில்வாழ்வதை பிலத்தமென்றெண்ணாதே ஐயாவே
வஞ்சனைசெய்தால் குட்டமேராய்வந்திடும் ஐயாவேபெண்ணின்
மனமறியாமல் வெருவேபேசன்மாண்டவ னையாவே
பள்ளிபில்பின்னையும் பருகிறனும்பட்டினி ஐயாவே எனக்கு
அள்ளிப்பிச்சை மளித்துக்கனுட்டினா னையாவே
தெள்ளியவாழ்வோடி பின்னைகளுடன்வாழ்வி னையாவே-போகத்
தேதியிடைகாரு ச்ருடன்வாழ்வீர்கா னையாவே

கல்மான் செல்விருத்தம் — இ-ம் — தோடி.

சோனைபெயுஞ்மேல்காதல் கொள்ளவேபெற்றனுக்கு ※
வானதியபெருரும்பொக்லா வசனநீவருத்தாயிந்த ※
போதையேயுமினக்கல்யாணம் புரியவேமுரண்டவேண்டாம் ※
மாதேநீமயங்கிடாமல் மருவியேயிருப்பாய்பெண்ணே ※

வசனம்

ஆகோ வாரும் பெண்ணே சபுரியத்தே உன்னோ ஒருபோதும் விடுகிறதில்லை உன்னைக்கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறேன் சந்தவிதத்திலேயிது முன் மனமிரங்கி என்மோக விரகதாபத்தை தீர்க்கவேணும்பெண்ணே,

சபுரியத்து கல்மானுக்குச் சொல் விருத்தம்—இ-ம் பந்துவராளி

சாத்திரவிதிமீறிப்பேசும் துன்மார்க்கனாரேசொல்லாய் ※
உலகமாபுகழ்க்குமானும் முடிமிகுந்தானேயானேன் ※
கைகளில்லாநிராக்வத்தால் மக்களோபிடித்துதள்ளி ※
விதியில்லாதபெண்ணை நீவநுசெய்யொணதே ※

வசனம்—கேளும் மகாராஜனே நாங்கள் ஆவழி போகிறபோது உம்முடைய சத்திரத்தில் பிச்சையிரக்கவந்தோம் என்பின்னைகளிரண்டையும் அடித்துத் தூரத்திவிட்டு என்னை புன்னிடத்திற்குப் பிடித்துவந்தார்கள் பிச்சைக்கு வந்தபேரை பெண்பிடிக்கிறதா மென்பேரில்மோகம்வைத்து தகாதசொல்லுகளை என்னிடத்தில் நீரிப்படிசொல்வது நல்லதல்லவென்னைவிட்டுவிடும் ராஜனே,

கல்மான் சொல் விருத்தம்—இ-ம்-ஆனந்தபைரவி,

விதியென்றுபெற்றவுன்னை விளம்பியமயிலேபெண்ணாய் ※
முருகுதமோகதாப முகந்தோடி முகமேவைத்து ※
மகிழ்ந்தென்னைச்சேர்ந்துக் கட்டியேயணைந்தாலிப்போ ※
பதிமொழிபெண்முனக்கு பாக்கியமளிப்பேன்பெண்ணே ※



தரு—இ-ம் செஞ்சுருட்டி - ஏகதாளம்,

எந்தனுக்குயிரோ யென்னொன்றிருப்பமயிலே நான்
வந்துன்னடிபணிய மனதுவைத்தென்னைச் சேர்த்திடுவாய்
தேவரம்பைக்குயிலே - என் - தேவியிளமயிலே உன்
ஆவல்பிருந்திடுதே - யென்னைநீ - ஆதரித்தாள்வாயே
பொன்னேநவமணியே—அமுதே—பொருந்துநிறைமதியே வந்து
உன்னிருதாட்கதிரே—நானும்—பிருசரணம்பணிவேனே
கண்ணனகண்மணியே—என்—காதலிளங்குயிலே என்
எண்ணுதபெண்மையனைத்—சகிதிர — யின்பமுடனேவா
பஞ்சவர்ணக்கிளியே—உன்—பாதத்தில்நான்விழுவேன் மிகக்
கெஞ்சியடிபணிவேன் — என்னைநீ—கேட்டவரந்தருவேன்
என்னாசைக்கிளியே—உன்—சித்தமிரங்காதோ என்
மின்கொடிமோகனமே—நான்கொண்ட— மோகத்தைதீர்த்திடு
நெஞ்சமறந்திடுமோ—பெண்ணே—நித்திரையும்வருமோ-என் [வாய்
வஞ்சியருக்கரசே—எந்தன—மையலைதீர்த்திடுவாய்
என்னசெய்வேன்பாவி—அமுதே—என்னுயிர்வஞ்சியரே உன்
கின்னபதமறவேன்—என்னைநீ—சிறப்புடனேயணைவாய்
மெழுகுபோலுருகி—மனது—வெம்பிமையல்பெருகி வந்து
அழுதுநான்வாடுறேன்—இரங்கி—யன்புவைத்தேயணைவாய்
உன்மனக்கல்லாச்சோ—உன்—உள்ளமெழுகாச்சோ இந்த
வன்கடல்புரண்டாலும்—விட்டேனுன்னை—மாதரசேயணைவாய்

சபுரியத்து சொல் தரு

பட்டிணத்திமெத்த பாவிதாயிம்பாராமல்
நிட்டையமல்லவாழ்வு நீர்மெத்தமிதீயது

கல்மான் சொல் தரு

நீர்மெத்தமிதீயென்று நீதியெடுத்துரைத்தாய்
தேறுதலாகச்சொன்றனும் திரும்பவிவெதில்லை

சபுரியத்து சொல்—தரு

விடுவதில்லையோவுனக்கு விபரீதபுத்தியினால்
படவிதிவந்திடும் பத்தினிமாராலே

கல்மான் சொல்—தரு

இடறுவந்தாலும் என்னாசைதீராதே
மடமயிலேயெனக்கு வார்த்தையொன்றுசொல்வாய்

சபுரியத்து சொல்—தரு

வார்த்தையென்னசொல்வது வந்தோம்பிச்சையிரக்கப்
பார்த்திபாவென்னைவிடு பட்டினிநானன்று

கல்மான் சொல்—தரு

பட்டிணியென்றுநீமுன் பகட்டுகிறாயுன்றுக்கம்

கட்டிடணைக்கமனாம் கருநுதெபென்னே

சபுரியத்து சொல்—தரு

கண்ணேயென்று சொன்னாப் சதைகள்முழுதுங்கேட்க
மன்யீதில்கசமா வாழாமல்மசன்டிடுவாய்

கல்மான் சொல்—தரு

யாண்டே அழுகன்னைவிட்டேன் மணமிதுசெய்யாமல்
வேண்டி வசென்வன்னை மின்கொடிமாமயிலே

சபுரியத்து சொல் விருத்தம்—இ-ம் தோடி.

மாசமதாவெனைவிட்டு மொழிந்திடுமாசேசேனாய் ❊
தோசையாமெனக்குநீயுந் துரைவிலா அன்னைஞானும் ❊
ஆருமேபொருளுண்டாஞ ஷாமாதத்திறேன்பு ❊
போகட்டுமெனக்குயின்னம் புத்தியுங்காட்டிமன்று ❊

வசனம்—கேளும் மகாராஜனே நீ பெண்பேரில் மோசங் கொண்டேனென்று சொன்னாய் எனக்கு ஆறுமாத மெண்புண்டு அதற்குள்ளாக உனக்கும் நம்புத்திவரும் அதன்பின்பு நடப்பதைச்சொல்லுகிறேன் மகராஜனே,

கல்மான் சொல் விருத்தம் - இ-ம் - கலியாணி

புத்திவாராதோவென்னைப் புகழ்ந்திட்டேனுன்னையானும் ❊
மெத்தவுமாசைகொண்டேன் விரதநோன்பென்றுசொன்னாய் ❊
சத்திரக்கணக்காநீயும் சபுரியத்தாளைக்கூட்டி ❊
வைத்திடுஞ்சிறையிற்குள்ளே வண்மயில்குயிலாள்தன்னை ❊

வசனம்

கேளும் கணக்கா இந்தச்சபுரியத்துக்கு ஆறுமாதம் நோன்பாம் ஆனதால் இப்பெண்ணைச் சிறைச்சாலையில் கொண்டுபோய் வையும்கணக்கா;

கணக்கன் சொல்—வசனம்

அப்படியே கொண்டுபோய்வைக்கிறேனையாகவாயி

கணக்கன் சொல்—விருத்தம் - இ-ம் தோடி.

மாதருக்கரசேசேனாய் மன்னவன்முன்னேயாறு ❊
மாதநோன்பென்றதாலே மன்னவன்சிறையிற்குள்ளே ❊
போதவாவென்றுசொல்லிப் பூங்கொடிதன்னையழைத்து ❊
தீதுசேர்சிறையிற்குள்ளே சேர்த்தவனகன்றிட்டானே ❊

வசனம்

சேனும் சபுரியத்தே உனக்கு ஆறுமாதநோன்பிருக்கவேணுமென்று சொன்னபடியினாலே உன்னை சிறையில்வைக்க இராஜனுத்திரவுகொடுத்தான் அங்கேபோவோம் வாருமென்று அழைத்துக்கொண்டுபோய் விட்டுவிட்டு, கணக்கனும் போய்விட்டான் அப்போது அச்சிறையிலிருந்து சபுரியத்து புலம்புகிறவிதம்காண்க,





சபுரியத்து புலம்பல்—இ-ம்-ஆகிரி,

மனதினில் துயரங்கொண்டு மங்கையாள் நிலத்தைப்பார்த்து ❊
எனைப்படைத்தாருகின்ற இறைவனே மனறவல்லானே ❊
தனியதாய்ச்சிறையில்யானும் தவித்திடஅமைத்திட்டையோ ❊
கனமதைசிழ்த்தேனென்று கதறுவாள்படலவுமே ❊

தரு—இ-ம் - ஆகிரி அடதாளம்.

அந்தநாளில்விதிவந்ததாலே இந்த
அவதியெல்லாம்வந்துநேர்ந்ததையோ
இந்தராஜன்தன்னைநொந்துக்கொள்ள எனக்
கிடமுமாகச்செய்தகடவுளோநீ
உருகுதையோவிரல்கருகுதையோ என்ன
உலையிலிட்டகட்டிமெழுகுமானேன்
அரசிழந்துசெல்வம்பிறவிழந்து அற்ற
அறுதியென்னும்பிச்சைக்காரியானேன்
புருஷிரோருதிக்குமாயினரே பெற்ற
புத்திரரோர்இக்குமாயினரோ
மருவில்லாகாட்டுமலருமானேன் மேக
மழையில்லாமல்வாடும்பயிருமானேன்
ஆலைவாயிற்பட்டகரும்புமானேன் மத
யானையுண்டகனிதானுமானேன்
சாலையற்றபட்சிதானுமானேன் கன்று
தனையிழந்தபசுபோலுமானேன்
வேரில்லாதமரம்போலுமானேன் இடி
விழுந்தமயில்போலுமாகினேனே
உரிலாதகுடிபோலுமானேன் சிறகு
ஒடிந்தபட்சிபோலுமாகினேனே
தேளும்பாம்பின்வாயில்தேரையானேன் நல்ல
தேனில்லாதகனிபோலுமானேன்
ஓடுமுவில்லாமதியுமானேன் மலர்
ஒக்கவரவிட்டவண்டுபோலுமானேன்
தலையெழுத்தோவிந்ததுன்பம்பட விறைமேரான்
தானெழுதிவிட்டதன்குறையோ
சித்தமகிழ்ந்தேதன் செதிகள்பலவும்
வைத்தியமாயுன்முன் விளம்புதேனதனை
முற்றுமேகேட்டு முடிப்பீரென்று
எத்திசைபுகழும் ஈசாநபியே
சத்தியமாக சாழுமாண்டேன்
சித்திரமாகசெல்வர் மூன்றதில்
புத்திரனுகப் பிறந்தான் அப்சனு
மித்திரமாகவே பத்தினிப்பெண்களை
குத்திரஞ்செய்திடக் கூடியேயூரார்
தேசம்விட்டிடுமென செப்பினுமெல்லாம்
வாசமாய்ப்பிள்ளையும் மனைவியுந்தானுமாய்
ஊரைதனைவிட்டு உடையவனருளால்
தேவதலாகவே சேர்ந்தோமோர்வனத்தில்
கள்ளர்கள்வந்து காட்டினிலெதிர்த்து
உள்ளவையறிந்து ஓடியேபோனார்
இராசெனும்பதியில்இருந்தோம்பள்ளியினில்
பராக்கிரமதாகபார்த்திபன் கல்மான்
சத்திரத்தனிலே தானங்கள்கேட்க



புத்திரர்மனைவியும் பிட்சைகேட்டிட
சத்திரத்துள்ளோ தனிப்படப்பெண்டையும்
குத்திரஞ்செய்யக் கொண்டேபோனார்
பிள்ளைகளெதிர் புலம்பியென்னிட்ட
உள்ளவையனைத்தும் உரைத்திடக்கேட்டு
பள்ளியிலிருந்தால் பழிச்செய்வாரென்று
மெள்ளவெழுந்து வெளிப்பட்டுவந்தோம்
வருநிறைவழியில் வந்ததறிய
பெருகியஆற்றைப் பிள்ளைகள்கண்டு
பயமுறப்பாலரை பலமொழிசொல்லி
நயமுறமனிதனை நதிக்கடற்றிடவே
ஓடம்விடுவோர்க் குரைத்தனன்வாசம்
வாடகைதந்தால் வந்திடுமென்றான்
அரைக்காசுகையில் அகப்படாதென்றேன்
இரக்கமில்லாமல் என்முகம்பார்த்து
ஆற்றினிலிறங்கி அக்கரைபோவென
மாற்றுரைக்க மைந்தனைத்தோளினில்
எடுத்தோர்புதல்வனை யேந்தியஆற்றில்
அடுத்துவைத்திக்கரை அவன்றவப்பொழுதில்
ஒத்தலைகள்பார்க்க மாநதிதன்னில்
முதலைபிடித்து விழுங்கியதன்று
அதன்பின்ஒன்று மதியேன்யானும்
புதுமையாயிப்போ பிறந்தேனென்றார்

ஈசாநபிசொல்-விருத்தம்-இ.ம்.தோடி.

ஆதிநாயகனிடத்தில் அவர்க்குயிர்விடவேசெய்து ❊
மேதினிதன்னையாள மிகதுவாத்தானுஞ்செய்து ❊
நீதியாய்மிகார்க்கிவனை நீள்கொலுவளித்துவிட்டு ❊
போதவேமிகார்க்கிருவர் பூரிப்பாய்புந்திட்டாரே ❊

(வ-ம் மிசுர்பட்டணத்திலே இருந்தபாதுஷா முன்னாளிறந்துபோனதினாலே பட்டத்துக்கு பாதுஷாவேணுமென்று ஊரார்களும்மந்திரிமார்களுந் தேடிக்கொண்டேர்ந்து ஈசாநபியிடத்தி லிந்தப்பட்டணத்திற்கு சுல்தானில்லையென்று மிகுந்த அன்புடனே சொல்ல அப்போது ஈசாநபி அந்தவூரார்களைப்பார்த்து உங்களுடைய பட்டணத்தை ஆளுகிறதற்குப் பாதுஷாவில்லையென்றுசொன்னீர்களே இப்போதிதோ யிருக்கப்பட்டவர் முன்னால் பட்டணமாண்டிருந்த பாதுஷாவினுக்குப்பட்டங்கட்டுமென்றுசொன்னார் அதேபடியிவனை அழைத்துக்கொண்டுபோய் பொன்முடிதரித்து தங்கசிம்மாசனத்தில் உட்காரவைத்தவித மெப்படியென்றால்,

கட்டியக்காரன் - வருகிற - விருத்தம் - இ-ம் - சங்கராபரணம்

மதிதவழ்கூடமாடமாளிகை மீசுராமென்ன
பதிதனிலிருந்துவாழும் பார்த்திபராகவந்த
அதிநீதிபொருள்படைத்த அலிபாதுஷாதன்கீர்த்தி
சதியுடனதிர்ந்துகூற கட்டியக்காரன்வந்தான்

தரு — இ-ம் - சங்கராபரணம் - ஆதிதாளம்,

கட்டியக்காரன்வந்தான் - பாதுஷாவாசல்
கட்டியக்காரன்வந்தான்

திக்குதிசைபுகழும் — திகழுமுடிபாதுஷாதன்
அக்கணக்கீர்த்திகள்கூற — அலிபாதுஷாதன்வாசல் (கட்)
மண்டலவிரோதமாக — எண்டிசையுங்கீர்த்திபெற்ற
அண்டினோர்தனைக்காக்கும் — அலிபாதுஷாவாசல் (கட்)
பட்டுதிராருமிட்டு — பளபளென்ன அங்கிபூண்டு
அட்டதிசையும்புகழும் — அலிபாதுஷாவாசல் (கட்)
சரிகைதலைப்பாகட்டித் — தங்கப்பிரம்புபிடித்துகொண்டு
அரசர்புகழும்நல்ல — அலிபாதுஷாவாசல் (கட்)

அலிபாதுஷா கொலுவிருக்கிறவிருத்தம் - இ-ம் - தோடி,

ஆதிதன் நாதரீசா அருளினாலுதித்தெழுந்து
நீதியாம்பிசுனையாண்டு நெறிவழிதவறாமற்றான்
சோதியாக்குலவிருது துலங்குமாமகுடஞ்சூட்டி
மாதிருகொலுவின்மீதில் பாதுஷாஅலிவந்தாரே

தரு — இ-ம் - சங்கராபரணம் - ஆதிதாளம்,

மிகுருக்கொலுவில்வந்தாரே — அலிபாதுஷா
மிகுருக்கொலுவில்வந்தாரே

சத்தியுள்ளகன்னிமார்கள் — தங்கள்அலாத்தியேந்த
முத்துக்குடைபிடிக்க — மோகனமாலையின்ன (மிகு)
தண்டைசிலம்புகொஞ்ச — தையலர்கள்நாடகம்பாட
வண்டர்மனம்நடுங்க — வாசாயமகிருக்க (மிகு)
வெற்றியுள்ளஆலவட்டம் — வெண்சாமரைகள்வீச
குற்றஞ்செய்வோர்கள்மனம் — கொண்டுநடுநடுங்க (மிகு)
மன்னர்திரையளக்க — வன்பர்பாதவிக்க
இந்திலர்தன்னைபெருக — யேகச்செங்கோல்செலுத்த (மிகு)
சேனைப்படைநெருங்க — செல்வர்கள்புடைசூழ
ஆனைப்புறம்வருக — ஆதியருள்பெருக (மிகு)
சிங்கக்கொடியாக்க — ஜெயவிருதுகள்கூற
மங்கையர்கவரிவீச — மகாசேனைபுடைசூழ (மிகு)



நாட்டியப்பெண்கள்வருகிற விருத்தம்—இ-ம்-மோகனம்.

மேனிலமுழுதும்போற்ற மெய்ப்படைத்தவெற்றி ❋
பானிலிலொளிவதான படைத்தவனருளால்வந்த ❋
கோனலிபாதுஷாதன் கொலுவினிலிருக்கும்போது ❋
நானிலப்புகழுகின்ற நாட்டியப்பெண்களும்வந்தாரே ❋

தரு—இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

வந்துவந்துதோன்றினாரே — நாடகசாலை
வந்துவந்துதோன்றினாரே

அந்தமுள்ளபாதுஷாமுன் — அழகாநடனஞ்செய்ய
வித்தையாயழகுடனே — வேடிக்கைபலதுசெய்ய (வந்து)
அஞ்சத்தழகுமின்னல் — அரம்பையர்கள்வடிவுபோல
தங்கப்பதக்கமின்ன — சங்கீதநாடகம்பாட (வந்து)
சந்திரசூரியன்போல — தாளமத்தளமுடன்
வித்தையாய்வீணைகளுடன் — வேடிக்கைபலதுங்காட்ட (வந்)

பாதுஷா மந்திரிக்குச்சொல்—விருத்தம்—இ-ம்-தோடி,

மதிமந்திரிகேளாயிங்கே வந்துநல்நடனஞ்செய்து ❋
இதமுடனடிதிந்து மித்தநாடகமின்றாக்கு ❋
மிதமுமனதிலெண்ணி விரிப்பியேயிருங்குஞ்செம்பொன் ❋
நிதியுடன்வஸ்திரமெல்லாம் நீகொடுத்தனுப்புவாயே ❋

[வசனம்] கேளும் ருசீரானமந்திரியே இந்தநாட்டியப்பெண்களுக்கு ஆடையாபரணம் வஸ்திரங்கள் கொடுத்து சீக்கிரமாய் அவர்களை அனுப்பிவிமெந்திரி,

மந்திரிசொல்—வசனம்,

அப்படியேயனுப்பிவைக்கிறேன் பாதுஷாவே.

பாளையக்காரன் வருகிற விருத்தம்—இ-ம்-கன்னியாதி,

கோநலிபாதுஷாதன் கொலுவினில்நீதியாக ❋
நாவிலமுழுதும்காத்து ரட்சிக்குமிசுருதன்னில் ❋
ஆலைகொத்தகப்பனைனனாதித்திடாதபசனும் ❋
தானும்பாளயக்காரனும் சபைதனிற்றோன்றினானே ❋

தரு—இ-ம் கன்னியாதி-ரூபகதாளம்,

துரும்பித்திரச்சட்டையுமிட்டு — தோளில்கேடயம்வாளுந்தாங்கி
பருத்தவிழியுடன்புகழும் — பாளயக்காரனுந்தோன்றினான்
கெட்டியாய்மீசைமுறுக்கிமுறுக்கி — கிழுக்குவல்லயக்குறுக்கிகுறுக்கி
பட்டுகையுததலைப்பாகையுங்கட்டி — பாளயக்காரனுந்தோன்றினான்
விகடகவிகள்பேசிச்சிரித்து — வெருபார்க்குசேவகனாக
பகாடக்கஅடித்துமுழக்கபாளயக்காரனுந்தோன்றினான்
அம்புசிங்காரிவாளுக்கட்டாரி — ஆனவில்லுஅம்புதோணியும்
பம்புகள்பேசிதுஷ்டரைவெல்லும் — பாளையக்காரனுந்தோன்றினான்

பாளையக்காரன் சொல்—விருத்தம்—இ-ம்- கலியாணி,

அன்புடன்மிகரையர்களும் அசாத்தியசலாம்அவர்களும் *
பண்மையாமுன்னிருந்த பாதுஷா வாழியிப்போ *
நன்மையா அடியேன்றன்னை நலமுடன்தாம்சேர்த்தான *
இன்புடனென்னை யியல்புடன்நாட்டுகிறீரே *

வசனம்

கேளும் இந்தபூலோகமெல்லாம் புகழப்பட்ட பாதுஷாவே தங்களைநாடிவந்தேன் ஆனபடியினாலே எனக்கோர் புத்திமதியுங் கற்பித்து என்னைக்கைவிடாமல் பாதுகாக்கவேணும் பாதுஷா சாயபே.

பாதுஷா சொல்—விருத்தம்—இ-ம்-பந்துவராளி,

நம்மிடத்திலிருந்த நகருக்குக்காவலாக *
செம்மையாயிருந்திராலும் சீமைக்குக்கர்த்தராக *
வன்மைகள்வாராமலே வகையுடன்காப்பாய்பிள்ளாய் *
உண்மையாயிருக்கவிந்த உத்தியோகந்தந்தேன்பிள்ளாய்

வசனம்

கேளும்பிள்ளாய்பாளையக்காரா நம்மை நாடிவந்தபடியினாலே நம்முடையபிசருபட்டணத்திற்கும் சிறைச்சாலைக்குங் காவல்காரனாகக்கொடுத்தேன், நீபரிசுத்தனாக சுகம்பெற்றிரும்பிள்ளாய் பாளையக்காரா-

பாளையக்காரன் சொல்—வசனம்-

அப்படியேயிருக்கிறேன்பாதுஷாவே.

இரண்டுபிள்ளைகளும்வருகிற—விருத்தம் — இ-ம்-தோடி

ஆதிதன்றுதரிசா அருளினாலுதித்தெழுந்த *
நீதியாமிசுரையாண்டு நேசமாயிருக்கும்போது *
ஓதியஒடக்கார னிடந்தனிலுள்ளபாலர் *
நீதிலாமிசுரைநோக்கிச் சேவிக்கப்புறப்பட்டாரே *

தரு—இ-ம் மோகனம்—ஆதிதாளம்,

இருவரிருவருநாட்சி சேவகம்சேவிக்கவேண்டி
அருகினிலோடக்காரன் அழைத்துக்கொண்டேவந்தான்
தகப்பனிவரேயென்று நாணறியாமல்பாலர்
செகத்திலிருவருமாய் சேவிக்கவந்தார்
பட்டுசால்சட்டையுமிட்டு பளபளென்றக்கியும்பூண்டு
திட்டமாகவிருபாலர் சேவிக்கவந்தார்
நடுக்கட்டுகட்டியதிர் நவரத்தினதுராச்சொருகி
திடத்துடனிருபாலகர் சேவிக்கவந்தார்
சரிகைத்தலைப்பாய்கட்டி தங்கப்பதக்கம்பூண்டு
சிரித்தமுகமாய்ப்பாலகர் சேவிக்கவந்தார்



கிரவாள்கைப்பிடித்து விருதுசேடயந்தாங்கி,
திருள்ளமிசுரிபாலர் சேவிக்கவந்தார்
அழகுக்குதிரையேறி அழகுதருசோடுமிட்டு
சிறப்பாகவிருபாலரும் சேவிக்கவந்தார்

பிள்ளைகள்சொல்—விருத்தம்—இ-ம்-பன்னுகவராளி,

செகமெலாம்தழைக்கப்பாரைத் தனமொருகுடையிலாளும் *
நகரெலாந்தனித்தநீதி நவமணிபாதுஷாவே *
பகலவனொளிவுபோலும் பகலில்சேவிக்கவந்தோம் *
புகழுள்ளெங்களுக்கு புத்தியுங்கற்பிப்பீரே *

வசனம்

கேளும் சத்தசமுத்திரஞ்சூழ்ந்த பூலோகமெல்லாம் ஒருகுடையிலாளும் பாதுஷாவே தங்களிடத்திற்சேவகம்வேண்டி சேவிக்கவந்தோம் நாங்கள்சந்தோஷமடையஎங்களுக்கு புத்திமதிகள் கற்பித்து தங்களிடத்தில் ஒருவுத்தியோகத்தில்வைக்கவேணும் பாதுஷாவே-

பாதுஷாசொல்—விருத்தம்—இ-ம்-காம்போதி

சேவகமிருக்கவந்த சிறுவரேசொல்லக்கேளீர் *
தீவினைவாராமலெங்கும் செயங்கொண்டுவருவீரோதான் *
பூவுலகதனில்நீங்கள் பிரபலமாகத்தானே *
பாவிளையாகவுங்கள் பாரக்கிரமஞ்சொல்லுவீரே *

வசனம்

கேளும் சிறுபிள்ளைகளா உங்களுக்கு நம்முடைய மிசருபட்டணத்தில் சேனைதளங்களுக்கெல்லாம் தளகர்த்தராக உத்திரவுகொடுக்கிறேன் உங்களுடையபராக்கிரமங்களைச்சொல்லும் பிள்ளைகளா

பிள்ளைகள்சொல்—விருத்தம்—இ-ம்-ஆனந்தபைரவி,

பராக்கிரமஞ்சொல்லுமென்ற பரிவுள்ளபாதுஷாவே *
தராதரமறிந்துயெங்கள் தங்களைநீரேபார்த்து *
இராவொருகுறைவராமல் எதிர்த்தவனைச்செயித்து *
புராக்கணமுங்களுக்குப் புகழ்கொண்டுவருவோமையா *

வசனம்

கேளும்பாதுஷாவே நாங்க ளிரவும்பகலுந் தங்கள் கட்டளையின்படி நடந்து இடக்கர் மடையர் இவர்களையெல்லாம் அடக்கி எங்கள்கீர்த்தியை விளங்கச்செய்வோம் பாதுஷாவே.

பாதுஷாசொல்— விருத்தம்—இராகம்-கண்டா,

வருமிருபாலரேநீர் வரக்கண்டேன்மகிழ்ந்தேன்யானும் *
அரசர்கள்மனம்போல்நீங்கள் அறிந்துமேநடப்பீராகில் *
இரவியபொக்கிழத்தை நினமுமேகாவலாக *
மருவெனமனதுக்கேற்ற மைந்தரேயெகுவீரே *

சேனும் நம்முடையமுன்பாகவந்த இரண்டுபேர்களே நீங் கள் இராஜனுக்கிடத்திலே புன்னைமையுடனிருக்கும்பேர்களென்றும் எ னக்குத்தோணுகிறபடியிருவிலே உங்களுக்கு பொக்கிஷ அதிகாரங்கொ டுத்தேன் அந்தஉத்தியோகத்திலிருந்து நம்முடையபுத்திரிபோல நடத்திக்கொள்ளும்பாலகரே,

பின்னவர்கள்சொல்—வசனம்,

அப்படியேநடத்திக்கொள்ளுகிறோம் பாதுஷாவே,

சபூரியத்து புலம்பல்—விருத்தம்—இ-ம்-தோடி,

இறையவிபாதுஷாநம் மிடத்திலிருப்பாலர்சேர்ந்து *
அறிவுள்ளபாலரென்றே அப்படியிருந்ததாவில் *
குறைகண்ணென்கண்மானவைத்த சபூரியத்தம்மான்நித்தம் *
சிறைதனில்நொந்துவாடி இத்தித்துப்புலம்புவானே *

தரு—இ-ம்-சங்கராபரணம்—ஆதிதாளம்,

ஆதியேயுனை நம்பினேன்மனதுநொந்து
ஆகாமல்மனம்வெம்பினேன்

சோதியைமறந்தேனோ தொழுகையைநெகிழ்த்தேனோ
நீதிமறைபொருளான நெறிவைமறந்தேனோ (ஆதியே)
குறைதயுந்தந்தேனோ சாதையுநெகிழ்த்தேனோ
பாங்கதனிலேமுன்னே பாலரையும்வைத்தேனோ (ஆதியே
கொண்டபுருஷனுடன் எதிர்த்துதாதின்றேனோ
சண்டைகள்பிடித்தேனோ கண்டபேர்களுடன் (ஆதியே
கர்த்தனைமறந்தேனோ கசடுகள்வைத்தேனோ
நித்தமிறையவனை நினைக்காமலிருந்தேனோ (ஆதியே

வேறு—தரு-இ-ம்—ஆஹிரி-அடதாளம்,

வஞ்சமாகினேனோ பிறக்குமரப்பில்அலம்பினே
தீங்குமுள்ளதாயன்நீயே தத்தாதைமுன்வளர்த்தேனே
அலியாபிபுருஷிம்நபி அவர்மனவிசைபசாத்தவனே
புவியிலசம்மையின்றான்வரைக்கும் வேணிக்காத்தநதுமானே
இந்தச்சிறையிலின்றுள்பட்டேஇருந்துநீடலம்பவைத்தாய்
மைந்தரைப்புருஷர்தம்மை விட்டிருக்கவஞ்சனிடத்தில்
எந்தன்மனம்வாடிடதாக இறையவனேவைத்திட்டாயே
சிந்தையுங்கலங்கிடதாக செய்திட்டாயேவல்லவனே
பாரிலுள்ளபெண்களுக்கு படைப்பியாமேயிர்நவிதி
நீர்குமிழிபோலிருந்து நெடுந்துயரம்படவேவைத்தாய்
பூலோகத்தில்பெண்பிறந்து புலம்பவைத்தாய்நாயனே
மேலோனே துணையில்லாமல் வெற்றாடம்பாயினேனே
பிறந்திடாமல்போனவிந்த பெருந்துயரம்மிவதில்லை



இருந்திடாமலிருந்தேனிங்ஙனமென்போல்பாவியாருமில்லை
எனிப்புருஷர்மைந்தர்தன்னை கண்கள்ளைனிலேகாட்டுவாய்
முன்போல்நாங்கள்கூடிவாழ முந்தினுமேகூட்டிவைவாய்,

சபூரியத்து மிகும்கண்ட விருத்தம்—இ-ம்-கல்யாணி,

சிறையிலிருந்தேனிரவில் நித்திரைபிதுயரத்தோடே *
குறையநசபூரியத்தாள் கண்டிடுமிந்தமுறைசொல்லி *
இறையவனருளினாலே எல்லோருமொன்றாய்க்கூடி *
மறைவிலாநிதனையென்னி வாடியேபுலம்புவானே *

தரு—இ-ம்-ஆஹிரி—அடதாளம்,

நித்திரைநான்செய்யும்போது நீனவுடன்மிகுமுங்கண்டேன்
புத்திரரைவென்பிறையில் புருஷமையர்நான்கண்டேனிப்போ
சிரானசாமும்போல சொகங்கண்டேன்மிகுமும்
பாரலிபாதுஷாப்பை பார்த்தேனேமிகும்விட்டோ
யெல்லோருமொன்றாய்க்கூடவே இரவில்மிகும்கண்டாப்போல
அல்லாவேநாமொன்றாக அருளிச்செய்வாய்நாயனே

குதாதிலதுகிர — விருத்தம்—இ-ம்-சங்கராபரணம்,

கனியுடன்சபூரியத்தாள் கண்டிடுமிதுமைச்சொல்லி *
மினியவனருளினாலே யெல்லோருமொன்றாய்க்கூட *
தனியவனருளினாலே சபூரியத்தாள்தனக்கு *
மனதுளானுக்கவலைதீர வந்தனவொத்தினாளே *

தரு—இ-ம்-சங்கராபரணம்—ஆதிதாளம்,

வஞ்சிவந்தாளையா—அய்யாரகருமே—வஞ்சிவந்தாளையா

வஞ்சிசபூரியத்தாள் மனதுசந்தோஷிக்கவே
செஞ்சொல்கிளிபோல்குளரி கொஞ்சியேகுதிகள்சொல்ல (வஞ்சி)
பூண்டிடுமேவசாவும் நீண்டதாவடம்பூண்டு
ஆண்டவனருளினாலே வேண்டியகுதிகள்சொல்ல (வஞ்சி)
இமேருர்கள்கீர்த்திதன்னை இக்குவினையகுஞ்செய்து
வானம்படைத்தஅல்லா மகிமையினால்வந்த (வஞ்சி)

பொருவிருத்தம்—இ-ம்-தோடி,

வேடிக்கையாகவேதான் வீதிக்குவீதிநின்று *
நாடியேகுதிகள்சொல்லும் நலமுள்ளகுறத்தியாரே *
வாடியேபுரியத்தாள் மனதனில்துயரத்தோடே *
மேடைமேலிருந்துக்கொண்டிருடனைஅழைக்கலுற்றாள் *

வசனம்

அசோ தெப்படியென்றால் இரவில்மிகும்கண்டு மிகுந்த துயரப்பட்டு என்னமாகவாடியமுதக்கொண்டு மேடையின்மேல் உள்ச்சார்ந்துக்கொண்டிருக்குஞ்சமயத்தில் குறத்தியைக்கண்டு குறி கேட்க அழைப்பிக்கிறவிதங்காண்க,

சபுரியத்தாள்சொல்—விருத்தம்—இ-ம்.பைரவி,

வித்தையாய்க்குறிகள்சொல்லு விதமுள்ளகுறத்தியாரே ❋
எத்திட்டிலிருந்துவந்தா யெந்தவூரென்னபேரு ❋
முத்தமேகுறியெல்லோர்க்குமுகமலர்ந்துரைத்தாய்பெண்ணே
சித்தைகள்மகிழவேநான் சேதிகள்தன்னைச்சொல்வாய்

வசனம்

அகோகேளடியம்மைகுறத்தி நீயிருக்கிறவூர்பேரும் உன்னுடையபேரும் உன்சாதியின்பெயரும் நீசொல்லுங்குறிகளின் அடையாளங்களும் எல்லாமென்மனஞ் சந்தோஷிக்கும்படியாய்ச்சொல்லடியம்மாகுறத்தி,

குறத்திசொல்—விருத்தம்—இ-ம்-சாவேரி,

நெறியெல்லாந்தரித்தகற்பு நிறைந்திடுஞ்சபுரியத்தே ❋
மறைவதாவேடன்கையில் வலைப்பட்டமானைப்போல ❋
சுறைவுதரயுள்ளமாதே காரியேயெந்தன்சாதி ❋
குறையெல்லாம்பாடிப்பாடி கூறுவேன்கேளுமாதே ❋

தரு—இ-ம் சங்கராபரணம்—ஆதிதாளம்,

எங்கள்குலஞ்சாதிவளஞ் சொல்கிறேன்கேளம்மே
எந்தசாதியிலுமுயர்த்தி யெங்கள்குலமம்மே
சிங்கக்கொடியுள்ளதொரு தின்குலங்கள்விளங்க(அம்மே)
சொல்லிடுவேனுனக்குக்குறி சித்தமகிழ(அம்மே)
அம்பலத்தில்சாணூட்டி கூத்தாடுவோம்நாங்களம்மே
அரியகுறவரோடி காரியப்பெண்ணம்மே
கம்பமதகரிகொண்டு கமரிவிட்டோம்நாங்க(ளம்மே)
கானக்குறவரோடி தேனமுர்தப்பெண்ணே(அம்மே)
பலநாளுமிஞ்சிவெட்டி குதியுடையோர்நாங்களம்மே
பாண்டியக்குறவரோடி பத்தினிப்பெண்ணம்மே
தலமதில்பதினெட்டுகுறி சாற்றுஞ்சாதியம்மே
சாதியிலுமுயர்ந்தசாதி சாதியோடியம்மே
அலம்படைத்தவன்றன் னருளாலேயம்மே
யானுனக்குச்சொல்லுவேன்குறி அநுபவக்குமம்மே
ஓலமுடனென்குறியை யுகந்துகேளடியம்மே
உனக்குவருமேகமெல்லாம் முறைத்திடுவேன்பெண்ணே

சபுரியத்தம்மாள் குறத்திக்குசொல்—விருத்தம்—இ-ம்தோடி,

சாதியின்விபரமெல்லாம் தயவுடன்கூறுகிறீர் ❋
அதிகவிசிருபையாலே யனைத்தையுங்கேட்டேனிப்போ ❋
காதலாயுங்கள்தேசம் கருத்தினிலுள்ளதெல்லாம் ❋
மாதேநீயிருக்கும்நாடு வளமையாயுரைசெய்வாயே ❋



கேளடியம்மே குறத்தி உன்சாதிவளமையைச்சொன்னாய் அதைக்கேட்டு நானுமிகுந்த சந்தோஷமாயினேன் இப்பால் உன்னூட்டின்வளமையைச் சொல்லடியம்மே.

குறத்திசொல்—வசனம்,

அப்படியே சொல்லுகிறேன்கேளடியம்மே,

குறத்திசொல்—தரு—இ-ம்-சங்கராபரணம்—ஆதிதாளம்,

ஆதியருள்பெருகுமெங்கள் அறுதினமும்நாடு அம்மே
அகமதிற்குறமியும் அரசாளும்நாடு
நீதிநெறிநபிமார்கள் பிறந்தநெடுநாடு அம்மே
நிலத்தில்நவமணிகள் விளையுமந்தநாடு
கன்னல்முத்துசென்னல்முத்து சனாமுத்துவிளையும்
கரும்பனுகா வளமையுள்ள கனகமணிநாடு
வர்ணவர்ணகாய்கனிகள் விளையுமெங்கள்நாடு அம்மே
வளமைபலபுதுமைகளும் விளையுமெங்கள்நாடு
பாலாறுந்தேனாறும் பதிந்தோடும்நாடு அம்மே
பாக்கியமெல்லாம்படைத்த பாங்கானநாடு
அலத்துக்கெல்லாமாசா யானதிருநாடு அம்மே
அதிவள்ளோர்தான்புகழும் அளவற்றநாடு

சபுரியத்துசொல்—விருத்தம்-இ-ம்-மோகனம்,

மக்கநன்னூட்டிலுள்ள வளமையையுரைத்தீர்மாதே ❋
மிக்கதாக்கேட்டியானும் மிகுந்தசந்தோஷமானேன் ❋
பக்குவமாகவேதான் பண்புடன்குறிகள்சொன்ன ❋
இக்கணமதனையெல்லா மென்றனுக்குரைசெய்வாயே ❋

வசனம்—கேளடியம்மேகுறத்தி உன்னுடைய நாட்டின்வளமையெல்லாஞ் சொல்லிக்கொண்டுவந்தாய் இதைக்கேட்டு மிகுந்தசந்தோஷமானேன் இனி நீயாராருக்கு குறிகள்சொன்னாயோ அதுவெல்லாந் தெரியச்சொல்லடியம்மே குறத்தி.

குறத்திசொல்—வசனம்.

அப்படியே சொல்லுகிறேன்கேளடியம்மே,

குறத்திசொல்விருத்தம்—இ-ம்—பூரிகல்யாணி,

திக்கிலமலியேசெம்பொன் னிறையாங்கிளியேநித்தம் ❋
பத்தினிமார்களெல்லாம் பாதமேபணியுந்தாயே ❋
உத்தமிசபுரியத்தே யுலகியாயெந்தனுக்கு ❋
இத்தலத்தனிலேமுன்னே னியம்பியகுறியைக்கேளீ ❋

தரு—இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

தேசமதனில்சென்று வாசமுடனேகுறிகள்
ஆசையுடனேசொன்னதை கேளடியம்மே

பாங்குறவாமே வாசையுடனேயிதை
நேசமுடனே தல்லா கேளடியம்மே
இலத்தியுள்ள சாமுமானூர் சித்தமுகல்லின்று
புத்திரரைக்கள்ளர்கொண்டு போனார்களம்மே
குறத்தியில்லாபாலர்வந்து கிட்டினபோய்ச்சிறுபென்று
தின்னதுமகிழ்வுள்ள குறத்திசொன்னேனடியம்மே
எந்தப்படி சொல்லினேனோ அந்தப்படிகுறிதானும்
வந்ததுவிடுக்கைச்சேர மகிழ்ந்தாயடியம்மே
நிர்மைகள்கூறும் வாசகமவர் பெற்றதுவுங்குமுறைதனம்
தந்து அனுப்பிவைத்தார் கேளடியம்மே
கொச்சிமலையாளம்பச்சிளை குடகுவடகுமெத்த
கோசலராப்புள்ள வாசிசென்றடியம்மே
பட்சம்பெறுமிச்சையுடன் மெச்சுங்குறிசொன்னே
நட்சணம்பதுங்குமெச்சார் கேளடியம்மே [படி
சித்தப்பிடிந்தவரவர் முத்துமாலைசரப்பளி
கொத்துகொத்தாய் வைத்தளித்தார் கேளடியம்மே
நித்தமதுவொருபிலாக எத்திசையுநான்திரிந்து
மெத்தப்புகழ்ச்சிசொன்னேன் கேளடியம்மே

சப்பிரியத்துசொல்—விருத்தம்-இ-ம்-சவியாணி

செகத்தினிற்குறிகள்சொல்லித் திரிகின்றகுறத்தியாளே *
நகத்துவகிரைக்கள்பார்த்து தனினைகேகைபார்த்து *
முகத்துலட்சணங்கள்பார்த்து முழுதுமேயெந்தனுக்கு *
அகத்தினில்மகிழ்வுபோக்க அம்மையேசொல்லுவாயே *

வசனம்

கேளடியம்மே உலகமெங்குஞ்சுற்றி யெல்லோருக்குங் குறிகள்சொல்லியபடிக்கு என்னுடைய அடையாளங்களைப்பார்த்து நான் மகிழும்படியாகக் குறிசொல்லடி குறத்தியம்மே.

குறத்திசொல்—வசனம்,

மெத்தஞ்சப்பிரியத்தே பூலோகத்தில்குறிகள்சொல்லித்திரிகிற குறத்திகளெல்லாம் நகத்துலட்சணங்கள்பார்த்தும் முன்கையிலுள்ள லட்சணங்களைப்பார்த்தும் தெளிந்துகுறிசொல்லுவார்கள் நானப்படிப்பட்ட குறத்தியல்ல நானும் முகத்தின்லட்சணங்களைப்பார்த்து குறிசொல்லுகிறேன் கேளடியம்மே,

சப்பிரியத்துசொல்—வசனம்,

அப்படியேசொல்லடி குறத்தியம்மே,

குறத்திசொல்—தரு-இ-ம்-பைரவி—அடிதாளம்

பட்டணத்தையாண்டிருந்தரே கேளடியம்மே
பாருலகுகுமுன்கூடே குன்றி கேளடியம்மே



நாட்டைக்கண்மாறாமுத்தமிழினையால் கேளடியம்மே
நாத்திரிவிட்டாறுமாறுங்களை கேளடியம்மே
காட்டிக்கள்ளர்கள்பத்துக்கொண்டாரவர் கேளடியம்மே
சலங்கிதிற்கலோர்பட்டணஞ்சேர்த்தார் கேளடியம்மே
வாட்டப்பிச்சைகேட்கப்போனையே கேளடியம்மே
வண்டத்தையாகவென்னைத்திறமையிடுத்தான் கேளடியம்மே

குறத்திசொல்—வசனம்.

அடிகோ கேளடியம்மே சப்பிரியத்தேயிந்தவேளை மத்தியமாமிருக்குது ஏதாவது ஒருதட்சிணை வையடியம்மே நான்தெளிந்துசொல்லுகிறேன் சப்பிரியத்தே.

சப்பிரியத்துசொல்—வசனம்

இந்நேரம் என்கையிலொன்றுமில்லை நான்சிறையிலிருக்கிறேன் இதோ என்கைமோதிரம் வைத்தேனடி குறத்தியம்மே.

குறத்திசொல்தரு—இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

கணவரெங்கேயென்றுசொன்ன சகிப்புடையமுங்கே
வணக்கஞ்செய்துகொண்டவன் மனதிலென்னெனிக்சொல்லும்
முறத்திலேதான்சென்னெல்கொண்டு சூடன்றாடம்பாய்ப்பகுத்து
மனதிலொன்றுநினைத்துக்கொள்ளுவமலாதுகச்சொல்லுவேன்
சாத்துள்ளதர்மதிதி சாஜூர்போலவாறுருது
பெற்றயின்னாபாலதிங்கள் பரிதேசிபாய்வந்திர்
வந்திட்டிந்தினையொரு வணக்காரன்பிடித்து
வாலென்றறைத்துகொலிட்டதில் வைத்துவிட்டானம்மே
திருந்தவுயாவதுச்செட்டிய திசைவந்திருந்தானே
நிசமாக்கொடுத்துதற்குறல் நினைவுகெட்டானவனும்
உத்தம்ட்டபுருஷனுத்தா துறுக்கப்பேசேனும்
அவரான்பரிவதிப்பட்டு தான்பிழைத்தாரம்மே
இக்குறனுமிதிவாகப் பரித்தக்லவோதம்மே
திசைகெட்டுத்திரித்தவரும் நினைத்தாரோடியம்மே
பக்கமவந்துநாளுபோகும் பட்டணமேசேர்வார்
பாசைவடமிபக்கேதீடும் பாக்கியமும்பெறுவாய்
நல்லமனதாமெனக்கு நகையுமான்றுதானாய்
எல்லவருக்கடித்திங்கள் மிசுபுறப்படுவீர்

குறத்திசொல்—விருத்தம்—இ-ம்-ஆனந்தபைரவி

இருவினைதுலைத்துப்போ எட்டுநாளைதிலேயும் *
புருஷனுமிருக்குமிடக்கப் போகவேபயணமாவீர் *
மருவியுன் கணவரோடு மதிற்குவாய்மகிழ்வாக *
சாத்தினவித்துதம்மா சுகம்பெறுவென்குவாழ்வு *

கேளுமம்மா சபுரியத்தே உன்னைப்பிடித்த வினைகளெல்லாமிறு ன்னம் எட்டுநாளையில் தீர்ந்துபோகுது இனிநீ புருஷனிருக்குமூரு க்குப்போவாய் அங்கேயெல்லோரு மொன்றாய்க்கூடி சுகம்பெற்று வாழ்வீர்களம்மா

இதுவுங்குறத்திசொல்விருத்தம்—இ ம்தோடி,

நானுன்னை நினைந்துசொல்வேனம்பெருஞ்சபுரியத்தே ※
ஆனதோர்சுகயிலொன்று தன்புடன்கொடுப்பாய்நீயும் ※
தானொன்றாய்ச்சேர்ந்துவாழ்வாய் தனியவனருளினாலே ※
நின்குலம்விளங்கவந்த செங்கோலாய்வாழ்வீரம்மா ※

வசனம்

கேளும் சபுரியத்தே நீயிகவும் சந்தோஷமடைவாய் எனக்குஉ ன்னுடைய அடையாளமாக ஒருநகையேதாவது கொடுத்தால் நான் உன்னையெப்போதும் நினைத்துக்கொள்ளுவேனம்மா சபுரியத்தே

சபுரியத்துசொல்—விருத்தம்—இ-ம்-கலியாணி.

செங்கோலில்சேர்ந்துவாழ்ந்து சீருடனிருப்பதற்கு ※
மங்களமாகநாங்கள் வாழ்ந்தோமேசாமூர்தன்னில் ※
இங்கனேசிறையில்நானே யிருக்கிறேன்சாமூர்தன்னில் ※
மங்கையேதாவடந்தான் வரிசையாய்வாங்கிக்கொள்ளும் ※

வசனம்

கேளடியம்மேகுறத்தி நானிப்போது இந்தசிறையிலிருக்கிறே ன் இப்போதுயென்னிடத்திலொன்றுமில்லை இதோதருகிறேன் இந் ததாவடத்தை எடுத்துக்கொண்டு போடியம்மே குறத்தி.

குறத்திசொல்—வசனம்.

அப்படியேபோய்வருகிறேனம்மே.

சிங்கன்வருகிற—விருத்தம்—இ-ம்-தோடி.

சாங்குறால்சட்டையோடுங் கருங்கச்சையிறுக்கிக்கட்டி ※
வாங்குவில்லம்புகன்னி வலையும்வல்லையுமுந்தாங்கி ※
பாங்குடன்சன்னிகுத்திப் பட்சிகள்பிடித்தபின்பு ※
தேங்கியேசிங்கியைத்தேடிச் சிங்கனுந்தோன்றினானே ※

தரு—இ-ம்-தோடி-தாளம்,

சிங்கனும்வந்தான்—மலைக்குற—சிங்கனும்வந்தான்

பெருத்ததொந்தியும் கருத்தமேனியும்
புலுக்கிணையாக முறுக்குமீசையும்
வரைப்புயங்களு மீசத்துலங்க
வக்காமணியுடன் கொக்கிறகுஞ்சூட்டியே
ஓங்கிவளர்ந்திடு மூங்கில்மரங்கள்போல் ※
ஒப்பாய்வளர்காது மெய்ப்பாகியமனம்



சக்கியமத்தனை கலைதுபோலவே
சிங்கியெங்கேயென்று வந்தனனாகவே (சிங்கனும்)
வெகுபூனையையும் பட்சியையுங்கண்டால்
நீக்கவனதக்கவே காணுமிருகண்ணும்
திடுதிடுவென்று நடைநடந்துமே
குவான்சிங்கியென்று வான்சிங்கியென்று சிங்கனும்)

பொதுவிருத்தம்—இ-ம் மத்தியமாவதி;

சிங்கியைத்தேடித்தேடித் திரிந்தலைந்துருகிவாடி
அங்கலையானமெல்லாம் அறிந்திடுஞ்சிங்கனானாய்
இங்கிவளொருத்திதான் வந்தியம்புமொழிசொலத்தொடுத்தாள்
வங்கன்சிங்கியாளே மயிலேஎன்றுசொல்லுவாயே

வசனம்,

சேண்டா சிங்கா இப்போ ஒருகுறத்தியானவள் இவ்வூரில்வந்து குறி ச்சொல்லுகிறாள் அவளடையாளந்தைப்பார் இவள்தானு உன்னுடை யசிங்கி அடா சிங்கா,

சிங்கன்சொல்—வசனம்,

என்றேசிங்கியெங்கடி அலைந்தாய் எங்கிலும் எங்கிலும் உன்னைக்கா ணாமல் தேடினேன் சொல் சிங்கி.

சிங்கிசொல்—வசனம்,

என்றேசிங்கா எங்கேயோ எங்கேயோ தேடினாய்சொன்றாசிங்கா

தரு—தன்யாசி - தாளம் - ரூபகம்,

மேகாதில்மினுமினுக்கும் பெண்ணடிசிங்கி அது
காவாழிபிலாழிசிறியன்னம் கொட்டைபடாசிங்கா
உன்னுராதலத்திலே மின்னுவதென்னடி சிங்கி இடை
ஒடிந்திடாமல்கட்டும் ஒட்டியாணமதுசிங்கா
குட்டிக்கழுத்தினில் குட்டிய்தென்னடிசிங்கி அது
மோகனமாலைகவுனி சரப்பளிசிங்கா
மெய்ப்பாயன்கிலெல்லா மெங்கேகிடைத்ததுசிங்கி இந்த
மேதினிதன்னில்குறியால் கிடைத்ததுசிங்கா

சிங்கன்சொல்—விருத்தம் - இ-ம் - பூரிகல்யாணி

இத்தனைநாளுஞ்சிங்கி பெண்ணையும்பிரிந்திருந்தாய்
எத்தனைகோடிநாளும் என்றன் தன்னைசச்சொல்வேன்
முத்தனையவளேகூடி முயங்கிநாமகிழ்வதற்கு
வந்தனேசேர்ந்திருக்குமலைக்குநாம்போவோமென்றார்

வசனம் அடியோகேள் சிங்கி இத்தனைகாலமென்னைவிட்டுப்பிரிந்தாயே உன்மேலெனக்கு கோடியாசைஉயுண்டிப்போது நாமிருவருங்கூடி மருவநம்முமலைக்குப்போவோம் வாடி சிங்கி.

சிங்கி-சொல்-வசனம்

அப்படியேபோகலாம்வாடாசிங்கா,

அலிபா துஷா பிரபலம்-அகவல்-எ துகுலகாம்போதி,

இவ்வகையிருக்கையில் இயலலிபா துஷா
செவ்வயாய்மிசுருதன்னில் செங்கோல்நடாத்துநாள்
ஆதியிறையவனருளாலே
நிதிலாவொலிர்தனம் சேர்சுருமத்தும்
நடப்பதினாலே நானிலதிருபர்
பிடித்திடும்வியாதி புளிதயாகிடவே
குட்டக்குறைபிணிகுன்மச்சகிருலே
வெட்டைநீரிழிவு மிகுந்தநீரடைப்பு
இந்திரியக்கட்டுங் கலநார்வாச்சி
மந்தக்கிராணி வாட்டுக்காமாலை
ஆண்டப்பிறவி சொல்லாவடைப்பு
மண்டைக்குத்து மாறாப்பீனிசம்
ஆமைசெவுடுகள் ஆசாக்குருடுகள்
ஊமைமுடவர் ஒருகரமில்லார்
வஞ்சனைகுனிய மாபேய்பிசாசுகள்
பஞ்சுபோலிவையெலாம் பறந்திட்டபாரில்
உலகிலுள்ளவரெலா மோடிவந்தவர்திரு
மலரடிபணிந்திட வளர்பெருங்கீர்த்திகள்
எங்கும்பிரசங்கமா யிருந்திடநாட்குள்
மக்களமாக வளர்ந்ததுவளர்ந்ததுவே

போது—விருத்தம் - இ-ம் - மத்தியமாவதி,

குறத்தியுமலையிற்செல்ல கோதையர்சபுரியத்தாள்
அறத்தினையறிக்குஞ்சுல்மான் அப்புறமிருந்துறைப்பான்
திறத்துடன்மிசுரிற்செங்கோல் செலுத்திடும்பாதுசாய்பு
இறத்துடன்பிணிகள்தீர்க்கும் அதிசயந்தானுங்கேட்டான்

வசனம்,

அகோதெப்படியென்றால் குறிசொல்லிய குறத்தியும்போனபின்பு, சுல்மான்ராஜன் பிணியினால் மிகுந்தவருத்தமா யிருக்கிறானாயில், மிசுர்பட்டணத்தில் அலிபா துஷா ரோகவியாதிகளைத் தீர்க்கிறசங்கதியைக்கேட்டு சொல்லுவதெப்படியென்றால்,

சுல்மான்—சொல் - விருத்தம் - இ-ம் - தோடி,

மந்திரிமாரேகேளீர் வந்ததேகுஷ்டமிப்போ
இந்திரன்பெண்ணாள்சாபம் கொண்டதுபோலேஆச்சு
சந்திரவதனமுள்ள சபுரியத்தாள்தன்னாலே
வந்திடுமோகந்தீர வகையென்னசெய்வேன்மந்திரி



கேளும்மந்திரிகளே தெய்வலோக இராஜாவாயிருக்கப்பட்ட தேவேந்திரன் அகலிகையென்னும் பெண்ணாசையால் அவனுக்கு ரிஷிசாபத்தால் அவன்தேகமெல்லாம் ஆயிரங்கண்ணான படியினாலே எனக்குசபுரியத்தாள் சாபத்தினாலே தேகமெல்லாம் ராவியாதிகுட்டரோகம்வந்து அதுதீரும்வகையின்னதென்று சொல்லும்மந்திரிமார்களே.

மந்திரிமார்கள்சொல்விருத்தம்—இ-ம்—ஆனந்தபைரவி

ஆண்டவனருளினாலே அவதரித்தேமிசுரில் ※
வேண்டியபேருக்கெல்லாம் வியாதிகள்தீர்க்கிறாராம் ※
பாண்டுரோகங்கள்குஷ்டம் பலபலவியாதிதீர ※
மீண்டிட அங்கேநாமு மிசுருக்குப்போவோம்வாரும் ※

வசனம்—கேளும் மகாராஜனே நாங்களொரு விண்ணப்பஞ் சொல்லுகிறோம் அதாயாதெனில் மிசுருபட்டணத்தில் பாதுஷா வானவர் ரோவியாதிகளெல்லாம் தீர்த்துவிடுகிறாராம். அவரிடத்தில் அனேக சனங்கள்போகிறார்கள் அவ்விடம் போனால் உன்னுடைய வியாதியும் தீர்ந்துபோகும்மகாராஜனே.

சுல்மான் சொல்—விருத்தம்—இ-ம் —பந்துவராளி,

நல்லதுசொன்னீர்மந்திரி நானுமப்படியேகேட்டேன் ※
அல்லதுபோநாமும் அதற்கொருகப்பல்வேண்டும் ※
மெல்லியாளுடனேகூட வியாதிகள்தீர்த்தபின்பு ※
புல்லியேமணமுஞ்செய்து புகழுடன்வருவோம்மந்திரி ※

வசனம் — கேளும் மந்திரி மார்களே நீங்கள் சொன்னபடியே நானுங்கேட்டேன் ஆனபடியினாலே நீங்கள் அவிடம்போக அதிசீக்கிரமாக ஒருகப்பல்செய்யும் அதில் நானும் சபுரியத்தாளும்போய் என்வியாதியைதீர்த்துக்கொண்டு அவ்விடத்திலேயேகலியாணமுமுடித்துக்கொண்டுவருகிறேன் மந்திரிமார்களே,

மந்திரிமார்—சொல்—வசனம்.

அப்படியேகப்பல்சோடிக்கிறோம் ராஜனே,

அகவல்—இ-ம்-சண்டர்.

மந்திரிமார்கள் மகாசந்தோஷமாக
சிந்தைமகிழ்ந்து சீக்கிரமாக
வங்கமதின்குணம் வகைப்படிசெய்திடு
துங்கமேஸ்த்திரியை தொகுப்புடனழைத்து
கப்பல்வழுத்திடுமென்னக் கனகநற்பொருளும்
அப்பழுக்குறையில் லாமலளித்திட
அவ்வகைப்படியே அதைச்செலவழித்து
பாய்மரமுதலாய் பலபலவெல்லாம்

மணிபலபதித்து மிளிரவிளங்க
அணிஅணியாக அறைகளுஞ்செய்து
மன்னவன்தனக்குமந்திரியோத
அன்னவைகேட்டு அவனுமேதுணிந்தான்

சபுரியத்து புலம்பல்— விருத்தம்—இ-ம்-காம்போதி,

கலங்கியேபுலம்பிவாடி கனத்தவோர்வங்கந்தன்னில் *
பலங்கெடவிராகுதேசம் பார்த்திபனனைசல்மான் *
நலங்கெடவேனுமென்று நவிலுமுன்சபுரியத்து *
மலங்கியேபுலம்பிநொந்து மயங்குவாள்தியங்குவாளே *

தரு—இ-ம்-சங்கராபரணம்—திரிபுடைதாளம்.

ஆதிசோதியே யெங்கும்நிறைந்திடும்
ஆண்டவாயென்னை யாருந்தகுமோவோ
பேதையாளித்த வங்கத்திலேயிட
பதைக்குதேமனம் வதைக்குதேதிந்தகம்
பாவிநொந்திளைத்த வங்கத்திலேதினேன்
பட்சம்வைத்தென்னை ரட்சியும்நாயனே
ஆவிமெத்தகலங்குது இவ்வேளை
ஆண்டவனே நீ காத்திடும்நாயனே
பெற்றபிள்ளைசெய்த குற்றந்தனைவிந்த
பெருவிதிவரலாச்சதே யென்செய்வேன்
குற்றம்வராமல் சோர்தையைக்காத்திடு
கொண்டேனுன்பரம் விண்டேனேநாயனே
பாவிநானொரு பெண்பிறந்தேனிந்த
பாருலகினில்பங்கப் படவுமே
நீவநீரில்சுழன்றிடும் வங்கத்தில்
நின்றுமெத்தவும் பலம்படவுமாகினேன்
பாவிநான்செய்த பாக்கியமோவிது
பார்த்துனைத்தனைக் காத்திடும்நாயனே
ஒலியப்போலிருந்தி தனித்திங்கே
ஒதிஒதியமுசவு மாச்சுதே
புலம்பினேன் சிறகில்லாதபட்சிபோல்
பூணைகூண்டி லடைக்கவுமாச்சுதே
அலம்பியோடி அதிர்த்திடும்போதையால்
அங்கம்நொந்துதே யென் குலைகலக்குதே
என்னைப்போலொரு பாவியென்றுமவே
எந்தநாளும் படைப்புள்ளலாகாது
என்னைக்காத்து ரட்சியுநாயனே
தையலாளிங்கே தவிக்கவுமாகினேன்



கப்பல்போகிற—விருத்தம்—இ-ம்-நாதநாமக்கிரியை,

சதிருடனரிதுள்ள சரக்குமேதானுமேற்றி *
மதிமுகசபுரியத்தை வைத்தனேர்பாத்தில் *
பதிவுசம்மிகருக்கண்ணில் பாதுஷாவிடத்திலேபோக *
கதமுடன்தண்ணீர்தன்னில் கப்பலைவிடுத்தானன்றே *

ஒடம்தும்பிரி—தரு—இ-ம்,

ஏலேலோ ஏலேலோ-தத்தெய்யா-ஏலேலோ ஏலேலோ
நல்லதினம்நட்சத்திரம்—லக்கனம்—நாகியேபார்த்துனைந்து,
வல்லமைசேர்கப்பல்தன்—பேர்களுக்கு—பாலிகைவேறுதிவான்
கல்லாருங்கூடியேயிருன்—திசை—கொடியாய்தூக்க
சொல்லிடவுமவர்கள்—அப்போ—தருவாய்தூக்க
எட்டுதேசம்—மெத்தும்பார்க்க—சட்டமுட்டனெட்டு கட்டும்பாய்
சரிசரிபாகவே சதுரக்கம்சேர்ந்து வரிசைபரவோடி வருகுதேகப்பல்
சீராய்கப்பல்தனில்—சல்மான்—சேனையெல்லா பேர்திக்கொண்டு
தாராளமாகவேதான்—கப்பல்—தண்ணீரில் வெகுதூரஞ்சாய்
பாதுஷாவைக்—காண—பண்புடனே வருகுதாண்
கார்குழலாள்சபுரியத்தும்—கூட—கப்பலிலேனற்றிக்கொண்டு
துருசாகக்கப்பல்மேல்பாய்விரித்தேற்றி தருக்காகக்கரைதேடி நா
ற்றிசையுமோடி வாய்பெருகுமாகிசுரி பதியதனைத்தேடி வருகுது
பாரிபாதுஷம் தனைக்காணக்கப்பல் (ஏலேலோ)
சாதிக்காய்சாபத்திரி—லவங்கம்—தாளிசாய்திருப்பிலை
சோதிமுத்துபவளக்கும்—வெகு—சேர்ந்தெல்லாந்தானேற்றி
நீதிமணியனேகம்பல்—அதில்—நிறைந்தமணிசரக்குடனே
ஆதியருளாலேகப்பல்—கரை—ஆயிரம்நோக்கிநேராய்
அன்புடனேதுள்ள ஆதிசமெல்லாம் — அடவுடனேகப்பலில்,
அனேகங்களேற்றி—இ—ரப்பாயாண்டவன்கிருபையினாலே—இதோ
வந்துதேமிசுரி கரையோரங்கப்பல் (ஏலேலோ)

பிள்ளைகள்சொல்—விருத்தம்—இ-ம்-தோடி,

கடவுள்தன்கிருபையாலே கப்பலும்வந்துசேர்ந்து *
அடவுடன்அதிர்வேட்டாக அங்கனேயிருந்தபாலர் *
சடுதியிலெழுந்துமந்திரி பாதுஷாசமுகந்தேடி *
திடமுடன்கப்பல்வந்த செதியையுரைசெய்வாரே *

வசனம்—கேளும்பாதுஷாவே ஏதோ ஒருகப்பல் பெரிதாகவந்தது அதிலிருந்து பீரங்கிவெடியுமாச்சுது அந்தசங்கதியை தங்களுக்குத் தெரிவிக்கவந்தோம்பாதுஷாவே.

பாதுஷாசொல்—விருத்தம்—இ-ம்-சவேரி,

சிந்தைதான்மகிழவந்த சிறுவர்சொல்லுமெவர் *
இந்தநாடுளைசருந்திக விவிடம்விட்டவிடமேயேசை *

வந்திருப்பவரெல்லாம் வகையுடனறிந்துக்கொண்டு ✻
எந்தவூரெவிடமென்று இப்போதுவருகுவீரே ✻

வசனம்

கேளும் கடற்கரையில் வந்தவராரென்றும் அவர்கள்யெவ்வி டம்போகிறவர்களென்றும் என்னபேரென்றும்எந்தவூரென்றும்அதி யோடந்தமாகவிசாரித்துக்கொண்டுஅதிசீக்கிரமாகவாரும் ஓசீர்களே

ஓசீர்கள்சொல்—வசனம்.

அப்படியேஅறிந்துவருகிறோம்—பாதுஷாவே.

மந்திரிசொல்—விருத்தம் — இ-ம்-காம்போதி,

கடற்கரையோரந்தன்னில் கப்பலிலிருக்கின்றோரே ✻
திடமுடனீங்களெந்த தேசத்திலிருந்துவந்தீர் ✻
இடர்தவிர்த்திடமிகுநிலிருக்கின்றபாதுசாய்ப்பு ✻
அடவுடனுங்களைத்தான் அழைத்துமேவரச்சொன்னாரே

வசனம்

கேளும் யிந்த கப்பலில்வந்திருக்கிறீர்களே உங்களையாரெ ன்றறிந்துகொண்டு எல்லவரையும்அழைத்துக்கொண்டுவரச்சொன்னா ர் எங்கள்ராஜன் சீக்கிரமாககப்பலைவிட்டு இறங்கிவாருமையா.

சுல்மான்சொல்—விருத்தம்— இ-ம்-முகாரி,

பாதுஷாவிடத்திருக்கும் பாங்குள்ளமந்திரிகேளும் ✻
நாற்றிசைபுகழ்மிகுமின் நகர்தனையாளுகின்ற ✻
பார்த்திபன்றனக்குச்சொல்லி யென்பாரிக்கிக்காவலாக ✻
காத்திடவந்தாராகில் கரைதனிலிறங்கிவாரேன் ✻

வசனம்

கேளும் நான் இருகுபட்டணத்தையாளுகின்ற சுல்மான் எ பேர் நான்திரவியமும் சமுசாரத்துடனே வந்திருக்கிறேன் ஆகை யால் காவலுக்காக இரண்டுபேர்வந்தால் நான்கப்பலைவிட்டு இறங்கி வருகிறேன் ஓசீர்களே.

ஓசீர்மார்சொல்—விருத்தம்— இ-ம்-கண்டா,

சிந்தையுமகிழ்ந்தெல்லோரும்செழித்திடஆளுங்கோவே ✻
வந்திடுமிருகுதேசம் வாழ்கின்றசுல்மானென்பேரன் ✻
அர்த்தமாவங்கத்துக்கும் அவன்சமுசாரத்திற்கும் ✻
வித்தையாய்க்காவல்வைத்தால் விறுடன்வாரேனென்றான்

வசனம்

கேளும் இருகுபட்டணத்தையாளுகிற சுல்மான் தன்சமுசார மும் திரவியமும் கொண்டுவந்துயிருக்கிறான் அதற்குக்காவலாக இரண்டுபெயரை அனுப்பி வைத்தால் தானிறங்கிவாரேனென்கிறா ன்பாதுஷாவே.



பாதுஷாசொல்—விருத்தம்— இ-ம்.தோடி,

சித்திரமாகப்பேசும் சிறுவரேசொல்லக்கேளீர் ✻
எத்தனைகப்பல்வந்து யிருக்குதுகரையோரத்தில் ✻
குத்திரஞ்செய்யாமல்நீங்கள் கூடியேயிரண்டுபேரும் ✻
பத்திரமாகக்காத்து பரிவுடனெழுப்பிப்பீரே ✻

வசனம்

கேளும்எனக்குஅன்புள்ளஅதிக்ப்பிரியமானபிள்ளைகளே நீங்க ளிரண்டுபேரும்போய் பத்திரமாக அந்தகப்பலுக்குக் காவலாகஇ ருந்து அவனுடமையை அவனுக்குஒப்பித்துவாரும்பிள்ளைகளா,

பிள்ளைகள்சொல்—வசனம்.

அப்படியேபோய்க்காத்துவொப்பித்துவருகிறோமையாபாதுஷா

இ-ம்சேஞ்சிகம்-ஆதிதாளம். [வே]

வாரார்சிறுவர் — கடலோரம்—வாரார்சிறுவர்

| | |
|---|---|
| வாரார்சிறுவர்கள் | வாகாயலங்கரித்து |
| பார்புகழ்மிகுமில்வாழ் | பாதுஷாசொற்படி (வாரார்) |
| மந்திரிவாரிட்டன் | வச்சிரசேடமுமாம் |
| சிந்தையமகிழ்ந்திருவர் | சேர்ய்காவல்காக்க (வாரார்) |
| சித்திரமாவியருமால் | சொகுசாய்தலையில்கட்டி |
| அந்தநகரம்விட்டு | ஆதிப்ருளால்பாலகர் (வாரார்) |
| குத்திரஞ்செய்ததான் | குட்டம்பிடித்தசுல்மான் |
| வைத்தபத்தினிக்காவல் | வாகாயிருந்திட (வாரார்) |
| அட்டாளதேசத் | தரிசர்கள்புகழ்ந்திட |
| கட்டளைமாறுமல் | காவல்காத்திருக்கவே (வாரார்) |
| சித்தமனமகிழ்ந்து | செல்வர்இருவருமாய் |
| பத்தினிதனைக்காக்க | பாதுஷாசொற்படி (வாரார்) |

பொதுவிருத்தம்— இ-ம்-மத்தியமாவதி,

தானிருவருமொன்றாக தம்பிரான்தனைத்தொழுது ✻
வானமிகுரையாளும் பாதுஷாசொற்படிக்கு ✻
சேனைக்குத்தலைவரான சிறுவர்களிரண்டுபேரும் ✻
கானகவழிநடந்து கப்பலின்கிட்டேவந்தார் ✻

வசனம்—அதோ தெப்படியென்றால் மிகரையாளுகின்ற பா துஷாவின் சொற்படிக்கு காடு மலை வனம் பட்டணத்திரமெல்லாங்கட ந்து இரண்டுபிள்ளைகளும் சுல்மானிருக்கின்ற கப்பலருகாக சமு த்திரத்தின் ஓரமாக வந்து சேர்ந்தார்கள் அதன்பின்பு நடக்கிற விதங்காண்க.

சுல்மான்சொல்— விருத்தம— இ-ம்-தோடி-

கப்பலைக்கண்டிபாலர் கரைதனில்திற்கும்போது ✻
செப்பமாய்சுல்மான்ராஜன்சிறுவரைப்பார்த்துரைப்பான்

ஒப்பிலாயெனதுகப்பல் உள்ளதுவெல்லாமிப்போ ※
பக்குவமாய்காத்துநீங்கள் பரிவுடனொப்பிப்பீரோ ※

வசனம்

கேளும்பிள்ளைகளா என்னுடைய கப்பலில் இரவியமும்ஆடையாபரணங்களும் பெண்சாதியுமாயிருக்கிறபடியினாலே நான்வருமளவும் நீங்கள் வெகுபத்திரமாகக்காத்து ஒப்பிக்கவேணும்பிள்ளைகளா.

பிள்ளைகள்சொல் —விருத்தம்— இ-ம்-காம்போதி-

காத்திடுமென்றுசொன்னகனமுள்ளராஜாவேநீர் ※
வேற்றொருயிடர்வராமல் விடியுமட்டிக்கிருந்து ※
நாற்றிசையுசுழந்தானே நல்முடன்காவலர்க ※
பார்த்துக்கொண்டிருப்போநீயும் பரிவுடனிறங்கிப்போ ※

வசனம் [வாய்]

கேளும் இராஜாவே நீபோய் வருகிறவேளைமட்டும் நாங்களிருவரும் யாதொரு குற்றக்குறைவராமல் காவலாயிருக்கிறோம் சீக்கிரமாகப்போய்வாரும்இராஜனே.

சுல்மான்சொல்—விருத்தம்— இ-ம்-முகாரி,

மனதுள்ளபாதுஷாதன் மனிதரேசொல்லக்கேளீர் ※
தனியெனுமெந்தன்பாரி கப்பலிலிருக்கிறாள்காண் ※
வினையதுவாராமல்நீங்கள் விடியுமட்டிக்கிருந்து ※
கனமுடன்கப்பல்தன்னை காத்துமேஒப்பிப்பீரே ※

வசனம்

கேளும் நான் மிசருபட்டணத்தில் பாதுஷா விடத்திற்குப்போய் வருமளவும் நீங்கள் மிகுந்த பயபத்தியாக காவலாகயிருங்கள் பிள்ளைகளா-

பிள்ளைகள்சொல்—வசனம்

அப்படியே காத்துக்கொண்டு யிருக்கிறோமிராஜனே

சுல்மான்வருகிற— விருத்தம் —இ-ம்தோடி,

மட்டில்லாநிதியம்வாரி மன்னரைக்காணவென்று ※
குட்டநோய்பெருவியாதி கொண்டதுதீர்க்கவென்று ※
வெட்டையும்வெடிப்புமாக மேன்மேலும்பெருகிசீட்டு
கட்டியபுண்ணுடனே கனத்தசுல்மானும்வாரான் ※

தரு—இ-ம்-தேசிகம்-திரிபுடைதாளம்.

நவரத்தினங்கையில்கொண்டு நயமலிபாதுஷாமுன்
தவமாக்காணவென்று சுல்மானும்வந்தான்
சவனமதுகள்தீர்த்து சுதிபெறவேணுமென்று
புவனமாசுல்மான்ராஜன் பரிவுடன்வந்தான்
புண்ணெலாங்காய்ந்தபின்பு பூமையமனமுடிக்க



எண்ணியேசுல்மான்ராஜன் இன்பமாய்வந்தான்
இந்தபவுர்திரங்கள் எப்போதுநீங்குமென
அந்தமிசுர்பாதுஷாமுன் அன்புடன்வந்தான்
இருபுறம்வெப்பிலைகள் எல்லோரும்வீசிவர
அரனேஅரனேயென்று அழுதுகொண்டேவந்தான்
மெள்ளமெள்ளவேநடந்து வேதனையாகவந்தான்
குட்டநோவாலொடுங்கி கெட்டழுச்சுழுமாக
பட்டணத்தையாளும்சுல்மான் பாதுஷாமுன்வந்தான்
எண்ணிக்கையில்லாமல்வாழ்த்தி எகிமேனுயைத்திருமென
கண்ணெதிரேபோற்றிவெருக் கனகமேசொரிந்தான்

சுல்மான்சொல்—விருத்தம்—இ-ம்—பைரவி

என்னைப்போலுள்ளபாவி யென்புவருனக்குநெஞ்சில்
நீர்மையுமாகக்காத்து ரட்சிக்குமிசருதன்னில்
மன்னவிபாதுஷாவே உம்மையேநாடிவந்தேன்
முன்னேயென்பிணியைத்தீர்த்து முழுதுநீரனுப்புவீரே

வசனம்,

கேளும்பாதுஷாவே தங்களுடைய இராஜ்யமாகிய பெயரைக்கேட்டு, நானும்முடைய பாதமேகெதியென்று நம்பிவந்தேன் என்னுடைய பிணியையெல்லாவர்க்கு முன்னணியாய்த்தீர்த்து அனுப்பிவையும்பாதுஷாவே,

பாதுஷாசொல்—விருத்தம்—இ ம்—தோடி,

இர்கமேவேணுமென்ற திறமுள்ளசுல்மானேநீ
பார்க்குள்ளோர்செய்யாப்பாவம் பாவிநீயெல்லாஞ்செய்தாயோ
வாக்குநாலைவர்கள்தங்கள் பத்துவாடலித்துசேர்ந்தான்
ஏர்க்கமதுகதானை யென்னிடத்தினிலேவாராய்.

வசனம்,

கேளும்சுல்மானே எனக்குஇந்தவியாதி வந்ததையைப் பார்த்தால் ஏதோ ஒருசாபத்தாலே வந்ததுபோலிருக்கிறது ஆனாலுங்குறையில்லை இன்றையத்தினம் பாளயத்திலிருந்து நாளையத்தினம் என்னிடத்திற்கு வாரும்ராஜனே,

சுல்மான்சொல்—வசனம்,

அப்படியேபோய்வருகிறேன் பாதுஷாவே

பெர்துவிருத்தம்—இ-ம்—சங்கராபரணம்,

நாளைவாவென்றுசொல்லி நவின்றதுகேட்டுசுல்மான்
பாளயத்தன்னில்போயிப் பண்புடனிருந்தானிப்பால்
அளவேபடைத்தநாயனருளிலேதிசயங்கள்
வாள்படையாலருக்கு வல்லவன்காட்டினானே

(வ—ம்) அகோதேப்படியென்றால் பாதுஷாசுல்தானை நாளையதினம் வாவென்றனுப்பிய பின்புபிள்ளைகள் கப்பலில் காவலாயிருந்தவிடத் தில் வல்லவன் சிலஅதிசயங்களைகாண்பித்ததேப்படியென்றால்.

பொதுவிருத்தம்—இ-ம்—மத்தியமாவதி,

கப்பலிலிரண்டுபேருங் காத்துக்கொண்டிருக்கும்வேளை
செப்பமாயொருமீன்குத்தி எடுத்துமேசெல்லும்போது
அப்பவந்தொருமீன்குத்தி அதையுமேபிடிக்கப்போக
தப்பியேயிரண்டுக்கில்லா தண்ணீரில்விழுந்ததன்றே,

வசனம்,

அகோதேப்படியென்றால் இந்தஇரண்டுபிள்ளைகளும் காவலாககப்பலிலிருக்கும் வேளையில் ஒருமீன்குத்தி ஒருமீனைப்பிடித்துக்கொண்டுபோகையில் இன்னொருமீன்குத்தி அதைவந்துபிடிக்க அந்தமீன், இரண்டுக்குந்தப்பி, தண்ணீரில் விழுந்தது இந்தஇரண்டுகுருவியும் திசைதப்பிவிட்டபின் நடந்தவகையெப்படியென்றால்,

சம்சனின்சொல்—விருத்தம்—இ,ம்—தோடி,

தப்பியேயிரண்டுக்கில்லாத் தண்ணீரில்விழவேகண்டு
குப்பியசிறுவன்றானும் கோவென்றுசிரித்தானே
விற்பனமான அண்ணன் விதமுள்ளதம்பிதன்னை
இப்படிநகைத்ததென்ன எந்தனுக்குரைசெய்வாயே,

(வசனம்) கேளும்நீயிருந்தாப்போலிருந்து என்னுஞ்சிரிக்காதசிரிப்பு,இன்றையதினம் நீசிரித்ததென்ன அதைத் தெரியச் சொல்லுந் தம்பி,

கமரதின்சொல்—விருத்தம்—இ-ம்—அனந்தபைரவி,

நகைத்ததையென்னவென்று நாடியேகேட்டாயண்ணே
வகையிலாஒருமீன்குத்தி வந்திடப்பதில்மீன்குத்தி
திகைத்துநின்றுஇரண்டும் தின்னவும்போகிப்பில்லாமல்
பகைத்திடநீரில்மீனும் படிந்திடநகைத்தேனண்ணே

வசனம்,

கேளும்அண்ணா ஒருமீன்குத்தி அந்தமீனைப்பிடிக்கப்போக இரண்டுஞ் சண்டைசெய்து வருகையில் மீனானதுதவறிதண்ணீரில் விழுந்தது அதைக்கண்டு நான்சிரித்தேன் அண்ணே,

சம்சனின்—கமரதினுக்குச்சொல்—சரித்திரம்,

அகவல்—இ.ம்—கண்டா

நகைப்பேன்தம்பி நடந்ததைக்கேளாய்
பகைப்போரிகழாப் பதியாண்டிருந்தோம்
நல்லசாமதனில் நயமலிபாதுஷா
எல்லவர்தமக்கும் இன்பமாயிருந்தார்



அப்படியரசாண்டிருக்கும் நாளையிலே
இப்படியாக நம் எல்லோரும்பிரிய
அபுசனுவென்று அவருமேபிறந்தார்
எவர்களுமிகழ எந்திழைமாரை
கெடுத்ததாலூரார் குடியுடன்னம்மை
விடுத்திடசீமையை விட்டோட்டிவிட்டார்
வனத்தினில்வந்து வருகிறவழியில்
திருடர்கள் திரவியம்பறித்தனர்
பிரிவுண்டிருக்கையும் பட்டணத்தனிலே
சிறைப்படஅன்னையும் நாமும்போயிருந்திட
போனதும் அரசன் பிடித்துக்கொண்டதும்
வினைகம்புகழும் பாதுஷாவிடத்தில்
சொன்னதைக்கேட்டு துயரமாய்பாதுஷா
அன்னைசர்விட்டு யேகியவழியில்
வந்ததுஆறும் வழியிலிருந்ததும்
சிந்தைதளர்ந்து சீரடிபணிந்து
ஓடக்காரனை ஒருமொழிகேட்டதும்
கூட்டென்று குதித்தவன்சொன்னபின்
சிந்தைகலங்கியோர் செல்வனையெடுத்து
அந்தக்கரைதனில் அவன்தன்னைவைத்து
மற்றொருமகன்தனை மகிழ்வுடனேயேக
வெற்றியாயிறக்க வீட்டன்முதலை
பிடித்துக்கொண்டது பிள்ளைகளங்கே
அடித்துக்கொண்டோம் ஐயாவென்று
இகைப்புகள்பட்ட சிறுவர்தமக்கு
நகைப்பேன்தம்பி! நாக்கெனஅறிநீ

சப்ரியத்து சொல்—விருத்தம்—இ-ம்—கலியாணி

இப்படிசொன்னபோது இரங்கியுள்சப்ரியத்தும்
கற்புடைமங்கையர்க்கு சதவேநிறைந்ததப்போ
செப்பமாய்ப்பால்சிரோடி செல்வர்மேல்விழுந்ததாலே
அப்பனேமகனேயென்று அலறிமேல்விழுந்தழுகின்றாளே

தரு—இ-ம்-ஆகிரி—அடதாளம்.

மைந்தர்களேயுங்கள்பாவா மடிந்தாரோமீனுத்திலே
எந்தவிதமாகப்போய் இறந்தாரோமுதலைவாயில்
தந்தைதாயில்லாப்பிள்ளைபோல் தவித்தங்கேயழுதீர்களோ
உந்தனண்ணனுலேயல்லோ ஊரைவிட்டோடிவந்தோம்
இடைவிட்டீராமொன்றாக சேர்ந்திருந்தால்சுகமென்று
நாமெண்ணபாவஞ்செய்தோமென்று நாளுந்திக்காய்பிரிந்தோம்

நாலுதிக்காய்ப்பிரிந்தோம் — ளுயகரைநாளிழந்தோம்
வாலவயதாகிநானும் — பாலகரைப்பெற்றெடுத்தேன்
பாலனதிலொரு — பாவியாய்ப்பிறந்தானபுசலுவும்
சிலமென்றுநான்வளர்த்தேன்செல்வங்களழிந்திடவே
பிறந்தானிந்தபாவியாட்கு — புத்திரனில்லாதநாளில்
வார்தந்தான்ஆண்டவனும் — வந்துபின்பிறந்தீர்மக்காள்
உங்களிடபாவாவுடன் — ஒன்றுயானுமடிர்ந்திட்டோன்
பங்கமில்லையுங்களுக்கு — பாலகரேபிழைத்திடுவீர்
இங்கிருக்கஞாயமில்லை — யிறையவனுங்களைக்காப்பான்
மங்கையர்நகைத்திடாமல் — மாண்டிடுவேநானுங்கூட
இடுக்கங்கள்வாராமுன்னே — யிறந்திடுவேனென்றுளம்மாள்
தடுக்கபோனபாலகரை — தானுமேயுரைப்பாளம்மா
அன்னையில்லாபிள்ளையென்பார் — அதினுலொருகுற்றமி
டன்னைத்தடுக்கவேண்டாம்என்மக்களாகண்மணியே [ல்லை]

பிள்ளைகள்சொல்—விருத்தம—இ-ம்-தோடி.

தடுக்கவேவேண்டாமென்ற தாயேயென்விண்ணப்பங்கேள் ❋
நடுக்கங்கள்வந்துதீர்ந்து நாங்களுமுன்னைக்கண்டோம் ❋
இடுக்கங்கள்தீர்ந்துபோகும் யெங்களைப்பெற்றதாயே ❋
திடுக்கெனவருவாயம்மா திசைபுகழ்மிகுநீசெல்வோய் ❋

வசனம்

சேனுமய்யாதாயே யெங்களைப்பெற்று வளர்த்து அதிகவருத்தமெல்லாம் அடைந்தீர்கள் இப்போது ஆண்டவன் கிருபையினல் நாமுமொன்றுய்க்கூடினேம் இனிமேலாது சுகமாக சிலகாலம் சேர்ந்துவாழலாமய்யாதாயே.

சபுரியத்துசொல்—விருத்தம்— இ-ம்-பூரி—கலியாணி.

சேர்ந்துநாம்வாழ்வோமென்ற செல்வரேமணியேகண்ணே ❋
தேர்ந்துதானிப்புவியின்மீதில் திரேகத்தைவைப்பதில்லை ❋
கூர்ந்தவுன்தந்தையாற்றில் குறைந்ததாலிருப்பதில்லை ❋
சார்ந்திடும்பாலரேநீர் தடங்கலேசொல்லவேண்டாம் ❋

(வசனம்)—சேனுமக்களா இத்தனை அவதிப்பட்டு எல்லோருஞ்சேருகிறதற்குயில்லாமல் உங்கள்பாவா ஆற்றில்முதலைவாயில் மாண்டார் நானும் உயிரைவைத்துயிருக்கிறதுஞாயமல்ல உங்களைபருடனே நானுமாண்டுபோரேன்உங்களை ஆண்டவன்காப்பானப்பா ❋

பிள்ளைகள்சொல்—விருத்தம்—இ-ம்-ஆனந்தபைரவி,

அம்மாஉன்னுயிரைவிட்டால் அபகீர்த்திதானுண்டாகும் ❋
உம்மையும்விட்டுநாங்க ளுயிரைவைத்திருக்கமாட்டோம் ❋
உண்மையாயெங்கள்பாவா யெழுந்துமேவருவாரம்மா ❋
நம்மையேவகுத்தானல்லா நடப்பதைமுழுதும்பார்ப்போம் ❋



வசனம்

சேனும்மாதாயே எங்களைவிட்டுவிட்டு உன்னுயிரைவிட்டால் நாங்களும்உன்னுடனேமாண்டுவிடுவோம் ஆசையால் இன்னஞ்சிலகாலமிருந்து விளைதிரவிதல்லாம்கண்ணுங்காண்டோம் அதர்க்குள்ளே என்தகப்பனுமுவந்துசேர்வார் பயப்படாதிருமம்மாதாயே.

சபுரியத்துசொல்—விருத்தம்—இ-ம்-ஆகிரி.

பள்ளியிலிருந்தபேர்கள் பாதையிலேன்போனீர்கள் ❋
வெள்ளமிகுந்தினிற்ப்போய் விரும்பியேயிரக்குவானேன் ❋
தெள்ளியமுதலைவாயில் சிக்கினதென்னமக்கள் ❋
உள்ளவிச்செய்தியெல்லாம் உரைத்திடவேணக்குத்தனே ❋

தரு—இ-ம்-புன்னாகவராளி,

பள்ளியிலிருந்தாக்கால் — பழிசெய்குவானென்று
பாதுஷாயெங்கள்பாவா — என்னம்மாதாயே
மெள்ளவெழுந்து — வெளியேபுறப்பட்டோம்
மீறுவெள்ளங்குறுக்கிட்டதே — என்னம்மாதாயே
தம்பியைத்தோளினி — லெடுத்துவைத்தக்கரை
தான்கடைவிட்டுவிங்கி — என்னம்மாதாயே
அன்புடனென்னை — யெடுக்கவருகையில்
ஆற்றின்நடுவுதனில் — என்னம்மாதாயே
ஆற்றுநடுவிலே — முதலைவந்துகூடி
என்னையரைத்தின்றது — என்னம்மாதாயே
பார்த்துயிருந்தந்த — ஓடக்காரனவன்
பாலகரென்றேயெடுத்தான் — என்னம்மாதாயே
புத்திரமில்லாமல் — அவன்வீட்டிலெங்களை
கூட்டியழைத்துப்போனுன் — என்னம்மாதாயே
புத்திரமாகவேயவன் — பெண்சாதியெங்களை
பாலகரென்றேயெடுத்தாள் — என்னம்மாதாயே
காத்திருந்தயெங்களை — அன்புடன் தானவன்
கஷ்டப்பட்டுவளர்த்தான் — என்னம்மாதாயே
பார்த்திருந்தெங்களை — பட்சமுடனவன்
பாலகரென்றேவளர்த்தான் — என்னம்மாதாயே
உங்களுக்கதிகமா — யெங்களைத்தானவன்
உறுதியாகவளர்த்தெடுத்தான் — என்னம்மாதாயே
தங்கள்வீட்டுப்பிள்ளைப் — போலதயவுடன்
தந்துவளர்த்தானம்மா — என்னம்மாதாயே
இந்தஊர்பாதுஷாக் — யிடத்தினிலெங்களை
சேவகமாகவைத்தான் — என்னம்மாதாயே

சிந்தைமகிழ்ந்தெங்களை இந்தவூர்பாதுஷா
சேவகத்தினில்வைத்தான் என்னம்மாதாயே
சனம்வராமலே இவ்விடந்தன்னிலே
இருந்துசேவித்துவந்தோம் என்னம்மாதாயே
வானம்படைத்தவன் கிருபையினாலுன்னை
வந்துகண்டோமம்மா என்னம்மாதாயே

சபுரியத்துபுலம்பல்—விருத்தம்—இ-ம்-சங்கராபரணம்.

இப்படிபாலர்தாமு மியல்புடன்சொல்லக்கேட்டு *
அப்படியெந்தன்மக்காள் யிருப்பதேனுவுயிரைவந்து *
இப்படிமடிந்தாருங்கள் ஆற்றினிலேயர்தானுந்த *
சொற்படிதானேமக்காள் சோதிலைசெய்திட்டாரே *

தரு—இ-ம்-சங்கராபரணம்—தாளம்-திரிபுடை.

ஐயோகோவென் மக்களா வுங்கள்பாவா
ஆற்றில்வபாத்தானாரோ (ஐயோ)
மண்ணிலிறக்காமல் மக்களா மைந்தர்மண்போடாமல்
கண்ணிலுங்காணுமை வுங்கள்பாவா கர்த்தன்செயலிதுவோ (ஐயோ)
சமுவிகுளிப்பாட்டி மக்களா கபனிட்டடக்காமல்
பழுதிலாஅபுசனுவைதொழுதுபார்க்காமல்போனீர்களோ (ஐயோ)
மதலையேயுங்களுட பாவாவும் வாழ்ந்தரசாளாமல்
முதலைவாயிலிறக்க மக்களா முதலவன்சட்டளையோ (ஐயோ)
மனவியுங்காணுமல் மக்களா மைந்தருங்காணுமல்
நினைவெல்லாம்பேதலித்து பதர்நீதியோன்சட்டளையோ (ஐயோ)
இன்னுஞ்சிலகால மக்களா யெளியோர்க்குஆதரவாய்
மன்னராயிருக்காமல் மக்களா மடிந்தாரோமீனுற்றில் (ஐயோ)
எவருமெடுக்காமல் மக்களா யெங்கியழுதீர்களோ
விவரமரியாத மக்களா வேதனைப்பட்டீர்களோ (ஐயோ)
ஐயோ அவருமன்னை மக்காள் ஆயாசப்பட்டாரோ
ஐய்யோனவருக்கு விதியில் தொல்லைநாளொழிந்தனுறே (ஐயோ)
என்தலைவிதியெழுத்து மக்களாயினியென்னசெய்யப்போறேன்
மைந்தரேயுன்னைப்பெற்று வளர்த்தமாதாவும்நானேனன் (ஐயோ)
மெத்தஅவதிபட்ட மக்களா விதியைவெல்லப்போமோ
பத்தங்கெட்டபாவிசுல்மானு மென்னைச்சிறையில்வைத்தான் (ஐ)
ஆண்டவனைநினைத்து மக்களா அப்போதுவாவிறந்தேன்
வேண்டினதாசிறையோன் என்சற்பைவிதமுடனேசாத்தான் (ஐ)
தகப்பனைதானிழந்து மக்களா தவித்துஅழுதீர்களோ
நகைப்பாரிக்கிடமாக மக்களா நாயன்தன்கட்டளையோ (ஐயோ)
அந்தமீனுற்றிலே மக்களா அரியதுவக்கேட்டீரோ
மைந்தரேகண்மணியே மக்களா மாதாவுமாகினனே (ஐயோ)



அக்கரையிடத்திலே மக்களா அரியதுவாக்கேட்டீர்களோ
பொல்லாமுதலைவாயி லிரக்கப் போயிமாண்டாரோ (ஐயோ)
படைத்தவன்கிருபையினால்மக்களாப்பாவிதந்தமாலை போனில்லை
விடைதயிர்க்குடம்போல சிதரியுருவிலைலிப்போது (ஐயோ)
ஆதிரகயானே பெண்ணை யான்கிருவல்லவனே
நீதிப்பெரியவனே நீ எழுதும்விதிப்படியே (ஐயோ)

சபுரியத்துசொல்—தக்கல்—இ-ம்-யைரவி.

மக்களாபுங்களை மயங்கவேவிட்டு
திக்குதிசைகள் தெரித்திடாப்பாலையே
மைந்தரேபாதுஷா மடிந்தவர்ஆற்றில்
அந்தபாசாயில் அடக்கமாகயல்
உங்களைமண் உடையவனைவத்திலன்
சிங்கம்போல்முதலைவாய்த் தின்றிடமாண்டீர்
அச்சேதிகேட்டே னங்கம்பதறுதே
இச்சேதிகேட்பின் னிருப்பேனோபுவியில்
மைந்தரேயுங்கள் முகத்துக்காகவே
சிந்திடாதுயிரை செகந்தனில்வைத்தேன்
என்றவள்சொல்லி யிருகையால்பட்லை
அன்றவள்கட்டி அணைத்தழுகுவாளே

தரு—இ-ம்-தேசிகம்-சாப்புதாளம்.

என்தன் சனவர் மடிந்திட்டபாரித்
திசல்கருகுதே —மன— மீதியுருகுதே
உந்தன்னைமு மடர்தவேளையில்
சருக்கிநின்றீரோ—மனங்— குழகிதிர்த்தீரோ
என்னுயிர்க்குயி ராசதரே
எங்கிமடிந்தீரோ—கண்டு— தேங்கிமடிந்தீரோ
முன்னைமுதலை வாயில்சிக்கி
பாதவித்தீரோ-வாய்க்-கிரையாய்ப்போனீரோ
துள்ளித்துள்ளிப் பாவிமுதலை
துடிக்காய்பிடித்ததோ—மனந்—துடிக்காய்பிடித்ததோ
மெள்ளமெள்ள புதுங்கியுன்னை
விழுங்கப்பிடித்ததோ-மன-மழுங்கப்பிடித்ததோ
பாவியான ஓடக்காரன்
பார்த்திருந்தானே —மனந்— தேற்றிநின்றானே
ஜீவியது குஞ்சிக்குன்றி
அழுதுநின்றீரோ யின்றையைதேர்ந்துநின்றீரோ
என்னசெய்வே னேதுசெய்வேன்
ஏழையாயினேன் —கொடும்— பாவியாயினேன்

மன்னவரே யென்கணவரே
மறுகால்காண்பேனோயினியெப்போகாண்பேனோ
தேசம்புகழுந் செங்கோல்நீதர்
சென்றுபோயினரோ யிறைவோனிடத்திற்சேர்ந்தாரோ
பாசமறவாம விறையவனே
பாரில்சேர்த்திடுவாய் எல்லோரும் வாழச்சேர்த்திடுவாய்

பிள்ளைகள்சொல்—விருத்தம்—இ-ம்-நீலாம்புரி,

பத்துமாதம்வயிற்றில் பரிவுடன்சுமந்துபெற்ற ❊
புத்திரனைவளர்த்த பூங்கொடிதாயேகேளாய் ❊
எத்திசைதனிலுமுன்னை எப்போதுகாண்போமென்று ❊
சித்தமுங்கலங்கி அம்மா சிறுவர்களழுதிட்டோமே ❊

தரு—இ-ம்-நீலாம்புரி ஆதிதாளம்,

எங்களைத்தவத்தாலீன்ற அம்மா— இந்த
இடரெல்லாம்பட்டீரோ அம்மா
மங்கிநீர்குலைந்துவாடிதாயே அம்மா— இந்த
வல்வினையால்நொந்திட்டீரோ அம்மா
கண்கலங்கியுனைப்பிரிந்தோம் அம்மா— இந்த
கசடன்கையிலகப்பட்டாய் அம்மா
மண்மீதில்விழுந்தழுதோம் அம்மா - எங்கள்
மனதைதேற்றயாருமில்லை அம்மா
சிறையினிந்தவேஷமாக அம்மா - நாங்கள்
சிந்தித்திடவுன்னைக்கண்டோம் அம்மா
பறையில்லாதபட்சியானோம் அம்மா — இந்த
பாலகர்முகத்தைப்பாரும் அம்மா
எத்திப்கள்முகத்தைப்பாரும் அம்மா— நாங்கள்
எந்தவிதத்தாலிருப்போம் அம்மா
புத்திரரைப்பெற்றெடுத்த அம்மா—உந்தன்
பிள்ளைகள்முகத்தைப்பாரும் அம்மா

சபுரியத்துடலம்பல்—விருத்தம்—இ-ம்-ஆகிரி,

கண்ணினின்மணியேசெல்வக் கட்டிசர்க்கரையேபாகே ❊
எண்ணியேயுங்கள்நெஞ்சிலென்னவெண்ணினீரோ ❊
குன்னுதேநீங்கள்சொன்னகுறிப்பெல்லாங்கேட்டபோதே ❊
மண்ணினில்வாழ்வேபோக மாய்வுநாளாகுதப்பா ❊

தரு—இ-ம்-ஆகிரி—அடதாளம்,

கண்குளிர்ந்தபாலகரே—என்—கலிகளெல்லாந்தீர்த்தவரே
பெண்வயிற்றிலிருந்தபேரே பிரியமுள்ளபாலகரே
யென்னுடையவிதியினாலே யிருந்தேனிச்சிறையிற்குள்ளே



உன்னுயிரைமாய்த்திடாம லுடையவனுங்காத்திட்டானே
பட்சமிந்தவாராய்வந்தும் பாவியின்னம்மாண்டேனில்லை
யிந்நேனயும்மைமக்காள யிறையவனுங்கூட்டிட்டானே
பதிவினிலிறந்திடாமல் பாலரைசுமந்தேன் போறாமல்
முதலைவாயிலிறக்க முதல்வன்கட்டளையோ
எந்தன்மின்னொளிபாலகரே யிருகண்கள்நவமணியே
இந்தவிதிளந்தனுக்கு எழுதிவைத்தாய்நகமானே

பிள்ளைகள்சொல்—வசனம்,

கேளுமம்மாதாயே யிசுரீம்பட்டணத்தையாளுகின்ற பாதுஷாவ
வர் தருமமும்வெகுநீதியுமாய் இராஜீகஞ்செய் தவருகிறார், அவரிட
தில்நாங்கள்போய்பிரையாது செய்துக்கொள்ளுகிறோமம்மாதாயே

சபுரியத்துசொல்—விருத்தம்— இ-ம்-தோடி,

சொல்லியேகொள்வோமென்று சொல்கிறீர்நமக்குத்தானே ❊
நல்லுமேபசலுமெங்கள் ஐயர்தானென்னைக்கூட்டி ❊
செல்லவும்வருவாரென்று தினந்துவாச்செய்திருந்தேன் ❊
பல்லவரிங்கேசேர்ந்தால் நம்முடவிதிதான்மக்காள் ❊

வசனம்

கேளும் மக்களா நான் தினம் துவாக்கேட்டுக்கொண்
டிருந்தேன், அந்ததுவாவின்பலத்தினால் உங்கள்பாவாவும் எல்லோ
நஞ்சேர்ந்து வாழ்ந்தால் நலமாயிருக்கும்மக்களா.

பிள்ளைகள்சொல்—வசனம்—அம்மாநாங்கள் அதிசீக்கிரமாகப்
போய் இராஜனுடன்சொல்லிமுறையிட்டுக்கொண்டுவருகிறோமம்மா.

சபுரியத்துசொல்—வசனம்.

அப்படியேபோய்வாருமக்களா,

பிள்ளைகள்சொல்—விருத்தம்-இ-ம்—ஆனந்தபைரவி,

தர்மமாயுலகையாளுந் தாரணிக்கரசேகேளாய் ❊
கர்மமாய்சுல்மானென்போன் வழிவினிற்கொண்டுபோனான் ❊
தர்மஞ்செய்சுல்மான்ராஜன் கதையென்னசொல்வோமையா ❊
தர்மமாயிதனைநீயும் நீதியாய்விசாரிப்பீரே ❊

வசனம்—இவ்வுலகத்தை நீதியாக ஆள்ப்பட்டபாதுஷாவேஎங்
களுடைய விண்ணப்பத்தைக் காதுகொடுத்துக்கேட்டு எங்கள்பேரில்
கிருபைசெய்து நீதியாகவிசாரிக்கவேணும்பாதுஷாவே சலாமத்து.

பாதுஷாசொல்—விருத்தம்—இ-ம்-காம்போதி,

யார்பிள்ளாய்நீங்களுங்க ளையர்பேரம்மாள்பேரும் ❊
எரிருவருமெத்தேசம் எங்கிருந்தெங்கேவந்தீர் ❊
பேர்புகழாகவேதான் பிட்சைக்குப்போனதென்ன ❊
தேருதலாகவுள்ளச் சேதியைச்சொல்லுவீரே ❊

வசனம்—கேளும்பிள்ளைகளா நீங்களிருந்தவூர்பேரும்உங்கள் தாய்தகப்பன்பேரும் நீங்கள் புறப்பட்டுவந்தவிதமும் ஆதியோடந்தமாக எனக்குத்தெரியச்சொல்லும் பிள்ளைகளா,

பிள்ளைகள்சொல்—வசனம்,

அப்படியே சொல்லுகிறோம் பாதுஷாசாயபே,

பிள்ளைகள்சொல்—அகவல்-இ-ம்கண்டம்,

உள்ளசேதிகளை யுரைத்திடுமென்றீர்
தெள்ளியஇறைவர்கள் செப்பும்விண்ணப்பம்
சிந்தைமகிழ்ந்து செவிகொடுத்தேதான்
விந்தையாய்க்கேட்டு விதமுடனருள்வீர்
சந்தமாய்ப்புகழும் சாம்ராச்சியம்
எந்தெந்தநாளும் மிசுரசாண்டோம்
அலிபாதுஷாவென் ஐயர்பேரும்
கலிமாவோதிக் கந்தூரிச்செய்தார்
பூரணச்சந்திரன் போலவேமுகத்தாள்
ஆரணப்பொருளெலா மதித்தேனென்பான்
சபுரியத்தெங்கள் தாய்பேரும்
கவரிகள்வீசிவாழ் காலந்தனிலே
அறந்தழைத்திடவே ஆண்டிடுநாளையில்
பிறந்ததோர்மூன்றுபுத்திரரையா
அதிலெங்களண்ணன் அபுசனு நானும்
பதியினிலிருக்கும் பத்தினிப்பெண்களை
குத்திரஞ்செய்திடக் கூடியேவூரார்
புத்திரனாலே போகுமேயென்றார்
அம்மொழிகேட்டு அலிபாதுஷாவும்
சிம்மாசனம்விட்டு சீக்கிரமெழுந்து
தங்காமலெங்கள் தாய்தகப்பனுமே
செங்கோலிழந்து சாமரைவிட்டு
பதியதையிழந்து பாலகராலே
விதிமுறைப்படியால் விட்டோடிவரவும்
காட்டினில்வரவே கள்ளர்பறித்து
வோட்டிவிட்டார்கள் வொருகாசில்லாமல்
நல்லவூரென்று இராக்செனும்பதியில்
எல்லோருமாக விளங்கிட அவ்வூர்
பள்ளியிலிருந்தோம் பட்டினியாக
பிள்ளைகள்துயரம் பெற்றவர்பார்த்து
விடிந்தபின்னெங்கள் வெகுபசியாலே
சடுதியிலெழுந்து சாதமேகேட்டோம்



70

அலிபாதுஷா பெங்களையெழுந்து
சலியாதிருங்கள் சாதந்தருகிறேன்
பெண்மக்கள்வெளியிலே போகலாகாதென
கண்டிதஞ்செய்து கடுகவேநடந்தார்
அரந்தரவல்லகை யாண்டவருள்ளை
இரந்திடப்போனால் எல்லோரறிவார்
நாற்றிசையுள்ளோர் நகைத்திடுவாரென
சேற்றியேமன்னவ தேறுதல்செய்வி
கட்டியென்தாயும் சந்ததிநாங்களும்
மட்டிலாத்துயர மனதினிலெண்ணி
சத்திரந்தனிலே தான்கயர்வாங்கி
நித்தமேநின்று நாங்களிருந்தோம்
நாலாநாள்கழற்கு நாங்களும்போனோம்
சலாஞ்செய்தெங்கள் தாய்தனைபிடித்து
கொண்டுபோய்சனக்கன் தொழுவினில்விட்டு
அன்றுநக்திரத்தில் அடித்துமேயெங்களை [டான்
தன்னிஞ்செய்தெங்களை தந்தைக்குச்சொன்னோம்
பள்ளியிலிருந்தால் பழிசெய்வானென்று
எங்களைகூட்டிக்கொண்டுபோய் யிறந்துபோவோமென்
அங்கனம்விட்டு அனைவருமொன்றாய் [று
வருகவே அங்கே வழியில்மீறுது
பெருகவேநின்றி போகமாட்டாமல்
ஓடக்காரனுக்கு வியபசாரஞ்சொன்னார்
வாட்கைதந்தால் வருமெனஓடம்
ஐயர்தன்கையில் அதற்குக்காசில்லாமல்
மையவிழுந்து பந்தபந்த்திறங்க
ஏன்னுடதம்பியை யெடுத்தொருதோளினில்
தண்ணீரிலிறங்கி தான்கரையேறினார்
விட்டுவிட்டொருவனை யங்கே அக்கரையில்
புதல்வனையெடுக்கப் புனலிலிறங்கையில்
மலையோன்முதலை வந்தெம்பாவனை
மலைதெரியாமலே தான்கொண்டுபோச்சுது
அக்கரைதனிலே அவனுமேயழுக
இக்கரைதனிலே யெங்கிநான்புலம்ப
கண்டோடக்காரன் கடுகவேநடந்து
விண்டுசிலமொழி வெகுவாயுரைத்து
அழைத்துப்போயவனும் அவன்திருவீட்டில்
பிழைத்திடும்படிஎனை பிரியமதாக

தங்கள்வீட்டில் தயவாய்வளர்த்து
உங்கள்தன்னிடத்தில் ஒருநிருந்தோம்
கப்பல்தனக்குக் காவலாகவே
அற்புதமாகவே அனுப்பிவைத்தீர்களே
எங்கள்தாய்கப்பலி லிருக்கிறபடியால்
நடந்தவரலாறை நாங்களுஞ்சொன்னோம்
நடந்தனில்தகப்பனார் மடிந்ததுஞ்சொன்னோ
சொன்னதைக்கேட்டவள் துயரமடைந்து
மாய்ந்திடக்கடலில் மடிந்திடப்போனாள் [ம்]
ஆப்த்தமொழிக ளனைத்துமேசொல்லி
வேண்டாமென்று வெகுதூரஞ்சொன்னோம்
ஆண்டவனருளா லவளுயிர்தப்பி
சல்மான்செய்திகள் சொன்னாளென்னுடன்
வலுச்செய்யவந்ததும் பத்துவாடச்செய்ததும்
அதனால்வியாதி அலகைப்பிடித்ததும்
இதனாலிங்கே யிறங்கினவிதமுங்
குஷ்டரோகங்கள் குணமானபின்பு
இஷ்டமாய்கலியாணம் இவ்விடஞ்செய்வாரி
அக்கினிதன்னை அவள்தான்வளர்த்திட
உமக்குமளித்தால் உண்மையாயிப்போ
ஆகுமோவெந்தன் அன்னைசபுரியத்தே
னாகுடனடந்த வரலாறைச்சொன்னோம்
அறுதியாட்வந்தோம் அடைக்கலமாக
பிரியமாயெங்களை பேணிக்காப்பீரே

பாதுஷாசொல்—விருத்தம்—இ-ம்-தோடி,

சிறுவர்கள்சொல்லைக்கேட்டால் தேசத்திற்கோக்காதிப்போ ❋
மறைபொருளிறையோனுக்கும் வியகத்தோம்சேறுது ❋
இரைதனில்மறைவாய்நின்று சேதிதான்சொல்லவேணும் ❋
அறிவுள்ளபாலரேயுந் தம்மன்னையழைத்துவாரீர் ❋

வசனம்—கேளும்பிள்ளைகளா உங்கள்சொல்லைநம்பி நான்விசாரித்தால் இவ்வுலகத்தோருக்கும் மற்றயவருக்கும் ஏர்க்காது ஆனபடியினால் உங்கள்தாயாரை அழைத்துவாரும்பிள்ளைகளா.

பிள்ளைகள்சொல்—விருத்தம்—இ-ம்-கலியாணி.

தாய்தன்னையழைக்கச்சொன்ன தயவுள்ளபாதுஷாவே ❋
ஞாயமேநீங்கள்சொன்னீர் நல்லதப்படியேயிப்போ ❋
வாட்மொழியாளென்றனை வரவழைத்திங்குவாரோம் ❋
ஆயுதம்தொட்டுசத்தியம் அடவுடன்சொல்லுவீரே ❋

வசனம்—கேளும்பாதுஷாவே நீர்சொன்னது தர்மராஜர்கள் நீதியானபடியினாலே எங்கள்தாயை அழைத்துவருகிறோம் நீர்சத்தியமாகச்சொன்னால் அழைத்துவருகிறோம் பாதுஷாவே,



பாதுஷாசொல்—விருத்தம்—இ-ம்—பந்துவராளி.

சத்தியமாகக்கேட்ட தயவுள்ளசிறுவரேகேள் ❋
சத்தவனதியவேதான் சத்தியஞ்செய்தேனிப்போ ❋
பத்தினிதன்னைப்பார்த்து படிமொழிசொன்னவாறாகல்நான் ❋
நித்தமுமகிழ்ந்திடப்புச் செய்வேன்பாலர்களே ❋

வசனம்,

கேளும்பிள்ளைகளா நீங்கள் ஒன்றுக்கும்பயப்படவேண்டாம் உங்கள்தாயை அழைத்துக்கொண்டு அதிசீக்கிரமாய்வாருங்கள் நான்சத்தியநீதியாக தீர்ப்புக்கொடுக்கிறேன் பிள்ளைகளா,

பிள்ளைகள்சொல் வசனம்,

அப்படியேஅழைத்துவருகிறோம் பாதுஷாவே;

பிள்ளைகள்தாயாருக்குச்சொல் தரு இ-ம் சங்கராபரணம் ஆதிதாளம்,

அக்கினிசொரூபமான எங்கள்தாயேயம்மா அம்மா
அன்னையேஒருவிண்ணப்பம் எங்கள்தாயே அம்மா
மிக்கவேமிகுரையாளும் பாதுஷாவே அம்மா
விதியாகநாங்களொருவிண்ணப்பஞ்செய்தோம் அம்மா
சேதிதன்னைக்கேட்டு அந்தபாதுஷாவே அம்மா
சிறுபிள்ளைசொல்லலாகாதென்று செப்பினார் அம்மா
இந்நிலாம்புலத்தில்வாழும் பாதுஷாவே அம்மா
இனையவனறியவுங்கட்கிடாசெய்யேனென்றார் அம்மா
விசுவாசமாயெங்கள்பேரில் கிருபைகள்செய்து அம்மா
வேணும்படிசெய்வேனென்று விடையுந்தந்தாரே அம்மா
சாதியவாவுமேசகாயஞ் செய்வார் அம்மா
சாகிலுள்ளபடியவர் நீதிஞ்செய்வாரே அம்மா
நீதியாகவுபகாரம் பாதுஷாவேசொல்வார் அம்மா
நீவந்துசொன்னாலே யதைநேத்தியாக்கேட்பார் அம்மா

சபுரியத்துசொல்—விருத்தம்—இ-ம்—நீலாம்புரி,

வாவெனஅழைத்தீர்மக்காள் வருகிறேன்சொல்கேட்டாமல் ❋
தாவென்றுகயருகேட்கச் சத்திரந்தனிலேபோனோம் ❋
கோவென்பிடித்துத்தள்ளிக்கொண்டுபோய்விட்டார்சல்மான் ❋
சாவனோபாதுஷாமுன் தான்வரச்சொன்னீர்மக்காள் ❋

வசனம்—கேளம்பிள்ளைகளா முன்னால்தர்மசத்திரத்துக்குப்போனதினாலே இந்தவினைகளெல்லாம் வந்துமுடியலாச்சுது இன்னுமென்னென்னவிதிகள் முடியவிருக்குதோ என்னமோ தெரியவில்லை எனக்குச்சாவும்வரவில்லையே மக்களா,

பிள்ளைகள்சொல்—விருத்தம்—இ-ம்—ஆனந்தபைரவி,

சாகவேண்டாமய்யா தனியவன்காப்பாளெம்மை ※
எதுவதில்லையென்றால் என்தாயேசொல்லக்கேளீர் ※
ஆகமேபொருளுண்டான ஆண்டவனதியவென்று ※
வாகுடன்சத்தியஞ்சொல்லி வரவழைத்திடவேசொன்னார் ※

வசனம்—கேளுமம்மா தாயே அந்தபாதுஷா ஆணையிட்டு சத்தியமாகச் சொல்லி உங்கள்தாயை அழைத்துவாரும் ஞாயமாய்தீர்ப்புகொடுக்கிறேனென்றாரம்மா,

சபுரியத்துசொல்—விருத்தம்—இ-ம்—நீலாம்புரி.

வருகிறேன்மக்காவுங்கள் பனதுசொற்படியாகட்டும் ※
இறையவனதிடவேதான் என்றமேசொன்னீர்மக்கா ※
இறைதனில்மறைவாய்நின்று சேதிதான்சொல்லவாரேன் ※
இறப்பவள்போலவெண்ணி யின்னறக்குப்போவோம்வாரீர், ※

தரு—இ-ம்—நீலாம்புரி—திரிபுடைதாளம்,

ஆதிரகமானேநானென்னசெய்வேன் ... ... அல்லா
அந்தரத்தில்நின்றதிப்போ அழுகவுமாச்சே ... ... அல்லா
சோதிரசமானேநா னென்னசெய்வேன் ... ... ... அல்லா
சுக்கூதசெய்திருந்தநாள்மட்டு மிருந்தேனே ... அல்லா
வேளைபிதுசமையம் பொல்லாறகமானேனென் ... ... ... அல்லா
வெதுப்படுத்திடவேண்டாம்றகமானேனென் ... ... அல்லா
நாளைபிதுவராமல்நாயனே நீயென் ... ... அல்லா
நாணமழியாமல்காக்கவேணும்நாயனேயென் ... அல்லா
நானிருந்தசெல்வமும்போய்றகமானேயென் .. ... அல்லா
நானடியாள்படுந்துயரம்விதியிதுவோயென் ... அல்லா
கானகத்தில்கள்ளர்கையில்பதிகொடுத்தேன் ... ... அல்லா
கசடனிடத்தில்வந்துகலங்கநாளாச்சுதேயென் ... அல்லா

பிள்ளைகள்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி,

சத்தியபாதுஷாமுன் சம்சதின்சமாதீனும் ※
பத்தியாய்மனதிலெண்ணி பரிவுடனென்தாய்தன்னை ※
இத்தலமழைத்துவந்தோம் இசுலாத்தின்குலம்விளங்க ※
சித்தமேவைத்துநீங்கள் சிறுடன்கேட்பீரையா ※

வசனம்—கேளும் பாதுஷாவே தங்கள்சொற்படிக்கு நாங்களிருவரும்எங்களுடையதாயை அழைத்துவந்தோமவர்களைதிரைக்குள்வைத்து வாய்மொழியாக சகலசங்கதியுங்கேட்டு கிருபைசெய்யவேணும்பாதுஷாவே,

பாதுஷாசொல்—விருத்தம்—இ-ம்—பூரிகல்யாணி,

மங்கையர்க்கரசியாரே வர்க்கொண்டுவிளம்பக்கேளாய் ※
எங்கிருந்திங்குவந்தா யெந்தவூரவரார்நீயும் ※



இங்குநீவந்ததென்ன இடர்துசெய்ந்தாரு ※
உங்கள்தன்சேதியெல்லாம் உள்ளதுசொல்லுவாயே, ※

வசனம்—கேளும் திரைக்குள்ளிருக்கிறமங்கையே நீ பிறந்ததேசமேது உன்பேரென்ன உன்னூர்பேரென்ன நீயிங்குவந்த காரணமென்ன இதுவெல்லாம் எனக்குத்தெரியச்சொல்லும் மங்கையரே

சபுரியத்துசொல்—விருத்தம்—இ-ம்—ஆகிரி,

மடத்தினிக்கணக்கன்மாரும் வலுவினிற்பிடித்துசுல்மான் ※
இடத்திலெட்டிபிரந்தபின்பு அவனென்னைநின்டக்கிட்டே ※
அடுத்தவன்றன்னைப்பிடித்தி யதிசமேகதைகள்சொன்னேன் ※
அடித்தவன்கோபாவிச் சிறையினில்வைத்திட்டானே ※

தரு—இ-ம்—ஆகிரி—அடதாளம்,

சிறைதனிலிருந்துகொண்டு சிந்தித்துப்புலம்பும்போது
அருகினிலேவந்துசுல்மான் அழித்திட நினைவுமானேன்
கொலையுமானபிறாளையின் சேதியாமேனைசொன்னேன்
நலநபியூசுநாளில் நடந்ததைதயனைத்துஞ்சொன்னேன்
இப்படியேநகறனாயிருந்திட்டேன் சிறைதனிலே
எப்படிவருமோவென்று ஏங்கினேன்கலங்கிருந்தேன்
பாதுஷாபிசுளையாளும் பாத்திபதிட்டத்திற்சென்று
ஓதினால்மியாதிதிர்ப்பார் ஓடியேபிழைப்போமென்று
வலுவினிற்பிடித்தசுல்மான் வந்தான்வங்கத்தன்னிலேறி
அலுவல்முடிக்கவென்று அவனுமுன்னிடத்தேவந்தான்
கப்பலிலிருக்கும்போது கண்மணிகளைச்சண்டேன்
அப்பனேமகனேயென்று அழுதுனைத்தேனங்கேயானும்
ஆண்டவனுதவியினால் ஆளவந்தபாலகரு
மாண்டிடவேண்டாமென்று மைந்தர்களேனைசொன்னார்
வேண்டிக்கொண்டாளென்னைப்பாலர் விட்டுக்களிடத்திலேலங்கே
இங்கேயழைத்துவந்தார் என்னையிந்தப்பாலகரும்
நங்கையர்க்கிரங்குவாரோ ஞாயங்கேட்டுத்தரவேணும்

சபுரியத்துசொல்—விருத்தம்—இ-ம்—பந்துவராளி,

உள்ளதுசொன்னேன்சாமூர் உனைவிட்டுவேறுநாட்டில் ※
கள்ளர்கள்பதித்துக்கொண்டார் கையிலொருகாசில்லாமல் ※
பிள்ளைகள்பசியால்நானும் பிச்சைக்குப்போனிடத்தில் ※
கள்ளிப்போய்சிறையில்வைத்தான் சண்டாளசுல்மானுனும் ※

வசனம்—கேளும்பாதுஷாவே முன்னால்என்னூர் சாமூர் பட்டணம் அவ்வூரைவிட்டுவேறுதேசத்தில் கள்ளர்பதித்துக்கொண்டார் அதன் பின்பு பிச்சைக்குப்போனவிடத்தில் என்னையும்பிடித்துசிறையில்வைத்து இல்லாதஅவமானமெல்லாஞ் செய்தான்பாதுஷாவே,

பாதுஷாசொல்—விருத்தம்—இ-ம்—ஆனந்தபைரவி,

அருமையாய்மனதுக்கேற்ற அவ்புள்ளபாலரே கேளாய் *
ஒருமையாயுங்கள்தாயார் உரைத்ததைமுழுதுங்கேட்டேன் *
கருமஞ்செய்கல்மான்தன்னை காவலில்வைக்கவேணும் *
குரும்பில்லாமிசுரையாளும் கொத்துவாலையழைப்பிப்பாயே *

பொதுவசனம்,

அகோதெப்படியென்றால் சாமூர்பட்டணத்தை யாண்டுக்கொண்டிருந்த அலிபாதுஷா மூத்தகுமாரனாகிய அபுசனுவென்பவனால் பட்டணம் துரத்துவிட்டபின்பு அந்தஅபுசனுவானவன்அனேகயிடங்களில் அலைந்துதிரிந்துமிசுர்பட்டணத்தை ஆளப்பட்ட பாதுஷாவிடத்தில்தகப்பனென்றுஅறியாமல் கொத்தவால்வுத்தியோகத்தில் அமர்ந்திருக்கிறகொத்தவாலை ராஜன் வுத்திரவுபடி பிள்ளைகள் ராஜனுக்கெதிராகஅழைப்பிக்கிறவிதக்காண்க,

பிள்ளைகள்சொல்—விருத்தம்—இ-ம்—முகாரி,

அந்தநல்மிசுரைக்காக்கும் அறிவுள்ளகொத்துவால்கேளாய் *
இந்தநல்மிசுரையாளு மியலலிபாதுஷாவும் *
உந்தனையழைக்கச்சொன்னா ரோடியேவந்தோம்நீயும் *
சிந்தையில்மிகமகிழ்ந்து சிக்கிரம்வாருமையா, *

வசனம்—கேளும் இந்தமிசுருபட்டணத்தைக் காக்கின்ற கொத்தவாலே உன்னைநம்பபாதுஷா அழைத்துக்கொண்டு வரச்சொன்னார்ஆனபடியினாலே அதிசீக்கிரமாவாருங்கொத்தவாலே,

கொத்தவால்வருகிற—விருத்தம்—இ-ம்—தன்னியாசி,

எத்திசையோர்தன்புகழு மியலலிபாதுஷாமுன் *
குத்திரஞ்செய்தபேரை கொடுவினைதானளிக்குஞ் *
சித்தமுங்கலங்கஅந்தத் தேசமுங்கிடுகிடென்ன *
சுத்தகேடயமுங்கொண்டு கடினமாய்வருகின்றாரே *

தரு—இ-ம்—தன்னியாசி—ஆதிதாளம்,

சுத்தமசாஹுரொடுந்துலங்கவே மிசுருர்தன்னில்
குற்றஞ்செய்தோரைதெண்டிக்குங் கொத்துவால்வருந்துடினம்பார்
கெடிகள்துடிநடனமிக்கவே கிடுகிடென்னசத்தமுழங்கிட
கொடிமுடிகளொடுங்கிடுங் கொத்துவால்வருந்துடினம்பார்
சுத்திகேடயமுங்குதிரைசனசதப்படிபாங்காவுடன்
சித்தங்கலக்கவேவுமோடியாய் திடுதிடென்றுகொத்துவால்வந்தார்

அபுசனுசொல்—விருத்தம்—இ-ம்—தோடி,

அன்னமேலமிசுரையாளும் அஜாத்துசலாம்அலிக்கும் *
பண்புடனென்னைநீரும் பாங்குடனழைத்தசெய்தி *
திண்ணமாயெனக்குச்சொன்னால் செய்குவனப்படியே, *
எண்ணியஅக்கருத்தை எந்தனுக்குரைசெய்வீரோ *



வசனம்—கேளும் பாதுஷாவே அடியனைநினைத்து அழைப்பித்தகாரியம் யின்னதென்று எனக்குத்தெரியச்சொல்லவேணும் பாதுஷாவே.

பாதுஷாசொல்—விருத்தம்—இ-ம் ஆனந்தபைரவி,

குத்திரஞ்செய்தபேரை தெண்டிக்குங்கொத்துவாலே *
சத்திரந்தனிலேபிச்சை தான்கேட்கப்போனபேரை *
புத்திரர்தனையுந்தள்ளி பிடித்துப்போய்விட்டகல்மான் *
சித்தமுங்கலங்கத்தானே சிறைச்சாலைதனில்வைப்பாயே *

வசனம்—கேளும்பிள்ளாய் கொத்துவாலே. சத்திரத்திலே பிச்சைக்குப்போனபேரைப்பிடித்து பிள்ளைகளை அடித்துத்துரத்திய கல்மானைச் சிறைச்சாலையில் வையும் கொத்துவாலே.

கொத்துவால்சொல்—வசனம்.

அப்படியேவைக்கிறேன்—பாதுஷாவே.

பாதுஷாசொல்—வசனம்.

கேளும் ஒசீர்மார்களே நீங்கள்அந்தகொத்துவாலின்பின்னாலேபோய் அந்தராஜி வைசி சிக்கிரமாய் சிறைச்சாலையில் பிடித்துவைத்த சமாச்சாரத்தை எனக்குஅதிசீக்கிரமாகப் போய்பார்த்துவந்து சொல்லுங்கள் ஒசீர்மார்களே.

ஒசீர்கள்சொல்—வசனம்.

அப்படியேபார்த்துவந்து சொல்லுகிறோம்பாதுஷாவே

கொத்தவால் ஒசீர்மார்களைக் கேட்குற—விருத்தம்-இ-ம்-முகாரி.

சிந்தைகூர்ந்தென்பின்வார இருவரேசொல்லக்கேளீர் *
எந்தவூரென்னபேருமெயவிடிப்விட்டுவடம்வந்தீர் *
தந்தையாருட்மைமுன்ற தாயின்பேர்முழுதுநீங்கள் *
இந்தவாறதனையெல்லா மென்முன்னேயுறைசெய்வீரே *

வசனம்—கேளும் சிறுபிள்ளைகளா உங்களூர்பேரும் உங்கள்பேரும் உங்கள்தகப்பன்பேரும் உங்கள்தாயின்பேரும் நீங்கள் இவ்விடம்வந்ததுவும் சகலசவிஸ்தாரமும் எனக்குத் தெரியச்சொல்லும் பிள்ளைகளா.

பிள்ளைகள்சொல்—விருத்தம்—இ-ம்-முகாரி,

செட்டியாயெம்மைக்கேட்டஇருமையுள்ளகொத்வாலேகேளாய்
இட்டமாயாங்களாண்ட தேசத்தையுரைத்தோமானால் *
இஷ்டமாயென்னமட்டோ எந்நாளுமதிந்தபோது *
சட்டமாய்நாங்கள்சொல்ல தயவுடன்கேட்பீரையா *

தரு—இ-ம்-முகாரி,

இன்பமாவரைசெய்பவென்றிரே—முன்
விருந்தவாலாந்தையப்புகுறோம்
அன்புடனேசாமூராண்டிருந்த
அலிபாதுஷாதன்பாலர்நாங்கள்

தையலே சதியாலே — எங்கள்
தாய்பேர்சுப்பிரியத்தம்மாளாகும்
வையகம்புகழ்வேலுன்னு பேர்
மைந்தனுக்கேவதான்பிறந்தேதரும்
முன்பிறந்த அபுசனுயெங்களண்ணன்
மோசத்தாலேபெண்கள் தன்னைக்கெடுக்க
வம்புசெய்தாரென்று அபூசர்க்குடி
வனத்திலேயெங்களை துரத்திவிட்டார்
வாட்டமாகவேயெங்களன்னைமுன்னேநடி
வந்துவிட்டார் நாங்களேகிருக்காலனும்
காட்டில்வருங்கையிலே எங்கள்தந்தை
கள்ளர்வந்தழைத்துக்கொண்டார்
சுல்தானுடசத்திரத்தில் நாங்கள்
திருசாபிட்கைகேட்கப்போனிடத்தில்
வஞ்சசெய்துயெங்கள்தாயை — அந்த
வண்டநிடங்கொண்டுசென்றார்
சேதியையெங்கள்பவாவுடன்
செப்பிடுவதிருபெருமோடிவந்து
மேதினிமீதுதத்திலேன்பாவா
முதலைவாயிலங்கேயகண்டுபேனார்
அன்போன்தமைதீனதிது — அந்நில்
அங்கேவிழுந்திடப்போகையிலே
மாண்டிடவேண்டாமென்றேருடக்காரன்
வளர்த்தான்வளவில்பிரியமதாய்
அந்தவிட்டிலேவளர்ந்து — நாங்கள்
ஆளானபின்படித்தவுக்காரன்
இந்தவூர்பாதுஷாயிடத்தினில்
எங்களைசேவகம்செவிக்கவைத்தான்
கட்டிலுக்குக்காவலாக — நாங்கள்
கடவுள்தன்கிருபையால்காவலையிலே
அற்புதமாயெங்களம்மாள் தன்னை
அங்கேயிருந்திடக்கண்டோமென்றார்.

பொருள் — வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தஇரண்டுபிள்ளைகளும் சொல்லி வருவதைக்கேட்ட அந்தஅபுசனுவானவன் இவர்களே தன் தம்பிமார்களென்றறிந்து இருவரையுங்கட்டிக்கொண்டு அழுகிறவிதங்காண்க.

தரு — இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

| | |
|---|---|
| அகமகிழ்ந்தம்பியரைக்கண்ட | தம்பிமாரே — உங்கள் |
| அண்ணன் அபுசனுநான் | தம்பிமாரே |
| அகமுடனேதாயைக்கண்ட | தம்பிமாரே — உங்கள் |
| அண்ணனபுசனுநான் | தம்பிமாரே |
| சகப்புகழும்சமூர்விட்டு | தம்பிமாரே — மறு |
| தேசம்வரலாச்சுதோடா | தம்பிமாரே |
| திகைத்துக்கட்குமுன்னேநானும் | தம்பிமாரே — நம்பள் |
| தேசம்விட்டுவோடிவந்தேன் | தம்பிமாரே |
| தாய்தகப்பனென்றனுலே | தம்பிமாரே — ஆண்ட |
| தரணிவிட்டுவெளிப்பட்டார் | தம்பிமாரே |
| நாய்நரிகளுள்ளகாட்டில் | தம்பிமாரே — கள்ளர் |
| நகைகளெல்லாம்பரித்தனரோ | தம்பிமாரே |
| பிடித்தந்தாயைசிறையில்வைத்தாரோ | தம்பிமாரே — இந்த |
| பிழைமோசத்துக்கென்னசெய்வீர் | தம்பிமாரே |
| அடுத்தவழியிலாற்றில்முதலை | தம்பிமாரே — எங்கள் |
| ஐயரைக்கொண்டுபோச்சுதோ | தம்பிமாரே |
| ஓடக்காரன்வசத்தில்பட்டீரோ | தம்பிமாரே — நம்பள் |
| அம்மாளெங்கேசொல்லிடுவீர் | தம்பிமாரே |
| வாடாமல்சொல்லிடுவீர் | தம்பிமாரே — எந்தன் |
| மனமகிழக்காட்டிடுவீர் | தம்பிமாரே |
| என்செயலல்லவோடா | தம்பிமாரே — இது |
| இன்றையவனமைத்தபடி | தம்பிமாரே |
| வன்சினைநான்செய்யவில்லை | தம்பிமாரே — இது |
| தலைவிதிப்படியாம் | தம்பிமாரே. |

பொருள் — வசனம்.

அகோதெப்படியென்றால் சம்சதினும் கமரதினும் தங்களுடையபட்டணம்துரத்துவிட்டுவந்தபின்பு தங்களுடையஅண்ணனாகிய அபுசனுவை யிதுவரையிலுங்காணாமலிருந்து இப்பநேரில் கண்டு அண்ணனென்றறிந்துக்கொண்டு மனமகிழ்ந்து அபுசனுவுக்கு திரைமறவிலிருக்கிற தன்தாயாரைக்காண்பிக்கிறவிதங்காண்க.

தம்பிமார்கள்-அண்ணனுக்குச்சொல்-விருத்தம் இ-ம்-தோடி.

எங்களை அம்மாவென்று யீயப்பிய அண்ணனே ✻
திங்கள்தன்முகமும்வாடி சித்தைநொந்துருகியேநான் ✻
அங்கமுங்கலங்கியேங்கி அழுதிருக்குனைக்காணமல் ✻
இங்கனேவாருமண்ணா யிருகிறாள்திரைக்குள்ளாக ✻

பிள்ளைகள் அபுசனுவுக்குச்சொல் — வசனம்.

கேளும் அண்ணனே உங்களைக்காணமல் நம்முடைய தாயானவள் அதிகவருத்தமாய் இவ்வம்பகளும் அழுதுகொண்டிருக்குறாள் அனேபடியிருமேலே அந்ததிரைக்குள்ளிருக்கிறாள்வந்துபாரும் அண்ணனே.

அபுசனுசொல் — வசனம்.

அப்படியேவருகிறேன் — தாண்பியும் தம்பிமார்களே.

பிள்ளைகள்தாயாருக்குச்சொல்—விருத்தம்—இ-ம்-பந்துவராளி.

எங்களைப்பெற்றதாயே இப்போது எங்களண்ணன் *
மங்களமாமிசுருதன்னில் வந்துமெகொத்துவாலானார் *
இங்கேதானழைத்துவந்தோம் இமதயமகிழ்தீயும் *
எங்கள்தன்கிருபையாலே தமையனைப்பாரும்மா *

வசனம்—கேளுமம்மா தாயே எங்கள் அண்ணனாகிய அபுசனை இந்தவூரில் கொத்தவால்உத்தியோகத்திலிருக்கக்கண்டு அவரைத் தங்களிடத்திற்கு அழைத்துக்கொண்டுவந்தோம் நீங்கள்சந்தோஷமாகப்பாரும்மாதாயே.

சபுரியத்துசொல்—சொச்சகம்-இ-ம்-ஆனந்தபைரவி

மகனேயுனைக்காணாமல் மனத்துயரத்தாலுருகி *
செகமெங்குமேதேடித் திரிந்தோம்சிறுபிள்ளைரெண்டும் *
வகையுடனேயெங்களண்ணன் வந்தானென்செய்திகேட்டு
அகமகிழவுனைக்கண்டேன் ஆண்டோனுதவியினால் *

வசனம்—கேளும்என்னருமையாகிய கண்மணியான அபுசனே இந்தனை நாள்வரையிலும் எங்கெங்கேதிரிந்தாயோ இப்போது உன் தம்பிமார் உன்னை நான் கண்ணில்காணும்படி கொண்டுவந்து விட்டார்கள் உன்னைக்கண்டு என்மனதின் துயரமெல்லாம் நீங்கினது மகனே.

அபுசனு சொல்—கவி.

தணிந்ததாய்பாதம் பணிந்துநின்றேதுக்கி
துணிந்தவன்சிலமொழி அணிந்தனனுக்கே

தரு—இ-ம்-ஆகிரி—அடதாளம்.

எந்தனைப்பெற்றதாயரே—என்னம்மா என்பாவாயெங்கே
சிந்தைகலங்கியேநான் தேசமவிட்டுவெளியில்வந்தேன்
சொந்துமிசுருதனிலே கொத்தவாலுத்தியோமானேன்
வந்துயென் துயரந்தன்னை மனங்கொடுத்துகேழ்க்கவேணும்
உங்களுடைய துயரங்கேட்க உடையவனறிவானம்மா
என்னுட துயரந்தனை இன்பமுடன்சொல்லுகிறேன்
மேதினியில்நீங்கள்பிச்சை மெலிவுடனேவாங்கியுண்டீர்
ஆதியோன்விதிப்படியே ஆற்றில்மடிந்தாரெங்கள்பாவா
தங்கப்பதக்கமிட்ட தம்பிமார்கள்தங்களாலே
உங்களைநான்கண்டேனம்மா உத்தமியேபத்தினியே
இந்தவூர்பாதுஷாவும் என்னைவளர்த்திட்டாரம்மா
சிந்தைமகிழந்தம்பிதாயை சீருடனேகண்டேனம்மா
என்னுடதாய்தனைக்கண்டாப்போல் என்பாவாவைநான்காண்ப
என்னம்மாஎன்தாயேநீ எனக்குவகைசொல்லவேணும் தெப்ப

சபுரியத்துசொல்—வசனம்

அப்படியே உனக்கு வகைசொல்லுகிறேன் கேளடாமகனே;



75

தரு—இ-ம் சங்கராபரணம்.

கடலேனும்படிகடந்து மகனே வழியில்தனித்துவருகையிலே
மதனுள்ளகாட்டில் மகனே கல்லடிபரிசொடுத்தோம்
இராக்கெனும்பள்ளியிலே மகனேயிருந்தோமேபட்டினியாய்
ஒராக்கிடந்திருவில் மகனே உன்தம்பிமாருதானி
தர்மமாய்சத்திரத்தில் மகனே எனைகப்பிவாங்கினதால்
தர்மக்கள்வாங்கியுண்டு மகனே தவித்திருந்தோம்சூலநாள்
புத்திரப்பசியாலே மகனே போனேன்பிச்சைகேட்க
பத்தினியென்னைப்பிடித்து மகனே பாவனைத்தானடித்தாரீ
பில்லல்லவெகுகொல்லி மகனே யிருந்தேன்சிறையதிலே
வல்லவனைநினைந்து மகனே மனதுவாய்ச்சிறையிருந்தேன்
புத்திசொல்லிப்பலகைக்கு மகனே போகச்சொன்னேன்பள்ளிக்கு
பத்தினியைப்பிடித்து மகனே பவிமுகம்கொண்டுவிட்டான்
சத்திரங்கட்டிவைத்த பாவியவன் சண்டாளகல்மானும்
நித்திரைசெய்திடவே பாவியவன் கொண்டான்மனதுக்குள்ளே
கலியாணஞ்செய்வேனென்று பாவி காவலன்கல்மானும்
வதுச்செயவந்தானே மகனே மாறுமேலேனிருத்தி
பன்மையாய்ராஜாவுக்கு மகனே பாவையாள்விதமெய்நேன்
என்சொல்லைக்கேட்டாரஜன் மகனே என்னைச்சிறையில்வைத்தான்
நூலவிருமாதலேன்பு மகனே முடிந்ததுயென்றுசொல்லி
அவனுடனேயனை மகனே அழைத்துவவென்றுரைத்தான்
சேனையழைத்துக்கொண்டு மகனே வகிவருகையிலே
என்னவனைநினைந்து மகனே மங்கைதையச்செய்தேனே
அந்தகதியையாமல் மகனே அவனிவனுச்செயவந்தான்
பத்தினியாள்மனது நொந்ததுவே பந்துவாய்ச்செய்தேனடா
குட்டரோகங்கொண்டு மகனே கோதாரியாய்கிடந்தான்
வட்டமதிபோலே மகனே வாடியிருந்தேன்சிறையில்
பத்தினியோருபெண்வந்து மகனே பதினெந்துநாளையிலே
சத்திக்குதிசொல்லி மகனே காவலோனான்
குட்டரோகந்தீர்ந்தபின் மகனே கோதையைமணமுடித்து
கட்டிடுவேனென்று மகனே கப்பலில்கொண்டுவந்தான்
இந்தபட்டுச்சேதி மகனே இன்பமாய்ச்சொல்லிவந்தேன்
வந்தமகனே மகனே மைந்தனேவரலாரென்றான்

சபுரியத்துசொல்—வசனம்.

கேளும்மக்களா உங்கள்பாவா மீனுற்றில் மிதந்துபோனதைக்குறித்து நீங்கள்துயரப்படவேண்டாம் அந்த துயரத்தை நீக்குவதற்கு நாலொருகதை சொல்லுகிறேன் நீங்கள் மூன்றுபேரும் கவனமாகக் கேளுங்கள்மக்காள.

சபுரியத்துசொல் — தரு-இம்-சங்கராபரணம்.

ஆதமலைக்கிச்சல் மக்களா அவ்வியத்தொன்னத்திலே
சோதிக்கிருபையினா லிருபேரும் சுகம்பெற்றிருக்கையிலே
நீதமுடனிறையோன் அவருக்கு நீக்கமக்கட்டளையிட்டான்
கோதும்பைக்கனிதவிர மற்றகனி சேர்தியுடன்தின்னுமென
வடிவாயிருபேரும் சுவர்க்கத்தில் வாழ்ந்தாயிருக்கையிலே
கொடியவனிபுலீசு மாயத்தாலே யோதும்பைக்கனியைத்தின்றார்
கோதும்பைக்கனிதின்றதனால் இறையவன் கோபமிகவாகி
ஆதியிறையவன் சிபுரீலை அழைத்திந்தச்சேதிசொல்லி
வடிவுள்ளசெனனத்திலே யிருவரை வைத்திடவேண்டாமென
கட்டிவிருவரையும் சுவனம்விட்டு கானகமாயிருண்ட
சித்தாவில்சருந்தீவி லிருவரை சேரமல்விட்டிடுவீர்
கர்த்தாவுரைப்படியே சிபுரீலும் கட்டவிருவரையும்
வத்துசிபுரீலு மிவர்களை வாரியெடுத்துவிட்டார்
நொந்துவெவ்வேறாக இருவரும் நெடுநாளாய்த்தானழுதார்
மூன்றுறாவருஷ மட்டும் இருவரு யோசித்துத்தானழுதார்
என்னவிதத்தாலு மிறையவன் இவர்பிழைபொருக்கவில்லை
அந்தமுதலில்லா இறையென்று ஆதரமிகவும்
சிந்தைமிகநொந்து துவாக்கேட்டு செப்பினதாலிறையோன்
உந்தனொளியாலே யுதித்த உண்மைநபிபொருட்டால்
எந்தன்பிழைபொருப்பாயிறையென்று இன்பதுவாக்கேட்டார்
அந்ததுவாவாலே நகமாலும் அவர்குற்றத்தைப்பொறுத்தான்
சிந்தைமகிழ்வாக யிருவருஞ் சேர்ந்துமேவாழ்ந்திருந்தார்
அவர்வாழ்ந்திருந்ததினால் மக்களா உலகெல்லாம்வாழ்ந்தது
இவ்வாழ்ந்திருந்ததினால் மக்களாஇன்னமும்வாழ்ந்துவாரோம்
இப்படிபோலவுங்கள் பாவாவை இறையவன்கூட்டிவைப்பான்
அப்படியாண்டிருக்கவும்பாவாவை நல்லாவுங்கூட்டிவைப்பான்
முன்போலசாகூராள மக்காள் முதல்வன்கிருபைசெய்வான்
இப்படியின்னமொரு கதைதான் என்மக்களாகேளும்

உ — வது — கதை.

பயத்துல்முகத்திசுலே மக்களாபண்டைத்தவன்கிருபையினால்
சயத்துள்ளாதூறுக்காய் சிபுரிலே தனியவனிறக்கிவைத்தான்
ஆதியிறையவனுஞ் சிபுரீல் அழைத்தவன்சேதிசொல்வான்
சோதியொளிவான சிபுரீலே துலங்குதூறுசுரபிக்கு
சோபனஞ்செல்லுமென்று சிபுரீலைசுருக்காயனுப்பிவிட்டான்
சபையெல்லாம்நாயகி சுலாத்திம் காட்டியழைக்கச்சொன்னான்
நயமொழிகேட்டவுடன் யூனூசு நபிநல்லசக்கிரியாமிடத்தில்
பயனுள்ளாயிம்மொழியை சக்கிரியாக்கு பாலன்மனைவியென
அந்தசொல்லைக்கேட்டுச்சக்கிரியாநபிஅழைத்துநீர்போகுமென



இந்தப்படியாக வெல்லோரும் இன்பமாவருகையிலே
பெக்கியம்மக்களுடன் நபியும் வெளிப்பட்டுவருகையிலே
வல்லவன்கிருபையினால் வழியிலோர் ஆறுகுறுக்கிட்டது
ஆதியிறையோ நபியோர்பிள்ளையை அக்கரையில்சேர்த்து
நீதியுடனேயோர் பாலகனை நிலைத்துவருகையிலே [விட்டது]
அந்நேரமோர்பிள்ளையதனைக்கொண்டு அடவியில்போய்
இந்நேரநபியுமென்ன செய்வோமென்று எண்ணிமனந்தனிலே
அந்தப்பிள்ளையைவிட்டு நபியும் அன்புடனேகையிலே
சந்தோஷமாகவேதான் சிபுரீலும் தான்கொண்டுவிட்டுப்போனார்
பட்டணம்போய்சேர்ந்து நபியும் பண்புடன்கலிமாச்சொன்னார்
கட்டளைப்படியாகரபியைக் கலக்கமடித்தார்கள்
முப்பதுவருஷமட்டும் நபியு முழுதுமடிகள்பட்டார்
தப்பாயிறைவனும் நெருப்பை தானேயிறக்கிவிட்டான்
அந்தவூர்முட்டாலேயெல்லோரும் அன்புடன்கலிமாச்சொன்னார்
முந்துவேயுபுவீசுநபியைப் மோசமாகக்கலைத்தான்
கலப்பிசகப்பட்டு யூனுசுநபி கப்பலிலேறினர்காண்
தலைத்தைவிட்டோடினதால் நபியுங்கானேகுதித்தார்காண்
கூடுதன்னுமீனும்நபியை கொத்திவிழுங்கினது
பார்த்திருந்தாப்போல ஆறுமீனும் பண்புடன்விழுங்கினது
ஆனைமீன்வயிற்றில் நபியும் நொந்துதுவாக்கேட்டார்
ஆனேமுநாலனேகமானோ தக்கோனைவாக்கேட்டார்
ஒன்றுசொல்லி நபியும் அன்புடன்துவாச்செய்தார்
தாமதமில்லாமலே நபியும் தான்துவாக்கேட்கலுற்றார்
ஏகன்கிருபையினால் அந்தமீனும் ஏடுகடலுக்கரை
வாகுடனே நபியின் இறையோன் வாக்கைதவிர்க்காமல்
நாற்பதுநாள்சென்றபின் கரைதனில்கக்கிடவுதவிசெய்தான்
நாற்பதுநாள்வரைக்கும் நபியும் நன்றாய்த்துவாக்கேட்டார்
அந்ததுவாவாலே நபியும் அன்புடன்கரைசேர்ந்தான்
இந்தப்படியாக வெல்லோரும் இன்பமாய்ச்சேர்ந்திடவே
கட்டளைப்படியாக பிள்ளைகள் சனவுறவும்வந்துசேர்ந்தார்
பட்டணம்போய்ச்சேர்ந்து எல்லோரும் பரிவுடன்வாழ்ந்தார்கள்
அப்படிப்பட்டவர்கள் மக்காள அன்புடன்கூடினேயா
அப்படிபோலவுங்கள் பாவாவையும் அல்லாவுங்கூட்டிவைப்பார்
முன்போலசாகூராள மக்களா முதல்வன்கிருபைசெய்வான்
இன்பமாய்க்கேட்டிருங்கள்மக்களா இன்னொருகதைசொல்கிறேன்

(க-வது-கதை)

மன்னவர்யாகூபுநபிக்குமைந்தர்பனிரெண்டுபேர்
பன்னிரண்டுபேர்களில் சுசபை யாக்குடனேவளர்த்தார்
யாக்குடனேவளர்த்து அவருக்குசே பழிசெய்யத்தானினைந்தார்

தாங்கிவளர்ப்பதாலே ஒருவர்க்கொருவர் சாவடிக்க நினைந்து
ஆண்டவனருட்படியே தமையன்மார் அனைவருந்தான்கூடி
மாண்டிடநபியூசுபை மோசமதாய் மடிந்திடவேணுமென்று
இழிச்செயலில்லாத நபிக்கு என்னென்னமோ சொல்லி
பழிச்செய்யநபியூசுபை யழைத்துப்போய் பாழ்கிணற்றித்தள்
ளவிழும்போது யூசுபநபி தனியோனைத்தானினைந்தார் [ளினார்]
வல்லவன்திருவருளில் நபியை வரிசையாய்த் தாங்கிவிட்டார்
இந்தப்படியாகக் கிணற்றிலிருந்தாரெழுத்தின்படி
வந்தவருத்தமெல்லாம் யூசுபு வுடனே பொறுத்து
என்னமுடன் கிணற்றில் யூசுபு இருந்து மூலையிலே
அண்ணமார்கள்கூடி பின்னேருமே அழிந்தாரே யூசுபென்று
செழுமையாய்த் தந்தையர்க்கு அவர்கள் செப்பலுற்றார்கள் அப்போது
அழகுள்ள யூசுபை நாங்கள் அங்கோர் மரத்தடியில்
விட்டுவிளையாடி நாங்கள் மெய்மறந்திருக்கையிலே
தம்பியையோநாய் வந்து பாவா அங்கே தானெடுத்துப்போச்சுதே
இந்தசொல்லைக்கேட்டவுடன் நபியும் ஏங்கிமனமடிந்து [ன்றார்]
சிந்தைதடுமாறி ஓநாய்களை சீக்கிரம் வரவழைத்தார்
உந்தனுடைபிள்ளை நபியூசுபை பிடித்துக்கொன்றாவென்றார்
உந்தனுடைபிள்ளையை யூசுபை உகந்துநாம் தின்பதானால்
பிந்திமஹ்சரத்திலே பிறப்போம் பேதகமில்லாமல்
சந்தேகமில்லையென்று ஓநாயெல்லாம் சத்தியஞ்சொன்னதுவே
வஞ்சமில்லையென்று நபியும் வாடித்திகைத்தழுதார்
நெஞ்சம்புண்ணாகவேதா நபியும் நெருப்பாய்ப்புழுங்கிருந்தார்
அப்படியாகபுநபி புலம்பி அழுதவர்தானிருந்தார்
இப்படியூசுபநபி பாழ்க்கிணற்றில் இருந்தார்சிலகாலம்
இனியென்னசெய்வதென்று கிணற்றினுள் ஏங்கிமனஞ்சலித்து
தனியோனைத்தானினைந்து நபியும் தாஉதுவாக்கேட்டிருந்தார்
அப்போதிறையவனுந் ஜிபுரீலை அழகுள்ளநீசடுக்கு
எப்போதும்பசியில்லாமலிருந்திட ஒருவன்னமணியுமென்றார்
சீருடனே கிணற்றில் யூசுபுக்கு சிம்மாதனமமைத்து
ஒருடனங்கிருக்க யூசுபுக்கு இறையவன்கிருபைசெய்தார்
சித்தமகிழ்ந்திருந்தார் கிணற்றினில் சிங்காதனமதிலே
மெத்தபுகழுடையுடன் சிலகாலம் மேன்மையுடனிருந்தார்
அதன்பின்னிசைத்ததை மக்களே யன்புடன்சொல்வேனீர்
பதுமையாய் வ்வழியில் வர்த்தகர் பெரும்படையாய்க்கூடி
காட்டில்சவுதாகரும் வழிதனைக் காணமலேமயங்கி
ஓட்டியேநாற்றிசையும் அலைவிட்டு ஓடியேபார்க்கச்சொன்னார்
ஆண்டவனருட்படியே ஒட்டகங்கள் அலைந்துதிரிந்ததினால்
கண்டமனிதருக்கு தண்ணீர்தாகங் கொண்டதுஅவ்வேளையில்



எங்குந்திரிந்தலைந்து யூசுபநபி யிருக்குங்கிணற்றைக்கண்டு
தங்குதலில்லாத தாகப்பசி சவுதாகர்க்குமுண்டாச்சுது
தாகப்பசியாலே சவுதாகர் தண்ணீரெடுக்கச்சொன்னார்
வேகமாயோடிவந்து கிணறைச்சுற்றி வெளியிலிருந்தெட்டிப்பார்
எங்குமோரொளிவாகக் கிணற்றிலிருக்கவே தானுங்கண்டு [த்தார்]
தங்குதடையில்லாமல் தோண்டிவிட்டு தண்ணீர்தனையெடுத்தார்
அங்கத்தழகுடனே யூசுபநபி அதிலே வெளியேவந்தார்
தங்கமணியூசுபை ஒட்டகத்தில் தானேற்றிக்கொண்டுபோனார்
சீமைவிட்டுடனெல்லோரும் நபியுமாயக் கிணற்றடிதன்னைவிட்டு
வெளிப்பட்டுப்போகையிலே அண்ணமார்கள் விலையாகவித்துவிட்டார்
நன்னயமுடன்சவுதாகர் நாடிநடக்கையிலே [ர்]
அந்நேயர்கபாடியில் நபியும் அலறியேதான்விழுந்தார்
சத்தன்தன்னை நினைத்து கடபைக்கட்டி கதறியழுகையிலே
வர்த்தகன் தானென்கண்டுயூசுபை வாடாவெனவடித்தான்
கண்பிதுங்கிடவே கொடியவன் கன்னத்தில்தானடித்தான்
மன்விண்ணுந்தெரியாமல் யூசுபநபி மயங்கியே மெய்மறந்தார்
இப்படியானபின்பு இறையவன் வல்லபடியாக
அப்போதிருமின்னல்மழையுமாய் அடித்ததுகாற்றுடனே
மவுத்தாயடித்ததென்று எல்லோரும் மயங்கியேயானழுதார்
மவுத்தாயடித்ததென்று எல்லோரும் பாரில்புரண்டழுதார்
மாணிக்கமானநபிகாத்தை வர்த்தகன் கண்டஞ்சி
காலில்வீழ்ந்து சயானமோயிருநீவிட்டு கசையேற்றுமென்றுகெஞ்ச
அப்போதிருளெல்லாம்விலகியே அகமுமகிழ்ந்தார்கள்
செப்பமாயெல்லோரு மிசுருமைதனைச்சேர்த்தார்
மாணிக்கயூசுபின்னழகை வையகத்தோர்கேட்டு
காணிக்கைகளும்வைத்து யூசுபை கண்டேமகிழ்வாரும்
அகத்தில்புதுமையதாய்தினந்தினம் அனேகம்பேர்வந்துகாண
ஜெகத்தில்பிரசங்கமாயிருக்கையில் சுல்தான்மகள்சுலைகா [பார்]
சேதிதனைமாத்துபாங்கிமாரை சீக்கிரமாயழைத்து
ஒருசவுதாகர்க்குயூசுபை ஊர்க்கோலங்கொண்டுவர
என்றுசொன்னவுடனே தாதியர்கள் இயம்பினார்சவுதாகர்க்கு
அன்றேசவுதாகரும்யூசுபை அலங்கிர்தபவனிவந்தார்
மெய்யாய்பவனிவரயூசுபநபி முகத்தினழகைக்கண்டு
அப்போசுலைகாவும்நபியைப்பார்த்து தங்கேதலைகுனித்தாள்
சித்தமகிழ்ந்தாள்சுலைகா சிந்தையுமகக்குளிர்ந்து
ஆசியருளொன்றுமனதில் ஆசைமிகவாகி
வடிவுள்ளநபியூசுபைவிலைக்கு வாங்கிநாம்கொள்வோமென்று
கடுகவேதானோடிவந்துமனமகிழ்ந்து கணவனுடன்சொல்லினாள்

மன்னனே பிள்ளையொன் றிருக்குது வாங்கித்தரவேணும்
கன்னிக்குப்பிள்ளையில்லையென்று நீயும் ககவே வாங்கித்தாரும்
சொன்னமொழிகேட்டிராசபை கருக்கா ஈவாங்கிக்கொடுத்தான்
சின்னசிறுபிள்ளையைக்கொ சேரமனத்துணிந்தாள்
இறையோனருளாலேஈசுரபி ன்மனத்துணியாதென்றார்
மறைவில்லனேவோ வென்றுசுலைகாவும் வம்புகள்தான்செய்தாள்
ஆசையுடனே உன்னையணைவதற்கு ஆகாதென்றலென்றார்
ஈசபின்சொல்கேட்டுசுலைகாவும் எழுந்தாள்வெகுகோபமாய்
என்னசெய்வோமென்றுசுலைகா யோசித்தேதானழுதாள்
மன்னனுக்குச்சேதியைச்சொல்லி மாட்டிவைத்தாள்சிறையில்
சிறையிலிருக்கை நிலைகளைவுக்கு சேதிகள்சொல்லிவேர்
இறையோன்கினவுகண்டேராசபையிக்கேயழையுமென்றான்
கண்டகனவை ஈசபுக்கு காவலன்சொல்லிடவே
விண்டார்பொருள்தன்னைராஜன்கேட்டு வெகுசந்தோஷமாகி
பிள்ளையாய்வந்தவரோ என்னுடையபட்டணத்தையாளுமென்று
வள்ளலாய்வாழ்ந்திருக்கப்பட்டங்கட்டி வைத்தார்சிம்மாதனத்தில்
பாசமுடனுன்வேருகையில் யாகுஷாவுமிறந்தார்
ராஜன்மடிந்தநாளில்சுலைகாவும் நரைத்துகிழவியானாள்
வடிவுள்ளபேரழகிசுலைகாவுக்கு வயதுதோன்றாதிச்சுது
படியாளுமன்னவனும் சுலைகாவைபாதுகாத்துவந்தனர்
வதொன்றும்பேசாமல்ராபியு மிருந்தார்வெகுகாலம்
காதல்நேசத்தியா சுலைகாவும்கணவன்சமைதியாள்
வல்லோன்தன்னைநினைத்து சுலைகாவும் வாடியேதானிருந்தாள்
மெல்லியாளென்னோமு மிறையோனைவேண்டிஆவாக்கேட்டாள்
ஏழ்மைத்தனமாக சுலைகாவும் எங்கிருக்கையிலே
செழுமையுடனிக்காவும் ராபியேநீ செய்துகொள்ளுமெனவே
படைத்தோனளிவாலே சுலைகாவுக்கு பதினாறு வயதுமாச்சு
வடித்தசொல்லீசுபியும் வசையாமனமுடித்தார்
சிந்தைமகிழ்வாகயிருபேரும் செல்வமிகப்பெருக
சந்தோஷமாகவேதா னிருக்கையில் தாய்பனும்வந்துசேர்ந்தார்
தனியோனுதவியினால் அண்ணமாரும் தாங்களும்வந்து சேர
இனியமகிழ்வுபெற்று இவர்கள் இன்பமாவாழ்கிலயோ கா,
அப்படியேஉங்கள்பாவாவை ஆண்டவன்சேர்த்திடுவான்
இப்படிபோலவுங்கள்பாவாவை இறையோனுஞ்சேர்த்திடுவான்
முன்போலசாதுராளமக்களா முதல்வன்கிருபைசெய்வான்
இன்பமாஎன்மக்களா நீங்கள் இறையோனைப்போற்றிசெய்யும்

சபுரியத்துசொல்—விருத்தம்—இ-ம்—பைரவி.

கண்மணியாய்வந்தக் கனியெலாந்திரித்தபோ
அண்ணல்தன்னின்பந்தீர்த்த அருமையாய்வந்தபேனா



மண்ணின்மேல்சிறுவிளொன்று மகிழ்ந்துதானிருந்தேனிப்போ
எண்ணிடாத்துயரமெல்லாம் என்தலையில்வந்ததப்பா

தரு—இ-ம்—தேசிகம்—தாளம்—திரிபுடை.

ஆதிமுதல்பிள்ளை அபுசனைவந்தமகனே — நீ
மாதேசமளவென்று மனதில்மகிழ்ந்தேனடாமகனே — செல்வமா
எதுவுந்துநீஇடமாகச் செய்தாயே மகனே — இப்போ
பேசவாயில்லாமல் பரதேசியாய்வந்தோம் மகனே — செல்வமகனே
பட்டங்கட்டியுன்னைப் பார்த்துமகிழாமல் மகனே — உன்றன்
அட்டகத்தனத்தாலே நூர்விட்டுவந்தோமே மகனே — செல்வமகனே
மாணிக்கம்போலவே வளர்த்தெடுத்தேனடா மகனே — சாமூர்
காணிக்கையாள்வாயென்று கருத்தில்மகிழ்ந்தேனடா மகனே — செல்.
பத்தினிப்பெண்களைக் குத்திரஞ்செய்ததால் மகனே — அந்த
பத்துவாவந்து பலித்ததாலல்லவோ மகனே — செல்வமகனே
சாகுபடிசாமூராள்வாயென் றிருந்தேனடா மகனே — உன்றன்
விரகத்தால்நீயும் வெளிப்பட்டுவந்தாயே மகனே — செல்வமகனே
வாக்குத்தவறித்ததால் வந்ததுயிட்டிழை மகனே — நம்ப
மார்க்கத்தவரிட வந்ததேமோசங்கள் மகனே — செல்வமகனே
என்னைவிட்டுநீயும் எங்கித்திரிந்தாயோமகனே — உந்தன்
அன்னைக்கொருமுத்தம் அன்புடன்தாரும் மகனே — செல்வமகனே
என்னெனிண்ணியுன்னை யேந்தியிருந்தேனடா மகனே — நாயன்
கண்ணின்ஒளிபோலக் கண்டுமகிழ்ந்தேனடா மகனே — செல்வமக
நாக்கிடைட்டபாடு நாயனறிவானேமகனே — இப்போ
யாருடனென்னைப் பத்துதேதிசங்கள் மகனே — செல்வமகனே
இப்படியெல்லா மிறையோன்வகுத்தானோ மகனே — இப்போ
நம்பினேக்காரியம் நீசெய்ததாலேயென்மகனே — செல்வமக
படும்விதியெல்லாம்பட்டுத் தொலைத்தோமே மகனே — இனி
வடிவுடனெல்லோருக்கும் வாகாநடத்துவாய் மகனே — செல்வமக
கர்த்தன்தன்னைக்கருத்தில் நினைத்துக்கொள் மகனே — குவிட—
புத்தியேவிட்டு குருசாய்நடத்துவா மகனே — செல்வமகனே

பெர்துவிருத்தம்—இ-ம்—பந்துவராளி,

இப்படிப்புலம்பப்போது இயலலிபாதுஷாவும் *
ஒப்புடன்பலதுங்கேட்டு உள்ளத்தில்சலிப்பதாகி *
தப்பிதம்வந்ததெல்லாம் தன்மனதிலேயெண்ணி *
அப்பவேமகனைக்கூவி அருள்செய்துமேலர்தவானே *

வசனம்—அகேதெப்படியென்றால் சபுரியத்காரனும் பிள்ளைகளும் அலிபாதுஷாவானவர் முதலேவாயில் பிரிந்துவிட்டாரென்று பலம்பி அழுதுபோது அலிபாதுஷாவானவர் தன்பெண்சாதியும்பிள்ளைகளும் வுயிர்போகாமல் வென்றுசேர்ந்து யிவிடங்கூடியிருப்பதற்காக மனம்பூரித்து தன்பெண்சாதிபிள்ளைகளொன்றிரிந்து அபுசனு

லை அழைத்து தான்வுயிர்பெத்திருப்பதாக சபுரியத்தாளுக்குத் தெரிவிக்கச்சொல்லுகிரவிதங்காண்க.

பாதுஷா அபுசனுவுக்குச்சொல்—விருத்தம்—இ-ம்—தேசிகம்

பங்கயமானயெத்தன் பண்புள்ள அபுசனுவே ❋
அங்கமுஞ்சாமூராளும் அலிபாதுஷாவெழுந்து ❋
இங்கனேமிசுரையாண்டு இருக்கிறானென்றுசொல்லி ❋
உங்கள்தன்தாயாருக்கு உத்தாரஞ்சொல்லுமென்றார் ❋

வசனம்—கேளும் என்மகனுகிய அபுசனுவே இப்போது நீஉன் தாயாருக்குப்போய் அலிபாதுஷா உயிர்பெத்து இந்தப்பட்டணத்தை யாள்கிறானென்று சொல்லும்மகனே,

பிள்ளைகள்சொல்—வசனம்.

அப்படியேசொல்லுகிறோம் பாதுஷாவே,

பிள்ளைகள்—தாயாருக்குச்சொல்—வசனம்,

கேளுமம்மா எங்களைப்பெத்ததாயே எங்கள்டாவாவாகிய அலிபாதுஷாவானவர் முதலைவாயின்று ஏசாநபியினுடையகிருபையினல் உயிர்பெத்து இந்தமிசர்பட்டணத்தைராஜரீகம்செய்துக்கொண்டிருக்கிறார் நீங்கள்விசனப்படுகிறதைப்பார்த்து தான்உயிர்பெத்திருப்பதாக தங்களுக்குத் தெரிவிக்கச்சொன்னாரம்மாதாயே.

பொது—வசனம்

அகோதெப்படியென்றால் அபுசனுவானவன் புருஷனிறந்துவிட்டதாக புலம்புகிரசபுரியத்தாளுக்குப் பாதுஷா உயிர்பெத்து இந்தமிசர்பட்டணத்தில் ராஜரீகம்செய்துக்கொண்டிருக்கிறாரென்று சொன்னதின்பேரில்தான்யெவ்வளவும்நம்பாமல் பாதுஷாவைக்கண்டுநெடுநாளானபடியாலும் அடையாளந்தெரியாமலிருப்பதினலும் தான்போய் பாதுஷாவைநேரில்கண்டு தன்சந்தேகந்தீர பாதுஷாவுடனே இஷ்டாந்திரங்கள் கேழ்க்கிரவிதங்காண்க.

சபுரியத்துசொல்—சொச்சசம்—இ-ம்—தேசிகம்,

நாடிமூந்துசாமூர் நகரிழந்துநாலுதிக்காய் ❋
வாடியேமீனுதிதில் மடிந்தவரெப்படியெழுந்தார் ❋
ஒடிவந்திவ்வூராள யுயிர்கொடுத்ததாருனக்கு ❋
தேடியஆண்டவனைமெத்த தெரியாதொருவருக்கும் ❋

வசனம்—கேளும் பாதுஷாவே முன் ஆண்டிருந்த சாமூர்பட்டணத்தைவிட்டு வெளிப்பட்டு எல்லாரும் திக்குதிக்காய்ப் பிரிந்துபோக உம்மை முதலை விழுங்கிவிட்டது நீரெப்படியுயிரோடெழுந்தது இப்பட்டணத்தை ஆளவந்ததையும் நீர்வுயிர்பெத்ததையும் தெரியச்சொல்லவேணும் பாதுஷாவே,

பாதுஷாசொல்—விருத்தம்—இ-ம்—தோடி,

ஆண்டவனருளால்வந்த அழகுள்ளசபுரியத்தே ❋
வேண்டியதாலேமக்கள் விருடன்வந்துசேர்ந்தார் ❋



79

யாண்டேனுன்முதலைவாயில்மண்டையைச்சக்கியங்கே ❋
மீண்டேசாநபியால் விருடனுயிர்பெத்தேனே ❋

வசனம்—கேளும்சபுரியத்தே என்னைமுதலைத்தின்றுமண்டையை கக்கிவிட்டது அந்தவழியாகஏசாநபிவந்து என்னைப்பார்த்து அல்லாவிடத்தில் துவாக்கேட்டு என்னையெழுப்பி இப்பட்டணத்தை யாளும்படியாகக் கட்டளையிட்டுப்போனர் அதேபடி நானுமாளுகிறேன்சபுரியத்தே,

சபுரியத்துசொல்—தர்க்கதரு—இ-ம்—தோடி—ரூபகதாளம்.

உறுதியென்றென்னைச்சொன்னீர் குலகுக்கேர்க்குமோஎந்தன்
உண்மையுள்ளகணவரோ யென்றுளமறியாதே

பாதுஷாசொல்—தரு

அருமியாய்நான்வந்ததெல்லாம் அருளவென்னுயகரிவ்வூர்
ஆர்தனில்முதலைவாயில் அகப்பட்டுமாண்டார்

சபுரியத்துசொல்—தரு

செத்தவர்பிழைப்பதிந்த சகத்தினிலுண்டோவென்றன்
செப்புமொழிதப்பாதெந்தன்நெஞ்சதப்பழியாதோ

பாதுஷாசொல்—தரு

ஆத்தங்கரைதனிலே மண்டைகக்கியெத்தனே
ஏசாநபியங்கேபார்த்து உயிர்கொடுத்தார்மயிலே

சபுரியத்துசொல்—தரு

நல்லதுயென்கணவா அலிபாதுஷாப்பேநான் இப்போ
நான்கிந்துகேட்பேனதற்கு தானுரைப்பீரோ

பாதுஷாசொல்—தரு

சொல்லக்கேளுமென்மனைவி சபுரியத்தே உந்தன்
சொந்தமுள்ளக்கணவர் அலிபாதுசாப்புநான்

சபுரியத்துசொல்—தரு

நல்லதுயென்கணவா அலிபாதுசாப்பேநான் இப்போ
நான்கிந்துகேட்பேனதைத்தானுரைப்பீரோ

பாதுஷாசொல்—தரு,

தானுரைப்பீரென்றுசொன்னீர்—சாற்றுமயில்குயிலே
என்றனுடஅடையாளந்தர் —னின்பமாகக்கேளும்

சபுயுரித்துசொல்—தரு,

ஆதிமுதல்முன்னளையிலே சாமிலானயீர் — நம்பள்
இருபேருக்குமுதிதுவகைசெய்தபீர்

பாதுஷாசொல்—தரு

சென்றிருக்கும் அபுதல்றகமான் முதி துவாக்கேட்பீர்
செப்பினுரேமுறைநயோடேறப்பில் அவ்வலில்[அப்போ

சபுரியத்துசொல்—தரு,

இக்கிதமாகவேசொன்னீ ரெங்களரசே — முன்னாள்

எத்தியுடன் பிரிவொழித்த விலவிலாபெண்கொ

சபுரியத்துசொல்—விருத்தம்—பூரிகல்யாணி,

உதவிஞரிசாரமி பிச்சனைப்பெண்மனைக்க ※
இதமுடன் சாஜூரிதன்னில் இருக்கையிலிருபேருக்கும் ※
விதமுடன் குறிஞ்சிகண்டு விருடனேந்தரக்கம் ※
அதையறிந்துநாள் சாஜூர் அலிபாஷாவாய்ப் பெயராகும் ※

(வசனம்)—கேளும் அலிபாஷா வென்கிற நம்பேர் [illegible] தாயைச்சொன்னீரே ஆதியில் உனக்கும் உனக்கும் நடந்திருந்தாற் போல்சொன்னீர் நீரே அலிபாஷாவென்று நீர் பாஷாவைப்பே

பாஷாசொல்—விருத்தம்—இ-ம்-முகாரி,

குறிகுணமாக்கம் கூறுமென் னுரைத்தாய் நீயும் ※
அதிலொப்பிள்ளையாக அபசாரமுன் பிறந்தாள் ※
பிரியமாயுன்னையாநும் பெண்ணோர் வார்த்தைசொல்லேன் ※
பெரியநாளொன்று நீயும் பேசலாமென்றீரே ※

(வசனம்)—கேளுஞ்சபுரியத்தே நக்கு ஆதிமுதல் பிள்ளை அபசாரபித்தாள் அப்போ நாஷாவுக்கு அந்தக்கணமே வார்த்தைதான் பேசல்லை அதைக்கேட்டு இந்நாள் பெரியநாளைப்பழியிருவே நாயிருவரும் பேசலாமென்றீர் சபுரியத்தே

சபுரியத்துசொல்—விருத்தம்—இ-ம்-காம்போதி

பேசலாகாதென்ற பேச்சுளநுமெய்யே ※
ஆசையாய்ப்பிறந்தபிள்ளை அபசாரமெய்ததுவ்விட ※
ரோசமாகசாட்சி நிசப்பெற்றசொன்னதாரு ※
தேசத்தோர்பெரியவின்று சேதியைப்புகழ்செய்வாயே ※

(வசனம்)—கேளும் பாஷாவே நம்முடையபிள்ளை அபசாரம் செய்ததொண்மைக்கு சாட்சிசொன்னவரார் அதைஎனக்குத் தெரியச்சொல்லும் பாஷாவே.

பாஷாசொல்—விருத்தம்—இ-ம்-ஆனந்தபைரவி,

மச்சமோகிடத்திலுண்டு மலையிருள்தரித்துக்கொண்டு ※
நிச்சயமாகசாட்சி நிகழ்த்திநானொருகிழவிதானும் ※
நட்சணமாகவூரார் சாமையில் கேட்கச்சொன்னார் ※
அச்சமேபோவெண்ணவேண்டாம் அலிபாஷாயப்பூரனே ※

(வசனம்—கேளுஞ்சபுரியத்தே உன்னிடத்தில் ஒருமச்சமுமுண்டு சாட்சிசொன்னவள் கிழவி அதனால் நம்மைமவூரார்கள் ஊர்விட்டுப் போவென்றார்கள் இதுவெல்லாம் மெய்யோபொய்யோசொல் சபுரியத்

சபுரியத்துசொல்—விருத்தம்—இ-ம்-ஊசேனிகாம்போதி, [தே
மீறுதன்னிடத்தில் நமமும் பிரியமாய்முதிறவாக்கும் ※
வசமாரிமானிருத்தில் வல்லபமொழுமித்தநந்தால் ※
தெருசலாகப்பார்த்து மித்திரைபுகன்றிகூர்ந்தோர்க்க ※
சிருகலிசத்தன்னை அறிந்துநான் அருள்வேனென்றாள். ※



(வசனம்)—கேளும்பாஷாவே ஆதியில் நாம்பள் முதிருளாங்கினோமே அந்தகலசிலவை நுன்னார்தவிராமல் எழுதி அனுப்பிருல் நாஞ்மெய்யென்றுவேன் பாஷாவே,

பாஷாசொல்—விருத்தம்—இ-ம்-நாதநாமக்கிரியை; [தே
கண்மணியானபாலா கமரிதன் சபுரியத்தே ※
பெண்மையைப்பொன்னுடனின்மோ பதிவியாய்ச்சிறிசிலவை ※
பெண்ணமைய வெழுதித்தந்தால் வகையெலாஞ்சொல்லுவேனென்றாள் ※
வல்லமையா யெழுதித்தந்தேன் வாருடன் கொடுத்துவாரீர் ※

(வசனம்)—கேளும் சமரிதன் சபுரியத்தே உங்களிடத்தில் முதிருவார்த்தை சிலசிலவை எழுதி அனுப்பினைவக்கச்சொன்னேன் இதோ இதை அவள்கையில் கொடுத்துவாரும் பிள்ளைகளா.

பிள்ளைகள்சொல்வசனம்—அப்படியே கொடுத்து வருகிறோம்]

பிள்ளைகள்சொல்—விருத்தம்-இ-ம்-தேசிகம். [பாஷாவே
பரிவுள்ளபாதுஷாப்பு பாலகரென்மையழைத்து ※
அரிகுரிகாயிதத்தை அனுப்பிமருந்தன்பிட்ட ※
பிரியமாகொடுக்கச்சொன்னார் பெண்மையுமொழிதனாரும் ※
தரியடஅப்பத்தெங்கள் குருச் சாத்துவிரகமாயமோ ※

(வசனம்)—கேளுமம்மாதாயே அலிபாஷாவானவர் எங்களை மக்களேயென்றழைத்து இந்தகடிதத்தை உங்கள் தாயார்கையில் கொண்டுபோய் கொடுமென்றனுப்பினார் அதை தாங்கள் வாசித்துப்பார்த்து எங்களுக்குப்பதில் உத்திரவு சொல்லவேணுமோ தாயே.

சபுரியத்து பிள்ளைகளுக்குச்சொல்— விருத்தம்

கூறுவினென்றமக்கா குறிகுணமத்தாரியும் ※
விருடன்முன்னிருந்த விதமெலாங்காகிதத்தில் ※
எசுடன்முழுதுங்கண்டு பொருளெலாமெழுதித்தந்தார் ※
பாருலகாளுமுங்கள் பாவாவுமிவர்தானப்பா ※

தரு—இ-ம்-ஆகிரி-அடதாளம்,

பாலகரேயுங்களுடைய பாவாவும்இவர்தான்மக்கா
ஆலமதையாளுகின்ற ஐயாவும்இவர்தான் மக்கா
அதிபருனாவைத்த உம்மையமுயிர்தான்மக்கா
சோதினைக்குறிகளெல்லாம் சொன்னதெல்லாம்மெய்தான்மக்கா
சசாநயினுன்னாருளால் எழுதிருந்தேனென்றசொல்லை
ஆசையுடன்கேட்டுப்பார்க்கு அன்டவனுதவிசெய்தான்
பண்ணியதவத்திருலே பாரினில்சகலோர்மெய்க்க
புண்ணியபுருஷரோடு பூமிதனில்வாழ்ந்திருக்க
எஜமானேதன்பிள்ளையோடு எல்லவருங்கூடினோமே
விசுவாசமறவாதென்று வேண்டிதன்புருஷரோடு
தவறினுவேபெற்றபிள்ளை தன்மீதில்கோபம்வேண்டாம்
அபசாரமல்லோ அயதிபட்டோமென்றென்றே

உத்திரவைதட்டிஞனென் றங்கள்மனதில்கோபம்வேண்டாம்
சத்தியமாகச்சொன்னேன்சொன்னேன் தயவுள்ளமன்னவரே

சபுரியத்தி பாதுஷாசொல் தரு-இ-ம்- கல்யாணி-சாப்புதாளம்.

சத்திரந்தனிலேபோக வேண்டாமென்றேன் சபுரிதேயுன்னை-நான்
இத்தனை பவதியுடன்சொல்லைதட்டி-னதிஞலே யிடர்வந்தது
பத்தினிநீதுவாச்செய்ததிஞல் பாதையில்சநடி
சித்தமகிழ்வோனிறையனருளாலே செப்தாரீஅயாத்துடனே
சந்தோஷமாச்சுதே சபுரியத்தேயுன்றன் சத்தியநிலைத்ததுகாண்
சீர்மைதங்கிந்துநீவாராயாசுக்கு சிர்ணைசபுரியத்தே

பாதுஷா பிள்ளைகளுக்குச்— சொல்—விருத்தம்-இ-ம்-தோடி,

சமரதின்மனையாற்றங் கரைதனிலுன்னைவிட்டு ※
சமுசதின்தனேயெடுக்க தானப்பட்டவோத்தில் ※
நமையுமேமுதலைதின்று நான்மடிந்தேனேமக்காள் ※
உனதுளபிரங்கடைக் காரணந்தோன்றினதே ※

(வசனம்)—கேளும்மக்களா உங்களை அக்கரையிலும் இக்கரை
யிலும் வைத்துவிட்டுவருகையில்ஆற்றில் என்னைமுதலைபிடித்து விழு
ங்கிவிட்டபின் எனனமாயழுதீர்களோ மக்களா.

பிள்ளைகள் தகப்பனுக்குச்சொல்-விருத்தம்-தரு இ-ம்-தோடி-

ஆற்றங்கரைதனிலே- பாவாநாங்கள் அழுதுகொண்டேயிருந்தோம்
பார்த்துமவைதன்னை பாவாநாங்கள் பாதவித்தேயிருந்தோம்
எங்களையோடக்காரன் பார்த்து எடுத்துவளர்த்தான்பாவா
உங்களிடத்திலேதான் பாவாநாங்கள் ஒசிராயிருந்தோம்
தங்கள்கிருபையிஞல் பாவாநாங்கள் தாயாரையுங்கண்டோம்
இங்கேவந்ததிஞல் பாவாயெங்கள் அம்மாளையுங்கண்டோம்
ஆண்டவன்கிருபையிஞல் - பாவாயெங்களன்னையரைக்கண்டோம்
மீண்டும்மைதம்மைக்கண்டோமிறையவன் முகமலர்ந்தொன்றாக
அல்லாயிடந்தனிலே பாவாயெங்கள் அம்மாதுவாவுஞ்செய்ய
எல்லோருமொன்ருக பாவா நமக்கிறையவன்கிருபைசெய்தான்
சத்தியம்நிலைக்கவைத்த எங்களம்மாசபுரியத்தாள்கதையை
எத்திசையும்புகழ ஐயம்பேட்டை யிகுலாந்குலந்தழைக்க
சத்தமாவல்வந்த சக்கிரியாபள்ளி கப்பாரவுத்தன்சுதன்
நித்தமகிழ் ஐயாரவுத்தர் சின்னகுழந்தையுமே
பத்திபடனேயர்க முகம்மது பாவகீறங்கனியும்
வெற்றியுடன் பெரியக்குழந்தையும் பெண்பரிசையுந்தந்தார்
பாக்கியசம்பத்தும் தனக்கு படைத்தோனுதவிசெய்வான்
வாக்குபலித்திடவு மவருக்கு வல்லோனுதவிசெய்வான்

பிள்ளைகள்சொல்—விருத்தம்-இ-ம்—குமபகாம்போதி,

ஆதியேரகமாதுன்னை யளவிடப்போகாதானே ※
சோதியென்கிருபையாலென் துயரத்தைநீக்கிவைத்தாய் ※



நீதியேதடியேனுக்கு நேர்விழிதனைக்கொடுத்து ※
மேதினிதசெய்தகுற்றமெய்ப்புடன்பொறுத்துக்கொள்வீர்

அயுசனுசொல்—கொச்சகம்—இ-ம்-முகாரி.

நாமொழுலைவிட்டு நாணலத்தேனுங்களையே ※
தேடியெக்குங்காணுமல்திகைத்திருந்தென்றல்நீங்கள் ※
வாடியேகெட்டலைந்து வந்திர்கள்நான்செய்தக் ※
கோடியினைழயான்குறை குற்றம்பொறுத்துக்கொள்வீர் ※

தரு இ-ம்- சங்கராபரணம்—ஆதிதாளம்,

குற்றம்பொறுத்துக்கொள்ளும் என்பாவா
குற்றம்பொறுத்துக்கொள்ளும்
என்னுலேநீங்களு மூரிவிட்டுவந்திர்கள்
பின்னுமிப்பாடெல்லாம் பட்டுத்தலைந்திர்கள் குற்றம்
பாதைநடந்திரோ பாலகருடன்கூடி
நீதாக்கள்ளாக்கே திரவியம்பறித்தாரோ குற்றம்
பொள்ளைக்கொடுத்து கொடியவனத்தினில்
பிள்ளைகள்பசியாலே பள்ளியில்சேர்ந்திரோ குற்றம்
தம்மசத்திரத்தில் சனகம்வாங்கப்போக
கர்மக்கொண்டகணக்கன் கள்ளிக்கொண்டுபோனுனேகுற்றம்
அன்னையேயுனைப்பிடித்து அருமையாய்ப்பாலரைத்தள்ளி
சின்னப்படஅடித்து இட்டியுதைத்தானே குற்றம்
பள்ளியிலென்பாவா பாதவித்தழுதிர்களோ
பிள்ளைகளைக்கூட்டி போரவழிதனில் குற்றம்
ஆறுந்தின்பாவாவை முதலைபிடித்துக்கொள்ள
...னுயிருவரேங்கித் தனித்துஅழுதிரோ குற்றம்
பத்தினியென்தாயே பாவிகள்மானுன்னை
...தைத்தானுசிறைதனில் பத்துவாய்ச்செய்திரோ குற்றம்
ஆண்டவனுக்களுக்காக அன்னைதந்தையேயுமை
...வண்டிக்கொண்டேன்குற்றம் விரைவுடநீங்களும்குற்றம்
...யோனுக்காகவே தம்பிமாரேநீங்கள்
இனிஎன்னுடன்குற்றம் இரங்கிபொருத்துக்கொள்வீர் குற்றம்

பொது— வசனம்.

அகோதெப்படியென்றல் கல்மாணவன் தான்சிறைபிடித்த
சபுரியத்தாளும்தன்கணவனும் பிள்ளைகளும் ஏகாலத்தில் ஒன்று
ச்சேர்த்து நெடுநாள் பிரிந்துவிட்டுயிருந்து இப்பசபையில்லொ
ன்றுசேர்ந்து விசனப்பட்டு மனந்தேதி சந்துஷ்டி யடைந்திருப்ப
வைதக்கண்டு தான் சபுரியத்தாளைச்செய்த அக்கிரமங்களைக்குறித்துத
னக்கு யென்ன கொடிய தெண்டனைசெய்வாரோவென்று மனக்கல
க்கங்கொண்டு புலம்பி யழுகிரவிதங்காண்க.

கல்மான் சொல் — விருத்தம். இராகம் - பந்துவராளி,

மைந்தருமனைவிதானும் வாழலிபாதுஷாய்பும் *
சிந்தைகள்மகிழ்ச்சேர்ந்து சேதியளேத்துக்கேட்டு *
விந்தைமிதென்னவென்று விசயிலாஅரசன்றானும் *
புந்தியில்கலக்கமாகிப் புலம்பியேயழுகின்றானே *

தரு - இ - ஆகிரி — அடதாளம்,

என்னசெய்வேனே துசெய்வே — னென்னசெய்வேனிப்பாவே
இன்னமென்னசெய்யப்போறேன் — என்றன் விதியெழுத்தே
தீமைகளைச்செய்தவர்க்கு — தனியிடி விழுந்ததையோ
கர்மசண்டாளன்போல்லாதபாவிகவுந்தக ருசெய்திட்டானே
பத்தினியென்றறியாமல் நான் — பாவதோஷஞ்சொன்னதாலே
சித்தமுகங்கலங்கிப்போக — சாபமிட்டாள்சபுரியந்நாள்
அந்தசாபமிதிவென்று அலிபாதுஷாயிடத்திலவந்தேன்
இந்தவிதியானதியேன் — மேல்பாவேயென்னசெய்வேன்
பத்துதேகிரோகமெல்லாம் — பார்த்துமனப்பொருந்திடாரோ
சித்தமுங்கலங்கிப்பாவி — திகைத்தமுகவிதியாச்சே

கல்மான் — பாதுஷாவுக்குச்சொல் — விருத்தம் - இ - பூரி - கல்யாணி,

நோய்பிணிதீர்ப்பீரென்று நோக்கியும்மிடத்திலவந்தேன்
நியாயமாயென்னைக்கேட்டு நலமுடனமைத்திடாதல் *
காயகமாகப்பெரி கப்பல்விட்டழைத்துக்கொண்டு *
தாயகமாகச்செய்தால் தர்மமோசொல்லுவீரே *

கொத்தவால் — பாதுஷாவுக்குச்சொல் — விருத்தம் - பூரி - கல்யாணி,

அட்டதிக்கெங்கும்போற்றும் ஐயாவேசொல்லக்கேளீர் *
இட்டமாயெந்தன்தாயை சிறையினில்வைத்தபாவி *
குட்டரோகந்தான்கொண்ட கொலைக்காரகல்மன்தானிவ *
பொட்டணநிறுத்திவெட்டப் போகவுத்தாரஞ்செய்வீர் *

பாதுஷா தன்குமாரனாகிய — கொத்தவாலுக்குச்சொல் — விருத்தம்

அட்டதுஷ்டங்கள்செய்யும் தடிகளுவேளைப்பீயும் *
எட்டிடாக்கொம்பின்தேனுக்கிவன்முடவனைப்போல்நாடி
தட்டிடாமகனேநம்மைத் தானம்பிவந்ததாலே *
வெட்டவேவேண்டாம்வாக்கை விடுவடன்கேட்போமப்பா *

பாதுஷா கல்மானைக்கேட்கிற — விருத்தம் - இ - முகாரி,

நாடியேதர்மஞ்செய்ய இருக்கெனும்பதியில்சத்திரம் *
வீடுகள்கட்டிவைத்து விபரீதபுத்திசெய்தாய் *
வாடியேபிச்சைகேட்க வந்திடும்பெண்ணுள்தன்னை *
தேடியேஅழைத்துப்போன சேதியைச்சொல்லுவாயே *

கல்மான்சொல் — தரு - இ - முகாரி — திரிபுடைதாளம்,

சொல்லுகிறேன்கேளுமையா — னைது துன்பத்துலேசவத்த
வல்லமையக்கேளு மதிமோசம் வந்ததைதன்னை



முன்னமேயென் றூரில் தானதர்மமுறை நீடுவேவென்கேசிறோலி
அன்னதானஞ்செய்திடசத்திரம் அதுக்காகக்கட்டிவைத்தேன்
கட்டினசத்திரத்திலிருந்த களக்களும் வந்து போகன்றனே
இட்டமாய்வாறவொரு பெண்ணுக்கு சீமியின்றுவந்துசென்றனே
சொன்னமொழிகேட்டு நானிந்த அன்பமைந்துக்க — [விப்பேனே]
என்னுடையசுயிருக்கு முன்சபிப்பினிலே இட்டதுனையிலே பெருவேன்
பொலீசுவென்றுசொல்லக் அதனைக்கேள் கெறைதகராட்டியிதிறுதல்
அன்றவன்மொழிகேட்டு இதுபோல் கவலையின்றன்மானக்குதேன்
கலியாணஞ்செய்திடவேனுன்னை நானோகமுந்தீங்கில்லி [மேத்ன்]
தனியாதனக்கு ஆரமாதந்தின் நேரில்பிசியந்திடவே [னேன்]
தோன்பதுவென்று சொன்னவேளிலே மீனுதோகழுதெயுடைத்தேன்
நோன்புமுடித்தவுடன் கலியாணம் தீர்மையாசெம்போம்பென்று
வேடிக்கைசெய்வேனென்ற அச்சொல்லின்படிவேகேட்டு
பெருடிக்கையாகவேதா னைக்கு பாசாயங்கொடுத்தாள்
சாபந்தொட்டுகொடுக்க உடம்பில் வந்ததுகுட்டநோவு
பாவமதைத்துலக்க உக்களுடைய பாதத்தைநாடிவந்தேன்
பத்தியதாகவேதானிக்கு பார்த்துவிடும் நோயை
சத்தியமாகச்சொன்னேன் அந்தவென்தாயெனக்காருமென்று

கல்மான் பாதுஷாவுக்குச்சொல் — விருத்தம் - இ - முகாரி, [ன்]

சத்திரங்கட்டிவைத்தேன் அருமதானங்கள்செய்ய *
புத்திரனோடேவிட்டசை கேட்கவேவந்தபெண்ணை *
மித்திரஞ்செய்ததாலே வெகுகுட்டமாகவிட்டதின் *
உத்தமேபெருமென்னுயிர்தன் குஷ்டரோகம்தந்திட்டபாய் *

(வசனம்) — கேளும்புசாமியோவன் அதிசத்திரங்கட்டிவைத்து அதில் தானதருமம் கொடுக்க நிச்சயித்து இந்தவிதமாகவருவதற்குச் செய்ததல்ல என்விதிவசத்தாலே. வந்தகுஷ்டரோகத்தைதீர்த்து காப்பாற்றும் பாதுஷாவே.

சபுரியத்துசொல் — தலைவல் இக்கண்டா.

அதிசேயன்னை அன்புடன் வணங்கா
நிதமோகியர்க்கு காவர்க்கமுமன்னோ
மந்திரமையன்னைக் கருத்தினில் வணங்கா
புத்திகேட்டோர்க்குப் பெருமையென்னோ
வல்லவன்தன்னை வணங்கிடாப்போக்கிர
நல்லவரென்று நயம்பெருவரோ
அலிபாதுஷாவென்னை அருந்துயர்தியில்
கலியாணஞ்செய்த காலமேகொடுத்து
பின்னையோர்தன்னிடம் பிழைசெய்தனன்னோ
உன்னையறியா ஒளிப்பதென்னோ
பத்தினியாவென் பத்துவந்ததோ

சத்தநாயகனே கபேவே அசத்தி
கொடியவன் சல்மான் குணம்பெறச்செய்யென
அடியவள் நாயகனை அன்புடன் கேட்டாள்]

அலிபாதுஷா சல்மானுக்குச்சொல்—விருத்தம்-இ-ம்-தோடி,

உள்ளதுசொன்னதாலே உனக்குவென்குட்டமெல்லாம் ※
வள்ளலாருளினாலே வியாதியுந்திருக்கண்டாய் ※
தெள்ளியகலியாவோர் தேசங்கள்முழு தமுத ※
மெள்ளவேயெழுந்துவாரீர் வியாதிகள் நலமதாக ※

சல்மான் வசனம்—அப்படியே நடக்கிறேன் பாதுஷாவே,

பாதுஷா சொல்—கவி,

ஆதிநாமத்தை யோதிமேலுத
வேசமெல்லாம் நீங்கிப்போயின

பொது—(வசனம்)

அவ்விதப்படியென்றால் பாதுஷாவானவர் ஆதிநாயனுடைய திருநாமதானங்களை ஓதி அந்த சல்மான்பேரில் ஊதவும் அவனுடையவியாதியெல்லாம் பஞ்சுபோலப்பறந்து அவனைவிட்டு வோடிவிட்டது அவனும் மிகுந்தசந்தோஷமடைந்து நின்றான்.

சல்மான்சொல்—தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

துய்யாசரணம் அலிபாதுஷாதுய்யாசரணம்
மெய்யின்விதியால் வெளிர்த பாவிதன்னை
கையாலெடுத்தென்னைக் காத்தாட்கொண்டவிட—(துய்யா)
வழுச்செய்தபாவியின் வினைகளையுந்தீர்த்தாய்
கொழுச்செய்ய அழைத்திய [illegible]சரணம்—(துய்யா)
ஈனங்கொடுமைகள் [illegible]செய்தபாவியின்
மானங்காத்துவிட்ட மன்னவா சரணம்—(துய்யா)

பாதுஷா வசனம்—கேளுஞ்சல்மானே இனிமேலாகிலும் நல்ல நடபடிகைகளை நடந்து கெட்ட நடக்கைகளை விட்டு பரிசுத்தனாக உன்னுடையதேசத்தில் போய் சுகமாகவாழ்ந்திருப்பீராக.

சல்மான்சொல்—வசனம்.

அப்படியே என்தேசம்போகிறேன் பாதுஷாவே.

பொதுவிருத்தம்-இ-ம்-கலியாணி.

மனைவியும் பின்தானும் பாதுஷாவுடனே னன்றாய் ※
மனமதுமகிழ்ந்து [illegible]சேர்ந்து ※
இனமுடன் [illegible] யிருக்கிறசேதிகேட்டு ※
அனைவருமாய்ச்சேர்ந்து அவ்விடம்வந்திட்டாரே ※

தரு-இ-ம்-கலியாணி-அடதாளசாப்பு,

ஊரெனுஞ்சாமூர் நகரைவிட்டோட்டமாய் மனம்
உத்தமன்டனைக்காண அனைவோருமே வெகுநாட்டமாய்
காடுசெடிசோலையெல்லாம் கடந்துவருகையால் குதூ



சாடையுமில்லாதிடமாகுது நல்லதுஅதையால்
நல்லநகரந்தனிலி துள்ளகுடிப்பேசி மனம்
நாட்டமுடன்கூடி நடந்தார்கள்வெகுஆசையாய்
தேடிநடந்துமிசாலிபாதுஷா முன்பினில் வந்து
கெண்டனிட்டாரெல்லா மெங்களையாண்டிடுமென்றன்னினில்
சனமகிழ்ந்துகருணையுடன் சாற்றிச்சொல்லவே இப்போ
பண்டுபோல்நீரெம்மையன்புடனே யாண்டிடுவேல்லுமே
நாங்கள்செய்தபிழை நீங்கள்பொருத்திடுந்துய்யனே இப்போ
நாடிமகிழ்ந்தெங்கள் கூடவாருங்கோள் ஐயனே
உம்மைத்தேடிமனமுருகித்து சிந்[illegible]தோம்துரைதை இப்போ
சீடியபம்பரம்போ லும்மைத்தேடினோம்துரையே
சொந்துடிசயிப்போ சொருகுடன் [illegible] இப்போ
சந்தேகமில்லாமல் சாமூர்தனையாளவேணுமே

சாமூரார்சொல்—விருத்தம்—இ-ம்—முகாரி,

ஞாயமாவுலகையாளும் நயமலிபாதுஷாவே ※
தாயமுகங்காணப்பிள்ளைதனைபோலத்தவித்தோம்நாங்கள் ※
வாயினுற்செய்தகுற்ற மனம்பொருத்திருக்கவேணும் ※
நாயகமாகமுன்போல் நலமுடன்சாமூராள்வீர் ※

வசனம். கேளும்பாதுஷாவே உம்மைப்போல் நீதியாளப்பட்டபாதுஷாக்கள்யாருமில்லை நீர் வந்தமுதலாக நாங்கள்தாயில்லாதபிள்ளைகள்போலத்தவித்து அலைகிறோம் நீங்கள்எங்கள்பேரிலுள்ள குற்றமெல்லாம் பொருத்துமுன்போலசாமூராளவாரும்பாதுஷாவே,

பாதுஷா சொல்—விருத்தம்—இ-ம்—பைரவி

எங்களைரட்சியன்று இயல்புள்ளகுடிகளோடு ※
அங்கேனசாமூராச்சியம் அனைவருஞ்சுகமதாக ※
நீங்கள்மாமுடிசூட்ட சீமைவிட்டேகுமென்றீர் ※
உங்கள்பேல்குற்றமில்லை உடையவன்கட்டளையாமே ※

வசனம்,

கேளும்ஊரார்களே என்னைமருபடியும் வந்துமுன்போல சாமூர்பட்டணத்தைஆளவேணுமென்று மிகுந்தவணக்கமாயழைக்கிறீர்களே இதுமுன்னால் ஊர்விட்டுப்போமென்றதும் இதுவெல்லாம்சகலமும் படைத்தவன் புதுமையாம் குடிகளே,

மந்திரிசொல்—விருத்தம்—இ-ம்—பைரவி,

இசையாமல்சாமூர்ச்சியம் இதை [illegible] ※
வசையெலாந்தீர்த்தநாயன் வம்சமொன்றாகச்சேர்ந்து ※
இசையுடன்சாமூரார்கள் மந்திரியெல்லோருங்கூடி ※
இசையுடனழைக்கவந்தோம் ஜெயமுடன்வருகுவீரே ※

வசனம்,கேளும் பாதுஷாவே நீர் முன்போல்வந்து சாமூர் பட்டணத்தையாண்டு யெங்களையெல்லாம் பாதுகாக்கவேணும் பாதுஷாவே,

பொது—வசனம்

அகோதெப்படி யென்றால் சாமூர்பட்டணத்து மந்திரிமுதலாயெ குடிகளுடன்வந்து மிகுந்த அன்புடனே அழைக்கஅப்போது அலிபாதுஷாவும் பெண்சாதி பிள்ளைகளுடன் கூடிவெளிப்பட்டுப் போகிற விதங்காண்க

அலிபாதுஷா—சாமூர்தேசம்போகிற—தரு—இ-ம்—தேசியம்

எழுந்தாரலிபாதுசாட்பு இருபுறமும்
அழகுள்ளமக்களும் சூழவே
செழுமைபல்லக்கின்மேலே சபையத்தும்
தாதிகளும்பக்கம் சூழவே
தாருதோவென பலபல்விருதுடன்
பாளயக்காரர்களுஞ் சூழவே
நாகசுரமும் தவுலுமும் தப்பட்டைமுழங்க
நல்லபிள்ளைக்குழ லூதவே
அங்கமன்னர்கள் நாலுபுறமுஞ்சூழ
சுத்திமத்தளங்கள் போடவே
அதிகவெள்ளானை அம்பாரியிலேறி
அரிபரிவெகுபடை சூழவே
அலிபாதுசாய்பு மிகருதெருவடர்ந்து
அன்புடனூர்திலில் செல்லவே.
நலியாமலோடமேறி அக்கரையிற்சென்று
நடத்துவெகுதூரஞ் செல்லவே
இராஜாதிராஜர்வந்து கண்டுஅடிபணிந்து
இராகுசுக்கிரனும் வந்துகாணவே
தேசமதிலுள்ள பேர்களெதிரேவந்து
தாள்பணிந்து அப்புறம்போகவே
மணமுடன்மகிமையாறு வனங்களெல்லாங்கடந்து
வாகாசாமூரில் செல்லவே
கணமுடனலிபாதுஷாவும் தன்னரண்மனையை
கண்டுமகிழ்—கூறவே
செம்பொன்னாலிழைத்திட்ட சிம்மாதனத்திலில்
சிறந்துமகிழ்ந்தவரிருக்கவே
அம்பொன்மடாமதகஸ்தூரிவெண்சாமரம்
ஆலவட்டம்சூழவே

பாதுஷா சொல்—விருத்தம்—இ-ம்—தோடி

மந்திரிமாரேநீங்கள் மகிழ்வுடன்சொல்லக்கேளும் *
புத்திபுகழ்வந்த புத்திரனபுசனுக்கு *
விந்தையாய்மணமுடிக்க விரும்பினேன்களிகூர்ந்துங் *
சிந்தையிலுள்ளசேதி செப்புவீரொப்பதாக [கள் *



வசனம்—கேளும் மந்திரிமார்களேனக்குண்டாய பிள்ளையாயெ புசனுக்குக் கலியாணஞ்செய்யவேணுமென்று மனதில்நினைத்தேன் உங்களுடைய மனதிலெப்படியிருப்பது அதைதெரியச் சொல்லும் மந்திரிமாரே

மந்திரிசொல்—விருத்தம்—இ-ம்—பைரவி:

தங்கசிம்மாதனத்தில் தரித்திருக்கும்பாதுஷாவே *
உங்கள்தன்சித்தம்போல யோசித்துமெயிருந்தால், *
எங்களைக்கேட்கவேண்டாம் இயற்றினபடிபோலத்தாரும் *
மங்களம்அபுசனுக்கு மணவையுமுடித்துப்பாரும் *

வசனம்—கேளும்பாதுஷாவே உங்கள்பிள்ளை அபுசனுக்கு மணமுடித்துஇப்பட்டணத்தையாள பட்டமுங்கட்டிவைக்கிறதாகச்சொன்னீரே அதேபடிசெய்யும் நாங்களும் அதற்குச்சம்மதியாயிருக்கிறோம் உங்கள்மனதின்படி நடத்தும் பாதுஷாவே

அலிபாதுஷா—சொல்—வசனம்

கேளும் என்மந்திரிமார்களே இந்த ஜம்பத்தாறு தேசத்துராஜாக்களையும் அழைப்பித்து மணமுடித்து அப்படியே பட்டங்கட்டிவைக்கிறதற்காக சகலரும்வரும்படி ஓலையெழுதி அழைப்பியுமீர் மந்திரிமார்களே,

மந்திரியார்—சொல்—வசனம்,

அப்படியேயெழுதி அனுப்பிவைத்தோம் சகலராஜர்களும் அவர்கள்மந்திரியார்களும்படைகளுமாகவந்துசேர்ந்தார்கள் பாதுஷாவே

பாதுஷாசொல்—வசனம்,

ஆனால்சகலமானபேரும் வந்திருப்பதால் நம்முடைய அபுசனை சிங்காரித்து மாலையிட்டு யானையின்மேலேற்றி சகலவிதங்களும் ஊர்கோலஞ்செய்யும் மந்திரிமாரே,

தரு—இ-ம்—நிலாம்புரி—ஆதிதாளம்,

பவனிவார விநோதம்பாரீர் அபுசனும்
பவனிவார விநோதம்பாரீர்
பவனிவார விநோதம் பாரும்பாருமெல்லாம்
அவனியோர்காணுத அதிசயமணக்கோல பவனி
மத்தளம்பகல்வத்தி மங்கையர்நடனஞ்செய்ய
சித்தமகிழமாதர் சோபனமணக்கோல பவனி
இப்படியேயேழுநாள் எங்குமலங்கரித்து
ஒப்பில்லாவூரார்களும் போற்ற தூதில் மணக்கோல பவனி

வசனம்—இந்தப்பிரகாரமாக ஊர்கோலம் வந்து அபுசனுக்கு கலியாணம்பெண்ணுக்குமிக்கமுடித்து சாமூர்பட்டணத்தையாள அபுசனுக்குப் பட்டமுங்கட்டிவைத்து அலிபாதுஷாவும் பெண்சாதிபிள்ளைகளுமாக மிசர்பட்டணத்துக்குவந்து சேர்ந்து கொலுவுக்கு வருகிறவிதமெப்படியென்றால்,

தரு—இ-ம்—தோடி—மிசாதாளம்,

வந்தார்பாரீர்மிசருக்கொலுவுக்கு—வந்தார்பாரீர்
மந்திரிமார்களும்—படைசூழவே
சிந்தைமகிழ்ந்திட—சோனகொலுவுக்கு (வந்தார்)
கட்டியக்கூறிட—கவரிமறைவீச
அட்டராஜர்போற்ற—அன்பர்கொலுவுக்கு (வந்தார்)
நாட்டியப்பெண்கள்—அரிவையர்தான்போற்ற
கோடிப்பிரகாசமான—கொலுவுக்கு (வந்தார்)

மங்களம்—தரு—இ-ம்—கும்பாம்போதி.

மங்களம்—ஜெய—மங்களம்,

மணிமுடிவேந்தர்க்கும் மன்னலிபாதுஷாவுக்கும்
கனதடனெல்லோருக்கும் கட்டியுடனேநல்ல (மங்)
உற்றோர்க்கும்பெற்றோர்க்கும் உறன்முறையார்களுக்கும்
மற்றோர்க்குமேலான மன்னரனைவருக்கும் (மங்)
எர்வாடிதனில்வாழும் இபுராகிம்சாயபுக்கும்
பார்தனிற்புலவர்க்கும் பாங்கானவெல்லோர்களுக்கும் (மங்)
கல்வியானபேர்களுக்கும் சாட்சிபெற்றபேர்களுக்கும்
வல்லமையான்பேர்களுக்கும் உள்ளானவனைவருக்கும் (மங்)
தரணிதனிலுள்ள சகலஜனங்களுக்கும்
வாணமுடனேவாழ்க வல்லோன்காவலாக (மங்)

வாழி—விருத்தம்.

மக்களும்வாழிவாழி மன்னர்கள்செல்வம்வாழி
இக்கெக்கும்வாழிவாழி தேசத்தோர்வாழிவாழி
மிக்கநாடகமும்வாழிவிளங்கிடப்படித்தோர்வாழி
சக்கில்லாதினும்வாழி தரணியெண்டிசையும்வாழி

அலிபாதுஷா நாடகம்.

முற்றுப்பெற்றது.

3330